# பாதம் காட்டும் பாதை

(சிறுகதைத் தொகுப்பு)



மைதிலி தயாபரன்

# பாதம் காட்டும் பாதை

(சிறுகதைத் தொகுப்பு)

# பாதம் காட்டும் பாதை

(சிறுகதைத் தொகுப்பு)

- மைதிலி தயாபரன் -

வெளியீடு:
வெளியீட்டு இல.05
கிருஷ்ணிகா வெளியீட்டகம்
வேப்பங்குளம், வவுனியா

# பாதம் காட்டும் பாதை

(சிறுகதைத் தொகுப்பு)


எழுதியவர் : மைதிலி தயாபரன்

தொலைபேசி : 0770178014

மின்னஞ்சல் : maithilieet@yahoo.com

பதிப்புரிமை : எழுத்தாளருக்கே

வெளியீடு : கிருஷ்ணிகா வெளியீட்டகம், வவுனியா.

முதற் பதிப்பு : 24-11-2016

அட்டை வடிவமைப்பு : கந்தையா கோபிலராஜ்

அச்சுப் பதிப்பு : வாணி கணனிப் பதிப்பகம்

விலை : ரூபா 300


# PATHAM KAADDUM PATHAI

(short story collection)


Author : Maithiliee Thayaparan

Telephone : 0770178014

E- mail : maithilieet@yahoo.com

Copy Rights : For Author

Publication : Kirushniga Publications, Vavuniya

First Edition : 24-11-2016

Cover Design : Kandaiah Kobilaraj

Printers : Vaani Computer Printing Centre

Price : Rs. 300

ISBN : 978- 955- 41614- 7- 4

# அணிந்துரை

மனித மனத்திற் படிந்துள்ள ஒரு சம்பவம் அவனது சற்று நேரச் சிந்தனைக்குள் புகுந்து, எண்ணச் செய்து அதே நொடிக்குள் முடிவுறுத்துவதே சிறுகதை. இது குறிப்பிட்ட சம்பவத்தை அழகிய முறையில் அமைத்துச் சிறந்த உருவகத்தை ஏற்படுத்தும். இவ்வுருவ அமைப்புகளை மனநினைவோட்டம் அல்லது பிரக்ஞை ஓட்டம் என்றும் படர்க்கையில் பத்திரிகைச் செய்திபோல் கூறும் பாங்கு என்றும் இறந்த காலத்தை நினைவு கொள்ளுதல் போல் கூறும் நிலை என்றும் நினைவு குதித்தெழுந்து வெள்ளோட்டம் போல் செல்லும் முறை என்றும் வேறுபடுத்திப் பார்ப்பது வழக்கம். சிறுகதை படிப்படியாக வளர்ச்சியுற்று உச்சமடைந்து யாரும் எதிர்பாராத திமர் திருப்பத்துடன் முடியும். குறிப்பாக சிறுகதையில் தொடக்கம், வளர்ச்சி, உச்சக்கட்டம், முடிவு என்பவையே முக்கியம். மேலும் நடைமுறைச் சாத்தியமானதாக இருத்தல் அவசியம்.

திருமதி மைதிலி தயாபரன் பல்வேறு ஆக்க இலக்கியங்களில் ஈடுபட்டபோதும் சிறுகதைத் துறையில் தொகுப்பொன்றைத் தருவது இப் "பாதம் காட்டும் பாதை" சிறுகதைத் தொகுப்பின் மூலமே. பதினைந்து சிறுகதைகளைத் தொகுத்து தமிழ் வாசகரிற்கு இலக்கியத் தீனி போடுகின்றார். "பாதை காட்டும் பாதம்", "காத்திருந்த காதல்", "தீக்குள் விரலை வைத்தால்", "அவள் இப்போது பெரியவள்", "மண்ணீரும் ஆகாது", "தவறி வருமுன்பே", "துணையென ஒன்று", "அங்கீகாரம்", "தனியொரு மனிதனுக்கு உணவு", "சந்தோசப்பணம்", "எதிர் வீட்டுப் பெண்", "வேலைக்காரி", "வேண்டியபோதுவேண்டும்", "துளித்துளியாய்", "வலியதுவிதி" ஆகியவையே இச்சிறுகதைத் தொகுதியை அலங்கரிக்கும் சிறுகதைகள். இவற்றுள் 2016 இல் அனைத்துலக திருக்குறள் போட்டி, 2014, 2015 இல் ஞானம் சஞ்சிகையின் செம்பியன் செல்வன் சிறுகதைப் போட்டி, 2014 இல் பிரதேச கலை, இலக்கியப் போட்டி, 2015, 2016 இல் தாயக ஒலி சஞ்சிகையில் இடம்பெற்ற சிறுகதைகள் என்பனவும் உள்ளடங்குகின்றன. போட்டிகள், பரிசுகள், பிரசுரத் தகுதிகள் கொண்டவற்றோடு ஏனைய கதைகளும் வாசகர்களினது சிந்தனைக்கும் உணர்வுக்கும் அதிக வேலை கொடுப்பனவே.

"சிறுதையின் முதல் வாக்கியம் படிப்பவன் கவனத்தை இழுத்துப் பிடிக்கவில்லையாயின் அக்கதை பயனற்றது" என்பார் எட்கர் ஆலன்போ. இவருடைய முதலாவது "பாதை காட்டும் பாதம்" கதை இப்படித் தொடங்குகிறது. "தந்தையாருக்குப் பின்னாக உந்துருளியிற் பரீட்சை நிலையத்தை நோக்கிப் பயணம் செய்து கொண்டிருந்த தீபனின் மனம் குமுறிக் கொண்டிருந்தது" எட்கர் ஆலன்போ குறிப்பிட்டது போல வாசகருக்கும், தந்தையுடன் பரீட்சைக்குச் செல்லும் மகனின் மனம் ஏன் குமுறிக் கொண்டிருந்தது? என்ற வினா படிப்பவரை இழுத்துப் பிடிக்கின்றது. மகனின் குமுறலாகவே கதை வளர்த்துச் செல்லப்படுகின்றது.

மகனைப் படிப்பித்து அவனுடைய காலில் நிற்க வேண்டும் என்பதற்காக மிகுந்த கட்டுப்பாட்டுடன் வளர்க்கும் தந்தை நிறைவாக "மகனே.. என்னைய நீ பிழையா நினைச்சிருந்தாலும் என்ர கடமையை முடிச்ச சந்தோசம் எனக்கு வருகுது. என்ர வசதிய உனக்குக் காட்டி உன்ர கண்ணக் கட்ட நான் விரும்பல. உன்ர பாதையில வரக்கூடிய முட்களக் களைய உன்னைப் பழக்க வேண்டும் எண்டு நான் நினைச்சன். உனக்குப் பின்னால பின்னாலேயே வந்து உன்ர முன்னேற்றத்தப் பாத்து சந்தோசப்படுவன். அதுக்காகத்தான் இத்தனை நாள் என்ன மறைச்சு உன்னட்டக் கடுமையா நடந்தன்". என்று சொல்லியபடி உணர்வுப் பெருக்குடன் அந்த உடல் தன் இளவல் சென்ற பாதையில் காலடி எடுத்து வைத்தது. என்று கதையை முடிக்கிறார். "குதிரைப் பந்தயம் போலச் சிறுகதையின் தொடக்கமும் முடிவும் சுவையாய் இருத்தல் வேண்டுமென சிறுகதை விமர்சகர்கள் கூறுவதுபோல் "பாதை காட்டும் பாதம்" நல்ல படிப்பினையூட்டும் முடிவையும் தந்திருக்கிறது.

மேலும் இச் சிறுகதையானது, " சிறுகதை எந்த ஒன்றைப் பற்றி விவரிக்க எழுந்ததோ அது தவிர ஏனையவற்றில் நம் கவனத்தை ஈர்த்தல் கூடாது. அதேபோல் குறிக்கோளிலும் அடைவிக்கும் பயனிலும் ஒருமைத் தன்மை இருப்பதே சிறுகதையின் சிறப்பிற்கு அடையாளமாகும்" என்பதற்கு ஏற்ப மகனின் சுதந்திர சிந்தனை, செயற்பாட்டிற்கெல்லாம் தடை போடும் தந்தை, அதற்குரிய சந்தர்ப்பங்கள், செயற்பாடுகள் யாவும் ஒரு முகப்படுத்தப்பட்டுக் காட்டி இறுதியில் மகனே தந்தையின் செயல்கள் யாவும் தனது நன்மைக்கே என உணர வைக்கும்போது ஆரம்பத்திற் குறிப்பிட்ட தொடக்கம், வளர்ச்சி, உச்சக்கட்டம், முடிவு என்பவற்றை அடையச் செய்திருக்கிறார் மைதிலி.

"சிறுகதை சொல்கின்ற முறையாற்றான் சிறப்புறும். கதைகள் எழுதுவது எளிதான செயலன்று. ஒவ்வொரு சிறந்த சிறுகதையும் ஒரு கவிதைத் துணுக்கு. தந்தச் சிமிழிலே நுணுக்கமான சித்திர வேலைப்பாடுகள் செய்வதுபோல் எழுத்தாளன் ஒவ்வொரு வரிக்கும் மெருகேற்றவேண்டியிருக்கிறது" என்பார் அகிலன். இக்கதையிலும் "அப்பா பிரம்பைத் தூக்கி அடிக்க வரும்போதே ஆசிரியர் என்ன சொல்லியிருப்பார் என்பதை ஓரளவுக்கு அவனால் புரிந்து கொள்ளமுடியும். ஓடியும் ஆடியும் காயங்கள் சேர்த்துக் கொள்ளும் வயதில் அப்பாவின் பிரம்பினால் காயங்கள் சேர்த்துக் கொண்ட நாட்கள் அவனுக்கு நினைவுக்கு வந்தது." என்று எழுத்தானர் எழுதியிருப்பது அகிலன் குறிப்பிடுவதுபோல் மெருகூட்டப்பட்ட வரிகள் என்று கூறலாம். சிறுகதை சொல்லுகின்ற முறையால்தான் சிறப்புறும் என்பதற்கெற்ப இந்தச் சிறுகதை சிறப்புறுகின்றது. இவ்வாறே ஏனையவையும்.

மைதிலியின் சிறுகதைகள் பல்வேறுபட்ட பாடுபொருட்களை தன்னகத்தே கொண்டுள்ளன. "காத்திருந்த காதலில்" சரியான புரிந்துணர்வில்லாத கணவன்-மனைவி, காலந்தாழ்த்திப் புரிந்துணரும் போது வரும் சிக்கல்களைக் காட்டுகின்றது. திருமணத்தில் பின் பிரிய நினைத்த தம்பதிகளுக்கு இருவரிடமும் ஒவ்வொரு பிள்ளைகளைக் கொடுத்து வளர்க்கும்படி தீர்மானிக்கப்பட்டு பிரிந்து வாழச் சம்மதம் அளிக்கப்படுகின்றது. புதிய இடத்தல் இருவரும் வாழ்வதும், பிள்ளைகள் படிக்கும் இடத்தில் இருவரும் அடிக்கடி சந்தித்து பிள்ளைகளின் படிப்பு, முன்னேற்றம் தொடர்பாகக் கதைக்கின்றபோது மீண்டும் சேர்ந்து வாழவேண்டுமென்ற தவிப்பு ஏற்படுவதை இயல்பாகக் காட்டியுள்ளார்.

தற்போது தனியார் வகுப்புகளுக்குப் பிள்ளைகளைப் படிக்கவிட்டு, அவர்களின் வருகைக்காகக் காத்திருக்கும் பெற்றோரிடையே ஏற்படும் காதல், காமம், முறையற்ற செயற்பாடுகளைச் சுட்டிக் காட்டும் அதே வேளை இந்தத் தம்பதியினரின் உண்மை நிலை தெரியாதோர் இவர்களுக்கும் அந்த முத்திரையைக் குற்றிப் பார்ப்பது வித்தியாசமான கற்பனை. இன்றைய யதார்த்தத்தை சரியாகப் படம் பிடித்துக் காட்டியுள்ள கதையாக இக்கதை அமைந்திருக்கின்றது.

"தீக்குள் விரலை வைத்தால்" இல் விசேட தேவையுடைய குழந்தையின் தாயின் துடிப்புகளையும், அவள் தவிர்ந்த ஏனையோரின், குறிப்பாக கணவன், மாமியார், அயல் வீட்டுப் பெண் ஆகியோரது மனப்பாங்கையும் காட்டுகின்றார். வாசிப்பவர் மனதை உருக்கும் விதமாக இக்கதையை வடித்துள்ளார். நெருப்பில் தனது கையைச் சுட்டுக் கொள்ள நினைத்து அதைச் செயற்படுத்தும்போது பிள்ளையும் கையை நெருப்பில் வைக்க முனைகின்றது. "நெருப்பு என்ற விடயத்தில் தன்னைப் போலவே அதற்கும் பயமில்லை என்பது புரிந்தது. நெருப்பை மட்டுமல்ல எதையுமே புரிந்து கொள்ளமுடியாத நிலை தானே என்று மனது சொன்னது" என்று எழுதும்போதே பிள்ளையின் நிலை, விசேட தேவையுடைய தன்மை என்பன சூசகமாகக் காட்டப்படுகிறது.

"வாழ்வின் தொடக்கம் நீ. வாழ்வின் முடிவும் நீ' என்பதாக குழந்தை இருக்கும் வரையிலும் தன்னுடைய வாழ்க்கையும் இருக்க வேண்டும் என்று கடவுளைப் பிரார்த்தித்துக் கொண்டாள்." எனும்போது விசேட தேவையுடைய பிள்ளைகளின் தாய்மாரின் துயரம் படிப்பவரை உருக்குவதோடு உணரவும் செய்கிறது. "தொடர்ந்து இந்தப் பிள்ளையுடன் மல்லுக்கட்ட என்னால முடியாது. இத எங்கையாவது அநாத ஆச்சிரமத்தில் சேத்துவிடு" என்று கண்டிப்பாகச் சொன்னான் அவளின் கணவன்." என்று எழுதும்போதே அந்தப் பிள்ளைக்குத் தாய் மட்டுமே துணை என்பதை எழுத்தாளர் காட்டியிருப்பது தாயின் பிரார்த்தனையை நியாயப்படுத்துவதாகவும் அமைகிறது. அநாதை ஆச்சிரமத்தில் சேர்க்கும் எண்ணம் அவளிற்கு ஒரு போதும் எழவில்லை என்பதில் தாய்மையின் சிறப்புப் புலப்படுத்தப்படுகிறது. அருமையான கதை இது.

"அவள் இப்போது பெரியவள்" என்பதில் ஆண்-பெண் உறவைக் கொச்சைப்படுத்திப் பார்க்கும் சமூகத்தின் மனோநிலையையும் படம் பிடித்துக் காட்டுகின்றன. எங்களுடைய தமிழ்ச் சமூகத்தின் இறுக்கமான கட்டுப்பாடுகள் பற்றிய கதை இது. சிறுவயது முதல் அயல் வீடுகளில் வாழ்ந்ததால் சகோதரர்கள் போல் பழகிய சிறுவன்-சிறுமி காலப்போக்கில் அந்நியமாக்கப்படுவதும் அதற்குப் பெற்றோர்கள் மட்டுமல்ல சமூகமும் காரணமாயிருப்பது இயல்பாக நேர்த்தியாகக் காட்டப்படுகிறது.

அவள் திருமணமானதும் அவளின் கணவனின் மனோநிலையும், பின்னர் அவள் விதவையானபோது அவன் உதவி செய்ய முற்படும்போது ஊரவர் மனோ நிலையும் மாறாததாய்.. "ஆண்களின் துணையில்லாமல் வறுமையில் குடும்ப வண்டியைக் கொண்டிழுக்கும் எம் சமுதாயப் பெண்களுக்கு என்னதான் தீர்வு வைத்திருக்கிறீர்கள்? அவர்களுக்கு உதவுபவர்களுடன் இணைத்துக் கேவலமாகக் கதைக்கிறீர்கள். இதனால் ஏதாவது நன்மை யாருக்காவது இருக்கிறதா? என்று அவர்களைப் பார்த்துக் கேட்பதற்கு அவனின் மனது துடித்தது." எனக் காட்டும் எழுத்தாளர் கண்டிப்புடன் இந்தக் கட்டுப்பாட்டை கண்டிப்பதை இக்கதை மூலம் உணர்த்துகிறார்.

"மண்ணீரும் ஆகாது" என்ற சிறுகதையில் குடும்ப உறுப்பினர்களைப் பற்றிக் கவலைப்படாது, தன்னுடைய வரட்டுக் கௌரவத்தைக் காக்கும்/ காட்டும் குடும்பத் தலைவனின் போக்கைக் காட்டி இதில் தன்னுடைய சுக போகத்தை சுதந்திரமாக அனுபவிக்கும் தந்தை, மனைவியை வேலை செய்யவிடாது மறித்துவிட்டு, சிக்கனத்தை மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் உணர்த்தி, குறிப்பாக, பிள்ளைகளுக்கு இளமையில் வறுமையை உணர்த்தித்தான் வளர்க்க வேண்டும் என நியாயங் காட்டி செய்யும் செயற்பாட்டைக் கலைத்துவமாக எடுத்துக் காட்டியுள்ள கதை இது.

"பிள்ளைகளுக்கு எல்லா வசதியையும் செய்து குடுக்கக் கூடாதடி. பிறகு அவங்க படிக்க மாட்டாங்க. வெள்ளைக்காரனைப் பார். பதினாறு வயது ஆன கையோடயே அவங்கள சொந்தக் காலில நிக்கப் பழக்கிடுவாங்க. அவங்களும் ஏதோ தட்டுத் தடுமாறிக் கஸ்டப்பட்டு வேலையைத் தேடி சம்பாதித் தொடங்குவாங்க." என்று பிள்ளைகளின் அடிப்படைச் செலவுகளைக் கூட பூர்த்தி செய்யாத நிலை. இது வருமானக் குறைவினால் என்றால் ஏற்றுக் கொள்ளலாம். அப்படியில்லாது தன் சுயநல- சுய கௌரவ செயற்பாடுகளை மேற்கொண்டு செயற்படும்போது அவர் போன்ற குடும்பத் தலைவர்கள் மீதே வெறுப்பு ஏற்படுகின்றது. மண்ணீரும் ஆகாது என்ற இலக்கிப் பாடலினூடு கதை சொல்லப்படுவது சிறப்பாக அமைந்திருக்கிறது.

ஆணின் அவசர புத்தியால் வரும் துன்பத்தையும் பெண்ணின் தடுமாற்றத்தையும் "தவறி வருமுன்பே" என்ற சிறுகதையிலும் எடுத்துக் காட்டுகின்றார். கொடிய யுத்தமும் அதன் அகோரத்தில் சிக்கித் தவிக்கும் அபலைப் பெண்ணின் நிலையையும் "துணையென ஒன்று" என்ற சிறுகதையில் உள்ளங்களைத் தொடும் வகையில் எழுதியுள்ளார். "என்னப் போல இன்னும் எத்தினயோ அம்மாமார் வன்னியில இருந்து வந்தவங்க கூலி வேல செய்து பிள்ளைகளப் பாக்கிறாங்க. எனக்கும் முடியும். ஏதாவது செய்து பிள்ளயப் பாக்க முடியும். எனக்கு இருக்கிற ஒரேயொரு துணை இந்தப் பிள்ளய, நான் விட்டுக் குடுக்கமாட்டன்" என்று அவள் மறுத்தாள் என்று எழுதும்போது யுத்தத்தின் பின் எங்கள் மக்கள் படும் பாடும் அவர்களைப் பாராமுகமாய் எமது சமூகம் போகும் போக்கும் பதியப்படுகின்றது.

அடுத்து "அங்கீகாரம்" என்ற சிறுகதையில் புத்தக வெளியீடு செய்யும் எழுத்தாளரொருவரின் நிலையை எடுத்துக் காட்டியுள்ளார். புத்தகத்துக்கு விமர்சனம் செய்ய ஒருவரைத் தெரிவு செய்வது தொடர்பாகவும் சிலாகித்துக் கூறியுள்ளார். ஒவ்வொரு எழுத்தாளருக்கும் இந்த அனுபவம் கிடைத்திருக்குமென நம்பலாம். "தனியொரு மனிதனுக்கு உணவு", வசதியாய் வாழ்ந்தவர்கள் யுத்தத்தின் தாக்கத்தினால் படும் துன்பங்களை படிப்பவர் மனதில் அதிக தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் எழுதியுள்ள உருக்கமான கதை இது. "காலையிலும் சாப்பிடாமல் பட்டினியுடன் பாடசாலைக்குச் சென்ற பேரன் திரும்பி வந்ததும் அவனுக்குக் கொடுக்கவேண்டும். கால்களால் எதுவும் செய்ய முடியாமல் காவல் நாய்போல் வீட்டு முற்றத்திலே இருக்கும் தன்னுடைய மகனுக்கு கால் வயிறாவது போடவேண்டும். நோயாளியாகக் கட்டிலில் படுக்கையாக இருக்கும் கணவனுக்கு ஒரு அகப்பைச் சாதமாவது கொடுக்க வேண்டும்" என தன்னை நம்பியிருக்கும் உறவுகளுக்கான ஒரு பெண்ணின் துடிப்பைக் காட்டி, கடவுளையும் சாடி, சமுதாயத்தையும் சாடி, அரசியல்வாதிகளையும் சாடி அருமையாக முடித்திருக்கிறார்.

"சந்தோசப் பணம்" என்ற கதையில் நாட்டில் தலைவிரித்தாடும் ஊழலை படம்பிடித்துக் காட்டியுள்ளார். "எதிர் வீட்டுப் பெண்" இல் சாதி பார்க்கும் எம்மவரின் பிற்போக்குத் தனத்தைக் காட்டி, நன்றாகப் படித்துப் பட்டம் பெற்று, பதவி பெற்று, வசதிகள் பெற்று இருக்கும் இளைஞனின் கண்ணீரோடு முடித்திருக்கிறார் மைதிலி. இந்த இளைஞனின் கையகலாத்தனம் இயல்பானதாகக் காட்டப்பட்டது இக்கதையின் சிறப்பெனலாம்.

அடுத்து "வேலைக்காரி" என்ற சிறுகதை நாற்றம், லோக்கல் போன்ற சொற்களைப் போல் பொருள் திரிபடைந்து நிற்கும் வேலைக்காரி என்பது மட்டமான அர்த்தத்தைப் பெற்றுள்ளது. யுத்தமும் இடம்பெயர்வும் படுகுழியில் தள்ளிய பலரில் இந்தக் குடும்பமும் ஒன்று. யுத்தம் முடிந்தும் அதன் தாக்கம் இன்னும் முடியவில்லை என்பதைக் காட்டும் கதைகளுள் இதுவும் ஒன்று. வேலைக்குக் கூப்பிடும் பலருக்குப் பாடம் புகட்டும் அதேவேளை எங்கள் இளைஞர்களின் போக்கையும் இயல்பாகக் காட்டி கதை இப்படி முடிகின்றது. "அடுத்த இரண்டு மாதங்களில் அந்தத் திருமண மண்டபத்தில் அவனின் திருமணம் விமரிசையாக நடந்தேறியது. பாவம் அந்த வேலைக்காரியின் மகள் ஏதோ வருத்தம் வந்து இறந்ததாகப் பலரும் பேசிக் கொண்டார்கள்" என்று குடும்பமும் சமூகமும் ஆணைவிட பெண்ணை வளர்த்த, மதித்த விதம் தொடர்பான எழுத்தாளரின் குமுறல் நியாயமானது.

அடுத்தது, "வேண்டியபோது.. வேண்டும்" சிறுகதையில் இறுதிவரை அந்தத் தொழிலாளியின் தொழிலை வெளிப்படையாகக் கூறாது வித்தியாசமாக எடுத்துரைக்கப்படும் கதை இது. செய்யும் தொழில் தெய்வம் என எண்ணும் ஒருவன் யாராலும் செய்துவிட முடியாது எம் தொழிலையோ செயலையோ என்று நினைப்பதும் அரிய செயலைச் செய்வதாக அவன் மனம் நிறைந்து சந்தோசம் கொள்வது தொழிலின் மகத்துவத்திற்கான சிறப்பான முடிவு.

பதின்நான்காவதாக "துளித்துளியாய்". இதில் துளித்துளியாய் பிழையான வழியில் பணம் சேர்க்கும் ஒருவன். தனது மனசாட்சிக்கு விரோதமாக செய்யும் இத்தொழிலை விட்டுவிட வேண்டுமென நினைக்கும் நிலை காட்டப்படுகின்றது. அடிமேல் அடி அடிப்பதுபோல் துளித்துளியாய் அவனது மனசாட்சியின் தாக்கம் இருப்பதைத் தலைப்பாகக் கொண்ட கதை. சட்டம் ஏமாந்து போனாலும் தர்மம் பழிவாங்கும் என சொல்லாமல் சொல்லியிருக்கிறார்.

இறுதியாக "வலியது விதி" என்ற சிறுகதையில் எழுத்தாளர் தன் கற்பனையை சிறகடித்துப் பறக்க விட்டுள்ளார். சொர்க்கம், நரகம் மட்டுமே தெரிந்த எங்களுக்கு கீழாம் நரகத்திலும் மோசமான நரகம் என்பதைக் காட்டி, இந்தப் பூலோகத்தில் நாங்கள் நரகத்தில்தான் வாழ்கின்றோம். நாங்கள் செய்யும் பாவத்திற்கு அங்கேதான் போவோம்

என்று காட்டுகின்றார். இன்று நடக்கிற பொறுப்பில்லாத் தனங்களை எமலோகத்தில் சித்திரபுத்திரனார் பதிந்து வைத்து விசாரணை செய்வதும் எமலோகத்தில் அவர்களின் நிலையும் .வித்தியாசமான கற்பனை. நகைச்சுவையாகவும், ஏனைய கதைகளை விடவும் மாறுபட்ட நிலையிலும் காணப்படுகின்றது.

திருமதி மைதிலி தயாபரன் தன்னை நாவல், கவிதை, கட்டுரை ஆகிய ஆக்க இலக்கியங்களில் மட்டுமல்ல சிறுகதையிலும் சாதிக்கக் கூடியவர் என்பதை நிரூபிப்பதாக இச்சிறுகதைத் தொகுதியைக் குறிப்பிடலாம். நல்ல கரு, வித்தியாசமான எடுத்துரைப்பு, சமூகப் படிப்பனையூட்டும் சம்பவங்கள், முடிவுகள் எனத் தன் பார்வையை அழகாகவும் அகலமாகவும் நோக்கி சமூகப் பயன்பாட்டிற்கு வழங்கியுள்ளார். எழுத்துக்களால் மக்கள் மனங்களில் தாக்கத்தை, மாற்றத்தை ஏற்படுத்த முடியுமா, என்ற சந்தேகம் எப்போதும் இருக்கிறது. எழுதி இந்தச் சமூகத்தை திருத்த முடியாது என எழுத்தாளன் நினைக்கக்கூடாது. கூர் வாளைவிட பேனா முனை மாற்றும் என்பது எமது அனுபவம். படிப்பவர்கள் சிந்தனைக்குட் புகுந்து, எண்ணச் செய்து சிறு சலனத்தை ஏற்படுத்துவதே வெற்றி எனில் "பாதம் காட்டும் பாதை" தனி மனிதனுக்கு மாத்திரமல்ல சமூகத்திற்குப் பொருந்தும்.

கதைகளில் நீட்சி அதிகம் போல் காணப்படுவது குறைக்கப்பட வேண்டும். வாசகரையும் பங்காளராக மாற்றுவது அவசியம். சிறுகதையில் கூறியது பாதி, அது கூறாததைக் கூறவேண்டும் எனில் வாசகரது சிந்தனைக்கும் வாய்ப்புக் கொடுக்கவேண்டும். நூறு மீட்டர் ஓட்டம் போல சிறுகதை இருக்க வேண்டும். மரதன் ஓட்டம் போல இருப்பது நாவல் ஆகிவிடும் என்பர். சற்று இறுக்கத்தைக் கடைப்பிடித்து மேலும் பல சிறுகதைத் தொகுப்புகளைத் தந்து தமிழ் வாசகர்களுக்கு "பாதை காட்டும் பாதமாக" மைதிலி திகழ்வார் என உறுதியாக நம்ப இத்தொகுப்பு கட்டியம் கூறுகிறது.

**வித்தியா சிரோன்மணி ந.பார்த்திபன்**
சிரேஷ்ட விரிவுரையாளர்,
வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி

# வெளியீட்டுரை

கடந்த வருடத்தில் ஆரம்பிக்கப்பட்ட எமது வெளியீட்டகத்தால் வெளியிடப்படும் ஐந்தாவது புத்தகம் இதுவாகும். "பாதம் காட்டும் பாதை" என்ற சிறுகதைத் தொகுப்பை எமது வெளியீட்டகத்தின் முதலாவது சிறுகதைத் தொகுப்பாக இவ்வருடத்தில் வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

கடந்த வருடத்தில் மைதிலி தயாபரனின் நான்கு புத்தகங்களை வெளியிட்டிருந்தோம். அதன் தொடர்ச்சியாக இந்த வருடமும் அவருடைய புத்தகமான சிறுகதைத் தொகுப்பை வெளியிடுவதில் பெருமை அடைகின்றோம்.

கடந்த வருடம் வெளியிடப்பட்ட அவரின் நான்கு நூல்களில் இரு நூல்களுக்கு விருது கிடைத்திருந்தது. "சீதைக்கோர் இராமன்" என்ற அவரின் கவிதைத் தொகுப்பிற்கு வட மாகாண சிறந்த மரபுக் கவிதைக்கான விருதும் "அநாதை எனப்படுவோன்" என்ற அவரது நாவலுக்கு வவுனியூர் இரா உதயணன் அவர்களின் சிறந்த இளம் படைப்பாளிக்குரிய விருதும் கிடைத்திருந்தது. நாம் சேவையைத் தொடங்கிய முதலாவது வருடத்திலேயே இரு நூல்களுக்கான விருதைப் பெற்றிருந்தது பெரும் மகிழ்ச்சியைக் கொடுக்கின்றது.

அவரின் இவ்வருடத்திற்குரிய நூல்களையும் எம்முடைய வெளியீட்டகத்தால் வெளியிடுவதற்கு அவர் முன் வருவது எம்மைப் பெருமிதமடையச் செய்கின்றது. ஏனைய இலக்கிப் படைப்புக்களைப் போல் அல்லாது சிறுகதைத் தொகுப்புகள் மக்கள் மனதில் இடம் பெறும் வாய்ப்பு அதிகம் உள்ளதை அனுபவத்தில் அறிந்திருக்கின்றோம். அந்த வகையில் பதினைந்து கதைகளைக் கொண்ட அவரின் படைப்பாகிய "பாதம் காட்டும் பாதை" பலருக்குப் பாதையைப் புலப்படுத்தும் என்பதை தீர்க்கமாக நம்புகின்றோம்.

தன்னுடைய முயற்சியில் தளராமல் அவர் தொடர்ந்து எழுதிக் கொண்டிருக்க வேண்டும் என்றும் வருடந்தோறும் ஒரு படைப்பையேனும் எம்முடைய வெளியீட்டகத்தால் வெளியிட வேண்டும் என்றும், அவரின் சிந்தனையும் எழுத்துக்களும் பலருக்கும் பாதையைக் காட்டுவதாக அமைய வேண்டும் என்றும் வாழ்த்துகின்றோம்.

உரிமையாளர்
**கிருஷ்ணிகா வெளியீட்டகம்**
வேப்பங்குளம், வவுனியா.

# என்னுரை

"பாதங்கள் நடப்பதற்குத் தயாராக இருந்தால் பாதைகள் மறுக்கப் போவதில்லை."

பாதைகள் தோன்றாது பருவத்தில் பவனிவர வழிதெரியாது நின்றிருந்த பொழுதினில் என்னை சிந்திக்க வைத்த வாசகம் அது. வாழ்க்கையில் அனைத்தும் சாத்தியமானதே. முயற்சி உன் கையில் இருக்க வேண்டும் என்று எனக்கு முன்னால் வழியைக் காட்டிச் சென்ற வாக்கியம் அது.

ஆம் இன்று எங்கள் சமுதாயம் பாதையைத் தேடிக் கொண்டு நிற்கும் நிலையில் என் பாதை எவ்வாறு அமையும்? வழிகாட்டுவதற்கு விழியில்லை. வழிக்குத் துணைவர தலைவர்கள் இல்லை. இருந்தும் வாழவேண்டிய கட்டாயத்தால் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். எமக்குப் பாதையைப் பாதங்களே காட்ட வேண்டும். எதுவும் தெரியா விட்டாலும் பாதம் காட்டிநிற்கும் பாதையிற் செல்ல வேண்டும்.

பாதையோ நேரானது கிடையாது. வளைவு, சுழிவுகள், முட்கள், கற்கள் அனைத்தையும் கொண்டு வந்து குவித்து வைத்திருக்கிறார்கள். அவர்கள் யார் என்பதை நாம் ஆராய்ந்து கொண்டிருக்கத் தேவையில்லை. என்னுடைய ஊன்றுகோல் பாதங்களே. முன் சென்ற பாதங்களால் ஏற்படுத்தப்பட்ட சுவடுகளே. அவற்றைப் பின்பற்றியே நாம் செல்வோம். எமது பயணம் தொடரும்.

ஆலையிட்ட துரும்பாக அனலிலிட்ட மெழுகாக அழுது சோர்ந்த எமது கண்களை எம் கைகளே துடைக்கட்டும். எம்மைப் பற்றி எழுப்புவது எம்முடைய ஆத்மாவாக இருக்கட்டும். எம்முடைய பாதையைப் பாதங்களே நோக்கட்டும். விழியிருந்தும் குருடராய் செவியிருந்தும் செவிடராய் வாயிருந்தும் ஊமையாய் வாழப் பழகி விட்டோம். எம்முடைய எதிர்காலத்தை நாமே நிர்ணயித்துக் கொள்வோம்.

அனுபவங்கள் பாடங்களாட்டும். அனுபவித்தவர்கள் ஆசிரியர்களாகட்டும். இந்தப் பாதையில் ஒளி விளக்குகளைத் தோற்றுவித்த அனைத்து நல்லுள்ளங்களையும் இவ்விடத்தில் நினைவு கூருகின்றேன்

பாதம் காட்டும் பாதையில் பவனியைத் தொடங்குவோம் என்று உங்களையும் அழைத்து நிற்கின்றேன்.

**மைதிலி தயாபரன்**
24.11.2016

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | பாதை காட்டும் பாதம் | 1 |
| 2. | காத்திருந்த காதல் | 16 |
| 3. | தீக்குள் விரலை வைத்தால் | 30 |
| 4. | அவள் இப்போது பெரியவள் | 39 |
| 5. | மண்ணீரும் ஆகாது | 54 |
| 6. | தவறி வரு முன்பே | 66 |
| 7. | துணையென ஒன்று | 78 |
| 8. | அங்கீகாரம் | 89 |
| 9. | தனியொரு மனிதனுக்கு உணவு | 98 |
| 10. | சந்தோசப்பணம் | 111 |
| 11. | எதிர் வீட்டுப் பெண் | 121 |
| 12. | வேலைக்காரி | 134 |
| 13. | வேண்டியபோது வேண்டும் | 150 |
| 14. | துளித்துளியாய் | 160 |
| 15. | வலியது விதி | 168 |

# 1 பாதை காட்டும் பாதம்

தந்தைக்கு பின் உந்துருளியிற் பரீட்சை நிலையத்தை நோக்கிப் பயணம் செய்து கொண்டிருந்த தீபனின் மனம் குமுறிக் கொண்டிருந்தது. வீட்டில் இருந்து புறப்படும்போது நடைபெற்ற தர்க்கம் மீண்டும் மீண்டும் மனதால் அசைபோடப்பட்டு அவனைக் கலவரப்படுத்தி கழுத்தை நெரிப்பதைப் போல இருந்தது. வீட்டை விட்டே ஓடிவிடலாமா என்று எண்ணத் தோன்றியது.

அவரவர் வளர்ந்து தங்கள் காலில் நிற்பதற்குள் சொற்சுதந்திரம் சிந்தனைச் சுதந்திரம் அனைத்தையுமே பறித்துவிட வேண்டும் என்றல்லவா எங்கள் சமுதாயத்தில் நினைக்கின்றார்கள். தங்கள் பிள்ளைகளுக்கெனத் தனிப்பட ஆசைகள் இருப்பதை அறியாமல் இருக்கிறார்களா? அல்லது அறியாதுவிட முனைகின்றார்களா?

'படிக்கிறது உன்ர கடம. படிக்கிற வயதில் எதையும் கேக்குற அதிகாரமோ. மற்றவங்களக் கட்டுப்படுத்துற எண்ணமோ வரப்படாது' என்று அன்றொரு நாள் அப்பா சொன்னது நினைவுக்கு வந்தது. வயதுக்கு வந்த பிள்ளைகள் என்பதைத்தானும் கருதிற் கொள்ளாமல் பெற்றோர் அதிகாரிகளைப் போல வீட்டு நிர்வாகத்தை நடத்துவது அத்தனை சந்தோசப்படுத்தும் செயல் அல்ல என்பதை அவனது வாலிப மிடுக்கு சொல்லியது.

ஆனாலும் ஓரளவு வயதுவரையிலும் கட்டாயமாகப் பெற்றோரில் தங்கியிருக்க வேண்டிய நிலைமை எனது மக்களுக்கு விதிக்கப்பட்டதே. வெளி நாட்டில் பிறந்திருந்தால் இவ்வாறான நிலைமையைத் தவித்திருக்க முடியுமோ என்றும் அவனின் மனம் சிந்தித்தது. தமிழராகிய நாங்கள் மாற்றிக் கொள்ள வேண்டிய விடயங்கள் இன்னும் எத்தனையோ இருக்கின்றது என்று அவனுடைய மனம் சொல்லியது.

எண்ணத்தின் ஓட்ட வேகம் திடீரென்று முடக்கப்பட்டதைப் போன்று, மெதுவாக வண்டி பரீட்சை நிலையத்தை நெருங்கியதைத் தெரிந்து கொண்டதும் அவனின் சிந்தனை கலைக்கப்பட்டது. நினைவுகள் மறுபடியும் பாடத்தில் சென்று நின்றது. இன்று வினாத்தாள் எப்படி வருமோ என்று ஒரு புறம் சிந்திக்கத் தொடங்கியது.

“ஹாய் மச்சான்” என்றபடியே அருகே நெருங்கி அவனை அணைக்க முனைந்தான் அவனுடைய நண்பன். அவனிடம் இருந்து விலகி அப்பாலே செல்வதுபோல வேகமாகப் பரீட்சை நிலையத்தை நோக்கிச் சென்னான். திரும்பிப் பாராது போனாலும் அப்பாவின் கூர்மையான விழிகள் தன்னுடைய முதுகைத் துளைத்ததை அவன் உணராமல் இல்லை. சில விடயங்களைத் தனக்குள் போட்டுக் கொண்ட போது அவற்றை எடுத்துக் கொள்ள முடியாது மறுபடியும் தலை கனமாவது போல இருந்தது.

“கூடாது. இந்தப் பரீட்சையைக் கண்டிப்பாக நன்றாக எழுதிவிட வேண்டும். இனியும் இவர்களுடன் இருந்து பிடுங்குப்படக் கூடாது. பெற்றவர்கள் மாதிரியா நடக்குறாங்க. கடன் கொடுத்தவங்க போல என்ன பாட்டப் படுத்துறாங்க” என்று யோசித்தபடியே தெம்பை வரவழைத்துக் கொண்டு நிலையத்தினுள் நுழைந்தான்.

ஏற்கெனவே நான்கு, ஐந்து தடவைகள் அந்த இடத்தில் ஆஜராகி இருந்தபடியால் அவனுடைய இருப்பிடத்தை நோக்கி கால்கள் சுயாதீனமாகவே அழைத்துச் சென்றன. மெதுவாகக் கதிரையில் அமர்ந்தவாறே கையில் கொண்டு சென்ற எழுது பெட்டியை வைத்து கருவிகளை ஒவ்வொன்றாக வெளியில் எடுத்தான். கூர்முனையைத் தாங்கியபோது ஆடிக் கொண்டிருந்த கவராயம் அவனைப் பார்த்து ஏளனமாய்ச் சிரித்தது.

இதனைக் கொண்டே இன்றைய பாடத்தை எழுதி முடிக்க வேண்டும் என்று மனது சொல்லிக் கொண்டது. ஏதோ ஒப்புவமையை நோக்கியபோது அவனின் முகம் தன்னாலே சிரிப்பை உதிர்த்தது.

இன்று இந்தக் கவராயமும் தானும் ஒரே நிலைமையில் இருப்பது போல தோன்றியது. உயிரை மட்டும் கையில் பிடித்தபடி வேறெதுவும் செய்யமுடியாத நிலையில் தான் இருப்பதைப் போலவே பெயருக்கு கவராயம் என்பதாக இருப்பதைக் கருத்து நோக்கியது. இருப்பினும் அவனுக்கு இருக்கும் ஒரே ஆயுதமும் உறவும் அதுவேதான். அதை வைத்துக்கொண்டு பரீட்சைப் பெருங்கடலைத் தாண்டியாகவேண்டுமே என்று எண்ணிக்கொண்டான். உறவைப்பற்றி எண்ணியதும் அவனுடைய தந்தை மறுபடியும் நினைவுக்கு வந்து நின்றார்.

'அப்பா பெரிய அரசாங்க உத்தியோகத்தர். மகனுக்குப் படிப்பதற்கு ஆனமான எதையாவது தந்திருக்கிறாரா?' என்ற எண்ணம் எழுந்தது. மறுபடியும் கோபம் எட்டிப் பார்த்தது.

"என்ன மச்சான். டெஸ்ட் முடிஞ்ச கையுடனும் ஏரோப்பிளேன்ல பறக்கிற மாதிரி ஓடுறே. உன்ர அப்பா காவல் கிடந்து உன்னத் தூக்கிட்டுப் போறார். என்ன பிரச்சின. உடம்புக்கு ஏதும் சரியில்லயா" என்றபடி முன்னாலே வந்து நின்றபடி வினாவினான் பீற்றர்.

'என்னத்தச் சொல்ல.. எல்லாம் என்ர விதி. எவ்வளவு படிச்சு பள்ளியில முன்னுக்கு நிண்டாலும் பெற்றோருக்கு நம்பிக்கை வருறதில்ல. அப்பாவுக்கு நான் வேண்டாத' பிள்ளயாப் போட்டன்' என்று சொல்ல அவன் உதடு எழுந்தது. ஆனால் வெளிப்படுத்தத் துணியவில்லை. நண்பனிடம் இருந்து தப்ப முடியுமாகவும் தெரியவில்லை.

கையில் இருந்த பேனாவை தவறிக் கீழே விழுத்துவதைப் போன்று பாவனை செய்துவிட்டு அதை எடுப்பதற்குக் குனிந்தான். அதற்குள் வேறு யாரோ அழைத்துவிடவும் நண்பன் அப்பாலே செல்வது தெரிந்தது. அப்பாடா என்று பெருமூச்சு விட்டுவிட்டு தனது மேசையில் இருந்த் உபகரணங்களை நோட்டம் இட்டான்.



'வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்' 'துணிந்தவனுக்கு துயரமெல்லாம் நிலைப்பதில்லை' என்று தனக்கு முன்னால் வீறாப்புடன் எழுந்து வந்த மனசாட்சியைப் பார்த்ததும் மனதுக்குள் சிரித்துக்கொண்டான். நேரகாலம் பார்த்து எப்படித்தான் இவன் தலைகாட்டுறானோ என்று வரட்டுப் புன்னகையுடன் கேட்டான். இப்போதைக்கு நான் தைரியமாக இருக்கிறேன். உடனடியாக ஓடிவிடு என்று அதனை விரட்டினான். இருப்பினும் அந்த நேரத்தில் அதன் வருகை அவனை ஆசுவாசப் படுத்துவதைப்போல் இருந்தது.

அதன் வாக்குகளை நினைவில் நிறுத்தி எப்பேர்பட்டும் இந்தப் பரீட்சை நன்கு எழுதிவிடவேண்டும் என்று சிந்தித்தான். பரீட்சையில் நன்கு தேறி முதலிடம் பெற்றுவிட வேண்டும். நன்கு புள்ளிகளை எடுப்பவர்கள் பெற்றவர்களின் உதவியின்றியே படிக்க முடியும். அவர்களுடைய திறமைகளுக்கு அரசு கொடுக்கும் உதவிப்பணத்தைக் கொண்டு பெற்றோரின் துணையின்றியே முன்னுக்கு வந்துவிட முடியும் எனத் தன்னைத்தானே தேற்றிக் கொண்டான்.

பரீட்சகர் குழாம் உள்ளே நுழைந்ததும் அனைவரும் அமைதியைப் பேணுவதற்கு ஆற்றுப்படுத்தப் பட்டனர். தனது சுமையான சிந்தனைகளில் இருந்து விலகி பாடத்தை நோக்கி கவனத்தைத் திருப்பிவிட்டான். வினாத்தாளை விநியோகிக்கத் தொடங்கினார்கள்.

புதிதாகப் பிறந்த குழந்தையைக் கையில் எடுப்பதைப் போன்று, அந்தப் புதிய தாளைத் தொட்டபோதே அவனிடம் குதூகலம் எழுந்து கொண்டது. பாடத்தை நன்கு அறிந்து கொண்டு முறையாகப் பயிற்சி செய்தவனுக்கு பரீட்சை எழுதுவதிலும் என்ன சந்தோசம் இருக்க முடியும்?

இடது கையில் தாளை வைத்துக் கொண்டு கேள்விகளை மேலோட்டமாகவே பார்த்தபடி வலது கையால் அருகில் இருந்த தாளின்மீது சட்டகத்தை வரைந்து கொண்டிருந்தபோது அவனின் முகம் இனிதாக மலர்ந்தது. இந்தப் பாடத்தில் நிச்சயமாக நல்ல பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று அவனின் மனம் திரும்பத் திரும்பச் சொல்லியது.

விடையளிக்கும் தாளை எடுத்து ஒவ்வொரு வினாவுக்குமாக கவனமாக விடையளிக்கத் தொடங்கினான். கல்விக்காட்டில் சத்தமில்லாமல் நுழைவது போல இருந்தது. நேரத்தையும் கணக்கிடாமல் சிந்தனையின் ஓட்டத்தை தனது கையில் பிரதிபலிக்கவும் விடைத்தாள்களின் எண்ணிக்கை ஒவ்வொன்றாக அதிகரித்து வந்தது.

"இன்னும் முப்பது நிமிடங்கள் இருக்கின்றன. அனைவரும் விடைத்தாள்களைக் கட்டிவிட்டு எழுதவும்" என்ற பரீட்சகரின் சத்தம் அவனை இவ்வுலகிற்குக் கொண்டு வந்தது. பேனாவைத் தாங்கியிருந்த கையைத் திருப்பி மணிக்கூட்டைப் பார்த்தான். நேரம் தெரியாமலே தான் விடைகளை எழுதிக் கொண்டிருக்கிறேன். அல்லது ரசித்தபடி எழுதிக் கொண்டிருக்கிறேன் என்று நினைத்தபோது அவனுக்கு சந்தோசம் வந்தது.

எல்லாப் பக்கங்களிலும் சுட்டெண் இருக்கின்றதா என்பதைச் சரிபார்த்துவிட்டு, விடைத்தாள்களை எண்களின் ஏறுவரிசைப்படி ஒழுங்கு பார்த்துக் கட்டிவிட்டு முன்னால் திருப்பிப் பார்த்தவனுக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. தன்னுடைய விடைத்தாள் ஒரு புத்தகத்தைப் போல தெளிவான கையெழுத்தில் திருத்தமாக அழகாகக் காட்சியளித்தது.

விடைத்தாள்களை பரீட்சகர் பெறும்வரை அமைதியாக இருந்து வழங்கிவிட்டு, நண்பர்களுடன் கதைத்தபடி சிரித்த முகத்துடனும் வெளியே வந்த அவனுக்கு அப்பாவைப் பார்த்ததும் மறுபடியும் 'சுருக்'கென்றது. மகனின் சிரித்த முகத்தைத் தூரத்தில் இருந்தபடியே நோக்கிய தந்தையார் தன் அருகில் நின்றபடி அவருடன் கதைத்துக்கொண்டு இருந்தவரிடம் விடைபெற்று இவனை நோக்கி வந்தார்.

"என்னடா.. டெஸ்ட் சுகம் போல இருக்கு....". வில்லனாகத் தெரியும் அப்பாகூட அந்த இடத்தில் சற்று வித்தியாசமாகத்தான் தோன்றினார். சிரித்தபடியே அவரின் பின்னால் தொற்றியபடி பயணத்தை ஆரம்பித்தான். அப்பாவின் வாய் சும்மா கிடக்காது என்பது உலகமறிந்த விடயம்தான். ஆனாலும் அன்றைய தினம் அப்படிக் கதைத்திருக்கத் தேவையில்லை என்று அவனின் மனதுக்குப்பட்டது.

“அந்த ஆட்டோக்காரச் சேகரின்ட மகன். அதுதான்டா பவுடர் வச்சிருந்து பிடிபட்டவன். அவன இந்த முறை டெஸ்ட்டுக்கு விடேல்லத்தானே” என்று அப்பா கேட்டார். பரீட்சையைப் பற்றிய சிந்தனையில் இருந்தவனுக்கு அவரின் நோக்கத்தை அவ்வளவு சீக்கிரத்தில் புரிந்து கொள்ள முடியவில்லை. அன்று அவன் தனக்கு அருகாமையில் இருந்தபடியால் பரீட்சையில் அவனைக் கண்டதாகத் தெரிவித்தான்.

“டெஸ்டுக்கு வந்தானா. உந்த வாத்திமாருக்குப் புத்தியில்லயா. அப்பிடிப்பட்டவனை எல்லாம் ஏன் பள்ளிக்குள்ள விடுறானுகள். மற்றப் பெடியளையும் பழுதாக்கவா?” என்று தொடங்கவும் அவனுக்கு என்னவோ போல இருந்தது.

‘இன்றைக்கு அப்பாவுக்கு பிடி கிடைச்சிற்றுது. இன்று முழுவதும் இதே கதையக் கேட்டுக் கொண்டிருக்கப் போறார் என்று பயமும் வந்தது. பொய் சொல்லியிருக்கலாமோ’ என்று நினைத்த அவனுக்குத் தனக்கு முன்னாலே சென்று கொண்டிருந்த அவனைப் பார்த்த பின்பாகத்தான் அவர் அவ்வாறு கேட்கிறார் என்பதும் புரிந்தது. இந்த அப்பாவிடம் இருந்து பொய் சொல்லித் தப்ப முடியாது என்ற அனுபவ பாடம் நினைவுக்கு வந்தது.

“அவனோட நீ கதைக்கிறனியா” என்று திடீரென்று கேட்கவும், “இல்லை” என்று எதேச்சையாக அவனுடைய உதடு அசைந்துவிட்டது. அவனுடன் பழக்கம் வைத்துக் கொள்ள அவனுக்கும் விருப்பமில்லை. ஆனால் ஒரே வகுப்பில் படிப்பவனை அவ்வாறு ஓரங்காட்டிவிட முடிவதில்லை. தனிமையாகவும் சாந்தமாகவும் இருந்துவிடவும் முடிவதில்லை. இது அவர்களுடைய பாடசாலையின் பண்பாடு என்பதா? அல்லது இன்றைய இளையவர்களுக்கு வழங்கப்பட்ட சாபக்கேடு என்பதா? மௌனமானான்.

“ஏன்டா பொய் சொல்லுறாய்? நீங்க ரெண்டு பேரும் கதைச்சுக் கொண்டு வந்தத நான் கண்டனான். என்னையக் கண்டதும் அவன் முன்னால ஓடிவிட்டான்” என்று சொல்லவும் திடுக்கிட்டான் அவன். இவருடைய கற்பனை எப்பொழுதும் கரைகாணாது சென்றுவிடுகிறது என்று மட்டும் தோன்றியது.

"என்னடா சத்தத்தக் காணம். உண்ம தானே நீ அவனோட கதைச்சுக் கொண்டுதானே வந்தாய்." என்று மறுபடி கேட்கவும் அவனுக்குப் பற்றிக் கொண்டு வந்தது. இவருடன் இனி எந்தக் கதையும் எடுபடப் போவதில்லை என்று புரிந்தது. கடவுளே விரைவாக வீடுபோய்ச் சேர வேண்டும் என்று எண்ணிக் கொண்டான்.

அப்பாவின் நச்சரிப்புக் காரணமாக வீடு திரும்பியதும் யாரையும் பார்க்கப் பிரியப்படாமல் தன்னுடைய அறைக்குள் சென்று கட்டிலில் சாய்ந்தான். உடை மாற்றுவதற்குத்தானும் எழும்புவதற்கு அவனால் முடியவில்லை. அன்று நடந்தவற்றை அவ்வளவு சீக்கிரத்தில் தொலைத்துவிட அவனின் மனம் இசையவில்லை.

இந்தப் பத்தொன்பது வருட வாழ்க்கையில் கல்வி என்று ஓடி அதில் காயங்களையும் சந்தித்துக் கண்ணீர் வடித்ததையும் ரணப்படுத்தப் பட்டதையும் நினைவுபடுத்திப் பார்த்தான்.

நான்கு வயதில் நன்கு பேசத் தொடங்கியபோதே, அவனை ஆங்கில இலக்கிய வகுப்பில் (இலெக்கியூஷன்) சேர்த்துவிட்டார் தந்தையார். பாடம் முடிந்ததும் அவனை அழைத்துச் செல்ல வரும்போது, தவறாமல் ஆசிரியருடன் கதைத்துவிட்டு வருவார். வீடு வந்து சேரும்வரை பயத்துடனே வருவது அவனுக்கு நினைவில் வந்தது.

அப்பா பிரம்பைத் தூக்கி அடிக்க வரும்போதே ஆசிரியர் என்ன சொல்லியிருப்பார் என்பதை ஓரளவுக்கு அவனால் புரிந்து கொள்ளமுடியும். ஓடியும் ஆடியும் காயங்கள் சேர்த்துக் கொள்ளும் வயதில் அப்பாவின் பிரம்பினால் காயங்கள் சேர்த்துக் கொண்ட நாட்கள் அவனுக்கு நினைவுக்கு வந்தது.

தரம் ஒன்றில் சேர்த்ததுதான் தாமதம், புத்தகக்கடையிலுள்ள எல்லாப் புத்தகங்களையும் கொண்டு வந்து அவனைச் செய்யச் சொல்லி சதா நச்சரிப்பார். அவர் சொல்லும் நேரத்தில்தான் விளையாட முடியும். அதுவும் அவரின் நெருங்கிய நண்பர்களின் பிள்ளைகள் மட்டுமே அவனுடன் விளையாட அனுமதிக்கப்படுவர்.

போட்டிகள் என்று அறிவிக்கப்படும் அனைத்திலுமே அவன் பங்குகொள்ள வேண்டும். ஆனால் வெற்றியைப் பற்றிக் அலட்டிக் கொள்வதில்லை. அரும் முயற்சி எடுத்து தன்னுடைய உழைப்பை ஆற்றி அவன் அடையும் வெற்றிகளுக்கு பாராட்டுக் கிடைப்பதில்லை. ‘இது என்ன சின்ன விஷயம்” என்ற சொல்லைத்தான் உதிர்ப்பார்.

சிறு வயதில் அவன் தவறுதலாகச் செய்யும் சிறு பிழைகளுக்காகவும் அவனைக் கடுமையாகத் தண்டிப்பார். சொல்வதெழுதுதலில் ஒரு எழுத்துப் பிழை விட்டதற்காக அவனைப் போட்டுப் புரட்டி எடுத்தை நினைத்தபோது அவனுக்குக் கண்ணீர் வந்தது.

“உந்த வயசில உன்ன உப்பிடித்தான் போட்டு அடிச்சமா. சின்னப் பிள்ள ஒரு எழுத்துப் பிழ விட்டதுக்கு உப்பிடிப் போட்டு அடிச்சிருக்கிறாய்” என்று அப்பம்மா ஒருமுறை அப்பாவைத் திட்டியதும் நினைவுக்கு வந்தது.

“எங்கட வயசில உப்பிடிப் போட்டி இல்லையம்மா. ஒருத்தன் ரெண்டு பேர்தான் பாஸ் பண்ணுவாங்க. அவங்களுக்கு நல்ல இடம் கிடைக்கும். ஆனா இந்தக் காலம் அப்பிடியா? எல்லாரும் நிறைய ரிசல்ட் எடுக்கிறாங்க அதுக்குள்ள இவன் பின்னுக்குப் போகக்கூடாதில்லயா” என்று அவர் பக்கத்து நியாயத்தை அப்பா சொன்னார்.

“என்ன போட்டியோ.. அதெல்லாம் வளந்தாப்பிறகு தானேடா. குழந்தைப்பிள்ளய விளையாட விடாமக் கொடுமப் படுத்துறதும் உப்பிடித் தொட்டதுக்கெல்லாம் அடிக்கிறதும் நல்லாயில்ல. அவன் பயத்துலயே படிக்காம விட்டுருவான். நீ சொல்லுறது கேக்கவும் மாட்டாய். நீயாச்சு. உன்ர பிள்ளயாச்சு” என்று புறுபுறுத்தபடி சென்றுவிட்டார்.

தற்காலத்து போட்டிகள் பொறாமைகள் பற்றி ஓரளவுக்குத் தெரிந்து கொண்டவனாக இருந்தபோதிலும் அவனால் அப்பா செய்வதை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. தனது பிள்ளை கல்விமானாக இருக்கவேண்டும் என்று மட்டுமே நினைக்கிறாரே தவிர பிள்ளை சந்தோசமாக இருக்க வேண்டும் என்று நினைக்கவில்லையே என்று அவனுக்கு வேதனையாக இருந்தது.

கல்விக்குப் பின்னால் சந்தோசம் வந்து கொள்ளும் என்ற விடயத்தை அவனுடைய பிஞ்சு மனம் கணிப்பிட மறுத்தது. கல்விக்காய் உயிர் கொடுப்போம் என்று பாடிய புலவர்களையும் நம்பிவிடத் தோன்றவில்லை. இந்தக் காலத்தில் இலவசக்கல்வி அனைவருக்கும் சமத்துவத்தோடு வழங்கப்படுகின்றது என்ற எண்ணமே அவனிடம் மேலெழுந்து நின்றது.

ஆனால் கல்வி என்ற பயிருக்காகத் தன்னுடைய தந்தையார் செய்து கொண்டிருக்கும் அனல் வேள்வி அவனை காயப்படுத்தியது. தன்னுடைய கடந்த காலத்தைக் கண்முன் கொண்டுவந்தது. எத்தனையோ சிரமப்பட்டு தரம் ஐந்து புலமைப் பரிசிற் பரீட்சையில் மாவட்டத்தில் முதன்மையாக வந்தபோது, தந்தை பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை என்ற விடயம் அப்போது நினைவுக்கு வந்தது. அவனுக்குப் படிப்பித்த ஆசிரியர்களுக்கு கொண்டு சென்று கொடுப்பதற்கு ஒவ்வொரு சின்ன இனிப்புப் பெட்டி வாங்கிக் கொடுத்திருந்தார்.

ஆனால் தன்னைவிட குறைந்த புள்ளிகள் பெற்றவர்கள் நல்ல தின்பண்டங்களாகக் கொண்டுவந்து கொடுத்த நினைவுக்கு வந்தது. அவனுக்கு பெரும் கவலையாக இருந்தது.

சாதாரண தரம் படித்துக் கொண்டிருந்தபோது, அவனுடைய வகுப்பில் படித்துக் கொண்டிருந்த பையன் ஒருவன் தன்னைவிட இரண்டு வயது குறைந்த பெண்ணை இழுத்துக் கொண்டு ஓடிவிட்டான். அவர்களுக்குப் படிப்பிக்கும் ஆசிரியர்களுடன் சேர்ந்து அவருடைய தந்தையாரும் பாடசாலைக்கு வந்து, அனைவரின் புத்தகப்பைகளைச் சோதனை செய்து அவர்களை அவமானப்படுத்தியது நினைவுக்கு வந்தது.

துண்டு துண்டாகக் கடதாசியில் கவிதை எழுதி வைத்திருந்தவர்கள், பாட நேரத்தில் பார்வையை வீசுபவர்கள், பாடத்துக்குப் பதில் பெண்களைப் பற்றி எழுதி வைப்பவர்கள் அனைவரும் அன்று பிடிபட்டனர்.

அது மட்டுமல்ல, இந்தக் காரியத்தில் பிடிபட்ட அனைவரும் அவனை எதிரியாக நோக்கியதுடன் பல துன்பங்களையும் அவனுக்குக் கொடுத்தனர். அவர்கள் அனைவரையும் சமாளித்து அந்த வருடம் பரீட்சை எழுதுவதற்குள் அவன் படாதபாடு பட்டுவிட்டான். யாரும் அவனுடன் சந்தோசமாகப் பேசுவதற்கும் வந்ததில்லை.

சே! எல்லாவற்றையும் இழந்துதான் இந்தக் கல்வியைப் பெறமுடியுமா? இளமைக்காலத்தையும் பெற்றவர்களுடன் பிள்ளைகள் சந்தோசமாக வாழும் வாழ்க்கையையும் மறுபடி பெற்றுக் கொள்ள முடியுமா என்று அவனின் மனம் சலித்துக் கொண்டது.

காலம் செய்த சதியாக இருந்தாலும் தன்னுடன் படிக்கும் அனைவருக்குமே இவ்வாறாக விதி எழுதப்படவில்லையே என்று யோசித்துப் பார்த்தான். பாடங்கள் நடக்காத வேளைகளில் ஒவ்வொருவரும் தங்களுடைய பெற்றோரைப் பற்றி அடித்துக் கொள்ளும் பெருமை அவனை என்றுமே சந்தோசப்பட வைத்திருக்கவில்லை.

யோசனையின் நடுவிலே அத்தனை நேரமும் அடக்கி வைத்திருந்த பசி வயிற்றைக் கிள்ளவும் சாவதானமாக எழுந்து உடைகளை மாற்றிவிட்டு சாப்பாட்டு அறைக்குச் செல்லவென மாடியில் ஏறி வந்தபோது அருகிலிருந்த தெருவில் போய்க்கொண்டிருந்த அந்த நபரை உற்றுப்பார்க்க வேண்டும் என்ற ஆவலில் எட்டிப்பார்த்தான்.

எதிரே சுமார் ஐம்பது மீற்றரில் கண்ட காட்சி அவனை நகர்ந்துவிட விடாதவாறு தடுத்தது. அவ்விடத்தில் தனது சகபாடி மாதவன் தன் தந்தையுடன் மோட்டர் சைக்கிளில் செல்வதைக் கவனித்தான். அவனுக்கும் தனக்கும் எத்தனை பெரிய வித்தியாசம் என்பதை நினைத்துப் பார்த்தான்.

அவனின் அப்பாவும் அவனுடைய அப்பாவும் ஒரே இடத்தில் வேலை செய்கிறார்கள். ஆனால் அவர்கள் பிள்ளைகளை வளர்க்கும் விதத்தில் எத்தனை பெரிய வேறுபாடு தென்படுகின்றது என்று அவன் எண்ணினான். வகுப்பிலே கடைசிப் பிள்ளையாக வரும் அவனை அவனின் தந்தை கண்டிப்பது கிடையாது. தோளுக்கு மிஞ்சியவன் தோழன் என்று சொல்லி அவனைத் தன்னுடைய நண்பனுக்கும் மேலாகப் போற்றி வருவதை அவன் அவதானித்து இருக்கிறான்.

'நான் வெள்ளைக்காரனுடன் பழகுபவன். அவங்க பிள்ள வளக்கிற மாதிரித்தான் வளப்பன்' என்று யாரிடமோ சொல்லிக் கொண்டிருந்ததையும் அவன் அவதானித்திருக்கிறான். அவரின் நல்ல குணத்தை வியந்திருக்கிறான்.

கூடவே தன்னுடைய அப்பா அவ்வாறு இல்லையே என்ற எண்ணம் அவனை வாட்டியது. எல்லாமே தலைவிதிப்படிதான் நடக்கிறது என்பதை உணர்ந்து கொள்ள முடியாதவன் இல்லை அவன். ஆனால் மாணவன் என்னும் பருவத்தில் தந்தையின் அன்பும் அரவணைப்பும் தனக்கு அவசியமானது என்பதை அவன் உணர்ந்திருக்கின்றான். தன்னுடைய நண்பன் போலே தந்தையின் தோளில் கைகளை இட்டுக் கொண்டு ஊர் சுற்றி வருவதற்கு அவனுக்குள் ஏக்கம் எழுந்தது.

'இதுவெல்லாம் நடக்க முடியுமா? எதுக்கு வீணான கற்பனை' என்று அவனுடைய தெளிவான மனசாட்சி சொல்லவும் சிந்தனையில் இருந்து விடுபட்டு சமையலறை நோக்கி அவனுடைய கால்கள் விரைந்தன. மனம் வேதனையில் நிறைந்திருந்ததால் அளவாக சாப்பிட்டு விட்டு வந்து தன்னுடைய புத்தகத்தைத் தூக்கினான்.

தன்னுடைய எதிர்காலம், படிப்பு, சந்தோசம், பொழுதுபோக்கு அனைத்துமே அந்த சிறு அறையிலே ஒளிந்திருப்பதைப் போன்று அவனுக்குத் தோன்றியது. புத்தகத்தை விரித்து கண்களை செலுத்தியவனை நித்திராதேவி நெருங்கி அணைத்துக் கொண்டாள்.

காலச்சக்கரம் யாரையும் நோக்காது வெகுவாக சுழன்று விடவும் அவனின் பெறுபேறுகள் அன்று வெளியாகியிருந்தன. ஊரடங்கிய பின்பாகவும் விழித்திருந்து கணனியின் முன்னால் தவங்கிடந்த அவனின் தந்தையார் மகனை வந்து கட்டியணைத்தபடி கண்ணீர் சொரிந்தார்.

"அப்பா. உங்கட விருப்பப்படியே நான் நல்லாச் செய்தன். நல்ல ரிசல்ட் வந்திருக்கு. அத வச்சுக் கொண்டு நான் இன்னார்ற அப்பா எண்டு பெருமப்பட்டுக் கொள்ளுங்கோ. ஆனா இனி என்னச் சுதந்திரமா விடுங்கோ.

நான் யாருக்கும் சுமையில்லாம் என்ர பாட்டப் பாக்கிறன். என்ர விருப்பு வெறுப்புகளுக்கு மதிப்புக் கொடுக்கிறன். எதிர்காலத்த எதிர்நோக்க என்ன நானே தயார் படுத்துறன். இனி நான் உங்களோட வரேல்ல" என்று சொல்லியபடியே, தான் தயார் படுத்தியிருந்த கம்பூட்டர் கம்பனி நோக்கி விரைந்தான்.

திடீரென்று நித்திரையில் இருந்து விழித்துக் கொண்டபோது கையிற் கிடந்த புத்தகம் கீழே விழுந்த சத்தம் கேட்டது. இன்னும் ஒரு பாடம் எழுதவேண்டி இருக்கிறது என்பதையும் இன்றைய பாடம் மிகவும் திருப்தியாக எழுதப்பட்டது என்பதையும், முடிந்து வந்தபோது தகப்பன் உருவாக்கிய விடயமும் மறுபடியும் நினைவுக்கு வந்தன.

மனிதனை விட பன்மடங்கு வேகமான சிந்தனை, தன் நிலைமையை மாற்றியதுடன் தந்தையை எதிர்க்கும் துணிச்சலையும் உருவாக்கியது என்பதைப் புரிந்து கொண்டதும் விரக்தியுடனான சிரிப்பே அவனிடம் மலர்ந்தது. தன்னுடைய இறுதிப் பாடத்தையும் நன்றாக எழுதிவிட வேண்டும் என்ற எண்ணத்துடன் புத்தகத்தினுள் கருத்தை நுழைத்தான்.

இறுதிப் பரீட்சையை எழுதிவிட்டு வந்ததன் பின்னால் தந்தையின் நச்சரிப்பு ஓரளவுக்குக் குறைந்திருந்தது. தனக்குப் பயன்தரக்கூடிய தொழிற்கல்வியை தேசிய கைத்தொழிற்பயிற்சி அதிகார சபையினால் நடத்தப்படும் ஒரு வகுப்பைத் தொடர்ந்து கொண்டிருந்ததால் பெருமளவு நேரம் வீட்டுக்கு வெளியே செலவழிக்க வேண்டியிருந்தது. இருந்தாலும் தனக்குப் பொருத்தமாகும் ஒரு தொழிலைத் தேடும் முயற்சியில் அவன் தீவிரமாக முயற்சி செய்து கொண்டிருந்தான். ஆனால் பெருமளவு இடங்களில் அவனுடைய கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகளை வைத்துக் கொண்டே வேலை தரலாம் என்பதைச் சொல்லியிருந்தார்கள்.

அவனின் மனம் மறுபடியும் குழப்பமடைய ஆரம்பித்தது. மேற்படிப்பைத் தொடருவதற்கு முன்பாக வேலை செய்து சிறிதளவாவது பணத்தொகையைச் சேர்த்து வைத்தால் தனக்கு வசதியாக இருக்குமே என்ற நினைப்பு அவ்வளவாகப் பலன் தரவில்லை.

விரும்பியோ விரும்பாமலோ பயத்துடன் பெறுபேறுகளை எதிர்பார்த்துக் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

'முடிவுகள் வெளியாகிவிட்டன' என்ற செய்தி தீயாகப் பரவத் தொடங்கியதும், தன்னுடைய பெறுபேறுகளைப் பார்ப்பதற்குக் கணனியுடன் வெகுவாகப் போராடிக் கொண்டிருந்தான். என்ன நடந்ததோ தெரியவில்லை. அன்றைய தினத்தில் அவனுடைய கணனி வேலை செய்யவில்லை. அவனுக்கு அருகில் நின்றுகொண்டு அப்பாவும் முணுமுணுத்துக் கொண்டிருந்தார்.

அவனிடம் பதட்டம் அதிகமாகிக் கொண்டே வந்தது. நண்பர்கள் யாரிடமும் சென்று பார்த்துவர அவனுக்கு விருப்பம் இருக்கவில்லை. நல்லதா கெட்டதா என்பதை விடவும் வெளியாருக்கு அவசரமாக எதையும் தெரிவித்துக் கொள்ள அவனுக்கும் விருப்பமில்லை. அவனின் தந்தையாரும் விரும்பவில்லை.

சரி.பாடசாலைக்குச்சென்றுபார்த்துவரலாமேஎன்றஎண்ணத்துடன் புறப்பட ஆயத்தமானான். மிகுந்த குழப்பத்துடன் வீட்டுக்கு வெளியே வந்தபோது எதிரே மாதவன் வந்து கொண்டிருந்தான்.

மாதவன் பரீட்சை மண்டபத்தில் இவனுடைய அருகாமையில் இருந்தபடியால் சுட்டெண்ணை அறிந்து வைத்திருந்தான். அதை வைத்து ஏற்கெனவே இணையத்தளத்தில் பார்த்துக் கொண்ட பெறுபேறுகளின்படி தீபனுக்கு மாவட்டத்தில் முதன்மை இடம் கிடைத்திருக்கிறது என்றும், தனக்கு அனைத்துப் பாடங்களிலும் தோல்வியே என்பதையும் தெரிவித்தான். அவனுடைய பெறுபேற்றைக் கேட்டவுடன் அதிர்ச்சியில் விழுந்தவர் தன் தந்தையார். இன்னும் எழும்பவில்லை என்று சொல்லி அழுதான்.

தீபனுக்கு நடப்பது என்ன என்ற குழப்பம் எழுந்தது. தன்னுடைய கையைக் கிள்ளி இது தன்னுடைய கனவல்ல என்பதை நிச்சயப்படுத்திக் கொண்டான். இருப்பினும் மாதவன் சொல்லுவதை எப்படி முழுமையாக நம்புவது. தன் கண்களால் பார்த்துவிட வேண்டும் என்ற எண்ணம் அவனிடம் எழுந்தது. சத்தம் கேட்டு வெளியில் வந்த தந்தையாரிடம், மாதவன் சொன்ன விடயத்தை சுருக்கமாக சொல்லிவிட்டு அவசரமாக பாடசாலை நோக்கிப் புறப்பட்டான்.

தன்னுடைய வெற்றியில் அவனுக்கு சந்தேகம் எழுந்திருக்க வில்லை. தான் வென்றுவிட்டேன் என்ற எண்ணம் தெளிவாகவே இருந்தபோதும் அதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டியது அவசியம் என்பதனால் தன்னுடைய மனோவேகத்தையும் மீறிய வேகத்துடன் அவன் விரைந்தான். அத்தனை வேகத்திலும் அவனுடைய சிந்தனை மறுபடியும் அவனைக் கேட்டுக்கொண்டது.

தன்னுடைய தனிப்பட்ட வெற்றியா அல்லது வேறுபல காரணிகள் காணப்படுகின்றனவா?. வகுப்பறையில் கற்பதாலும் பரீட்சைக்குச் செல்வதாலும் மட்டுமே ஒருவன் சித்தியைப் பெறுகின்றானா என்ற கேள்வி மறுபடியும் எழுந்தது.

பால்ய வயதில் இருந்தே கல்வியை கற்கவைத்தது எது? பரீட்சையைக் கரிசனையுடன் செய்ய வைத்தது எது? என்ற எண்ணம் அவனிடம் மறுபடியும் எழுந்தது. கண்டிப்புடன் முன்நின்ற தந்தையை மீண்டும் நினைத்துக் கொண்டு சென்றான்.

எண்ணில் அடங்காத மகிழ்ச்சியுடன் அவன் செல்லும் பாதையை நோக்கியபடி நின்று கொண்டிருந்தார் அவனின் தந்தையார். அவரின் பார்வையில் இருந்து அவனது தோற்றம் படிப்படியாகச் சிறிதாகிக் கொண்டு வந்தது. அவரின் மனச்சாட்சி மௌனமாக சொல்லிக் கொண்டது.

"மகனே.. என்னைய நீ பிழையா நினைச்சிருந்தாலும் என்ர கடமையை முடிச்ச சந்தோசம் எனக்கு வருகுது. என்ர வசதிய உனக்குக் காட்டி உன்ர கண்ணக் கட்ட நான் விரும்பல. உன்ர பாதையில வரக்கூடிய முட்களக் களைய உன்னப் பழக்க வேண்டும் எண்டு நான் நினைச்சன். உனக்குப் பின்னாலேயே வந்து உன்ர முன்னேற்றத்தப் பாத்து சந்தோசப்படுவன். அதுக்காகத்தான் இத்தனை நாள் என்ன மறைச்சு உன்னட்டக் கடுமையா நடந்தன்". என்று சொல்லியபடி உணர்வுப் பெருக்குடன் அந்த உடல் தன் இளவல் சென்ற பாதையில் காலடி எடுத்து வைத்தது.

**2016 இல் அனைத்துலக திருக்குறள் சிறுகதைப்போட்டியில் பரிசு பெற்ற கதை**

# 2 காத்திருந்த காதல்

அந்தத் தனியார் கல்வி நிலையத்தின் வெளியே குழுமியிருந்த பெண்களின் கூட்டம் சற்றே விலத்தி வழி விடவும், மெதுவாகவே அந்த இடத்தினுள் நுழைந்த பைசிக்கிள் பிரேக் போட்டு நின்றது. தன் எட்டு வயதுப் பையனை இரு கைகளாலும் தூக்கி வாகனத்தில் இருந்து இறக்கி விட்டவாறே, தன் இரு கண்களாலும் அங்கே நின்றவர்களிடையே தேடுகின்றான் அவன்.

தன் கண்ணுக்கு எட்டுமளவிற்கும் அவள் தென்படுவதாகத் தெரியவில்லை. எங்கே போயிருப்பாள்.... கொழும்புக்குப் போயிருப்பாளோ.... ?

நேற்றுக் கதைத்தபோது எதுவும் சொல்லியிருக்கவில்லையே... ஏதும் அவசரம் ஏற்பட்டிருக்குமோ? தகப்பனுக்குச் சுகமில்லை என்று போன வாரம் சொல்லியிருந்தாளே என்ற எண்ணம் வந்தது. யோசனையுடனேயே மறுபடியும் அருகில் காவல் நின்று கொண்டிருந்த பெண்களின் கூட்டத்தினுள் கண்கள் துளாவ முனைந்தபோது, அவர்களின் நக்கல் சிரிப்பு அவனைத் திடீரெனச் சலனப்படுத்தியது.

இளம் காதலியைத் தேடிடும் இளவயதுக் காதலன் போலே தன்னை உருவகித்துக் கொண்ட அவனை, அப்பார்வை உலுக்கி எழுப்பியதைப் போல இருந்தது. பிள்ளைகளைக் கொண்டு வந்து, படிப்பிக்கவிடும் சாக்கில் தெருவில், நிக்கிறவன், போகிறவன், வருகிறவன் என்று ஒருத்தரையும் மிச்சம் வைக்காமல் அலசும் அந்தச் சீர்திருத்தவாதிகளை எதிர் நோக்குவதும் கடினமாக இருந்தது.

ஊரிலுள்ள ரியூஷன்கள் எல்லாவற்றிலுமே, அவர்களின் மழலைச் செல்வங்கள் படிக்கிறார்கள். அவர்களைக் கொண்டு சென்று கூட்டிவரும் சாக்கில் ஊர்க் கதைகளைக் காவித்திரிவது அந்தப் பெண்மணிகளின் வழக்கமாகும்.

அந்த ஊர்வம்புக்காரர்களின் பார்வையிலிருந்து கண்களை விலத்திவிட்டு தலையைக் குனிந்தவாறு யோசித்தபோதுதான், அவனுக்கு அவ்வாறு ஒரு எண்ணம் தோன்றியது. என்ன அவசரம் இருந்திருந்தாலும் தன்னிடம் சொல்லாமல் அவள் போயிருக்கக்கூடாது. ஒரு போன் கோலாவது போட்டிருக்கலாம் என்று எண்ணியபோது தான், இருவரிடமும் அப்படியொரு வழக்கம் இருக்கவில்லை என்பதை அவனின் மனச்சாட்சி ஞாபகப்படுத்திக் கொண்டது.

அவளைப் பார்த்துப் பேசவேண்டும் என்பதற்காகவே, மகனை அழைத்துக் கொண்டு புறப்பட்ட தன் தந்தையாரையும் தடுத்துவிட்டு மகனை ஏற்றிக்கொண்டு வந்த அவனுக்கு அவளைக் காணாதது பெரும் ஏமாற்றமாகவே இருந்தது.

ஏற்கெனவே தன்னையும் அவளையும் இணைத்துத் தவறாகப் பேசும் அந்தக்கூட்டத்தினர், அன்று தாராளமாகவே பேசுவார்கள் என்பதை உணர்ந்தவனாக, குனிந்த தலை நிமிராமலே மோட்டர் பைசிக்கிளை தள்ளத் தொடங்குகின்றான். அவனுக்கு என்னவோ போல இருந்தது.

அவள் கொழும்பில் இருந்து வவுனியாவுக்கு வந்திருந்த காலம் முதலாக அவளைச் சந்திக்காமல் இருந்திருக்கவில்லை. அந்த தனியார் கல்விக்கூடத்தில் தான் இருவருடைய பிள்ளைகளும் படிக்கிறார்கள். பிள்ளைகளைக் கொண்டு சென்று சேர்ப்பதைச் சந்தர்ப்பமாகக் கொண்டு, ஒருவரையொருவர் பார்த்துச் சிரிப்பதும், பாதையில் சன நடமாட்டம் அதிகமில்லாத வேளையில் அருகருகாக நின்று கதைப்பதும் அவர்களுக்கு வழக்கமாகிவிட்டது.

ஒரு நாளில் அவளைக் காணமுடியாது போனாலும் மனம் ஏங்கித் தவிக்க முனைந்தது. அவளைப் பார்த்துக் கொண்டும் பேசிக் கொண்டும் சிறுவர்கள் இருவரையும் சேர்த்துக் கொண்டு வெளியில் செல்ல வேண்டும் என்ற எண்ணமும் வந்தது.

ஆனால்.... சமுதாயம் என்ன சொல்லும்? இப்படி இவனின் பிள்ளையும் இவளின் பிள்ளையும் விளையாடிக் கொண்டிருக்க, பெற்றோர் இருவரும் இன்னொரு புறமாக விளையாடிக் கொண்டிருந்தனர் என்று சொல்லி பத்திரிகையில் போட்டுவிட மாட்டார்களா...?

மற்றவர்களின் கண்களில் உறுத்தாத வகையில், சமுதாயத்தினரால் அங்கீகரிக்கப்பட்ட உறவல்லவே தமக்குள் உள்ள உறவு என்று எண்ணியபோது அவனுக்குப் பெருமூச்சு வந்தது.

ஆணுக்காகட்டும் பெண்ணுக்காகட்டும் வாழ்க்கை என்பது ஒரு முறைதான் என்பது அவனுக்கு நன்றாகவே புரிந்துவிட்டது. மிகுந்த சிரமப்பட்டு மற்றவர்களின் கண்ணுக்கு உறுத்தாத வகையில் அவர்களின் தொடர்பு தொடர்ந்து கொண்டிருந்தது. இருப்பினும் எம்மவர் பார்வையில் இருந்து அத்தனை சுலபமாக தப்பித்துக் கொள்ள முடியாது என்பதை அவன் பின்புறமாக இருந்து பல விமர்சனங்கள் அவனுக்குப் புரிய வைத்தன.

"இவனைப் போல ஆக்கள் இருக்கிறதால, எங்கட பண்பாடுகள் எல்லாம் இப்பிடிச் சிதைஞ்சு போகுது..." என்று சமூகச்சீர்திருத்தவாதி ஒருவரின் குரல் கேட்டபோது கூனிக்குறுகி நின்றான்.

"அடுத்தவன்ர மனுசி மேலயே கண் அவனுகளுக்கு. கல்யாணத்துக்குப் பிறகுதான் இளமை திரும்புறதா நினைப்புப் பாருங்கோ"... முன்னால் சொன்னவரின் மனைவியின் குரலாக இருக்கவேண்டும்.

"இளம் வயதில இப்பிடிக் கூத்தடிக்கிறவன் எல்லாம், வயது போனாப்பிறகு புழுத்துத்தான் சாவானுகள்" என்ற இன்னொரு குரல். "ஆம்பிள ஆயிரம் செய்வானடி. சேறு கண்ட இடத்தில விழுந்து, தண்ணி கண்ட இடத்தில கழுவிட்டுப் போவான். உந்தப் பொம்பிளயளும் அதுக்குத் தக்க மாதிரியெல்லே நடக்கினம்."

“எல்லாம் ஐரோப்பாக் கலாசாரமாம். அவயள் ஐரோப்பியனுக்குத் தானே பிறந்தவயள். அதுகளின்ர நினைப்பைப் பாருங்கோ.”

“உதுகளினாலதான் இப்ப டிவோர்ஸ் கேசுகள் கூடிப்போச்சு. இப்பெல்லாம் கல்யாண எழுத்துக்கு சாட்சிக் கையெழுத்துப் போட வாங்கோ எண்டு யாரும் கூப்பிட்டாப் போகவே பயமா இருக்கு”

“எவனெவனுக்காகவோ, எந்தெந்தக் கோட்டில ஏறி, சாட்சி சொல்லவேண்டி வருமோ” என்று பலவேறு பரிமாணங்களில் ஒலித்துக் கொண்டிருந்த அந்த விமர்சனங்கள் அவனை வாட்டவே செய்தன.

சட்டென்று திரும்பி ஒரு கோபப் பார்வையை வீசவேண்டும் என்று எண்ணிக் கொண்டாலும், பொறுமையைக் காத்தபடி மெதுவாக அவர்களின் திசைக்கு எதிர்த்திசையில் நடக்கத் தொடங்கினான். காப்பாற்ற பல பேர் இருப்பதனாற் கள்வன் என்ற பார்வையில் இருந்து தப்பித்துக் கொள்ளும் அவர்களுக்குத் தன்னை விமர்சனம் செய்யும் அதிகாரம் இல்லை என்பதை மனதுக்குள் சொல்லிக் கொண்டான்.

கலாசாரம் என்று இத்தனை தெளிவாகக் கட்டமைப்பை வகுத்துக் கொண்ட எமது சமுதாயம் இப்பொழுது அனைத்திலும் பின்னடைவை எதிர்நோக்கி இருக்கிறது. அவற்றை ஆராய்வதற்கும் சீர்திருத்துவதற்கும் அவர்களுடைய வாய் போதாததாக இருக்கும்போது தன்னை விமர்சிப்பதில் மட்டும் அத்தனை பரிசுத்தம் அவர்களுக்கு என்று எரிச்சல் வந்தது.

சே... அடுத்தவனை விமர்சிப்பதற்கும் அவமதிப்பதற்கும் எங்களுடைய ஆட்களை யாரும் மிஞ்சிவிட முடியாது. அதுவும் நடத்தை சம்பந்தப்பட்ட விடயங்களில் ஒருவனைச் சாடும்போது நாக்கைப் பிடுங்கிக் கொண்டு சாகலாம் போன்று இருக்கிறது. அவர்களின் பார்வையும் கருத்துக்களும் தனி மனிதனின் எண்ணங்களை எந்த வகையிலும் மதிப்பதாகத் தெரியவில்லை.

இதனாற்தானோ எமது நாகரிகம் உலக அரங்கில் எடுபடாமற் போகவும் ஐரோப்பியனுடைய கலாசாரம் முன்னணிக்கு வந்தது என்று யோசித்தான். வெள்ளைக்காரன் ஆயினும் பரவாயில்லை. எம்மவனே எமது பண்பாட்டை வெறுக்கின்றான்.

எம்மாலே ஜீரணிக்க முடியாத சில விடயங்களை எதற்காக நாம் வைத்துக் கொள்ளவேண்டும்? எம்மாற் பின்பற்றமுடியாத விதிகளை எமது சமுதாயம் எதற்காகத் திணிக்கிறது? வாழ்க்கை என்பது சிறிது காலத்திற்கே. அதற்குள் அவரவர் விருப்பப்படி வாழ்ந்து முடிக்கட்டும் என்று விட்டுவிடாமல் அதையும் இதையும் கதைத்து எல்லாவற்றையுமே பாழடித்து விடுகின்றனர் என்று நினைத்தபோது ஏதோ ஒரு எண்ணம் புகுந்து உலுக்கியது.

அவன் ஒன்றும் பண்பாடு தெரியாதவனல்ல. அவனும் தமிழ்மகன் தான்... சாதாரணமான ஒரு குடும்பத்தில் அக்கா தங்கைகளுடன் பிறந்து, வாழ்க்கையில் எதிர்நீச்சல் போட்டு வாழ்ந்தவன். சிறு வயதிலே ஏதோவொரு உத்வேகத்தாலும் உந்துதலாலும் விடுதலைப் போராட்டம் என்ற நோக்கத்தோடு, வீரத்துடன் சென்றான்.

தமிழனின் நல்வாழ்வுக்காகவும் தமிழ்மொழியின் விருத்திக்காகவும், முதன்முதலாகத் தோன்றி உலகத்திலே முன்னணியிற் திகழ்ந்தது எமது நாகரிகம் என்பதை உறுதிப்படுத்துவதற்காகவும் என்று போராட்டம் தொடங்கிய காலத்திலே தலைமை சொல்லிக் கொண்ட பல விடயங்களாற் கவரப்பட்டவன் அவன். ஆயுதத்தைக் கையிற் தாங்கி அரும்பெரும் இலக்குகளை இதயத்திற் தாங்கி ஈழப்போராட்டத்தில் இணைந்திருந்த நாட்கள் அவனுக்குப் புகழைக் கொடுத்திருந்தன.

ஆனால், அடுத்த வருடமே எதிர்பாராத விபத்து ஒன்றில் அவனது அப்பா இறந்துவிட தனது குடும்பப் பொறுப்புத் தலைக்கு மேலாக வந்ததால் அவனை மீண்டும் அனுப்பி வைக்குமாறு அவனுடைய அன்னை தலைமையை வேண்டிக்கொண்டார். ஆனால் அவனைப்போல ஒரு கர்ம வீரனை அத்தனை சீக்கிரத்தில் அனுப்புவதற்குத் தலைவர் விரும்பவில்லை.

இருப்பினும் அவனது அம்மாவின் ஓயாத புலம்பலினால், அவனை வீட்டுக்குச் செல்ல அனுமதிக்கும்படி தலைவர் அவர்கள் கட்டளையிட்டிருந்தார்.

நாட்டைப் பற்றிய தனது இலட்சியத்தை பாதியில் நிறுத்திவிட்டு தன்னுடைய குடும்பத்தைக் கவனிக்கவென மறுபடியும் வீடு வந்து சேர்ந்தான்.

ஆயுதம் எடுத்து காட்டில் போர் செய்வதைவிடவும் குடும்பப் பொறுப்பைத் தலையிற் சுமந்து கொண்டு எம் சமுதாயத்தின் முன்னால் சிறப்புற வாழ்வது மிகவும் சிரமமாக இருந்தது. இருப்பினும் அவனது மறு பிரவேசம் முதல் அந்த வீட்டிற்கு தகப்பன் தானத்தில் இருந்து குடும்பத்தைக் காத்தவன் அவன்.

படிக்க வேண்டிய வயதில் படிக்காது சென்றவன் என்பதாற் வெள்ளைக் கொலருடன் வலம்வரும் வேலை அவனுக்குத் தரப்படவில்லை. ஆடித்திரிய வேண்டிய வயதில், அங்குமிங்கும் வேலை செய்து குடும்பத்தை இழுத்தான்.

தனது பிரயாசையையும் பல நல்லவர்களின் நிறுவனங்களின் உதவிகளையும் கொண்டு தனது சகோதரிகளுக்குச் செய்ய வேண்டியவற்றை, வெகு முறையாகவே செய்து முடித்தான். அடுத்ததாக அவனுக்கு ஒரு துணையைத் தேடுவதில் அவனின் அம்மா முனைப்பாக இறங்கியிருந்தார்.

வாழ்க்கையின் குறுகிய காலத்தில் பல விடயங்களையும் கடந்து வந்த அவனுக்குப் பணத்துடனும் பகட்டுடனும் வலம் வரும் பெண்களிடம் மனம் இலயிக்கவில்லை. பெண்களின் அருகாமை என்பது ஒரு போலித்தனமாக உலகம் போன்று தென்பட்டது. அந்த உலகில் ஆண்கள் விற்கப்படுகின்றான் என்று ஒரு எண்ணப்பாடு அவனுக்குள் எழுந்து கொண்டது.

தனக்கு பெண் பார்க்க வேண்டாம் என்று அன்னையிடம் கேட்டுக் கொண்டான். காலம் வரும்போது கருத்தைக் கவரும் ஒருத்தியைக் கைப்பிடிக்க இருப்பதாகச் சொன்னான். பெண் வேண்டும் என்ற எண்ணத்துடன் எவளையாவது அழைத்துக் கொண்டு வந்து தனது நிம்மதியைக் குலைக்கவேண்டாம் என்று சொன்னான்.

அவனின் தாய்க்கு மறுபடியும் கவலை எழுந்தது. தனக்குப் பின்னால் யார் அவனைக் கவனிப்பார்கள். அவனுக்கும் காலாகாலத்தில் கட்டி வைத்துவிட வேண்டும் என்று புலம்ப ஆரம்பித்தார். அம்மாவின் பிரார்த்தனைகளில் அவனுடைய சகோதரிகளைப் போலவே அவனுடைய திருமணப் பிரார்த்தனையும் சேர்ந்து கொண்டது.

அவனுக்குச் சிரிப்பாக இருந்தது. எல்லாப் பிரச்சினைகளையும் கடவுளுக்கு முன்னால் கொண்டு வைத்துவிடுகிறார்களே என்று சிரித்தான். இப்படித் தங்களுடைய வேலைகளுக்கு எல்லாம் அவரவர் இழுப்பதனாற் கடவுளும் நேரம் இல்லாதவர் ஆகிவிட்டார் என்று நினைக்கச் சிரிப்பு வந்தது.

தன்னுடைய மனம் அத்தனை சீக்கிரத்தில் யாரையும் நம்பிவிடாது என்று அவனுக்குத் தோன்றியது. ஆனாலும் அவனை ஒரே பார்வையில் கவரும்படி ஒருத்தி ஏற்கெனவே பிறந்திருந்தாள் என்பது அவனுக்குப் புரிந்தது.

தனக்குப் பிடித்தவளாக இருந்ததால் நகை, சீதனம் என்று எதனையும் எதிர்பாராமலே அவளைக் கைபிடிப்பதற்கு முனைந்தான். தமிழ்த் திரைப்படங்களின் கதாநாயகன் பாணியில் நடந்து, அருமையாகவே அந்தப் பெண்ணின் மனதைத் தொட்டு நாணத்துடன் அவளின் சம்மதத்தைத் தொடர்ந்து மணமேடையில் கரம் பற்றினான்.

திருமணத்தின் பின்பாக தான் முற்றுமுழுதாகவே மாறி விட்டேனோ என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டான். ஆரம்பத்தில் அவர்களும் காவியத் தம்பதியர்களாகவே இருந்தார்கள். வாழ்க்கையைப் பற்றி தான் கொண்டிருந்த எண்ணம் பிழையானதோ என்று அவனே எண்ணும்படியாக அவனுடைய வாழ்க்கை அமைந்தது.

அடுத்தடுத்து இரண்டு பிள்ளைகள் பிறந்ததும் ஆளுக்கொரு பிள்ளையை அரவணைக்கத் தொடங்கினர். அதுவரை தம்பதியருக் கிடையே இருந்த மோகம் சற்றுக் குறைவடைந்தது. சிறுசிறு விடயங்களில் நக்கலாகத் தொடங்கிய சில விவகாரங்கள் அவர்களிடையே முரண்பாடுகளைத் தோற்றுவித்தன.

சாதாரணமாக இருவரின் பிரச்சினைகளின் தொடங்கும் சண்டையில் தொடர்ச்சியாக அவ்விருவரின் குடும்ப அங்கத்தவர்கள், நண்பர்கள், ஊரவர்கள் அனைவரும் அழைக்கப்பட்டு மானபங்கப் படுத்தப்பட்டார்கள். முரண்பாடுகள் ஒரு எல்லையைக் கடந்துவிடவும் தங்களை மற்றவருக்கு உயர்வாகக் காட்டிக் கொள்ளவேண்டும் என்ற உருவாகிவிடவும் முரண்பாடுகள் விசுவரூபம் பெறத்தொடங்கின.

இவ்வாறு நாட்கணக்கில் தொடர்ந்த விவாதங்களுக்கு உறவினர்களாகிய நாரதர்கள் உரமூட்டினர். அவர்களுக்கு இடையிற் பேச்சு வார்த்தைகள் இல்லாதபோது அவளைப் பற்றி அவனும், அவளைப் பற்றி அவளும் அதையிதைச் சொன்னதாகக் கலகம் ஊட்டினார்கள்.

விளைவு.. சட்டத்தரணியை அணுகி திருமணமுறிவுக்குரிய கட்டளையை அனுப்பியிருந்தாள் மனைவி. அதற்குப் பின்னால் பிறந்த வீட்டில் அவளும் புதிய வீட்டில் அவனுமாக வாழ்க்கையை நடத்தத் தொடங்கினர். தனியாகவும் வாழலாம் என்று நினைத்த அவனுக்குத் தனிமை வெறுப்பைத் தரத் தொடங்கியது ...........................???

மறுபடியும் படிப்பு முடிவடைந்த பின்பாக மகனை அழைத்துச் செல்ல வந்தபோதும் தேடுகிறான். அவளை எங்கிலுமே காணவில்லை. அவளுடைய மகனைப் பற்றியாவது தெரிந்து கொள்ளவேண்டும் என்று அன்றைக்கு பிரதீப் படிக்க வரவில்லையா என்பதை தன் மகனிடம் கேட்டபோது மகனிடமிருந்து இல்லையென்ற பதிலே வந்தது.

அவர்கள் ஊரில் இல்லை என்ற விடயம் ஓரளவு புரிந்தது. கூடவே காணாத ஏக்கம் சூழ்ந்து கொண்டது. அவர்களை மறுபடியும் எப்போது காண முடியும் என்ற யோசனையும் வந்தது.

வவுனியாவில் வசிப்பதை விடவும் கொழும்பு வாழ்க்கை வசதியானது என்று நினைத்துக் கொண்டார்களா? அங்கே அவளுடைய அப்பா அம்மா ஒரு தொடர் மாடிக் கட்டிடத்தில் வீடு ஒன்றை வாங்கிச் சென்று விட்டார்கள் என்று அவனுடைய அப்பா சொல்லியது நினைவுக்கு வந்தது. அப்படியானால்.....

மறுபடியும் கொழும்புக்கே போய்விட்டார்களா?.. ஐயோ அப்படியானால் அவர்களைக் காணவே முடியாது.... என்றபோதே அவனின் மனச்சாட்சி தடுத்தது. யாருக்காக யார் உருகுவது? உன்ன நீ உப்பிடிக் குறைச்சுக் கொள்ளுறது கூடாது. உனக்கும் அவளுக்கும் என்ன சம்பந்தம் என்று கேட்ட மனச்சாட்சியைப் பார்த்துத் தலையில் அடித்துக் கொண்டான் அவன்.

அட மனச்சாட்சியே... உனக்கே தெரியாமல் விட்டால் மற்றவர்களுக்கு எப்பிடித் தெரியப்போகுது என்று சோர்ந்து போனான். அவனைப் போன்று கோமாளியாகவே காட்சியளித்த மனச்சாட்சிகூட அந்த வேளையில் கடுமையாக எதையோ சிந்தித்தது.

தன் மனைவியுடன் சந்தோசமாக இருந்த நாட்கள் அவனுக்கு நினைவுக்கு வந்தன. வாழ்க்கையைப் பங்கிட வரப்போகிறவளிடம் பணத்தை வாங்கி, வாழ்க்கையைத் தொடங்கக்கூடாது என்ற எண்ணம் அவனிடம் மேலோங்கி இருந்ததால், மிகவும் வறுமைப்பட்ட ஒரு குடும்பத்தில் இருந்தே பெண்ணைத் தெரிந்தெடுத்தான். தொடக்கத்தில் அவனை ஒரு கடவுளைப் போலவே அந்தக் குடும்பம் நடத்தியது.

அவனின் அதிஷ்டமாக இருக்கவேண்டும். வறுமையில் வாடிக்கிடந்த அவளது குடும்பம் படிப்படியாக உயிர்ப்புற்று, பணம் படைத்தவர்களாக மாறினார்கள். வெளிநாட்டிற்குச் சென்று அகதியாகக் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த அவனுடைய ஒரே மகன் நன்கு சம்பாதிக்க் தொடங்கி அவர்களை பண மழையிற் குளிர்வித்துக் கொண்டான்.

ஆனால்... திடீர் பணக்காரர்தானே....? வசதி வந்ததும் இவனையும், அவனது குடும்பத்தினரையும் மதிக்காது நடக்கத் தொடங்கினாள் அவனது மனைவி. காவியக்காதலர்களாக இருந்த அவர்களின் வாழ்க்கையிலும் புயல் வீசத் தொடங்கியது. அவர்களுக்குச் செய்து காட்டுகிறேன் பார்... என்று சொல்லிவிட்டு விவாகரத்து நோட்டீஸ் அனுப்பி வைத்திருந்தாள் மனைவி.

வீட்டை நோக்கிப் பயணிக்கும்போதே நினைவுகளைச் சுமந்து சென்றதனால் உடல் சுமையாகிவிடவும் அவன் வேகத்தைக் குறைத்து அந்த இடத்தில் நின்றபடி யோசித்தான். மெதுவாக வாகனத்தை இயக்கிபடி சந்திவளைவில் திரும்பும்போது ஏதோ எண்ணம் எழுந்தது. சட்டத்தரணியின் வீட்டை நோக்கி வந்தான்.

தனக்கு முன்னால் ஆயிரம் கேள்விகளுடன் வந்து நின்றவனைக் கண்டதும் விரித்துவைத்துப் படித்துக் கொண்டிருந்த புத்தகத்தை மூடிவைத்துவிட்டு அவனை நோக்கிவந்தார். சட்டரீதியான பிரிவில் இருக்கும் அவர்கள் இருவருக்கும் எதிர்வரும் தவணையில் விவாகரத்துப் பெற்றுத் தரமுடியும் என்பதை சட்டத்தரணி தெரிவித்தார்.

அவனை மகிழ்விக்க வேண்டும் என்று அவர் சொல்லிய வார்த்தைகளால் அவன் சந்தோசப் படவில்லை என்பது அவருக்குப் புரிந்தது. மிகுந்த அனுபவசாலியான அவருக்கும் பல விடயங்களை ஊகித்துக் கொள்ள முடிந்தது. இருந்தாலும் அவனாகவே ஒத்துக் கொள்ளட்டும் என்று மௌனம் சாதிக்கலானார். அவனால் மௌனமாக இருக்க முடியவில்லை. பதட்டத்துடன் வாயைத் திறந்தான்.

"ஒன்றாக இருக்கும்போது அருமை தெரியவில்லை. அவள் பிரிந்தபிறகு தான் அவளையும் பிள்ளையையும் பாக்க வேண்டும் போல இருக்குது." என்றான். சட்டத்தரணி அவனை ஆச்சரியமாகவே பார்த்தார். அவளிடமிருந்து விடுதலை வேண்டும் என்ற தீவிரத்துடன் அவன் வந்து நின்ற நாள் அவருக்கு நினைவுக்கு வந்தது.

அவர்களின் குழந்தைகளில் ஒருவரை அவனிடமும் மற்றயவனை மனைவியிடமும் மிகுந்த சிரமத்தின் மத்தியில் பெற்றுக் கொடுத்ததை நினைத்துப் பார்த்தார். அதன் பிறகு அவர்கள் கொழும்புக்குச் சென்றுவிட்டார்கள். தவணைக்கு மட்டும் வந்து போய்க் கொண்டிருந்தனர்.

இப்பொழுது அவன் சொல்லும் விடயம் அவருக்கு புதியதாக இருந்தது. இருந்தாலும் நடைமுறையில் இல்லாதது அல்ல.. சட்டத்தரணியின் மன ஓட்டத்தை உணர்ந்தவாறே அவன் சொல்லத் தொடங்கினான். குழந்தைகளை மாதத்துக்கு ஒரு முறை, பெற்றோரிடம் காட்டவேண்டும் என்று ஆணையைப் பிறப்பித்திருந்தமையால் அவர்கள் பிள்ளைகளைக் கொண்டு, ஒவ்வொரு மாதமும் பொது இடங்களிற்கு வரலானார்கள்.

குழந்தைகள் விளையாட்டில் இருக்கும்போது, அவர்களின் அருகே செல்வது போலவே அவர்கள் கதைத்துவிட்டுச் செல்வர்.

அதற்குப் பிறகு, ஒரு அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றில் வேலை கிடைத்ததால் அவர்கள் இங்கு வர நேர்ந்தது. முதலாவது மகன் படிக்கும் தனியார் பாடசாலையிலேயே இரண்டாமவனையும் சேர்த்தாள். அவர்களைக் கொண்டு சென்று சேர்ப்பிக்கும் போதும் எடுக்கவரும்போதும், அவர்கள் பேசும் வழக்கம் இருந்தது.

இவ்வாறு தொடங்கிய அவர்களுடைய நட்பு, முறையில்லாக் காதலாக உருவகித்துப் பேசப்படுமளவிற்கு அமைந்திருப்பது அவர்களின் துரதிருஷ்டமே. முற்றும் முழுதாக உரித்தாகும், பண்பாடான உறவு, பலராலும் இழித்துரைத்துக் கதைக்கப்படும் நிலைமையையும் தாங்கிக்கொண்டு வாழ்ந்து வந்ததைச் சொன்னான்.

ஆச்சரியமாகவே இருந்தது சட்டத்தரணிக்கு. அவரின் முகமாற்றத்தைக் கவனித்த அவனுக்குச் சலனமாக இருந்தது. அவர் ஏதும் நினைப்பாரோ என்று சிந்தியாமலே வாய்விட்டுக் கேட்டான்.

"வழக்கைக் கான்சல் பண்ணிட்டு நாம் இணைந்து கொள்ள முடியாதா?"

விவாகரத்துக் கேட்டுவந்த நாளைவிடவும் அன்று அவன் குரல் தெளிவாக இருந்தது. ஏதோ ஒரு முடிவை அவன் நெருங்கிவிட்டதாக அவர் உணர்ந்தார். அவருக்குள்ளே எழுந்த உணர்வுகளைக் காட்டிக் கொடுக்காமல் அமைதியாகச் சொன்னார்.

"முடியும். இல்லையென்று யார் சொன்னார்? ஆனா இந்த விஷயத்தில அவளின்ர முடிவு என்ன எண்டு தெரியுமா" என்று கேட்டார்.

அதைப் பற்றி அவனுக்குத் தெரியாது. அவள் கதைத்தாளே தவிர இப்பிடியொரு எண்ணத்தை வெளியிடவில்லை... மறுபடியும் குழப்பம் அவனிடம் சூழ்ந்து கொண்டது.

"பிள்ளைகள் ரெண்டு பேரையும் இப்பிடி உங்க ரெண்டு பேரிட்டயும் குடுத்தது அவங்களைப் பாத்தாவது நீங்க ஒண்டு சேர வேண்டும் எண்டதினால தான். இப்ப உன்ர பக்கம் சரியாகிட்டுது. அவளப் பத்திப் பாக்கவேண்டுமே" என்றார்.

அவனுக்குத் தன்னுடைய தவறு புரிந்தது. உலகத்தைப் பற்றி எல்லாம் விமர்சனம் செய்த பொழுதுகளில் இந்த இரண்டு வார்த்தையைக் கேட்டிருக்கலாமே என்று யோசித்தான். இருப்பினும் அவனுக்குள்ளே எழுந்த நம்பிக்கையினால் விரைவில் அவளிடம் நேரடியாகவே கதைத்து நல்ல முடிவுடன் வருவதாகச் சொல்லி விட்டுச் சென்றான்.

அதே நேரம் கன்னத்தில் கைகளை வைத்தபடி வெளியே வெறித்துப் பார்த்தபடி அவள் இருந்தாள். அவளின் அனுமதியைக் கேட்காமலே அவளுக்கு முன்பாக நின்றவாறு அவளின் தகப்பனார் ஏதோ சொல்லிக் கொண்டிருந்தார். அவளின் அனுமதியை மீறி அவற்றை செவிப்பறை வாங்கிக் கொண்டது.

"நீ சொன்னதினால தான் பழையபடி ஊருக்குக் கொண்டு போய் பிள்ளையப் படிக்கச் சேர்த்தனான். அவனக் கண்டனான் கதைக்கிறனான் எண்டெல்லாம் சொல்லுறாய். ஆனாலும் ஒரு முடிவயும் காணோம். உன்ர மச்சான் வர்ற மாதம் வாறான். இந்தப் பிள்ளையோடயே கல்யாணம் செய்யப் போறன் எண்டு சொல்லிக் கொண்டிருக்கிறான். அவனுக்கு என்ன சொல்ல" என்றபடி நிறுத்தினார் அப்பா.

அப்பாவின் தங்கையின் மகன் லண்டனில் வசித்து வருகிறான். அவள் மீது சிறு வயதிலிருந்தே மிகுந்த அன்பு கொண்டவன். அவனுடைய அப்பா, வசதியில்லாத இந்த வீட்டில பெண் எடுக்கவிடாததால் அவளை அல்லாமல் வேறு யாரையும் திருமணம் செய்து கொள்வதில்லை என்ற எண்ணத்துடன் வாழ்ந்து வந்தவன்.

இப்பொழுது அவனின் தந்தையார் இறந்துவிட்டார். சில மாதங்களாக, அவளின் வாழ்க்கை கேள்விக்குறியாக இருப்பதால் அவளைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டிருந்தான். அவன் விஷயத்தில் ஒரு தெளிவான முடிவை எடுப்பதற்காகத்தான் அவள் அவசரமாகக் கொழும்புக்கு வரவழைக்கப்பட்டிருந்தாள்.

இடைக்கிடையே சில மஞ்சள் வெளிச்சத்தைக் காட்டியபோதும் மௌனத்தைக் காத்த அவளுக்கு அப்பாவின் வார்த்தைகளைக் கேட்டபோது கவலையாக இருந்தது. என்ன தான் பிள்ளையோடு ஏற்றுக் கொள்கிறதாக இருந்தாலும், அவன் பிள்ளையை நன்கு பராமரிப்பானா? அல்லது தன்னில் மட்டும் பாசம் காட்டுவானா? மனதுக்கு எத்தனை கசப்பாக அமைந்தாலுமே பிள்ளைகள் என்று பார்க்கும்போது தன் கணவனிடமே சென்று சேர வேண்டும் என்ற எண்ணமே வந்தது. ஆனால் அவனின் தாயார், சகோதரிகள் அவளை நடத்திய விதத்தையும், அவனின் பாராமுகத்தையும் நினைக்கும்போது அவளுக்கு அவனிடம் வருவதற்குத் தைரியம் வரவில்லை.



அப்பா சொல்லிய முடிவுக்கு இணங்குவதற்கும் தைரியம் இருக்கவில்லை. நித்திரை இல்லாமல் படுக்கையில் உழன்று கொண்டாள். இரவு வெகு நேர யோசனை செய்ததன் பின் பேனாவை எடுத்துக் கடிதம் வரையத் தொடங்கினாள்.

"அப்பா,

என் எதிர்காலத்தைப் பற்றித் தங்களுக்கு இருக்கும் அக்கறை எனக்குச் சற்றுப் பயத்தைக் கொடுக்கிறது.

ஊரிலே நான் அவரை ஒவ்வொரு நாளும் சந்தித்துக் கதைக்கிறேன். வெளிப்படையாகச் சொல்லிக் கொள்ளாமல் பல விடயங்களைக் கதைக்கிறோம். திருமணமாகி வாழ்ந்த காலத்தில் கதைத்திடாத பலவிடயங்களை நாம் இப்போது மனம் திறந்து கதைக்கிறோம். எம் குழந்தைகளின் எதிர்காலத்தைப் பற்றி எம் இருவருக்கும் இடையே ஒரே மாதிரியான சிந்தனைகளே இருக்கின்றன.

வாழ்க்கையில் இக்கட்டான சந்தர்ப்பத்தில் இருக்கும் நான் அவரிடமே செல்கிறேன். என் எதிர்காலத்தைப்பற்றி நேரடியாகவே கேட்கிறேன். அவருக்கு அப்படி எண்ணம் இல்லாது போனால், முதலாவது பிள்ளையையும் போராடியெடுத்து என்னிடம் வைத்து வளர்க்கிறேன்.

என்ர எதிர்காலத்தைப்பற்றி மேலும் சிந்திக்க வேண்டாம் அப்பா. அத்தானிடம் என் முடிவைச் சொல்லிவிடுங்கள்"

அப்பா இந்நேரம் படித்திருப்பார் என்ற எண்ணத்துடன் மகனைத் தன் மடியிலே ஆதரவாகக் கிடத்திவிட்டு சுவரோரமாகச் சாய்ந்து கண்களை மூடிக் கொள்கிறாள்.

"முதலாவது மேடையில் நிற்கும் நகர்சேர் கடுகதிப்புகையிரதம், இன்னும் சில வினாடிகளில் வவுனியா நோக்கிப் புறப்படும்" என்று ஒலிபெருக்கியில் சத்தம் கேட்டது.

**ஞானம் சஞ்சிகையின் "செம்பியன் செல்வன்" சிறுகதைப்போட்டி 2014 இல் பரிசு பெற்ற கதை**

# 3 தீக்குள் விரலை வைத்தால்

தீயும் தேனாக இனித்திடுமோ - அன்றி
தீயினுள் தான்விரல் சுகம் தருமோ
தீர்க்கும் உண்மைகள் தீண்டாவிடத்து
தீயினுள் மூழ்குதல் தீர்வாவதோ

மாலை மங்கி இருள் கவியும் பொழுதில், சுவாமிப் படத்தின் விளக்கினை ஏற்றிவிட்டு கைகளினால் தொட்டுத் தீயினை அணைத்து விட்டு கண்களை மூடிக் கும்பிட்டாள் அவள். தீயினைத் தீண்டும் நேரம் படிப்படியாக அதிகரித்துச் செல்வதாக அவளுக்குப்பட்டது.

அவளின் உடல் தீயைத் தொட்ட உணர்ச்சியைக் காட்டாது நிற்கவே மனம் வேகமாக கவிதையை அசைபோட்டது. கடும் துன்பங்களைத் தாங்கியதாற் தன்னுடைய கற்பனையில் எழுந்து கொண்டதா அன்றேல் தன்னுடைய நேரத்தை உணர்த்த காலம் படித்துக்கொண்டதா என்று அவளுக்குப் புரியவில்லை.

'கையிற் பட்டுவிட்டால் மூளைக்குச் செல்லாமலே கைகளை உதறச் செய்திடும் தீயைக் கண்டாலே தூர நின்று கொள்ளுவார்கள் அனைவரும்.

இந்த உலகமும் காணப்படும் அத்தனை பொருட்களும் பஞ்சபூதங்களாலே ஆக்கப்பட்டது என்றும், அதில் ஒன்றாகிய தீ என்பது அனைத்தையும் சேர்த்துவிடக் கூடியதென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

திருமண விழாவிலும் திருவிழாக்களிலும் தேவர்களை அழைத்து வரும் பாங்கில் தீயினை மூட்டி அதிலே நெய் மற்றும் தேவர்களுக்குத் தேவையான அவிப்பொருட்களை இட்டு விடுவர். அவை தேவர்களைச் சென்றடைகின்றன என்பது ஐதீகமாகும். மனிதர்களின் செயல்களைத் தேவர்களுடன் இணைக்கும் பணியை அக்கினியே செய்கின்றது.

தங்கத்தையும் செம்பையும் சேர்ப்பதற்கு தீயினைப் பயன்படுத்துகின்றார்கள். தனியாக இருக்கும் மூலகங்கள் சேர்வையாவது நெருப்பினாலேயாகும்.

உப்பு, புளி, மரக்கறி நீர் என்பவற்றைக் கலந்து நெருப்பினைக் கொடுக்கின்றோம். கூட்டு எனப்படும் கலவையைத் தருகின்றது. இவ்வாறாக ஒன்று சேர்ப்பதற்கு தீ பயன்படுத்தப் படுகின்றது.

நீரானது ஏனையவற்றைத் துப்புரவு செய்வதற்காகத் தன்னை அழுக்காக்கிக் கொள்கின்றது. ஆனால் தீயோ அனைத்தையும் சுத்தப்படுத்தி, தானும் தூய்மை இழக்காது மிளிர்கின்றது. அதனாலேயே தூய்மையைப் பரிசோதிப்பதற்குத் தீயினுள் இறக்கிவிடும் வழக்கம் அக்காலத்திலே எம்மவரிடம் காணப்பட்டதாம்.

கணவன் இறந்துவிட்டால் அவரை எரிக்கும் சிதையில் மனைவியையும் தள்ளிவிடுவார்கள். அதை உடன்கட்டை ஏறுதல் என்று குறிப்பிடுவர். சீதையின் கற்பைத் தூய்மையை அறிவதற்கு அவளை சிதையில் இறங்கச் சொன்னாராம் இராமர். இராமர் பெண்ணை மதிக்கவில்லை என்று அனைவரும் சொல்லித் தீர்த்தனர்.

என்னதான் தூய்மை என்பதைக் கருத்திற் கொண்டாலும் தீ என்றவுடனேயே வாய் வெந்துவிட்டதைப் போல அலறும் பழக்கம் எம்மிடம் இல்லாமல் இல்லை.

"தீக்குள் விரலை வைத்தால் நந்தலாலா
நின்னைத் தீண்டுமின்பம் தோன்றுதடா நந்தலாலா"

என்ற பாரதியாரின் பாட்டின் வரிகள் தீயென்ற உள்ளுணர்வையும் கடந்து இறை நினைப்பில் உருகும் பக்தனின் மனநிலையைப் புலப்படுத்துகின்றது.

தீக்குள் சந்தோசமாகவே விரலை வைக்க வேண்டின் அது அனைத்து உணர்வுகளையும் கடந்த பக்தனின் மனநிலையைப் புலப்படுத்தும். அன்றேல் துன்பத்தைத் தாள இயலாமல் வாழவும் முடியாமல், சாகவும் முடியாமல் அவதிப்படும் மனித மனத்தின் அங்கலாய்ப்பைக் குறிக்கும்' என்று அன்றொருநாள் இறை பிரார்த்தனை செய்த பெரியவர் சொல்லியது நினைவுக்கு வந்தது.

சிந்தனையுடனேயே கடவுளின் படத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டிருக்கவும் உள்ளே வேகமாக நுழைந்துவிட்ட அவளின் குழந்தை எட்டி விளக்கின் சுவாலையைத் தொட்டது. 'ஆ' என்றபடியே எட்டி அதன் கைகளைத் தட்டிவிட்டவள் அவசரமாக அதை வெளியில் இழுத்துவந்து கதவைச் சாத்திவிட்டு சிந்தித்தாள்.

நெருப்பு என்ற விடயத்தில் தன்னைப் போலவே அதற்கும் பயமில்லை என்பது புரிந்தது. நெருப்பை மட்டுமல்ல எதையுமே புரிந்து கொள்ளமுடியாத நிலை தானே என்று மனது சொன்னது. தீயினை மட்டுமே சந்தோசமாகத் தீண்டும் மனநிலை தான் அந்தக் குழந்தையைப் பெற்றுக் கொண்டபோது அந்தத் தாய்க்கு ஏற்பட்டது.

பத்து மாதம் கருவிலே சுமந்து, சொல்லொணா வேதனைகளைச் சுமந்து, தன் விருப்பம் என்று எதனையும் நோக்காது அங்கமெல்லாம் நொந்து தான் பெற்றிட்ட மகவைப் பார்த்த மாத்திரத்திலேயே வைத்தியர்கள் சொன்ன விடயத்தை அவளால் ஜீரணிக்க முடியாமல் இருந்தது.

யாராக இருந்தாலும் பிறந்துவிட்ட பிள்ளையை ஆவல் பொங்கக் காண வருவதும், ஆசையுடன் அள்ளிக் கொஞ்சுவதும் இயற்கையானது தானே. அந்த வைத்தியசாலையில் அவளுடன் கூடவிருந்த அனைத்து அம்மாமாரின் குழந்தைகளையும் அப்படித்தான் செய்தார்கள்.

அவளின் அருகில் வரும்போது மட்டும், ஏதோ பரிதாபத்துக்குரிய ஜீவனைப் பார்ப்பது போல பார்ப்பதும், குழந்தைக்கு அருகாக நின்று கொண்டு கண்களால் கதைத்துக் கொள்வதும், அப்பாலே சென்று அவளுக்குக் கேட்காத மாதிரியே கிசுகிசுத்துக் கொள்வதையும் அவள் கவனித்துக் கொண்டு தான் இருந்தாள்.

அன்று இரவு வேளையில் சுற்றிப் பார்க்க வந்த வைத்தியர் அவளின் அருகாமையில் நின்று கொண்டு வெகு நேரம் கதைத்துக் கொண்டிருந்தார். அவர்களின் வழமைக்கு மாறான நடவடிக்கை அவளுக்குமே ஆச்சரியத்தை உண்டுபண்ணியது.

அவளின் கணவனின் தொழில், பூர்வீகம், திருமணம் என்பது பற்றியெல்லாம் கேட்டுக் கொண்டிருந்தார். மறுநாள் காலையில் அவளைப் பார்வையிட வரும்போது தன்னை சந்திக்கும்படியும் சொன்னார்.

என்னவென்பது அவளுக்கும் புரியவில்லை. அருகிலே படுத்துக் கண்களை மூடியபடியே கிடந்த தன் குழந்தையை எடுத்து மார்போடு அணைத்துக் கொண்டாள். அவளுக்கு முதலாவது குழந்தை என்பது மட்டுமல்ல, அந்தக் குடும்பத்தின் முதலாவது பெண் வாரிசும் அவள்தாள்.

சிரமப்பட்டு ஒவ்வொரு அடியாக வைத்துக் கொண்டு வந்த அந்தக் குழந்தையை அப்படியே அள்ளியெடுத்துக் கொண்டு முன்னே சென்றார் தகப்பனார். அவருக்குப் பின்னதாக அவள் நடந்து கொண்டிருந்தாள். குழந்தை பிறந்த நாள் முதலாகவே இவ்வாறான வாழ்க்கையே அவர்களுக்குப் பழகிவிட்டது.

'குழந்தை அங்கே கொண்டு போங்கள். இங்கே கொண்டு போங்கள்.' என்று யாரும் சொல்வதைக் கேட்டு அங்கு கொண்டு போவது. பார்ப்பவர்கள் எல்லாரும் குழந்தையை வெறித்துப் பார்ப்பது. எல்லாவற்றையும் தாண்டி வைத்தியர்களிடம் ஆலோசனைக்கெனச் செல்லும்போது அவர்கள் விரக்தியடையச் செய்யும்படியாக எதையாவது சொல்லுவது.

'நான் யாருக்கு என்ன பாவம் செய்தேன். எதுக்காகக் கடவுள் என்னை இப்படி சோதிக்கிறான்' என்று பெற்றோர் இருவரும் தனித்தனியாகத் தம்முள் பொருமிக் கொண்டிருந்தனர்.

'பெற்றோரில் ஏதாவது தவறு செய்திருப்பர் எனபது கிடையாது. இது மரபணு சம்பந்தப்பட்ட பிரச்சினை. எமது இயல்புகளுக்குக் காரணமான இருபத்து மூன்று சோடி நிறமூர்த்தங்களில், இருபத்து ஓராவதில் இரண்டுக்குப் பதிலாக மூன்று காணப்படுவதால் வரும் உடல் நிலை மாற்றமே இதுவாகும்.

அந்த வியாதியைக் கண்டறிய முடியுமே தவிர உடலெங்கும் வியாபித்திருக்கும் மரபணுக்களில் மாற்றங்களைச் செய்துவிட முடியாது.

பொதுவாக இப்படியான குழந்தைகளை அவர்கள் உருவாகி மூன்று மாதங்களில் கண்டுபிடித்து விடமுடியும். தாய்மாரின் வயிற்றுப் பகுதியில் ஊசியை செலுத்தி அந்தத் திரவத்தைப் பெற்று அதைப் பரிசோதிப்பதன் மூலம் இவ்வியாதியைக் கண்டுபிடிக்கலாம்.

அதாவது பெறப் போகும் சிசு, இவ்வாறான நோயினால் பீடிக்கப்பட்டிருப்பதற்கு எத்தனை வீதம் சாத்தியப்பாடு இருக்கின்றது என்பதைக் கண்டுபிடித்துச் சொல்லுவர். இந்த நிகழ்தகவு அதிகமாக இருக்குமானால் கருக்கலைப்புச் செய்துவிடலாம். இது வெளிநாடுகளில் பாவிக்கப்படுகின்றது.

இவ்வாறான குழந்தைகள் தமக்குள் பொதுவான இயல்புகளைக் கொண்டிருப்பர். அவர்களின் வெளி அவயவங்களில் வெளிப்படையாகத் தெரியும் வேறுபாடுகளும் மட்டுமல்ல, உடலின் உட்பகுதியிலும் சிக்கல்பாடுகளைப் பலரும் கொண்டிருப்பர்.

விவேகக் குறைவு என்பது பரவலாக அவர்களிடம் காணப்படும். எந்தவொரு விடயத்தையும் பலமுறை சொல்லிக் கொடுத்த பின்பே அவர்கள் தெரிந்து கொள்வர். அவர்கள் விசேட தேவைக்குட் பட்டவர்கள் என்ற வகையில் அடக்கப்பட்டுவிடுவர். அவர்களின் தேவைக்கேற்றவாறு வேறு பாடசாலைகள் காணப்படுகின்றன.

அங்கு அவர்களை ஒழுங்காகப் பயிற்றுவிப்பதன் மூலம் அவர்களின் வாழ்க்கைக்குச் சிறு ஒளியை வழங்க முடியும்' என்பதையும் வைத்தியர்கள் அவளுக்கு தெரிவித்தனர்.

தங்கள் குழந்தைதானே எப்படியும் முன்னேற்றியே ஆகவேண்டும் என்ற எண்ணத்தில் அத்தனை இடங்களுக்கும் சென்று வந்தவர்கள் இறுதியில் சோர்ந்து போயினர். குழந்தையை பார்த்துப் போகும் சாக்கில் அடிக்கடி அவளின் முன்னாலே தோன்றி அவளைக் கலவரப் படுத்திவிட்டுப் போனாள் கமலா அக்கா.

தனக்கு இப்படியொரு பிள்ளை பிறந்திருந்தால் உடனடியாக உயிரை விட்டிருப்பாள் என்று சொன்னாள். தாய்க்கு மிகவும் வருத்தமாக இருந்தது.

‘தெய்வத்தால் ஆகாதது இல்லை. அந்தக் கோயிலுக்குப் போய் நேத்தி போடுங்க. இந்தக் கோயிலுக்குப் போய் நேத்தி போடுங்க’ என்ற மற்றவர்களின் கதைகளைக் கேட்டு ஆங்காங்கு திரிந்தவள் களைத்துவிட்டாள். எந்தத் தெய்வமும் முன்வருவதாகத் தெரியவில்லை.

“தொடர்ந்து இந்தப் பிள்ளையுடன் மல்லுக்கட்ட என்னால முடியாது. இத எங்கையாவது அநாத ஆச்சிரமத்தில் சேத்துவிடு” என்று கண்டிப்பாகச் சொன்னான் அவளின் கணவன். அவள் செய்வதறியாது திகைத்தாள். அப்படியொரு எண்ணம் அவளிடம் வந்திருக்கவே இல்லை.


“இப்பிடியெல்லாம் எங்கட குடுப்பங்களில இல்லை. இது உன்ர பிரச்சன தான். உனக்கு ஏதோ தெரியாத வருத்தம் இருந்திருக்கு. அது தான் பிள்ளய இப்பிடிக் கொண்டந்திட்டுது” என்று கடுமையாகச் சொன்னார் மாமியார். அவளுக்கோ எதையும் சொல்லிக் கொள்ள முடியவில்லை.

இது எங்களுக்கு அப்பாற்பட்ட விடயம். அதற்குப் பெற்றோர் காரணமில்லை என்று வைத்தியர்கள் சொல்லியிருந்தும் இப்படிக் கதைப்பவர்களை என்ன செய்வது என்று கலங்கினாள்.

அந்த வீட்டில் இருந்த நிம்மதி, கணவன் மனைவியின் பாசம் அனைத்தும் அந்தக் குழந்தையால் உடைத்து எறியப்பட்டு விட்டது என்பது மட்டும் புரிந்தது. ஆனால் குழந்தையைப் பிரிந்து கொள்ள அவளுக்கு மனம் வரவில்லை.

தன்னுடைய சாமான்களை எடுத்துக் கொண்டு வீட்டைவிட்டு வெளியேறிவிட்டான் அவளது கணவன். இந்தப் பிள்ளை இருக்கும் வரையில் வீட்டுக்கு வரமாட்டேன் என்று சொல்லிவிட்டுப் போனான்.

மற்றவர்களின் கதைகளுக்குக் காது கொடுத்த அவளின் கணவன் குழந்தை இவ்வாறாகியதற்குக் காரணம் அவள் தான் என்ற குற்றச்சாட்டில் அவளை விட்டுப் பிரிந்து வெளிநாட்டுக்குச் சென்றுவிட்டான்.



தானும் குழந்தையுமே ஒருவருக்கொருவர் உதவி என்ற நிலையில் அவள் இன்று வாழ்ந்து கொண்டிருக்கிறாள். நினைவுகளின் அழுத்தங்கள் உடலின் நீர்மையைத் தாங்கிக் கண்கள் என்ற வாசலின் ஊடாகக் கீழ் நோக்கிச் சரிகின்றன.

அவளின் கோலத்தைக் கண்ட குழந்தை அவளின் அருகே வந்து முகத்தில் அடித்துவிட்டுச் சிரிக்கின்றது. உலகத்தையே ஆட்டி வைத்து மானிட இனத்தைக் கதிகலங்க வைத்துச் சிரித்துக் கொண்டிருக்கும் அந்தக் கடவுளின் சிரிப்பு அங்கே தெரிகின்றது.

'வாழ்வின் தொடக்கம் நீ. வாழ்வின் முடிவும் நீ' என்பதாக குழந்தை இருக்கும் வரையிலும் தன்னுடைய வாழ்க்கையும் இருக்க வேண்டும் என்று கடவுளைப் பிரார்த்தித்துக் கொண்டாள்.

இவ்வாறாக குழந்தையும் அவளுமாக ஆண்டவனுக்கு முன்னாலே நின்று பிரார்த்திப்பதும் அழுவதும், உணர்ச்சிப் புரிந்துகொள்ளாத அவளது குழந்தை போலவே கடவுளும் மௌனமாக சிரித்துக் கொண்டிருப்பதும் அவளுக்கு நாள்தோறும் நடைபெறும் நிகழ்வாகிவிட்டது.

ஒரு சதத்திற்கும் பிரயோசனம் இல்லாத அந்தப் பிரார்த்தனையை முடித்துவிட்டு வெளியே வந்தபோது கண்ணீருடன் கமலா அக்கா வந்த நின்றதைப் பார்த்தாள். அவசர அவசரமாக தனது கண்களைத் துடைத்தபடி அவளை நோக்கித் திரும்பினாள்.

"சந்தியா என்ர மகள் யாரோ ஒருத்தனோட வீட்ட விட்டு ஓடிப் போயிட்டாள்" என்றபடி தலையில் அடித்துக் கொண்டு ஒப்பாரி வைத்தாள். திடுக்கிட்டு விட்டாள் சந்தியா. கமலாவின் மகளுக்கு பதினெட்டு வயதுதான் ஆகின்றது. அதற்குள்ளாக வாழக்கையைத் தெரிந்துகொண்டு ஓடிவிட்டாளா ! என்ற கேள்வி எழுந்தது.

மகளின் மீது கமலா அக்கா உயிரையே வைத்திருந்தாள் என்பது அவளுக்குத் தெரியும். அவளை ஒரு தேவதை மாதிரி வளர்த்து வந்தாள். தான் தன்னுடைய மகளைக் குறித்து கவலைப்படும் பொழுதில் எல்லாம் தன்னுடைய மகளைச் சுட்டிக் காட்டிப் பெருமை கதைப்பவள்.

இன்று அவளுடைய கேவலமான நிலையைப் பார்க்கவும் முடியாமல் இருந்தது. பிள்ளைகளை அவர்களுடைய இளவயதுகளில் பறிகொடுப்பது என்பது யாராலுமே தாங்கிக்கொள்ள முடியாததொன்று. அதுவும் பெண் பிள்ளைகளை இப்படியாக இழப்பது என்பதைத் தாக்குப் பிடிக்கவே முடியாது.

கமலா அக்கா தொடர்ந்தும் அழுது கொண்டே இருந்தாள். மகள் பிறந்த நாள் முதலாக அவளைச் சீராட்டி வளர்த்த விதத்ததையும் அவள் விரும்பியபடியே தானும் கணவனும் நடந்ததைச் சொல்லி அழுதாள்.

சந்தியாவுக்கும் கவலையாக இருந்தது. அவளின் அருகில் இருந்தவாறே அவளின் கதைகளைக் கேட்டுக் கொண்டே கண்ணீர் சிந்தினாள் அவள். அவளின் நிலைமையை தன்னால் உணர முடிந்ததாகச் சொன்னாள்.

பெண்பிள்ளைகளால் ஒரு குடும்பத்திற்கு அவமானம் ஏற்பட்டு விட்டால் அவர்களால் மீள எழும்பவே முடியாது. அது அவர்களின் குடும்பத்தையே மூழ்கடித்துவிடும் என்பது அவளுக்குத் தெரியாதது அல்ல.

அவளை ஓரளவுக்கு சமாதானப் படுத்திவிட்டு, தேநீர் கலந்து வற்புறுத்திக் குடிக்க வைத்தாள். மற்றயவர்களின் கதைகளைப் பொருட்படுத்தாமல் தெம்பாக இருக்க வேண்டும் என்று அறிவுரை சொன்னாள். ஏதாவது கதைக்க வேண்டும் போல இருக்கும் வேளைகளில் தன்னிடம் வருமாறு சொன்னாள்.

அவளது ஆறுதல் கமலாவைச் சற்று தெளிவித்திருக்க வேண்டும். கண்களைத் துடைத்துக் கொண்டு வீடு நோக்கிச் செல்ல முற்பட்டாள்.

சந்தியாவின் அருகில் இருந்தவாறே தன்னை நோக்கிப் பார்த்துக் கொண்டிருந்த அந்தக்குழந்தையை அணைத்து உச்சி மோந்துவிட்டுச் சென்றாள்.

# 4 அவள் இப்போது பெரியவள்

யாரையோ எதிர்பார்த்தவாறே மிரட்சியுடன் சென்று கொண்டிருந்தான் அவன். அவனின் கண்களின் எதிர்பார்ப்புடன் ஒருவித பூரிப்பும் காணப்பட்டது. பயத்துடன் அல்ல சந்தோசத்துடன் நோக்கும் முகபாவம் அவனிடம் தெரிந்தது. பின்பு எதற்காக ஒளிக்க முற்படுகின்றான்.

திடீரென்று கேட்ட வீறிடும் சத்தம் அவனையும் கலவரப்படுத்தியது. "ஐயோ" என்று தானும் அலறியவாறு மரக்கொப்புகளைத் தவிர்த்துவிட்டு ஓடிவந்தான். ஏதோ எண்ணத்துடன் வலது பக்கமாகத் திரும்பி ஓட ஆரம்பித்தான்.

"பூச்சி", "பூச்சி" என்றவாறே ஓடிவந்த அந்தப் பெண் குழந்தை, விரைவாக முன்வந்து அவனைக் கட்டி அணைத்தது. செய்வதறியாது அவனும் இறுக்கி அணைத்தபோது அவளின் மேலாக அவனது பார்வை சென்றது.

அவசர அவசரமாக அவளை விலத்திவிட்டு, அவளின் மேலே ஊர்ந்து வந்த ஐந்துவைத் தட்டிவிட்டவன், அவளை மெதுவாகத் தட்டிக் கொடுத்தான். நாலு வயதே நிரம்பிய அவளின் தேகம் நடுங்கிக் கொண்டிருந்தது. 'பயப்படாதே' என்றவாறே அவன் மிருதுவாக அணைத்துக் கொண்டான்.

அதற்குள் அவளின் கீச்சிட்ட சத்தம் கேட்டு அவளின் அம்மாவும் அப்பாவும் வெளியில் வந்துவிட்டனர். பயத்தோடு அவனை இறுக்கி அணைத்தபடி நின்ற அவளை அவளின் அம்மா ஆதரவாகத் தூ க்கினார். மழையில் நனைந்த கோழியைப் போல 'வெட வெட' வென நடுங்கிக் கொண்டிருந்த அவள் அம்மாவுக்குள்ளே தன்னை இழுத்துக் கொண்டாள்.

அவளின் அப்பா கேட்டதும் என்ன நிகழ்ந்தது என்பதை அந்தப் பையன் விவரித்தான். அவர்கள் இருவரும் வெகு நேரமாகவே விளையாடிக் கொண்டு இருந்திருக்கிறார்கள். ஒருவரின் கண்களைக் கட்டிவிட்டு மற்றவர் சென்று ஒளித்துக் கொள்ள வேண்டும். அவர் குரல் கொடுத்ததும் கட்டுக்களை அவிழ்த்துவிட்டு மற்றவர் ஓடிச் சென்று பிடிக்க வேண்டும்.

அவ்வாறாக நீண்ட நேரமாக விளையாடிக் கொண்டிருந்த அவர்கள், அவளின் கண்ணைக் கட்டிவிட்டுப் போய் ஒளிந்து கொண்டபோது கட்டுக்களை அவிழ்க்க முயன்ற போது முடியாது போகவே பிள்ளை பயந்து அழத் தொடங்கியது. அப்பொழுது அவன் பக்கத்தில் வரவில்லை.

மிகுந்த சிரமத்தின் மத்தியில் தானாகவே கட்டுக்களைப் பிரித்து எடுத்தபோது மரத்தில் இருந்த கும்பிடு பூச்சி அவளின் மேல் விழுந்தபோது வீறிட்டுக் கத்தத் தொடங்கினாள். அந்த சத்தம் அவனுக்குக் கேட்டது.

நிலைமையைப் புரிந்து கொண்டு அவன் வருவதற்கு முன்பாகவே கண்களைப் பொத்தியபடியே அவள் ஓடி வரவும் அவனுக்கு மேலே மோதிவிட்டாள். அவன் எதிர்கொண்டு அவளை அணைத்துக் கொண்டான். அதற்குள் அவளின் பெற்றோரும் வந்துவிட்டனர் என்று விளக்கமாகச் சொன்னான்.

என்னவோ என்றவாறு பதட்டத்துடன் வந்த அவளின் பெற்றோரும் சமாதானம் அடைந்தனர். மெலிதாக எழுந்த சிரிப்புடனே அவளைக் கொஞ்சிவிட்டு கன்னத்தில் போட்டுக் கொண்டாள் அம்மா. குழந்தையை நோக்கியவாறே சொன்னார்.

"இதுக்கு அவ்வளவு பயமா. நாங்க எல்லாரும் நிக்கிறம் தானே. என்ன பயம் இந்தச் செல்லத்துக்கு" என்றவாறே அவளை அணைத்துக் கொண்டு உள்ளே அழைத்துச் சென்றார் அவளின் அன்னையார். அவர்களைத் தொடர்ந்து அவனும் செல்ல முற்பட்டான். அவ்வேளை காற்றிலே மிதந்து வந்த குரல் எங்கேயோ கேட்ட குரலாக இருந்தது அவனுக்கு.

மாலையாகி விட்டதால் அவனின் அம்மா குரல் கொடுக்க ஆரம்பிக்கிறார் என்பதைப் புரிந்து கொண்டான். அடுத்த தெரு வரையிலுமே ஒலிக்கத்தக்க அந்தச் சத்தத்தைக் கேட்டதும் அவர்களிடம் சொல்லிவிட்டு அவன் விடைபெற்றான். இல்லாவிட்டாலும் அவர்களாகவே கழுத்தைப் பிடித்துத் தள்ளியிருப்பார்கள்.

சரி இன்றைக்கு விளையாட்டை இத்தோடு நிறுத்த வேண்டும். முகம் கால், கை கழுவிவிட்டு, சாமி கும்பிட்டுவிட்டு படிக்கத் தொடங்கவேண்டும் என்று அம்மா ஒரு பட்டியலே வைத்திருப்பார். இன்றைய இருபத்து நான்கு மணித்தியாலய நாளை மாலையுடன் முடித்துவிடுவார் என்று யோசித்தான்.

அப்பொழுதே நித்திரைக்கான கொட்டாவி அவனிடம் எட்டிப் பார்த்தது. இன்றைக்கு வீட்டு வேலை எதுவும் தரவில்லை என்று சொல்லிவிட்டு விழுந்து படுக்கலாமா என்று நினைத்தான். இரவு ஒன்பது மணிக்குத் தொடங்கும் நைட் றைடர் தொடர் அன்றைக்கு இருக்கிறது என்பது அவனுக்கு நினைவுக்கு வரவே, ஒன்பதரை வரைக்கும் விழித்திருக்க வேண்டும் என்று நினைவுபடுத்திக் கொண்டான்.

இரவு நிறைய நேரம் விழிக்க வேண்டி இருப்பதால் மாலையில் சற்று நேரம் விளையாடப் போட்டிருந்த திட்டம் அந்த நான்கு வயதுக் குழந்தையால் பாழாகிவிட்டது. இந்தக் குழந்தையின் குரலைக் கேட்டதும் அவளுக்கு ஏதும் துன்பம் செய்ததாக நினைத்துக் கொண்டு அம்மா கூப்பிடுகிறாரோ தெரியவில்லை.

எதுவாயினும் இன்றைய 'மாலை முழுவதும் விளையாட்டு' பாதியிலே நிறுத்தப்பட்டது. குழந்தைக்கு விளையாட்டுக் காட்டும் பணியும் இடையிலே முடிவுறுத்தப்பட்டது.



நாலு வயதுக் குழந்தையைப் பராமரிக்கக் கூடிய அளவிற்கு அவன் ஒன்றும் பெரியவன் கிடையாது. அவளை விடவும் ஐந்து வயது அதிகமானவன். அவனுடைய அப்பா இந்த ஊரில் வேலைக்கு வந்தமையால் கடந்த ஒரு வருடமாக அருகே உள்ள வீட்டில் வசித்து வருபவன்.

அவனுடைய வீட்டில் அம்மாவும் அப்பாவும் அவனும். அதேபோல அவளுடைய வீட்டில் அவர்கள் மூவருமே வாழ்ந்து வந்தார்கள். இதனால் விளையாடுவதற்கு ஒருவருக்கு ஒருவர் உதவியாக இருக்கும் என்ற எண்ணப்பாட்டில் இருவீட்டிலும் அவர்கள் சுதந்திரம் கொடுத்திருந்தனர்.

எந்த வீட்டில் எது வாங்குவதாக இருந்தாலும் இரண்டு பொருளாக வாங்குவது அவர்களின் வாடிக்கை. பிள்ளைகள் இருவரும் ஒருவர் மேல் ஒருவர் மிகவும் பிரியமாகவே இருந்தனர். எந்தச் சாப்பாடு அவர்களுக்குக் கிடைத்தாலும் தமக்குள் பகிர்ந்துண்டு சாப்பிட்டு வந்தனர்.

விளையாட்டுச் சாமான்களைத் தமக்குள் கொடுத்து வாங்கி விளையாடுவர். தன்னுடைய பொம்மைகளை அவள் விளையாடுவதற்கு அவன் கொடுப்பான். அதே போல வாகனங்களை அவன் விளையாடுவதற்குக் கொடுப்பாள். தனது உடன் பிறப்பைப் போலவே நெருக்கமாகப் பிரியமாக இருப்பதனால் பெற்றோர்கள் சந்தோசமாகவே அவர்கள் சேர்ந்து விளையாட அனுமதித்தனர்.

வேறு யாருடைய வீட்டுக்குப் போனாலுமே இவர்கள் இருவரும் சேர்ந்தே விளையாடுவர். இவர்களுடைய நட்பு மற்றயவர்கள் பொறாமைப்படும் விதமாகவே அமைந்திருக்கும். சாப்பிடும் பாடசாலைக்குச் செல்லும் உறங்கும் வேளைகளைத் தவிர ஏனைய வேளைகளில் அவர்கள் பெரும்பாலும் இணைந்தே இருப்பர் என்பது யாருக்குமே தெரிந்த உண்மை.

அவளை நினைக்கும் போதே அவனுக்கு மிகுந்த உற்சாகமாகவும் சந்தோசமாகவும் இருக்கும். பாடசாலை முடிவுற்றதும் அவளைப் பார்ப்பதற்காகவே ஆவலுடன் வேகமாக வருவது அவனுக்கு மிகுந்த சந்தோசமாக இருக்கும்.

"இவனுக்கு ஒரு தங்கச்சி இருந்திருந்தால் இப்பிடிப் பாசம் இருந்திருக்குமா" என்று அவளின் தாய் தனது அம்மாவிடம் கேட்டது அவனுக்கு நினைவுக்கு வந்தது. எத்தனை தங்கைகள் பிறந்தாலும் அவள் மேல் உள்ள பாசம் கணக்கில் அடங்காதது என்று அவன் மனதுக்குள் சொல்லிக் கொண்டான்.

அவளும் அவனும் சேர்ந்து விளையாடும் அந்தக் கணங்கள் எல்லாம் அவனுக்கு அளவு கடந்த இன்பத்தையே தந்துநிற்கும். அன்றுபோல என்றுமே அவள் தனக்கு அருகாமையில் தோழியாக இருக்கவேண்டும் என்று நினைத்துக் கொண்டான். ஆனால் அந்த நினைப்பு அதிக காலத்திற்கு நீட்டிக்கவில்லை.

நிறைந்த அமைதியுடன் சந்தோசத்துடன் அவர்கள் விளையாடும் நாட்கள் மிகவும் அரிதாகிக்கொண்டு வந்தன. நாளாக ஆக அவளிடம் இருந்து தனக்கு இடைவெளி ஏற்படுத்தப் படுவதைப் போல அவனுக்குப் பரிந்தது.

பாடசாலை நேரம், மாலை வகுப்புகள், ஓகன் வகுப்பு எனப் பலவாறான காரணங்களை அவனுக்குச் சொல்லிக் கொண்டும் நடன வகுப்புகள் வாத்திய வகுப்புகள் என்று அவளுக்கும் பாதைகளை இருவேறாகப் பிரித்து வைப்பது தெரிந்தது. சில சந்தர்ப்பங்களில் யாரோ திட்டமிட்டுச் செய்யும் விலத்தல்கள் இவை போன்று அவனுக்குப் புரிந்தது.

காலம் கடந்தது. ஒரு சில வருடங்களின் பின் அவர்கள் ஒவ்வொரு நாளும் பார்த்துக் கொள்ளுவதே அரிதாக இருந்தது. அவ்வாறு விளையாடத் தொடங்கும் நேரத்திலும் அம்மா இவனைக் கூப்பிடுவதும் இவளின் அம்மா அவளை அழைத்துக் கொண்டு சென்று விடுவதும் வழமையாகிவிட்டது.

என்ன நடந்து விட்டது இந்த அம்மாக்களுக்கு என்று யோசிக்கத் தோன்றியது. எதற்காக திட்டமிட்டே தங்களுடைய விளையாட்டைக் குழப்புகின்றார்கள் என்று எண்ணினான். இருந்தாலும் அவளிடம் அவனுக்கு இருந்த பிரியத்தை மாற்றிக் கொள்ள முடியவில்லை. சில நேரங்களையாவது ஒதுக்கி அவளுடன் செலவழித்து வந்தான்.

ஆண், பெண்ணாக இருப்பதனால் அவ்வாறு இடைவெளியைப் பெற்றவர்கள் ஏற்படுத்துகிறார்கள் என்பது அவனுக்கு அந்த வயதிலே ஓரளவு புரியத் தொடங்கியது. அக்கா, தங்கைகள் என மற்றைய நண்பர்கள் சொல்லுவதைப் போன்று அந்த உறவு அமைந்துவிடாது என்பதும் அவனுக்கு ஓரளவு தெரிந்தது. பெற்றவர்களின் மற்றையவர்களின் எண்ணத்தைப் புரிந்து கொண்டதில் அவனுக்கு மனக்கசப்பே எழுந்தது.

'சாந்தன் தன்னுடைய அக்காவின் மேல் பிரியம் வைத்திருப்பது போன்று நான் அவளின் பிரியம் வைத்திருக்கிறேன்' என்று சொல்லிக் கொண்டான். கீர்த்தனன் தன்னுடைய தங்கையை நேசிப்பதைப் போன்று தானும் அவளை நேசிக்கிறான் என்று சொல்லிக் கொண்டான். இருப்பினும் அவர்கள் தங்கள் சகோதரிகளுடன் பழகுவதைப் போன்று பழகுவதற்கு அவனுக்கு அனுமதிக்கப்படவில்லை என்பதை யார் சொல்லியும் தெரிந்து கொள்ளத் தேவையில்லை.

தனக்கு உடன் பிறப்பாக யாரும் இல்லையே என்ற கவலை முதன் முறையாக அவனிடம் எழுந்தது. தங்கை போன்றே இருப்பாள் என்று நினைத்த அவளைத் தன்னுடன் பழகுவதற்குப் பெற்றோர் விரும்பவில்லை என்று தெரிந்தபோது உடன் பிறந்திருந்தால் இவ்வாறு தடைகள் ஏற்படுத்தப்பட்டிருக்காதே என்று கவலைப்பட்டான்.

இதைப் பற்றி அம்மாவிடம் அல்லது அப்பாவிடம் நேரடியாகவே கேட்கவேண்டும் என்று அவனுக்குத் தோன்றியது. அவர்களுக்குப் புரியாததைப் புரியவைத்து விடலாமோ என்ற எண்ணத்துடன் விரைவாக அன்னையை நோக்கி வந்தான். அவனுடைய அன்னை அவசர அவசரமாக சில பொருட்களை ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்தாள்.

அவனிடம் ஒரு தொகைப் பணத்தைக் கொடுத்து இராசையா மருந்துக் கடைக்குச் சென்று சுத்தமான நல்லெண்ணெய் வாங்கிக் கொண்டு வரச்சொன்னாள். அவன் பேச வந்த காரியத்தை விடுத்து புறப்பட்டுச் சென்று நல்லெண்ணெய் வாங்கிக் கொண்டு வந்து கொடுக்கவும் இவனுக்காகக் காத்திருந்த அம்மாவும் அப்பாவும் வெளியில் புறப்பட ஆயத்தமாக நின்றார்கள்.

இவன் ஏதோ பேச முனைந்தபோது அவள் பெரிய பிள்ளையாகி விட்டாள் என்பதை அம்மா சொன்னார். தாங்கள் அவளைப் போய்ப் பார்த்து வருவதாகச் சொல்லிவிட்டுப் புறப்பட்டார்கள்.

அவளை இனிப் பார்க்க முடியாது. பார்க்கக் கூடாது என்றும் தனக்குத் தானே அவன் சொல்லிக் கொண்டான். பெரிதாக விளக்கம் இல்லாது இருந்தாலும் இந்த விடயம் பெண்பிள்ளைகளுக்கு மறைமுகமாக தடையைப் போட்டுவிடும் என்பதை அனுபவம் அவனுக்கு ஏற்படுத்தியிருந்தது. அதற்குப் பிறகு அதைப் பற்றிப் பெற்றவர்களுடனோ மற்றவர்களுடனோ கதைப்பது தேவையற்றது என்பது புரிந்தது.

துள்ளித் திரிந்து கொண்டிருந்த பெண் குழந்தையின் வாயை அடைத்து, சிறகுகளைக் கட்டி அவளைக் கூண்டுக்குள் அடைத்து விட்டதைப் போன்று ஒரு நிலையைக் காலம் காட்டியது. இருந்தாலும் அவனது அம்மாவும் அவளின் அம்மாவும் அவளைக் கவனமாகப் பராமரித்துக் கொண்டதை அவதானிக்க முடிந்தது.

சில காலங்களுக்குப் பின் ஒரு திருமண வீட்டில் அவளைக் காண முடிந்தது. அம்மாவுடன் அவன் போய்க் கொண்டிருந்தபோது எதிராகத் தனது அன்னையுடன் வந்த அவளை விலத்தி சற்று தூரத்திற் சென்ற பிறகு தலையைத் திருப்பிப் பார்த்தான். அன்று அவள் பேரழியாகவே தெரிந்தாள். அவளிடம் தெரிந்த மிகப் பெரிய மாற்றங்கள் இடைவெளியைப் பெரிதாக்கும் என்ற நினைப்புடன் பார்வையை விலத்திவிட்டு வெளியே ஆண் நண்பர்களைத் தேடிச் சென்றான்.

அதற்குப் பிறகு அவளைச் சந்தித்துக் கதைப்பது பற்றியோ விளையாடுவது பற்றியோ அவன் சிந்திக்கவும் இல்லை. பெற்றோர்களின் கெடுபிடியும் மற்றயவர்களின் பொல்லாத பார்வையும் அவனைத் துளைத் தெடுக்கா வண்ணம் அவனே அவதானமாக நடந்து கொண்டான்.

இதய பூர்வமான சந்தோசத்தில் வெறுமை ஏற்பட்டபோது கல்வியில் தானாகவே நாட்டம் எழுந்தது. அந்த வருடத்தின் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் சித்தி பெற்று அவன் பலகலைக்கழகம் செல்ல நேர்ந்தது. அந்த ஊரைவிட்டுப் போனதும் அவளுடனான தொடர்பு முற்று முழுதாக அற்றுப் போனது.

அவன் பல்கலைக் கழகத்திற்குச் சென்று சில மாதங்களிலே அவனுடைய அப்பாவுக்கு மாற்றல் கிடைத்தது. தாங்கள் தங்கியிருந்த அந்த வீட்டைக் காலி செய்துகொண்டு அவர்கள் ஊருடன் சென்று விட்டார்கள். அதற்குப் பிறகு அவளைப் பற்றிய தகவல்களைத் தருவதற்கும் யாருமற்ற நிலையே அங்கு உருவானது.

பல்கலைக் கழகத்தில் காலடி வைத்த அவனுக்கு ஆரம்பத்தில் மிகவும் திண்டாட்டமாக இருந்தது. தனக்கு நிகரான திறமையுடன் நாட்டின் பல்வேறு பாகத்தில் இருந்து வந்தவர்களுடன் முதன் முறையாகப் போட்டியிடுவது புதிய அனுபவத்தையும் போட்டியையும் உருவாக்கியது. பாடங்களை மிகவும் சிரத்தையுடன் படிக்க வேண்டும் என்ற நிலையை வந்தவுடனும் புரிந்துகொண்டான்.

பாடங்களும் ஏனைய வேலைகளும் பெற்றோரின் சிந்தனை களையுமே மறைத்து விட்டிருந்தன. இதிலே அவளைப் பற்றிய சிந்தனைகள் வெகுவாகக் குறைந்து போயின. காலையில் எழுந்தவுடனும் அவசர அவசரமாக சமைத்து விட்டு ஆயத்தமாகிக் கொண்டு கிளம்பும் அவனது நினைவுகள் படிப்பை மட்டுமே சுற்றியதாக இருக்கும்.

வீட்டிலே அம்மா அனைத்தையும் செய்து கொடுக்க செல்லப் பிள்ளையாக படித்துக் கொண்டிருந்த அவனுக்கு, பல்கலைக் கழகத்தில் அனைத்து வேலைகளையும் செய்ய வேண்டி வந்தபோது பெரும் சுமை ஏற்றப் பட்டதைப் போல இருந்தது. சிரமத்துடன் கல்வியைக் கொண்டிழுத்தான்.

ஆனால், காலப் போக்கில் அவையெல்லாம் பரிச்சயமாகி விடவும் சிரத்தையுடனும் மகிழ்ச்சியுடனும் அவற்றைச் செய்து வந்தான். பல்கலைக்கழகம் புதிய தோழர்களையும் புதுவிதமான அனுபவங்களையும் உண்டுபண்ணியது. அங்கு தன்னுடன் பழகிய ஒரு சில பெண்பிள்ளைகளைக் கண்ணுற்றபோது அவனுக்கு அவளுடைய எண்ணம் வந்தது.

அவள் என்ன செய்து கொண்டிருப்பாள் என்று அடிக்கடி நினைத்துப் பார்ப்பதுண்டு. தன்னைப் போலவே திறமையாகப் படித்து ஏதோ ஒரு பல்கலைக் கழகத்திற்கு அனுமதி பெறக்கூடும் என்றே அவன் அப்போது எண்ணியிருந்தான்.

கல்வி என்பது ஆணுக்கோ பெண்ணுக்கோ தகுதியை வழங்கும் தன்னம்பிக்கையை ஏற்படுத்தும். அந்தக் கல்வி அவளையும் அடையும்போது அவளும் தான் பார்த்த பெண்களைப் போலவே தெளிவான தன்னம்பிக்கை உடைய பெண்ணாகத் தோற்றம் எடுப்பாள். அந்த வேளையில் அவர்களை விரட்டிய சமுதாயக் கட்டமைப்பு அவளை விடுவிக்கும். அதற்குப் பின்னதாக தங்களுடைய உறவு முறையை யாரும் பிழையாகக் கணிப்பிட முடியாது என்று நினைத்துப் பூரிப்பை அடைந்தான்.

இறுதியாண்டிற் படித்துக் கொண்டிருக்கும் போதில் அவளுக்குத் திருமணம் செய்து வைப்பதற்கு ஏற்பாடுகள் நடைபெற்றதாகவும் தமக்கும் அழைப்பிதழ் அனுப்பியதாகவும் அம்மா தொலைபேசியில் கதைத்தபோது சொல்லி இருந்தார். அவளின் கல்வி, தொழில் பற்றி அறிந்து கொள்ளுவதற்கு ஆவல் எழுந்தபோதும் அன்றைய நிலையில் எதையும் கதைக்க முடியவில்லை.

அவனையும் திருமணத்திற்கு வரும்படி அம்மா அழைத்தபோது அவனுக்குள் வெற்றி அடைந்ததைப் போன்று இருந்தது. அவர்களால் தனக்கு ஏற்கெனவே விதிக்கப்பட்ட இருந்த தடைகளை உடைத்துவிட்டனர் என்று பூரிப்படைந்தான்.

இருப்பினும் அப்பொழுது அவனுக்கு பரீட்சை நடத்தப்பட்டுக் கொண்டிருந்ததால் அவனால் செல்ல முடியவில்லை என்றும் தன்னுடைய பெற்றோரை செல்லுமாறும் தெரிவித்தான். அதன்படி அம்மாவும் அப்பாவுமே அவளுடைய திருமணத்திற்குச் சென்றார்கள்.

பரீட்சை முடிந்ததும் நல்ல வேலையில் அவனும் அவனுடைய இரு நண்பர்களும் இணைந்து கொண்டார்கள். மூன்று மாதங்களைச் சேர்த்து முதன் முறையாக அவர்களுடைய கையிற் கிடைத்த பெருந்தொகைப் பணத்தில் தங்களுடைய குடும்பத்தவர்களுக்குப் பரிசுப் பொருட்களை அவர்கள் வாங்கினார்கள்.

அவனும் அதேபோல அம்மா அப்பாவுக்கும் அவளுக்குமாகப் பரிசுப் பொருட்களை வாங்கிக் கொண்டான். அன்னை தந்தையிடம் சென்று அவர்களுடைய ஆசியைப் பெற்றபின்பு அவளுடைய ஊரில் இருந்த உறவினர்களைப் பார்க்கச் சென்றவன் அவளைப் பார்த்துவிடும் ஆவலில் அவளின் வீட்டுக்குப் போனான்.

அவளுடைய வீட்டைத் தேடிப் பிடிப்பதில் அவனுக்கு சிரமம் இருக்கவில்லை. ஆனால் அந்த இடத்திற்கு வந்ததும் ஏதோ பொருத்தமின்மை அவனுக்குப் புலனானது. அந்த வளவுக்குள் நுழைந்ததுமே அவனுக்கு எதிர்ப்பட்ட அவளின் கணவன் அவனை யார் என்பது போல பார்த்தார்.

அவரைக் கண்டதும் சிநேக பூர்வமாகத் தன்னை அறிமுகப்படுத்தி விட்டு உள்ளே நுழைந்தவன் அவருடன் கதைத்துக் கொண்டிருந்த போது அவள் வந்தாள். தன்னைக் கண்டதும் அவள் சந்தோசப்படுவாள் என்று அவன் எதிர்பார்த்ததைப் போன்று அங்கு எதுவும் நடக்கவில்லை.

முகத்தில் இருந்த பூரிப்பை எல்லாம் துடைத்து விட்டதைப் போல அவள் வந்த கோலமும் அவனை உபசரித்த விதமும் அவனுக்கு அவ்வளவாகத் திருப்தியைத் தரவில்லை. 'ஏன் வந்தாய்?' என்பது போலவே அவளின் கணவர் நடந்து கொண்டதையும் 'எப்போது போவீர்கள்?' என்பது போன்றதான அவளது பார்வையும் அவனை நிலை குலையவே செய்தன.

'இவளை எப்பிடித் தெரியும்?' என்ற அவளின் கணவனின் கேள்விக்கு சிறு வயதில் நடந்தவற்றைச் சொல்லத் தொடங்கியபோதே அவளின் கணவன் முகத்தைச் சுளிப்பது தெரிந்தது. அவர்கள் உறவை அவன் சந்தோசமாக எடுத்துக் கொள்ளவில்லை என்பது தெரிந்தது. அவனிடம் மேற்கொண்டு கதையை வளர்த்துக் கொள்ள வேண்டாமே என்று பட்டது.

அவளின் வீட்டிலிருந்து கிளம்பி வந்தபோது அவனுக்கு ஏதோ அசௌகரியம் ஏற்பட்டதைப் போல இருந்தது. கூடவே கோபமும் வந்தது. தான் செய்த பிழை என்ன என்பதே அவனுக்குப் புரியவில்லை. எதையும் புரிந்து கொள்ள முடியாத எமது சமுதாயத்தினர் மீது கோபம் பொங்கியது.

அண்ணன் தங்கை போல பழகிய உறவை எவ்வளவு அசிங்கமாக நினைக்கிறார்கள் என்று நினைத்தான். சிறிதளவில் ஆயினும் புரிந்துணர்வில்லாமல் நடக்கிறார்களே என்று எண்ணினான். இனி இந்தப் பக்கமே வரக்கூடாது என்ற எண்ணத்தோடு அந்த இடத்தை விட்டுப் போனான்.

தாங்கள் வீட்டுக்குச் சென்றபோது தங்களுக்குக் கிடைத்த வரவேற்பையும் உபசரிப்பையும் பற்றி மற்ற நண்பர்கள் பெருமைப்பட்டுக் கொண்டபோது அவனுக்கு எரிச்சலாக இருந்தது. ஒவ்வொருவரும் தங்களுடைய மச்சினர்களைப் பற்றிச் சொல்லியபோது அவன் அவளுடைய கணவனை முன்நிறுத்திப் பார்த்தான்.

அவர்கள் உடன் பிறந்தவர்கள். நீ அவ்வாறல்ல என்று அவனுடைய மனச்சாட்சி மீண்டும் மீண்டும் அலறியது. எத்தனை நல்ல குணங்களை வளர்த்துக் கொண்டாலும் பிறப்பால் தரப்பட்ட சில விடயங்களை மீற முடியாது என்று மறுபடியும் சொல்லிக் கொண்டது.

அதற்குப் பின்னதாக அவனுடைய நண்பர்களுடைய திருமணமும் அவனுடைய திருமணமும் அடுத்தடுத்து நிறைவேறியது. கையில் நிறையப் பணத்துடன் ஆரம்பித்த அவனுடைய வாழ்க்கையில் வெளிப்படையான சந்தோசத்திற் குறையேதும் வந்திருக்கவில்லை. நண்பர்களுடனும் அவர்களுடைய குடும்பத்தினருடனும் வேலையிலும் அவனுடைய வாழ்க்கை சுலபமாகவே நகர்ந்தது.

அவனுடைய திருமணத்திற்கு அவளை அழைக்க வேண்டியிருக்க வில்லை. அப்படியே அழைத்தாலும் அவள் வரக்கூடிய நிலையிலும் இருக்கவில்லை என்பது அவனுக்கு நன்றாகவே தெரிந்திருந்தது. இல்லறமும் தொழிலும் அவனை சம்சாரியத்தில் மூழ்கடித்துவிட்டன. அவனுக்கு இரண்டு பிள்ளைகள் பிறந்தனர். வாழ்க்கையில் வேறு உறவுகள் அவனுடன் இணைந்து கொண்டதால் உலகத்தைப் பற்றிய அவனுடைய தெளிவு மேலும் அதிகமானது. மனைவியும் புரிந்துணர்வுடன் இருந்ததால் அவர்களுடைய வாழ்க்கை சிறப்பாகவே போய்க் கொண்டு இருந்தது.

அது மட்டுமல்ல அவனுக்குள்ளே இருந்த அவனைப் பற்றிய இன்னொரு சந்தேகமும் தீர்ந்தது. அவளுடைய விடயத்தில் மற்றயவர்கள் தன்னைப் பிழையாக நினைத்தபோது தன்னுடைய எண்ணத்தில் கண்களைக் விழுந்ததோ என்று அவன் எண்ணியிருந்தான். ஆனால் இணைந்து கொண்ட மனைவியின் உறவு அதற்கு ஒரு முற்றுப் புள்ளியை ஏற்படுத்தியது.

மனைவி என்ற உறவும் அவளிடம் கொண்டிருந்த பாசமும் ஒரே மாதிரியானது அல்ல என்பதை அவன் தெளிவாகத் தெரிந்து கொண்டான்.

மற்றவர்களுடன் பழகலாம். அவர்களுக்காக இரக்கப்படலாம். ஆனால் பழக்கத்தைக் கண்களைக் கட்டுமாறு பாவித்துக் கொள்ளக் கூடாது என்ற அடிப்படையிலே தனக்கு வந்த அத்தனை தடைகளும் எழுந்தன என்பதை அவன் அப்போது புரிந்து கொண்டான். உடன் பிறந்தவர்களுக்கு கொடுக்கப்படும் அந்த இடம் வேறு ஒரு சந்தர்ப்பத்தில் மறு பாலருக்கு வழங்கப்பட முடியாது என்ற எமது சமுதாயத்தின் நிலைப்பாட்டிலும் ஏதோ நியாயம் இருப்பது தெரிந்தது.

ஒவ்வொருவனும் தன்னுடைய குடும்பத்தை நேசிக்க வேண்டும். தங்களுக்காகவே செலவு செய்ய வேண்டும் என்ற விடயத்தை கொண்டு வருவதற்கு மறைமுகமாக இவ்வாறு கொண்டு வந்தார்களோ என்று எணணத் தோன்றியது. ஆனால் இதற்காக அவர்கள் பாவிக்கும் அணுகுமுறைகள் காயங்களை ஏற்படுத்துகின்றன என்பது மறுக்க முடியாத உண்மை.

குடும்பத்தை நேசிக்க வேண்டும் என்பதற்காக, தன்னுடைய மனைவியை கண்போல் பராமரிக்க வேண்டும் என்பதற்காக வேறு ஒருத்தியைப் பார்த்து சிரித்தாலே தவறு என்று சொல்லும் அளவிற்கு எமக்கு சிந்தனையிற் சீர்கேடு ஏற்பட்டிருக்க வேண்டாமே. உடன் பிறந்தவளைத் தவிர ஏனையவர்கள் அனைவரும் வித்தியாசமான பார்வைக்கு உட்படுத்தப்படுவது அநியாயம்.

அப்பாடா.. எத்தனை விழிப்புடன் எமது சுற்றாடலில் இயங்க வேண்டியிருக்கிறது என்று மறுபடியும் பிரமித்துக் கொண்டான். நல்ல விடயங்கள் என்று சொல்லுவதற்கே கடுமையான ஆயுதங்களாகிய தடியையும் வன்சொற்களையும் அல்லவா எடுத்துக் கொள்கிறார்கள். இவை இல்லாமல் சீர்திருத்தங்களைச் செய்ய முடியாதா!

எனக்கு ஏன் இந்த வீணான ஆராய்ச்சி. தனக்கு வந்த அவதூறு எப்படியோ போய்விட்டது. இனி கவனமாகவே வாழ்க்கையைக் கடத்த வேண்டும்.

தான் யாரிடமும் சொல்லிக் கொள்ள முடியாது இருந்தாலும் தன் எண்ணத்தில் கறைபட்டிருக்கவில்லை. சமுதாயத்தின் பார்வையே அவனைத் தாக்கியது என்பதை அவன் சுலபமாகப் புரிந்து கொண்டான். அதுவரை காலமும் அவனைக் குழப்பிக் கொண்ட ஒரு விடயத்தில் இருந்து பரிபூரணமாக மீண்டு விட்டது அவனுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது.

சமுதாயத்தின் எந்த மோசமான பார்வையும் தன்னை ஏதும் செய்துவிடப் போவதில்லை. அவனின் சமூக அந்தஸ்து, தொழில், நல்ல குணம் என்பவற்றை மற்றயவர்கள் புரிந்து விட்டார்கள். கல்லெறிபடும் வயதையும் தாண்டி வந்து குடும்பஸ்தன் என்ற இடத்தையும் பெற்றுவிட்டான். இனி இவ்வாறான விடயங்கள் மனதை அழுத்தப் போவதில்லை என்று நினைத்துப் பெருமூச்சுவிட்டான்.

ஆனாலும் அவனால் நீண்ட காலத்திற்கு அவ்வாறு இருக்க முடியவில்லை. குறுகிய காலத்திலே அவளின் கணவன் விபத்தொன்றில் இறந்து விட்டதாக அவனுக்குத் தெரியப்படுத்தினர். அவளுக்காக அழுதபோதும் அந்த இடத்திற்கப் போகக்கூடாது என்ற தீர்மானத்துடன் இருந்தவனை அவனுடைய பெற்றோர் அங்கு அழைத்துக் கொண்டு வந்தனர்.

அம்மாவின் ஆணையின்படி ஒரு சகோதரனைப் போலவே இருந்து செய்ய வேண்டிய அனைத்தையும் குறைவின்றி செய்து வைத்தான். அவளுடைய செலவுக்காக ஒரு தொகைப் பணத்தை தொடர்ந்தும் அவளின் அன்னையின் மூலமாகக் கொடுத்தான். அப்போதும் அரசல் புரசலாக ஏதேதோ கதைகள் வந்ததை அவன் அறிந்து கொண்டான். அதற்காக எதையும் நிறுத்திவிடவில்லை.

காலம் சென்றுகொண்டிருந்தது. அவனுடைய உதவியும் தொடர்ந்து கொண்டிருந்தது. ஆனால் மகளின் பரிதாபமான நிலையில் அவர்களை வைத்துப் பராமரிப்பதற்குத் தங்களால் முடியாது என்று நினைத்துக் கொண்டதாலோ என்னவோ தொடர்ந்து அவளின் பெற்றோரும் இறந்துவிடவே அவளின் நிலைமை பரிதாபத்துக்கு உரியதாயிற்று. யாராவது ஒருவர் கரிசனையோடு பார்த்துக் கொள்ளவேண்டும் என்ற அவசியமும் எழுந்தது.

ஆனால் யாரால் முடியும்? அவளோ தனிப்பிள்ளை. பெற்றோரும் கணவனும் இல்லாத நிலையில் யார் அவளைப் பார்த்துக் கொள்வார்?

ஏற்கெனவே அவன் கேட்டுக் கொண்ட பெயர்கள் அனைத்தும் போதாதா! அவளின் விதிப்படி ஏதோ செய்யட்டும். அவளுக்கு ஒன்றும் செய்யாதே என்று அம்மாவே சொன்னார்.

சமுதாயத்தின் பார்வையும் அடியும் அவனுக்குத் தெரியாததா என்ன? இருந்தாலும் அவளுக்கு உதவியாக வேண்டும் என்ற மனிதாபிமானமும் அவனை விடுவதாக இல்லை. இவை இரண்டிற்கும் நடுவில் பெரிய போராட்டமே நடந்தது.

இருப்பினும் மனதை மீறியும் தன்னுடைய பகுத்தறிவை மீறியும் ஒரு சில காரியங்களைக் கடமை உணர்வோடு செய்து கொள்ள வேண்டி இருக்கிறது.

அவளுக்கு மூன்று பிள்ளைகள் இருந்த காரணத்தினாலும், நிரந்தர வருமானம் என்று ஏதும் இல்லாது இருந்ததாலும் அவன் அடிக்கடி வந்து உதவி செய்துவிட்டுப் போகலானான். அன்பான அவனின் மனைவியின் ஆதரவும் ஒத்தாசையும் அவனுக்கு இந்த விடயத்தில் பெரும் ஆறுதலைத் தந்தது.

ஆனால் அக்கம் பக்கத்தில் இருந்தவர்களின் கண்களும் உற்றவர்களின் மனதும் அவ்வளவு தெளிவாக இருக்கவில்லை. தாம் விரும்புகின்ற மாதிரி எல்லாம் கதைகள் கதைக்க ஆரம்பித்தனர். அவை அவனை வெகுண்டெழச் செய்தது.

'ஆண்களின் துணையில்லாமல் வறுமையில் குடும்ப வண்டியைக் கொண்டிழுக்கும் எம் சமுதாயப் பெண்களுக்கு என்னதான் தீர்வு வைத்திருக்கிறீர்கள்? அவர்களுக்கு உதவுபவர்களுடன் இணைத்துக் கேவலமாகக் கதைக்கிறீர்கள். இதனால் ஏதாவது நன்மை யாருக்காவது இருக்கிறதா?' என்று அவர்களைப் பார்த்துக் கேட்பதற்கு அவனின் மனது துடித்தது.

ஆனால் முடியாது.. எங்கள் சமுதாயத்தில் இருக்கும் புற்று நோய் இது. இது எம்மிடம் பரவாமல் தடுக்க வேண்டுமே தவிர, அதைக் குணப்படுத்தவென நாம் பிரயாசைப்பட முடியாது என்று நினைத்து மௌனமானான்.

அவர்கள் பின்புறத்தில் இருந்தவாறே கதைத்துக் கொண்டிருந்தது அவனுக்குத் தெளிவாகக் கேட்டது.

"அவன் அவளுக்கு கூடப் பிறந்த அண்ணன் இல்லைத்தானே"

# 5 மண்ணீரும் ஆகாது

இரு கைகளையும் தோள்களிற் போட்டிருந்த பையுடன் பொருத்தியவாறு குனிந்த தலையுடன் வீடு நோக்கி ஆறுதலாக நடந்து வந்து கொண்டிருந்தாள் கவிதா. அவளுடைய சப்பாத்துக் கால்களில் பட்டதனால் தன்னுடைய இருப்பிடத்தை மாற்றிக் கொண்டே அந்தக் கல் தட்டுப்பட்டுக் கொண்டு வந்தது.

தன்னுடைய கலங்கிய கண்கள் எதிரே வருபவர்களுக்குத் தெரிந்துவிடக் கூடாது என்பதில் அவள் கவனமாக இருப்பது தெரிந்தது. அந்த இடத்தில் இருப்பவர்களில் அநேகமானவர்கள் அவருடைய தந்தைக்குத் தெரிந்தவர்கள் என்பதால் அவளின் கோலம் யாரிடமும் கேள்வியை எழுப்பிவிடக் கூடாது என்று விரும்பினாள்.

அந்த வயதில் பள்ளிச் சீருடையுடன் செல்லும் பெண்பிள்ளைகளைப் பார்ப்பதற்கு பள்ளிச் சிறுவர்கள் மட்டுமல்ல வயது வந்தவர்களுமே அக்கறை காட்டுவார்கள் என்பது அவளுக்குத் தெரியாததல்ல. ஏற்கெனவே சில விடயங்களை அப்பா வீட்டுக்குள் நுழைவதற்கு முன்பாகச் சென்று சொல்லிக் கொடுத்தவர்களும் அவளுக்குத் தெரிந்தவர்களே.

அந்தப் பாதையைத் தாண்டி தங்களுடைய பிரத்தியேக ஒழுங்கைக்குள் நுழைந்ததும் அன்று வகுப்பில் நடந்தது மறுபடியும் நினைவுக்கு வந்தது. ஆசிரியை சொல்லிய வார்த்தைகளே வந்து காதில் எதிரொலித்துக் கொண்டிருந்தன.

பள்ளியில் மாணவிகளாக இருக்கும் போது ஏனைய மாணவிகள் முன்னிலையில் அவமானப்படுத்தப்படுவது என்பதை யாராலும் ஏற்றுக்கொள்ள முடியாது. அந்த வயதில் இருக்கும் துடிப்பான இரத்தமும், அவர்களுக்கு இடையில் இருக்கும் போட்டி மனப்பான்மையும் அவ்வாறான விடயங்களைத் தூபமிட்டு வளர்த்துவிடும்.

"இந்தப் பயிற்சிப் புத்தகம் வாங்கச் சொல்லி எத்தின நாள். மற்ற எல்லாரும் வாங்கித் தங்கடதில செய்யிற நேரத்தில, உன்னட்டப் புத்தகம் இல்லாததினால பக்கத்தில இருக்கிறவங்க பாத்துக் கொண்டிருக்க வேண்டியதா இருக்கு. நாளைக்குக் கட்டாயமா பயிற்சிப் புத்தகத்தோட வரோணும். இல்லாட்டா வகுப்பு நேரத்தில யாரும் புத்தகம் தர மாட்டார்கள்.

உன்ன மட்டும் பாத்துக் கொண்டு நான் பாடத்த லேற்றாக்க முடியாது. பிறகு சிலபஸ் முடிக்கேல்ல எண்டு அதிபர் பேசுவார். அவ்வளவு தான் உனக்கு இதுதான் கடைசி எச்சரிக்கை" என்று கடுமையாகச் சொன்னார் அவர்.

அவர் சொல்லுவது சரிதான். அவளைத் தவிர அந்த வகுப்பில் அனைவரிடமும் அந்தப் பயிற்சிப் புத்தகம் இருந்தது. வருடத் தொடக்கத்தில் போன வருடம் பாவித்த ஆசிரியரின் புத்தகத்தையே அவள் வாங்கிப் பாவித்ததால், ஆசிரியர் இம்முறை சொன்ன புத்தகத்தை அவளுக்கு வாங்க முடியாது இருந்தது.

நேற்று இந்தக் கதையை இவள் சொல்லக் கேட்ட ஆசிரியர் திகைத்தார். வசதியுள்ளவர்களுக்குத் தங்கள் பிள்ளைகளைப் பராமரிக்கத் தெரியவில்லையா என்று யோசித்தார்.

அவளின் தந்தையார் பெரிய உத்தியோகத்தில் நிறைய சம்பளம் பெறும் ஒருவராக இருப்பதை அவர் அறிந்திருந்தார் ஒரு சிறிய செலவு செய்து அவளுக்கு ஏன் வாங்க முடியவில்லை என்று கேட்டார்.

ஒவ்வொருநாளும் பயிற்சிகளை அவள் மற்றவளின் புத்தகத்தைப் பார்த்து எழுதி முடிப்பாள். அது வரையிலும், இவளின் அருகாமையில் இருப்பவர்கள் பார்த்துக் கொண்டு இருக்க வேண்டியிருப்பதால் வந்த சிரமத்தையே ஆசிரியை அவ்வாறு சொல்லியிருந்தார்.

'அரசாங்கம் இலவசமாகக் கொடுக்கும் புத்தகங்களைக் கொண்டு பயிற்சிகளைத் தாமாக உருவாக்கிக் கொடுப்பதற்கு ஆசிரியர்கள் ஏன் முன்வரவில்லை. முற்று முழுதாக கடையில் வாங்கும் புத்தகத்திலேயே தங்கியிருக்கிறார்கள்.

மேலதிக வாசிப்புக்காகவேனும் ஆசிரியர் பயன்படுத்தும் புத்தகத்தை நோட்டம் பிடித்து அதையே வாங்கிப் பயன்படுத்தும் வழக்கம் அனேகமான மாணவர்களிடம் காணப்படுகின்றது. பரீட்சைக்கான வினாத்தாட்களை உருவாக்கும் போது அதில் இருந்து கேள்விகள் எடுக்கப்படும் என்ற எண்ணம் பரவலாகவே அனைத்து மாணவர்களிடமும் காணப்படுகின்றது. இதனால், சிரமப்பட்டேனும் காசு கொடுத்து அவற்றை வாங்கி விடுவர்.

இதனால் கற்றல் என்பது கைக்குள் அடங்கி விடுகின்றது என்றும் தேடல் என்பது முடக்கப்பட்டு விடுகின்றது' என்றும் இரு வாரங்களுக்கு முன்பு நற்சிந்தனையில் பிரதி அதிபர் குறிப்பிட்டது அவளுக்குத் தெரியும். அதனால் பயிற்சிப் புத்தகம் என்ற விடயத்தில் மற்றவர்களைப் போன்று அவள் பாய்ந்து விழுந்து வாங்குவதில்லை. இலவச பாடப் புத்தகத்தைப் பார்த்து விளங்கி, அதிலே குறிப்பெடுத்து தன்னுடைய கல்வியில் முன்னோக்கிப் போய்க் கொண்டிருந்தாள்.

மாணவிகளாக இருக்கும்போது வகுப்பில் தாங்கள் கதாநாயகிகள் என்ற எண்ணத்தை அவர்கள் வளர்த்து விடுகின்றார்கள். இதனால் மற்றவர்கள் தங்களைப் பற்றிக் கதைப்பதையோ அல்லது ஏனைய மாணவர்களுக்கு முன்னாலே ஆசிரியர்கள் திட்டுவதையோ அவர்களால் ஏற்றுக் கொள்ள முடிவதில்லை.

அதிலும் இன்னொரு மாணவியுடன் ஒப்பிட்டுக் கதைப்பதை யாராலும் ஏற்றுக் கொள்ள முடிவதில்லை. அவ்வாறு பெற்றாரோ ஆசிரியரோ செய்யும்போது அவர்கள் முற்று முழுதாக உடைந்து விடுகின்றார்கள். அன்றைய நாளில் அந்த ஆசிரியை அப்படிக் கதைத்திருக்க வேண்டாமே என்று அவளுக்குப்பட்டது.

அன்றாடம் நாட்கூலியாக வேலை செய்யும் வேலனின் மகளிடம் ஒரு புத்தகம் இருக்கின்றது என்பதை ஆசிரியர் சுட்டிக் காட்டினார். அவளுக்குக் கவலையாக இருந்தது. அவளோடு தான் குறைந்து விட்டேனா என்ற எண்ணம் அவளை வதைத்தது. அம்மாவிடம் கேட்டு இன்றைக்கு அந்தப் புத்தகத்தை எப்படியும் வாங்கிவிடுவது என்ற தீர்மானத்துடன் வீட்டுக் காலடி எடுத்து வைத்த போது அந்தச் சத்தம் கேட்டது.

அம்மாவின் சத்தத்தைக் கேட்கவிடாது அவளின் தம்பி போடும் கூச்சல் வாசலில் வரும்போதே அவளுக்குக் கேட்டது.

“இண்டைக்கு நான் ரியூசனுக்குப் போக மாட்டன் அம்மா. ரெண்டு மாதமா காசு கட்டேல்ல எண்டு கிளாக் என்னக் கேட்டவர். இண்டைக்குக் கட்டாயமாக் காசோட வரச் சொல்லிச் சொன்னவர். காசில்லாம நான் போகமாட்டன்.” என்றான் தம்பி.

அவனைச் சமாதானப்படுத்தி அடுத்த வாரம் தருவதாக அம்மா சொல்லிக் கொண்டிருப்பது கேட்டது. தான் சொல்ல வந்ததை சொல்லாமா விடவா என்று மனம் மறுபடி கேட்டுக் கொண்டது. மௌனமாகவே தன்னுடைய அறைக்குள் நுழைந்து பள்ளிப்பையை இறக்கி வைத்துவிட்டுக் கதிரையில் அமர்ந்தாள்.

“வேலனின் மகளைவிட உனக்கு வசதி குறைவா” என்று ஆசிரியை கேட்டது மறுபடியும் அவளைக் குடைந்தது. அழுது காய்ந்து கிடந்த அவளின் கண்கள் மறுபடியும் நீரேற்றி கண்ணீர் சொரிந்தன.

அந்தப் பிரதேசத்தில் ஓரளவு நல்ல உத்தியோகத்தில் வேலை செய்து கொண்டு நன்றாகச் சம்பாதிப்பவர் அவளின் அப்பா. ஆனால் அவரின் பிள்ளைகள் மற்றையவர்களை விட குறைந்த நிலையில் இருப்பது போலக் காணப்படுகின்றனர்.

அப்பா தன்னுடைய சம்பாத்தியத்தில் ஒரு பகுதியைத் தான் அம்மாவிடம் கொடுக்கிறார். வீட்டுக்கு சாமான்கள் வாங்குவது, உடுப்பு, படிப்புச் செலவு என்று எல்லாவற்றையுமே அம்மா அந்தக் காசுக்குள்ளாகவே செய்து முடிக்க வேண்டியதாக இருக்கின்றது. தன்னுடைய சம்பாத்தியத்தில் பெரும் பகுதியை தன்னுடைய ஆடம்பரத்திற்கும் புகழுக்குமாகச் செலவழித்துக் கொண்டிருந்தார்



அப்பா. அவரிடம் குடும்பம் பற்றிய எண்ணம் மிகவும் குறைவாகவே இருந்தது. குடும்பத்திற்குச் செய்தாலும் செய்யா விட்டாலும் தந்தை தந்தைதான். ஆனால் மற்றவர்களுக்குச் செய்தால் மட்டுமே பெயர் எடுக்க முடியும் என்று அன்றைக்கு அப்பா அம்மாவிடம் சொல்லியதைக் கேட்டுக் கொண்டவளுக்கு சுருக்கென்று வலித்தது.

அப்பா சொல்லும் புகழைப்பற்றி அவளுக்கு அதிகமாகத் தெரியாவிட்டாலும், மற்றைய மாணவிகளின் பெற்றோர் அவர்களுக்கு செய்து கொடுக்கும் வசதிகளையும் சலுகைகளையும் அவள் அறிந்திருக்கிறாள். ஒவ்வொருவரும் பாடங்கள் நடக்காத வேளைகளில் தங்களின் குடும்பத்தைப் பற்றிப் பிரஸ்தாபிக்கும்போது இவள் உள்ளார்ந்த வருத்தத்துடன் கேட்டிருக்கிறாள்.

நாள் முழுதும் உடலை வருத்திப் பிழைக்கும் ஏனைய தொழிலாளி தன்னுடைய சம்பாத்தியத்தை அப்படியே பிள்ளைகளுக்குச் செலவழிப்பதைப் போல அப்பாவால் செய்ய முடியவில்லை என்ற கவலை நெடுநாட்களாகவே அவளிடம் இருந்தது.

"பிள்ளைகளுக்கு எல்லா வசதியையும் செய்து குடுக்கக் கூடாதடி. பிறகு அவங்க படிக்க மாட்டாங்க. வெள்ளக்காரனப் பார். பதினாறு வயது ஆன கையோடயே அவங்கள சொந்தக் காலில நிக்கப் பழக்கிடுவாங்க. அவங்களும் ஏதோ தட்டுத் தடுமாறிக் கஸ்டப்பட்டு வேலையத் தேடி சம்பாதிக்கத் தொடங்குவாங்க.

அதனால அவங்கட நாடு அபிவிருத்தி அடஞ்ச நாடாவும் எங்கட நாடும் இன்னமும் அபிவிருத்தி அடைஞ்சு கொண்டிருக்கும் நாடாவும் இருக்கு. இந்த நாடு எப்பவாவது அபிவிருத்தி அடையும் எண்டு ஆரும் கனவு காண முடியுமா? முடியாது. ஏனெண்டா எங்களப்போல ஆக்கள் தொடர்ந்து பிள்ளகள முன்னேற விடாம வச்சிருக்கிறாங்க. வளர்ந்த பிறகும் அவங்கள பொத்திப் பொத்தி வைக்கிறதாலதான் அவங்க தெளிவாகித் தங்கட காலல நிக்கிறதுக்குள் வயது போய் நோயாளியாப் படுக்குறாங்க.

பிள்ளைகள் நல்லா வரவேணும் எண்டு நீ நினைச்சா சதா அவங்களப் பத்தியே நினைக்கிறத நிறுத்து. இந்தா என்னப்போல இரு. அவங்க இல்லை எண்ட விஷயத்த வச்சு வாழ்க்கையில முன்னுக்கு வருவாங்க" என்று அப்பா அம்மாவிடம் சொன்னதைக் கேட்டபோது தூக்கிவாரிப் போட்டது அவளுக்கு.

அதற்கு முந்தைய வாரத்தில் அவரிடம் நன்கொடையைப் பெற்றுக் கொண்ட இளைஞர் மன்றத்தினர் அவரை பிரதம விருந்தினராகத் தங்களுடைய விழாவுக்கு அழைத்திருந்தார்களாம். அந்த விழாவில் அவர் இவ்வாறு உரையாற்றியபோது பெரிய கரகோஷம் எழுந்ததாகப் பெருமையடித்துக் கொண்டார்.

அவளுக்கு அப்பாடா என்று இருந்தது. எங்கே வெளிநாட்டவனைப் போல தங்களையும் முற்றுமுழுதாகக் கையைக் கழுவி விடுவாரோ என்று பயந்துவிட்டாள். பதினைந்து வயது மட்டுமே முடிவடைந்த நிலையில், சாதாரண தரத்திலும் தேறிவிடாத இந்த நிலையில் எவ்வாறு வேலை பெற்றுக் கொள்ளலாம் என்று யோசனை எழுந்தது.

கைதட்டலைப் பெறுவதற்காக அவர் கதைத்திருந்தாலும் பெற்றவர்களின் கதைகள் பிள்ளைகள் மனதைப் புண்படுத்திவிடும் என்பதை அவர் யோசிக்கவில்லை. பெற்றவர்களின் ஆதரவு இருக்கின்றது என்ற பெரும் நம்பிக்கையினாலே பிள்ளைகள் சாதிக்கிறார்கள் என்பதை அவர் புரிந்து கொள்ளவில்லை.

தான் அவ்வாறு இருந்தாலும் பரவாயில்லை. அம்மாவுக்கும் அல்லவா துர்ப்போதனை செய்கிறார் என்று எண்ணினாள். ஆனால் அம்மா எந்த சந்தர்ப்பத்திலும் அப்படி நினைக்க மாட்டார். ஆனால் அப்பாக்கள் மட்டும் அருமையாகச் சிந்திக்கிறார்களே என்று அவள் நினைத்தாள்.

அப்பாவிடம் சென்று ஏதாவது செலவுக்குக் காசு கேட்டால் "அம்மாட்டக் குடுத்திருக்கு. கேட்டு வாங்கு" என்று சொல்லி விடுவதையும் அம்மா சென்று கேட்கும் போது

"உனக்குத் தந்தது தானே. இந்த மாதம் கூடத்தான் தந்தனான். அதுக்குள்ள முடிச்சிட்டியா. நீ சிலவு செய்யுறது கூடவாப் போகுது. என்னட்ட இப்ப எதுவும் கிடையாது. இனி அடுத்த சம்பளத்தில தான் தரலாம்" என்று விரட்டி விடுவார்.

குற்றம் ஏதோ செய்துவிட்ட பாவனையில் முகத்தை வைத்துக் கொண்ட அம்மா அந்த விடயத்தில் பின்வாங்கி விடுவார். அவளுக்கு ஏதேதோ சொல்ல வந்தாலும் வார்த்தைகளை அடக்கிவிடுவாள். கண்கள் நீரைச் சொரிந்துவிடும்.

அவளுக்குத் தெரிந்த அளவில் அம்மா தனக்கென எந்தச் செலவும் செய்வது கிடையாது. வீட்டுக்கும் பிள்ளைகளுக்குமாக என்று மட்டுமே செலவழிப்பாள். ஒரு நாளைக்கு இரண்டு அல்லது மூன்று கறிகள் வைக்கக்கூடியதாகத் தான் மரக்கறிகள் வாங்குவாள்.

இந்த நவீன யுகத்தில் கொத்து ரொட்டியும் பீசாவும் சாப்பிடும் பிள்ளைகள் மத்தியில் கீரையும் சிவப்பரிசிச் சோறும் சாப்பிட வேண்டிய பிள்ளைகளாக அவர்கள் இருந்தனர். அவளின் தாய் மட்டும் என்ன. அள்ளிப் போட்டுச் சமைப்பது கிடையாது. கணவருக்கும் பிள்ளைகளுக்கும் கொடுத்தது போக எஞ்சுவதைத் தான் சாப்பிடுவாள்.

சாப்பாட்டில் அந்த ருசி இந்த ருசி என்று பார்ப்பதே கிடையாது. ஏதோ சாப்பாடு என்பது இயங்குவதற்கு வேண்டிய சக்தியைத் தரும் ஒரு பொருள் என்பதே அவளின் நிலைப்பாடாகும்.

மற்றையவர்களைப் போல அங்கிங்கு சுற்றித் திரிவது கிடையாது. கண்டபடி செலவழிப்பது கிடையாது. அப்பா கொடுக்கும் பணத்தில் மிகவும் கவனமாக மிச்சம் பிடித்து பிள்ளைகளின் தேவைகளை ஓரளவாவது நிறைவேற்றி வருகிறாள்.

எந்த இடத்தில் பிழை நடந்தது என்பதை அவளால் அந்த வயதில் புரிந்து கொள்ள முடியவில்லை. பணத்தில் தந்தை காட்டும் கண்டிப்பினால் தங்களுடைய கவலைகள் அதிகரிக்கின்றன என்பது மட்டும் தெரிந்தது.

கையால் முகத்தைத் தாங்கியவாறே யோசித்துக் கொண்டிருந்தாள் அவள். வீட்டின் படலை திறக்கப்படும் சத்தம் கேட்டது. இரண்டு பிள்ளைகளின் படிப்பு என்றவகையில் மிகவும் சிரமத்துடன் சமாளித்துக் கொண்டுவரும் தாயை கலவரப்படுத்தக் கூடாது என்ற யோசனையில் அந்த விடயத்தை இதுவரை அவளிடம் சொல்லியிருக்கவில்லை.

ஆனால் இன்றைய நிலைமையில், புத்தகம் இல்லாமல் மறு நாள் பாடசாலைக்குச் செல்லமுடியாது என்பது புலனாகவே தன்னுடைய மௌனத்தை உடைத்தாக வேண்டும் என்று எழுந்தாள். யோசிப்பதை நிறுத்திவிட்டு அறையில் இருந்து வெளியே வந்தாள்.

மகளை ஒருவாறு சமாதானப்படுத்தி ரியூசனுக்கு அனுப்பிவிட்டு உள்ளே வந்த தாயும் அவளைப் பார்த்தாள். பாடசாலைச் சீருடையை மாற்றிக் கொள்ளாமல் அவள் வந்த கோலமும் முகத்தில் இருந்த குழப்பமும் அவளுக்கு எதையோ புலப்படுத்தியிருக்க வேண்டும்.

'என்ன என்பது போல மகளைப் பார்த்த பார்வையில் மகளின் கண்கள் கலங்கி விடவே ஆதரவாக அவளின் அருகில் வந்தாள். பள்ளியில் நடந்த அனைத்தையும் ஒன்றுவிடாமல் ஒப்புவித்தாள் மகள்.

கவலை தோய்ந்த முகத்தினளாய் அனைத்தையும் கேட்டு விட்டு அவளின் தாயிடம் இருந்து ஏக்கப் பெருமூச்சு எழுந்தது. அவளுடைய கடந்த காலத்தை நினைத்துப் பார்த்தாள். திருமணத்திற்கு முன்பாக அவளை ஒரு நிறுவனத்தில் சந்தித்தபோது தனது கணவன் கதைத்ததை யோசித்தாள்.

தன்னுடைய தொழிலையும் சம்பளத்தையும் குறிப்பிட்டு வாழ்க்கைக்குத் தேவையான அனைத்தையும் வாங்குவதற்குரிய பணம் தன்னிடம் இருக்கிறது என்றும் அவள் வேலையைவிட்டு வீட்டில் இருந்து தன்னைக் கவனித்துக் கொள்ளவேண்டும் என்றும் அவர் இரங்கலாகச் சொன்னது நினைவில் வந்தது.

தன்னுடைய படிப்பு, அரும்பாடு பட்டுச் சேர்த்துக் கொண்ட தொழில் என்பதை எல்லாம் கருத்திற் கொள்ளாமல், அவரிடம் இருந்த நம்பிக்கையால் வேலைக்கு முழுக்குப் போட்ட தன்னுடைய மடமை அவளை வருந்தச் செய்தது.

"நான் பிழ செய்திட்டன் அம்மா. அப்பா சொன்ன நேரத்தில நான் வேலய விட்டிருக்கக் கூடாது. எத்தினையோ பொம்பிளகள் கஸ்டப்பட்டு வேலையையும் குடும்பத்தையும் கவனிக்கிறாங்க. அவங்களப் போலவே நானும் செய்திருக்கலாம். பிழ விட்டுட்டன்." என்று சொன்ன அம்மாவின் குரல் தளதளத்தது. கண்களில் எட்ட முற்பட்ட நீரை வலுக்கட்டாயமாக திருப்பி அனுப்பிவிட்டார்.

நொந்து நிற்கும் பிள்ளைக்கு முன்பாகத் தான் அழுதால் அவளும் வருத்தப்படுவாள். தன்னம்பிக்கையை இழந்துவிடுவாள். பிற்காலத்தில் எதையும் வந்து தன்னிடம் சொல்ல மாட்டாள் என்ற பயம் அம்மாவிடத்தில் எழுந்தது என்பதை அவள் புரிந்துவிட்டாள்.

திடீரென்று என்ன நினைத்தாரோ தெரியவில்லை. அவளின் தேவை மறுநாள் நிறைவேற்றப்படும் என்று சொல்லி விட்டு வெளியே சென்றுவிட்டாள் தாயார். அந்த கஷ்டமான சூழ்நிலையிலும் அம்மா வலிதாக இழுத்துக் கொண்ட புன்னகை அவளின் அழகான மூக்குத்தியின் மேல் பட்டு ஒளிர்ந்தது.

அம்மா என்பவள் பிள்ளைகளின் அன்புக்குரியவள் என்பது மட்டுமல்ல அவர்களால் ரசிக்கப்படுபவளும் தான். புன்னகை புரிந்து விட்டு வெளியே புறப்பட்டுச் சென்ற அம்மாவை நினைக்கும் போது அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது.

எப்படி அம்மாவால் இது முடியும்? தம்பிக்கு ரியூசனுக்குப் பணம் கொடுத்துவிட முடியாமல் இருந்தவர் எப்படி இரு சுமைகளையும் இறக்கி வைப்பார் என்று யோசித்தபடியே உள்ளே சென்றாள் அவள்.

உடை மாற்றிக் கொண்டு முன்னுக்கு வந்தபோது பசி வயிற்றைக் கிள்ளியது. அடுப்படிக்குச் சென்று பீங்கானை எடுத்துக் கொண்டு வந்தாள். அளவாகப் போட்டு ஆறுதலாகச் சாப்பிட்டாள். அதற்குப் பிறகு வீட்டு வேலைகளைச் செய்யலாம் என கதிரையில் இருந்தவளுக்கு மறுபடியும் யோசனை வந்தது.

'அம்மா எங்கே போய்விட்டார்? நாளைக்கு எப்படி எனக்குப் புத்தகம் வாங்கித் தருவார்?' என்று மனம் கேள்வி கேட்டது. யோசனையுடனேயே தமிழ்ப் புத்தகத்தைத் திறந்தாள். ஔவையாரின் மூதுரை முன்னால் வந்தது.

மடல் பெரிது தாழை மகிழினிது கந்தம்
உடல் சிறியர் என்றிருக்க வேண்டா
கடல் பெரிது மண்ணீரும் ஆகாது
அதனருகே சிற்றூறல் உண்ணீரும் ஆகிவிடும்

தாழம்பூவின் மடல் பெரியது. ஆனால் அதைவிட மகிழம்பூ சிறிது என்றாலும் மணம் அதிகம். கடல் பெரிதாக இருந்தபோதும் அது நீரால் நிறைந்திருந்தபோதும் அதன் நீர் அழுக்கைப் போக்கக்கூட உதவாது. அதன் அருகே உள்ள ஊற்று நீரோ குடிப்பதற்கு நீராகப் பயன்படும்.

செல்வமும் செல்வாக்கும் இருக்கும் இடத்தைப் பொறுத்துத் தான் செயற்படுகின்றது. என்ற தொனிப்பொருளை அவள் மனமும் சிந்தனையில் நிறைந்தது. அந்த வேளையில் தான் அன்னையின் கையில் இருக்கும் காசின் பெறுமதியும், தந்தையின் கையிலிருக்கும் பணத்தின் பெறுமதியையும் ஒப்பிட்டுப் பார்க்க அவள் மனம் விழைந்தது.

ஊரே போற்றும் படியாக தந்தையின் செல்வமும் செல்வாக்கும் தங்களுக்குப் பயன்படும் படியாக அமையவில்லையே என்று அந்தப் பிஞ்சு மனம் நினைத்துக் கொண்டது.

மனத்தின் ஏக்கம் விழியில் நீராக வெளிப்பட்டது. அந்த வயதிலே அடிக்கடி அழுது கொள்ளவேண்டிய நிலையில் இருக்கிறேன் என்று கவலை வந்தது.

"பணமோ கல்வியோ பெண்களின் கையில் இருக்கும்போது அது குடும்பத்திற்குப் பயன்படும். சமுதாயத்திற்குப் பயன்படும். நாட்டிற்குப் பயன்படும். படித்த முடித்த பின்பு ஒரு பெண் வேலைக்குப் போகாமல் வீட்டில் இருக்கிறாள் என்பதனால் ,அவளின் கல்வி பயனற்றதாகிப் போய்விட்டது என்று நினைக்க வேண்டாம். அவர்கள் அதை குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுப்பார்கள். கணவரின் தொழிலில் உதவி செய்வார்கள். பெண்கள் எந்த இடத்தில் எவ்வாறு இருந்தாலும் நல்லதை, பயனுள்ளதைச் செய்வார்கள்" என்று மகளிர் தினத்தில் தன்னுடைய அதிபர் சொல்லியதை நினைத்துப் பார்த்தாள்.

தன்னை யாரோ தட்டிவிட்டது போல இருந்தது. மனத்தில் இருந்த கவலை குறையவும் புத்தகத்தின் மீது தலையை வைத்துக் கொண்டு நித்திரை கொள்ள ஆரம்பித்தாள்.

திடீரென்று விழிப்பு வந்ததும் கண்களைத் துடைத்துக் கொண்டு எழுந்தாள். அவளுக்கு முன்னால் அவளுக்குத் தேவைப்பட்ட அந்தப் பயிற்சிப் பத்தகம் இருந்தது. அளவு கடந்த சந்தோசத்துடன் அதை எடுத்தவள் ஒவ்வொரு பக்கமாகத் தட்டிக் கொண்டு போனாள்.

அன்றைக்குக் கொடுக்கப்பட்ட வீட்டு வேலையைச் செய்யத் தொடங்கலாமே என்று சிந்தித்தபோதுதான் அந்த யோசனை வந்தது.

'இந்தப் புத்தகம் எப்படி இங்கே வந்தது' என்று யோசனையுடனேயே அம்மாவைத் தேடிப் போகின்றாள்.

சமையலறையில் இருந்த அம்மா ஏதோ சிற்றுண்டி செய்து கொண்டிருப்பதைப் போல மணம் எழும்பவும் ஆவலாக சமையலறைக்குள் சென்றாள்.

"இந்தப் புத்தகம் எப்பிடி வந்ததம்மா" என்றவாறே அவர் செய்து கொண்டிருந்த லட்டை எடுத்து வாயில் போட்டுக் கொண்டாள்.

"நான் தான் வாங்கிக் கொண்டு வந்தனான்" என்றாள் அம்மா சாதாரணமாகவே.

"அப்பா காசு தந்தாரா? ஏதோ மனம் வச்சுத் தந்திட்டார் போல. அது தான் லட்டுச் செய்யிறீங்களா" என்று கேட்டாள் மகள்.

"ம்ம்" என்ற சுருக்கமான பதில் அம்மாவிடம் இருந்து வந்தது. அவளின் கை அடுத்த லட்டையும் எடுத்து வாயில் போட்டுக் கொண்டது. அன்றைக்கு துயரத்தின் பின்பாகவும் என்னவோ இனம் புரியாத சந்தோசமாக இருந்ததை அவளால் உணர முடிந்தது. அவர்கள் வளர்ந்துவிட்டதால் அப்பா தன்னுடைய கொள்கைகளை மாற்றிக் கொண்டு வந்துவிட்டார் என்றே நினைத்துக் கொண்டாள்.

அம்மா திரும்பி அவளைப் பார்த்துச் சிரித்தபோது தான் அவளுக்கு ஏதோ குறைவதைப் போல இருந்தது.

அது..... அது.. .

அம்மாவின் மூக்குத்தி.. அவர்களை மயக்கும் அந்த அற்புத ஆயுதம்..... எங்கே அந்த மூக்குத்தி.?.

வாய்க்குள் சென்ற லட்டு, இனிப்புச் சுவையைத் தவிர்த்து கசப்பை உணர்த்துவதைப் போல அவளுக்கு இருந்தது.

# 6 தவறி வருமுன்பே

வாயினால் விசிலடித்தபடி மோட்டார் சைக்கிளை வேகமாகச் செலுத்திக் கொண்டிருந்தான் சேகர். விசிலுக்குப் போட்டியாக இன்னொரு சத்தம் கேட்கவும் அதனை அவனின் செவி வாங்கிக் கொண்டது. சைக்கிளை ஒரு ஓரமாக நிறுத்திவிட்டு அதைக் காதிற் பொருத்தினான்.

"ஹலோ ....."

"ஹலோ ..... நான் கேசவன் மச்சான். நாளைக்குப் பின்னேரம் மூண்டு மணிக்குக் கல்யாண நாள் இருக்கு. அந்த நேரத்துக்கு ஆயத்தப்படுத்துவோமே".

"ஓம். மச்சான் சுதர்சனிட்டச் சொல்லியாச்சு. அவன்ர வீடு ரெண்டாம் குறுக்குத் தெருவில இருக்கு. அதான் நீயும் நானும் ஒருமுறை போனோம். அங்கதான். அங்க மூன்று நாள் தாராளமாத் தங்கலாம்." என்றான் சேகர்.

"அங்க ஒருத்தரும் இல்லையே மச்சான்." என்று சந்தேகத்துடன் கேசவன் கேட்டான்

"இல்ல. அவன்ர சித்தப்பா சித்தி யாழ்ப்பாணம் போய்விட்டினம். வர ஒரு கிழமையாகும். பிரச்சினையே இல்லை. சரி நீ இப்ப எங்க இருக்கிறாய்?" என்று சேகர் கேட்டான்.

"என்ர நெட்கபேயிலதான் நிக்கிறன். மற்றப் பெடியன் கொழும்பு போனதில நான் வெளிக்கிட்டு வந்து உன்னைச் சந்திக்கமுடியாமல் இருக்கு."

"பரவாயில்ல மச்சான். நானே வாறன்."

அடுத்த பத்து நிமிடங்களில் நெட் கபேயில் நுழைந்தான் சேகர். சொன்னபடி கேட்காத அந்த பீசீ யுடன் போராட்டத்தை இடைநிறுத்திவிட்டு கேசவன் இவனை நோக்கி வந்தான். இருவரும் பின்புறமாகவுள்ள மரத்தடிக்குச் சென்றனர்.

"மச்சான் எதுக்கும் ஐயருக்கும் சொல்லிவிடுவோமா. வீட்டிலேயே சிம்பிளாக நடத்தலாம் தானே. ...?" இது சேகர்.

"தேவையில்ல மச்சான். அப்பா அம்மா ரெண்டு நாளைக்கு எதிர்ப்பாங்க. பிறகு அவங்களாவே முன்வந்து எல்லாமே செய்து வைப்பாங்க. ஐயர் வேண்டாம். நாங்களே ஒழுங்குபடுத்துவோம். சரி லக்ஷன் எங்கே? " கேசவன்.

"அவன் ஸ்டாண்டிலதான் நிக்கிறான்.. ஏன் மச்சான்" சேகர்.

"அவன்தான் மச்சான் நேரத்துக்கு லாவண்யாவைக் கூட்டிக் கொண்டு வருவான். அவன்ர ஸ்டாண்ட் லாவண்யாவின் வீட்டுக்குக் கிட்டதான். அவன்ர ஆட்டோவில தான் அவள் எல்லா இடமும் போறவள். அதனால யாருக்குமே சந்தேகம் வராது என்று இப்படி ஏற்பாடு செய்தோம்" கேசவன்.

"என்ன சொல்லிப்போட்டு வெளிக்கிடப் போறாள்.." சேகர்.
"இன்றைக்கு காஸ் எடுக்க எண்டு என்று சொல்லி லக்ஷனைக் கூப்பிட்டு ஒரு உடுப்பு பாக் ஐயும் ஆட்டோவில் வைத்து அனுப்பிவிடுவாளாம்.

நாளைக்குக் காலையில் வழமைபோலவே கம்பியூட்டர் கிளாஸ் என்று பொய் சொல்லிவிட்டு வீட்டிலிருந்து வெளிக்கிட்டு வருவாள். சந்தேகம் ஏற்படாமல் இருக்க பிரண்ட் மாலாவும் வீட்டுக்குப் போய் இவவக் கூப்பிடுவா"

"வந்து சுதர்சன். புது உடுப்புகள் இரண்டு மாலைகள் கமராவோட காத்திருக்கிறதாச் சொன்னான். வீட்டுக்குக் கூட்டிக் கொண்டு போய் புது உடுப்பு உடுத்தி மாலைபோட்டு கேக் வெட்டி செலிபிறேற் பண்ணிக் கெதியாக வேலைகளை முடித்துவிட்டு பிரண்ட்ஸ் எல்லாரும் போய்விடுவார்கள். சுதர்சன் முன்னுக்கு இருக்கிற அறையில இருக்கிறதினால ஆத்திர அவசரத்துக்கு உதவி செய்து கொள்வான்." என்று முடித்தான் கேசவன்.

"சரி மச்சான் . மூன்று நாட்களுக்குப் பிறகு எங்க போறதா இருக்கிறீங்க..." இது சேகரின் கேள்வி.

"பிறகு அவளை நான் என்ர ரூமுக்குக் கூட்டி வந்துவிடுவேன். அதுக்குள்ள அப்பா அம்மாவிடம் சொல்லி அவர்களையும் வரச் செய்து லாவண்யாவின் அப்பாவிடம் கதைப்போம்." கேசவன்.

"சுதர்சனிட்டயும் லக்ஷனிட்டயும் எல்லாம் சொல்லியிருக்குத் தானே. என்ன மச்சான்." சேகர்.

"ஓமோம் சொல்லியிருக்கு" என்றான் சேகர்.

"ஏதோ கடவுள் செயலால நீங்க நினைச்ச படியே எல்லாம் நடந்து நல்லா இருக்கவேணும். சரி மச்சான் எனக்கு நேரமாகுது. மூத்தவள ரியூஷனுக்கு விடவேண்டும். இளையவளைக் கூட்டி வரவேண்டும். நான் வரட்டே"

"ஓம் மச்சான். குட்பாய்" என்று கை காட்டியதும் பைக் புறப்பட்டது. மோட்டர் பைக் வெளிக்கிட்டதும் உள்ளே நுழைந்து சொல்லுக் கேட்காத கம்யூட்டருடனான போராட்டத்தைத் தொடர்ந்தான்.

முல்லைத்தீவு மாவட்டத்தில், ஒரு கிராமத்தில் விவசாயத் தாய் தந்தையரின் மகனானகப் பிறந்தவன் கேசவன். சிறிய மண் வீட்டுடன் கூடிய ஐந்து ஏக்கர் நிலத்திலே தோட்டம் செய்து வந்த அவனுடைய தந்தை தன்னுடைய பிரயாசையால் விளைச்சலைப் பெருக்கினார்.

தன்னுடைய நிலத்தில் பயிரிடுவது மட்டுமல்லாமல் அயலில் குத்தகைக்கு எடுத்து வயல் செய்தும் வருமானத்தைப் பெற்றுச் சிறிது சிறிதாகக் கேசவனைப் படிப்பித்து க.பொ.த (உ/த) வரை எடுக்கச் செய்தார்கள். கேசவன் படிப்பிலும் விளையாட்டிலும் மிகுந்த கெட்டிக்காரனாகத் திகழ்ந்தான்.

இருந்தும் பல்கலைக்கழக அனுமதி கிடைக்காததால் இரு வருடங்களுக்கு முன்பாகவே வவுனியாவிற்கு வந்து கம்யூட்டர் கிளாஸ் படிக்கத் தொடங்கியிருந்தான். பின் நண்பனின் நெட் கபேயில் பங்குதாரராக நடத்திக் கொண்டிருந்தான்.

வாடகை மற்றும் செலவுகள் போக ஓரளவு கணிசமான தொகை மாதாமாதம் அவனுக்குக் கிடைத்தது. அவனது பெற்றோரும் திருகோணமலை சென்று குடியேறிவிட்டிருந்தனர்.

பக்கத்திலுள்ள கடையையும் வாடகைக்கு எடுத்து சிறிதாக கம்யூட்டர் கிளாஸ் செய்யவும் திட்டமிட்டிருந்தனர். வவுனியாவிற்கு வந்த காலத்தில் இருந்தே லக்ஷனும் சுதர்சனும் நட்புக் கொண்டிருந்தனர். கடந்த சில மாதங்களாக சேகரின் நட்புத் தொடங்கியிருந்தது.

ஒரு நாள் வேலை முடிந்து மிகவும் தாமதமாக வீடு நோக்கிப் புறப்பட்ட வேளையில் அவளைச் சந்திக்க நேரிட்டது. பாதுகாப்புப் பிரச்சினை காரணமாக தேசிய அடையாள அட்டையின்றி யாரும் வெளியே வரமுடியாத காலம் அது.

முகம் பார்க்க முடியாத அந்த வேளையில், வீடு நோக்கிப் பயணித்த போது, ரெண்டாம் கட்டைச் சோதனைச் சாவடியில் இரு பெண்பிள்ளைகள் மலங்க மலங்க விழித்ததைக் கண்டு, சிங்களத்தால் ஆமி சொன்னதை அவர்களுக்குத் தமிழில் மொழிபெயர்த்துக் கூறினான்.

இராணுவத்தினரிடம் இருந்து விடுபட்டு அவர்கள் சிட்டாகப் பறந்து ஆட்டோவிற் செல்ல அவர்களின் பின்னால் இவனும் சைக்கிள் றேஸ் ஓடினான்.

மறுநாள் லைப்ரரியில் கம்யூட்டர் பிரிவில் புத்தகத்தைத் தேடிக் கொண்டிருந்த போது அவள் எதிர்ப்பட்டாள். அவளிடம் ஏற்கெனவே சந்தித்த சம்பவத்தைக் கூறி அறிமுகப்படுத்திக் கொண்டான். அவளுடைய பெயர் லாவண்யா என்று சொன்னாள்.

தொடர்ந்து கந்தசாமி கோயில், பூங்கா, பூட்சிற்றி என ஒருவரையொருவர் அடிக்கடி எதிர்பாராமலே சந்தித்துக் கொண்டனர்.

ஒருநாள் மாலை ஆறு மணியிருக்கும். அவசர அவசரமாக லாவண்யா அவனது கடையினுட் புகுந்து கொண்டாள்.

அவள் கொடுத்த ஈமெயில் விலாசத்திற்கு ஆவணங்களை அனுப்ப வேண்டும் என்று கேட்டுக் கொண்டாள். தன் தமையன் வெளிநாடு போவதற்குச் சென்று ஆபிரிக்காவில் நிற்பதாகக் கூறினாள்.

அன்று எல்லாவற்றையும் ஸ்கான் செய்து மெயில் அனுப்புவதற்கு எட்டு மணியாகிவிட்டது. மிகுந்த பொறுப்புடன் வீடுவரைக்கும் பின் தொடர்ந்து வந்து அவளைக் கண்காணித்துவிட்டுச்சென்றது அவளுக்குச் சந்தோசத்தைக் கொடுத்தது.

தொடர்ந்து வெளிநாட்டு ஆவணங்கள் அனைத்தும் கேசவனாலேயே அனுப்பப்பட்டன. தொடரும் சந்திப்புக்கள் இருவருக்கிடையிலே நெருக்கத்தை ஏற்படுத்தின. இருவரும் இணைந்ததான வாழ்க்கையைக் கற்பனை செய்து பார்க்கத் தூண்டியது.

லாவண்யாவும் அண்ணா சத்தியனும் வவுனியாவிலுள்ள ஒரு பிரபல வியாபாரியின் பிள்ளைகளாவார். ஓரளவு வசதியானவர்கள். சிறு வயதிலேயே தாயைப் பறிகொடுத்ததால் லாவண்யா பொறுப்பாக வீட்டைக் கவனிக்கவென படிப்பிற்கு மட்டமடித்துவிட்டாள். ஓரளவு முதிர்ந்த தோற்றம் இருந்ததால் அவளைத் தாயில்லாமல் வெளியே அனுப்புவது தந்தைக்குச் சிரமமாகவே இருந்தது. இதனால் அவளை வீட்டிலேயே இருத்திவிட்டார்.

நாட்டுப்பிரச்சினை காரணமாக வசதியானவர்களின் பிள்ளைகளை இலங்கையில் வைத்திருக்கமுடியாத நிலைமை ஏற்படவே சத்தியனை ஏஜன்ஸி மூலம் வெளிநாட்டுக்கு அனுப்பவென முடிவு செய்தார்.

அண்ணனும் வெளியேறியதும் அவளுடைய வாழ்க்கை தனிமைப் படுத்தப்பட்டது. அப்பா கடைக்குள் பகற்பொழுது முழுவதையும் கழிக்கத் தொடங்கினார். இதனால் வேலைக்கார ஆச்சியும் தோட்டக்காரப் பையனுமே அவளுக்குப் பொழுதுபோக்கு என்றாகிவிட்டது.

மகள் தனிமைப்படுத்தப்பட்டு விட்டதை உணர்ந்து தந்தைதான் கம்யூட்டர் கிளாஸ் படிக்குமாறு அவளைக் கட்டாயப்படுத்தி அனுப்பிவைத்தார். வீடு கம்யூட்டர் கிளாஸ் என்றிருந்த லாவண்யாவிற்கு கேசவனைச் சந்தித்ததன் பிறகு தான் வாழ்வில் அலையடிக்கத் தொடங்கியது.

அவர்கள் பேசிக் கொண்டதைப் போலவே எதுவித இடையூறும் இன்றி லாவண்யா அழைத்துவரப்பட்டாள். மாலை ஆறு மணியளவில் விழாவை முடித்துக் கொண்டு நண்பர்கள் அனைவரும் சென்றுவிட்டனர். அதற்கு மேலும் தாமதித்தால் அனைவரும் அவரவர் வீட்டில் வீணாகப் பொய் சொல்ல வேண்டிவரும்.

லாவண்யாவும் வீட்டை ஒழுங்குபடுத்தப் போய்விட்டாள். அவனுக்கு அம்மாவின் ஞாபகம் வந்தது. தனது செல்போனை எடுத்து டயல் செய்தான். தான் ஓரளவு வசதியான, தாயில்லாத பிளளையை விரும்புவதாக மட்டுமே சொன்னான். அவன் ஆவலுடன் எதிர்பார்த்தது போல அம்மாவிடம் இருந்து சம்மதம் வரவில்லை. எதிர்ப்பும் வரவில்லை.

"வசதியான பிள்ளை தானே ..? எத்தின வயதிருக்கும்..? " அம்மா.

"எப்பிடியும். இருபது வயதுக்குள்ள இருக்கும். என்னைவிட இளையவ தான்.."

"சரிசரி நீ பொறுமையாக இரு மகன் நான் அப்பாவிடம் பக்குவமாக் கதைச்சு கெதியாக உங்க வாறன்."

"சரியம்மா போன் பண்ணிட்டே வாங்கோ." போனை வைத்த போது புது ட்ரெஸ்ஸிங் கவுனுடன் லாவண்யா உள்ளே நுழைந்தாள்.

"லாவண்யா இங்கே வாரும். கொஞ்சம் கதைக்கோணும்."

"சொல்லுங்கோ.. "



“லாவண்யா இப்ப உமக்கு சந்தோஷமா இருக்கா. கவலையா இருக்கா” என்றபோது லாவண்யாவிடம் மௌனம் நிலவியது.

“அப்பாவை விட்டுட்டு வந்தது கவலையா..” என்று சந்தேகத்துடனே கேட்டான்.

“சேச்சே அப்படியெல்லாம் இல்லை.”

“அப்பா இப்ப என்ன செய்து கொண்டிருப்பார்.”

“வேலைக்கார ஆச்சியையும் பெடியனையும் போட்டுப் பேசிக் கொண்டிருப்பார்”

“தேடத் தொடங்குவாரா..”

“ம் தேடுவார்தான்”

“லாவண்யா ஏதோ வேகத்தில நாம் இப்படி வந்தாலும் எல்லாம் முறைப்படி நடக்க வேண்டும் என்றுதான் என் விருப்பம். என்ன நினைக்கிறீர்” என்று கேட்கவும் மறுபடியும் மௌனமானாள்.

“நான் அம்மா அப்பாட்ட கதைச்சனான். அவையள் கெதியில வருவினம். உம்மட அப்பாவோட கதைச்சு ஏதும்.....” அவன் சொல்லி முடிக்குமுன்பே அவசரமாகக் குறுக்கிட்டாள் அவள்.

“அது சரிவரும் என்று நான் நினைக்கேல்ல....” என்றவும் அதிகம் அலட்டிக் கொள்ளாமல்

“ஓ கே பார்க்கலாம்.” என்று சொல்லிவிட்டு திரும்பிப் படுத்தான் அவன்.

மறு நாள் காலை..

உறக்கமா? விழிப்பா? என்று அவனுக்குச் சரியாகத் தெரியாமல் கட்டிலிலே அங்குமிங்கும் புரண்டவன், கதவு தட்டப்படும் சத்தம் கேட்டு எழுந்தான்...

'யாரது கூப்பிடாமற் தட்டிக் கொண்டு..' என நினைத்தபோது லாவண்யா போய் கதவைத் திறந்தாள். வேகமாக நுழைந்தனர் காவற்படையினர். அவர்கள் எதிர்பார்த்திருக்கவில்லை.

"நீ யாரோ ஒரு பெண்ணைக் கடத்திக் கொண்டு வந்து வைச்சிருக்கிறாய். உன்னைப் பிடிச்சுக் கொண்டு போறம்" என்று கூறியபடியே அவனை இழுத்துச் சென்றனர். அழுது கொண்டே லாவண்யா ஓடி வர அவளையும் ஏற்றிக் கொண்டு பொலிஸ் நிலையம் நோக்கிச் சென்றனர்.

பொலிஸ் நிலையம் வந்த சட்டத்தரணி கேசவனை அடிக்காத குறையாகத் திட்டினார்.

"எதுக்காகவடா அவசரப்பட்டாய். இப்ப பத்து வருஷம் தீர்ப்பாகப் போகுதே.. " என்றார் கடுமையாக

"நான் என்ன பிழை செய்தன் சேர். அவளும் நானும் ஒருவரை யொருவர் விரும்புறம். அவளும் விருப்பமாகத்தான் என்னுடன் வந்தா சேர். நான் அவவக் கடத்திக் கொண்டு வரேல்ல." என்றான்.

"பதினாறு வயதுக்குக் குறைந்த பெண்பிள்ளையைக் கூட்டிச் சென்று வைத்திருப்பது பிழை. இதில அவவின்ர விருப்பம் என்பது முக்கியமில்ல. தண்டனை பாரதூரமானது ஆணுக்கு."

தூக்கிவாரிப் போட்டது அவனுக்கும் நண்பர்களுக்கும். அப்படியொரு சட்டத்தை அவன் அறிந்திருக்கவும் இல்லை. லாவண்யாவுக்கு அவ்வளவு குறைவான வயதிருக்கும் என்றும் அவன் நினைத்திருக்கவில்லை.

அவளுடைய உயரம், தோற்றம், ஆளுமை, முதிர்வு இவற்றை யெல்லாம் பார்த்து அவளுக்கு இருபது வயதாவது இருக்கும் என்றுதான் அவன் நினைத்திருந்தான்.

அதைவிட வெள்ளைச்சட்டையுடன் பாடசாலை போகும் பிள்ளையாக இல்லாமல் கம்யூட்டர் கிளாஸ் என்று போவதால் டீனேஜைத் தாண்டியிருப்பாள் என்றுதான் அவன் நினைத்திருந்தான். இது என்ன விதி என்று நொந்து போனான்.

அம்மாவும் அப்பாவும் அழுது கொண்டே ஓடி வந்தனர்.

"என்னடா உனக்கு அவசரம். நாங்கதானே வாறம் தகப்பனோட கதைக்கிறம் என்று சொன்னோமே. அதுக்குள்ள ஏண்டா பிள்ளையைக் கூட்டி வந்தனீ? ஏண்டா சொல்லுக் கேக்காம நடக்கிறாய்" அம்மா கம்பியைப் பிடித்தபடியே கத்தத் தொடங்கினார்.

நண்பர்களும் மிகவும் வருத்தப்பட்டனர். கல்யாணத்துக்கு உதவி செய்வதாக காதல் ஜோடிகளைச் சேர்த்து வைப்பதாக நினைத்து பெரிய கெடுதலையல்லவா செய்து விட்டார்கள். அவர்கள் அனைவரும் சட்டத்தரணியின் முன்பாகப் போய் நின்றார்கள். மூக்குக் கண்ணாடியைக் கீழே பதித்துவிட்டு தனது விழிகளை உயர்த்தி அவர்களைப் பார்த்தார் சட்டத்தரணி.

"என்னடாப்பா? "

"சேர் இது பெரிய அநியாயம். இரு மனம் ஒன்று சேர்ந்த காதலை நீங்கள் இப்படிக் கொச்சைப்படுத்தி அவனுக்குப் பாரதூரமான தண்டனை வழங்குவது கூடாது." உண்மையான ஆதங்கத்துடன் கூறினான் சேகர்.

"நான் ஒன்றும் செய்ய முடியாது. பிள்ளை சிறுபிள்ளை என்று தெரியாமல் வயதைக் கேட்காமல் கொண்டு போனது அவன்ர பிழை. அவன் முதல் விசாரிச்சு இருக்கோணும்."

"காதலுக்குக் கண்ணில்ல வயசில்ல என்று சொல்வாங்களே. ஒரு தூய்மையான காதலுக்குக் கிடைச்ச பரிசு இது தானா" என்று சேகர் தொடரவும்

"ஏற்கெனவே பலதையும் ஆராய்ந்து அரசாங்கம் ஒரு சட்டம் போட்டு வச்சிருக்கு. கண்ணுக்குத் தெரியாத ஒரு விடயத்தை உருக்கமாகச் சொல்லி அதை மாத்த முடியுமா?. உண்மையில இவனுக்காக நான் கதைக்கவும் மாட்டேன். ஏதோ தெரிந்தவன் நல்லவன் என்றதினால இதை எடுக்கிறன்." என்று ஆணித்தரமாகவே சொன்னார் சட்டத்தரணி.

மனதில் ஆயிரம் எண்ண ஓட்டங்களுடன் முன்னே வந்தான் லக்ஷன். அவனின் மனதில் எழுந்த கேள்வியை ஓரளவு ஊகித்துக் கொண்ட சட்டத்தரணி நிமிர்ந்தார். அவனின் வாய் திறந்தது.

"இந்தப்பிள்ளை வயது குறைந்தவள். அதனால தானே காதலை ஏற்கமுடியாது. தண்டனை கொடுக்க வேண்டும் என்றுதானே சொல்கிறீர்கள்"

"அப்பிடிச் சட்டம் சொல்லுது.."

"ஆகட்டும். அவளுக்கு வயது வந்தபிறகும் இதே ஆளைத் திருமணம் செய்ய விரும்பும் போது சட்டம் அவனது தண்டனையை நிறுத்தி அவனை விடுவிக்குமா? அவர்களைச் சேர்ந்து வாழவிடுமா?" என்று லக்ஷன் நிறுத்தவும், ஏதோ விசித்திரத்தைப் பார்ப்பதுபோல சட்டத்தரணி அவனைப் பார்த்தார். இருப்பினும் அவருடைய உதடு திறந்துகொண்டது.

"ம் யோசிக்க வேண்டும்... ரெண்டு மூன்று வருடங்களுக்குப் பிறகும் அவர்கள் இதே மனநிலையுடன் இருப்பார்கள் என்று சொல்லமுடியாது. வயது ஏற ஏற அவர்களின் மனம் பக்குவப்பட்டு இவன் வேண்டாம் என்ற முடிவையும் எடுப்பாள்."

"இல்ல சேர். அவங்களோட காதல் புனிதமானது. இதனாலே நிச்சயமா அவள் ஓம்படுவாள்."

"அப்படி இருந்தால் அந்த நேரம் பேசிப் பார்க்கலாம்." மிகுந்த நம்பிக்கையுடன் அவர்கள் சென்றனர். சட்டத்தரணி அவர்களைப் பார்த்து சிரித்துக் கொண்டார்.

'பிள்ளைகளின் வளர்ச்சியையும் விருத்தியையும் காலங் கடந்தே ஆரம்பித்து சாவகாசமாகவே கொண்டு செல்லும் எம் நாட்டுவழக்கின் சட்டத்தில் 16 வயதுக்குட்பட்ட பெண்ணை மணம் செய்யமுடியாது. இதைச்சட்டமாக இயற்றி ஆணுக்குப் பெரும் தண்டனையை விதித்து இருக்கிறார்கள்.

இயற்கையின் தூண்டுதலிற் தன்னை மறந்து சம்மதத்துடனேயே புனிதமான பெயரால் இணைக்கப்படும் ஒரு உயிரைப் பிரித்து எடுத்து மற்றயதற்குக் கடும் தண்டயை வழங்குவது கவலைக்குரிய விடயம் என்பது அவர் உணரமுடியாததல்ல.'

அதே நேரம் லாவண்யாவின் அப்பா போனில் சொல்லிக் கொண்டிருந்தார்.

"அதுதான் மருமகன். எனக்கும் கொஞ்ச நாளாவே நெஞ்சு வருத்தம் இருக்கு. மகனும் இங்க இல்லாத நேரத்தில எனக்கு ஒன்று நடந்தா என்ர பொம்பிளைப்பிள்ளயின்ர நிலைமை என்ன?. இவளை எப்பிடியும் கரை சேர்த்தாத்தான் நான் நிம்மதியா மூச்சு விட முடியும். பாவம் தாயில்லாத பிள்ளை. படிப்பு பொழுதுபோக்கு எதுவும் இல்லாம வீட்டுக்குள்ளேயே அடைஞ்சு கிடக்கிற. அவள நினைக்கிற நேரமெல்லாம் வியாதிதான் எனக்கு......" அதற்கு மேலே பேச முடியாமல் இளைத்தது அவருக்கு.

மறுமுனையில் இருந்து நிதானமாகவே பதில் வந்தது.

"மாமா. நீங்க சொல்லுறது எனக்கு விளங்குது. என்னால இப்ப இலங்கைக்கு வந்து கல்யாணம் செய்ய முடியாது. வருகிற ஆவணிக்குப் பிறகு தான் வரமுடியும்.

நீங்க இப்பிடிக் செய்யுங்கோ. இந்தியாவில அம்மா அப்பாவோட கொண்டு போய்விடுங்கோ. இந்தியாவுக்குப் போய் நான் கல்யாணம் செய்து கொள்ளலாம். பிறகு இலங்கைக்கு வந்து விசா எடுத்து கொஞ்ச நாளைக்குள்ளேயே இங்க கூப்பிடலாம். இது பிந்தினாக் கூட அம்மா கவனமாகப் பாத்துக் கொள்ளுவா. உங்களுக்கு வருத்தம் இருக்காது."

"ஓம் அப்பிடியே செய்யலாம். நான் பாஸ்போர்ட் விசா அலுவலைப் பாக்கிறன்." என்று போனை வைத்தார்.

அப்பாடா என்று பெருமூச்சு வந்தது.

'பெண்மைக்கு நேரம் வந்தால் பெண்மை என்றும் பெற்றவன் சொந்தமில்லை... ' என்ற கே.ஜே.ஜேசுதாசின் இனிமையான பாடல் காற்றில் மிதந்து வந்தது.

கல்யாணத்துக்குத் தான் தயார் என்பதை லாவண்யா தகப்பனுக்கு உணர்த்தி விட்டாள். காவியக் காதலைச் சொன்ன கேசவனின் எதிர்காலம் என்னாகுமோ?

**2014 இல் பிரதேச கலை, இலக்கியப் போட்டியில் பரிசு பெற்ற கதை**

# 7

# துணையென ஒன்று

**வை**த்தியசாலையின் ஐந்தாம் இலக்க வார்ட்டின் முன்பாக அங்கும் இங்கும் நடந்து கொண்டிருந்த அமுதாவின் எண்ணம் ஒரு நிலையில் இருக்கவில்லை. உள்ளே என்ன நடந்திருக்குமோ என்ற பதைபதைப்பில் மனம் அலைந்து கொண்டிருந்தது.

உள்ளே சென்று பார்க்கலாமா என்று எழுந்த எண்ணத்தை மாற்றிக் கொண்டாள். மகப் பேற்று வைத்திய நிபுணர் உள்ளுக்கு சென்றது நினைவுக்கு வந்தது. அவரின் கண்களில் பட்டுவிட்டால் பிள்ளை பெறவிருக்கும் அம்மாமாரைக் குழப்புவதற்கு வந்ததாக பேசுவார் என்பது நினைவுக்கு வரவே முன் நின்ற காலையும் பின்னால் எடுத்துக் கொண்டாள்.

எப்பொழுது பார்வையாளர் நேரம் வரும் என்பதுபோல இருந்தது. யோசனையுடன் முன்னோக்கிப் பார்த்துக் கொண்டவள், அருகில் வந்தபோது கேள்விக்குறியுடன் நோக்கிய தாதியைக் கண்டு வெகுவாக நெளிந்துவிட்டு சற்றுத் தூரத்தில் நின்றாள்.

மகள் களைத்துவிடுவாளோ என்ற கவலை மறுபடியும் எழுந்தது. பேசாமல் சத்திர சிகிச்சை செய்து குழந்தையை எடுத்திருக்கலாம். இவ்வாறான உபாதைகள் எழாமல் இருந்திருக்குமே என்று அந்தத் தாயின் மனம் சிந்தித்தது.

எப்படியாக வாழ்ந்தாலும் பெண்ணாகப் பிறந்த ஒவ்வொரு பெண்ணும் அநுபவிக்க வேண்டிய சோதனைதான் இது. அம்மா என்கிற தானத்தை அடைய வேண்டுமாயின் இந்தத் தடையைத் தாண்டித்தான் ஆக வேண்டும். ஆனால் இங்கு விளைவு மகிழ்ச்சியூட்டுவதால், ஒரு புதிய பிறப்பை உலகிற்கு எடுத்துச் சொல்வதால், அந்த வருத்தங்களை எல்லாம் அம்மாமார் கணப் பொழுதில் மறந்து விடுகின்றனர் என்று நினைத்தாள்.

குழந்தை பிறந்தவுடனும் நாற்பத்து ஓராவது நாளில் அதனை, பிள்ளையார் கோயிலுக்குக் கொண்டு செல்ல வேண்டும் என்று நேர்ந்து கொண்டாள். அந்த ஆலையடிப் பிள்ளையாரின் அருள்தான், இவ்வாறு திருமணம் நடந்து ஒரு வருடத்திலே குழந்தை பெறக்கூடியதாக இருக்கிறது என்பதை நினைக்கும்போதே அவளையறியாமல் கண்களில் நீர் சுரந்தது.

மகளை அழைத்துக் கொண்டு சென்றதும் செய்யவேண்டிய அடுக்குகள் அனைத்தையும் நினைவுபடுத்திப் பார்த்தாள். சரக்குத் தூள், கோப்பித்தூள் முதலாக கருவாடு வரைக்கும் அவள் வாங்கி வைத்திருந்ததை மறுபடியும் நினைவுபடுத்திப் பார்த்தாள்.

குழந்தைக்குத் தேவையான குழந்தைச்சட்டை, நப்பி துணிகள், சோப்பு, ஓடிக்கோலோன் சாமான்கள், நுளம்புவலை என ஒவ்வொன்றாக அவளின் மனக்கண் முன்னாக வந்து நின்றது. கூடவே சிரிப்பும் வந்தது.

எத்தனை பிள்ளைகள் பெற்றுவிட்டாலும், எத்தனை பிள்ளைகளை எடுத்து வளர்த்திருந்தாலும் பிள்ளை பெறப்போகும் போது பதட்டமாகத்தான் இருக்கிறது. அதிலும் ஐந்து பிள்ளைகளைப் பெற்று வளர்த்த அவளுக்கு, மகளை உள்ளே அனுப்பிவிட்டு இத்தனை பதட்டத்துடன் இருக்கவேண்டியதாக இருக்கிறதே என்று யோசித்தாள்.

யாரும் இல்லாத அநாதைகளும், வசதியில்லாதவர்களும், உதவியில்லாதவர்களும், சேமமாகப் பிள்ளை பெற்றுத் திரும்பவில்லையா? தனிப்பட நோக்கும்போது துடிப்பாக இருந்தாலும் இவை எல்லாம் நாளுக்கு நாள் நடக்கும் நிகழ்வுகளே என்று தன்னைத்தானே சமாதானம் செய்து கொண்டாள்.

எதற்காக இந்தப் பதட்டம் என்று தன்னைத் தானே கேட்டுக் கொண்ட அவள் நிமிர்ந்தபோது, பைகளுடனும் சத்தத்துடனும் வரும் மக்களைக் கண்டதும் பார்வையாளரின் நேரம் நெருங்கிவிட்டதை உணர்ந்துகொண்டு, தன் மகளைக் காண விரைந்தாள்.

குழந்தையைப் பெற்றுவிட்டு வெளியில் அழைத்துச் செல்லுவதற்குக் காத்திருந்த அந்தப் பெண்ணின் கண்கள், தனக்கு அருகாக குழறிக் கொண்டு கிடந்த பெண்ணிடம் சென்று வந்தது. அந்த வலியிலும் களைப்பிலும் அவளின் இமைகளை மூடவிடாது தடுத்துக் கொண்டது.

பாவம்.. செல்லமாக வளர்ந்து வந்தவள் போல.. வலியினைத் தாங்காது துடித்துக் கொண்டிருந்தாள் என்று நினைத்தாள். அவளுக்குத் தன்னுடைய உடல் வலியை விடவும் மற்றையவளின் கதறலே அவளைக் கலவரப்படுத்துவதாக இருந்தது.

அவளுக்கு சீக்கிரத்தில் குழந்தை கிடைக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டாள். 'ஓ' வென்ற அவளின் அலறலைக் கேட்டு சற்றுத் தூரத்தில் நின்ற குடும்ப சுகாதார சேவகிகள் அவசரமாக வந்து அவளைச் சூழ்ந்து கொண்டனர். ஒருத்தி அவளின் தலையைத் தடவவும் மற்றையவள் வயிற்றை மெதுவாக அமுக்கிக் கொண்டாள்.

திடீரென அவளது கதறல் உச்ச ஸ்தாயிக்குச் சென்றது. தொடர்ந்து குழந்தை வெளியே இழுப்பது தெரிந்தது. தலையைத் திருப்பியவாறு அனைத்தையும் பார்த்துக் கொண்டிருந்தாள் அவள்.

'அப்பாடா.. பிள்ளை பிறந்துவிட்டது என்ற சந்தோசம் அவள் முகத்திலும் தெரிந்தது. நேற்று இரவில் இருந்து அவள் குழறிக் கொண்டதைப் பார்க்க முடியாமல் இருந்தது. ஆனால் அரை மணித்தியால வயிற்றுக் குற்றலின் பின்னால் தனக்கு ஓரளவு சுகமாகவே குழந்தை கிடைத்ததை நினைவுபடுத்திப் பார்த்தாள்.

தையல் போடுவதற்கு வைத்தியர் வருவதில் தாமதம் ஏற்பட்டதால் அந்தக் குழந்தையுடன் அந்த இடத்தில் வெகு நேரமாகக் காத்துக் கிடந்ததைப் போல் இருந்தது. அன்று அந்தப் பிரசவ விடுதியில் அவர்கள் இருவரைத் தவிர வேறு யாரும் இல்லாததால் அந்தப் பெண்ணையே அவதானித்துக் கொண்டிருந்தாள்.

அருகில் நின்று கொடிருந்த தாதியர் விலத்தியதும் பிறந்துவிட்ட சிசுவின் முகம் தெளிவாகத் தெரிந்தது. தனது தலையை மேல் நோக்கி உயர்த்தி அந்தக் குழந்தையைப் பார்த்தாள்.

குழந்தை அமைதியாக உறங்கிக் கொண்டிருந்தது. அழகான வெள்ளை நிறக் குழந்தையாக இருந்தது. நன்கு உடம்பாக கொழுகொழுவென்று இருந்தது.

தலையை மறுபக்கமாகத் திருப்பி தனது பக்கத்தில் இருந்த குழந்தையைப் பார்த்தாள். கண்களை மூடி உறங்கிக் கொண்டிருந்த அந்தச் சிசுவும் அழகில் குறைந்தது கிடையாது என்பதை யாரும் சொல்லிவிடுவர்.

தன்னுடைய அத்தனை துயரங்களையும் மறந்து முகத்தில் ஒரு புன்னகை பிறந்தது. எதையோ சாதித்துவிட்ட திருப்தி மனதில் எழுந்தது. உடம்பை சற்றுத் திருப்பி பிள்ளையைப் பார்த்தவாறு நித்திரை கொள்ளுவதற்காக விழிகளை மூடினாள்.

தன்னை யாரோ தட்டுவது போல இருக்கவும் திரும்பிப் பார்த்தாள். வைத்தியசாலையில் சிற்றூழியரில் ஒருத்தி அவளைக் கண்டு புன்முறுவல் பூத்தாள்.

"வாா்ட்டுக்குப் போகலாம் அம்மா. லுங்கிய எடுத்துப் போடு" என்று சொன்னாள். அவள் கையில் எடுத்தவுடன் குழந்தையை எடுத்து கால் மாட்டில் வைத்துவிட்டு கூடையையும் எடுத்துக் கொண்டு ஸ்ரெச்சரைத் தள்ளிக் கொண்டே போனாள்.

பிரசவ அறையின் கதவை இன்னொரு ஊழியர் நின்று திறந்துவிடுவது தெரிந்தது. மெதுவாக ஸ்ரெச்சரை முன்னுக்குத் தள்ளுவும் முன்னாலே வந்து நின்றனர் அம்மா, அப்பா, அண்ணா, அக்கா, அண்ணி என பெருமளவு உறவினர்கள்.

சிசுவில் குத்திட்டு நின்ற அந்தக் கண்கள் மேல்நோக்கிச் சென்றதும் ஏமாற்றத்தைக் காட்டவும் அவர்கள் முகத்தைத் திருப்பி மறுபடியும் கதவைப் பார்க்க முற்பட்டனர். தனது பக்கத்தில் இருந்த அந்தப் பெண்ணின் உறவினர்கள் அவர்கள் என்பதை கணப்பொழுதில் புரிந்து கொண்டாள் அவள்.

தொடர்ந்து அவளைத் தள்ளிக் கொண்டு சென்ற தாதி ஒருவரும் காணப்படாத அந்த வார்ட்டின் கட்டில் ஒன்றுக்கருகில் கொண்டு சென்று அவளது கூடையை இறக்கி வைத்தாள் குழந்தையை கட்டிலில் கிடத்திவிட்டு, அவள் இறங்குவதற்கு உதவி செய்தாள்.

மெதுவாக அவளின் கைகளை பிடித்தபடியே இறங்கியவள், லுங்கியை ஒழுங்காகக் கட்டிவிட்டு கட்டிலில் மேற்பகுதியை ஆதரவாகப் பிடித்தபடியே ஆறுதலாகக் கட்டிலில் அமர்ந்தாள். அவளுக்கு மிகவும் களைப்பாக இருந்தது.

"எதும் சாப்பிடம்மா... பாக்க ஆராவது வருவாங்களா?" என்று தாதி கேட்டார். இல்லையென அவள் தலையாட்டியதால் வைத்தியசாலையில் கொடுக்கும் சாப்பாட்டை அவளுக்கும் வழங்குவதற்கு ஏற்பாடு செய்துவிட்டுச் சென்றார்.

அவள் சென்ற பிறகு குழந்தையின் தலையை ஆதரவாகத் தடவியபோது, அது அரவத்தினால் எழும்பிக் கத்தத் தொடங்கியது. அதை ஆசுவாசப்படுத்துவதற்காகக் கையில் எடுத்தாள்.

தன்னை ஆதரவுடன் தடவி அணைத்துக் கொள்ளும் தந்தையாரின் முகம் ஏனோ மனத்திரையிற் தோன்றி மறைந்தது. உச்சிமோந்து அணைத்து உணவூட்டும் அன்னையின் கரங்கள் அவளைத் தொடுவதுபோல இருந்தது. ஆளுக்கொரு கையைப் பிடித்தபடி அவளை ஊஞ்சலாட்டும் அண்ணாவினதும் அக்காவினதும் எண்ணம் திடீரென எழுந்தது. மனது கல்லாக இறுகியதைப் போல இருந்தது. அழுதுகொண்டிருந்த குழந்தையின் குரல் தூரத்தில் ஒலிப்பதைப் போல கேட்டது.

"களைச்சுப் போன அம்மாவுக்கு சாப்பாடு எதுவும் குடுக்க வேணும் எண்டு உங்களுக்குத் தெரியேல்லயா. எங்க ரோசியக் கூப்பிட்டு சாப்பாட்டக் கொண்டரச் சொல்லுங்கோ" என்று யாரோ சொன்னதும் திடீரென விழித்தெழுந்தாள்.

தனக்கு அருகில் நின்றவாறு பிரதம தாதி பேசிக் கொண்டிருந்ததைப் பார்த்ததும் அவளுக்கு என்ன நடந்தது என்பது புரிந்தது. தொடர்ந்து வந்த களைப்பாலும் சாப்பாடு இல்லாமல் இருந்ததாலும் அவளுக்கு மயக்கம் வந்திருக்க வேண்டும் என்பதை ஊகித்துக் கொண்டாள்.

தாதியர் கொண்டு வந்து கொடுத்த அந்த சாப்பாட்டைச் சாப்பிட்டதும் மறுபடியும் தெம்பு வந்ததைப் போல இருந்தது. குழந்தைத் தன்னோடு அணைத்தெடுத்து பாலூட்ட ஆரம்பித்தாள். தன்னையும் மீறிய சோர்வில் மறுபடியும் உறங்கிவிட்டாள்.

ஆளாராவாரம் கேட்டபோது மறுபடியும் உறக்கம் கலைந்தது. தன்னுடைய அறைக்குள் அத்தனை பேர் எதற்காக வந்தனர் என்பது அவளுக்குப் புரியவில்லை. ஏதோ தோன்றவும் சஞ்சலத்துடன் குழந்தையைப் பார்த்தபோது அது உறங்கியபடி கிடந்தது.

அடுத்த கட்டிலிற்குக் கொண்டு வரப்பட்ட தாயையும் பிள்ளையையும் பார்ப்பதற்காக அத்தனை பேரும் வந்திருக்கிறார்கள் என்பது விளங்கியது. தங்களைப் பார்ப்பதற்கு வருவதற்கு யாரும் இல்லை என்பது நினைவுக்கு வந்தது.

அத்தனை நேரமும் கடமையை மறந்திருந்த இயற்கை உபாதைகள் தலைகாட்டத் தொடங்கின. கழிவறைக்குச் சென்று வரவேண்டும் என்ற நோக்கத்துடன் மெதுவாக எழுந்து தன்னுடைய கைத்தடியைத் தேடினாள்.

அவளின் தலைமாட்டில் இருந்த அதை அங்கிருந்த பெண் ஒருத்தி அறிந்து எடுத்துக் கொடுக்கவும் அதைக் கவனமாக ஊன்றியபடியே வலது கைப்பக்கமாகத் திரும்பி வந்தாள். மாபிள் இடப்பட்ட நிலத்தில் அதை ஊன்றிக் கொண்டு வருவது சிரமமாக இருந்தது. ஒருவாறு சென்று கழிவறையை அடைந்தாள்.

அவள் திரும்பவும் தன்னுடைய கட்டிலுக்கு வந்தபோது குழந்தை விழித்திருந்தது. அவனை அழ விடாதவாறு ஒரு வயதானவர் விளையாட்டுக் காட்டிக் கொண்டிருந்தார். அவளுக்கு நிம்மதியாக இருந்தது. அருகில் அமர்ந்தவாறே அடுத்த கட்டிலை நோட்டம் விட்டாள். அவளுக்கு அருகாக இருந்து பிள்ளை பெற்ற பெண் என்பது அவளுக்குப் புரிந்ததும் அறிமுகமாகப் புன்முறுவல் செய்தாள்.

அவளின் தந்தையார்தான் தன்னுடைய குழந்தையை அழவிடாது வைத்திருந்தவர் என்பது தெரிந்தது. குழந்தையின் தலையைத் தடவிவிட்டு அனைவரும் சென்றனர்.

அன்று இரவு தூக்கம் இல்லாமற் கிடந்தவள், தன் குழந்தையையும் அருகில் இருந்தவளின் குழந்தையையும் கவனித்துக் கொண்டிருந்தாள்.

அசதி காரணமாக அசைய முடியாத நிலையில் மற்றைய பெண் படுத்திருந்தாள். பிள்ளையைப் பெற்ற களைப்பில் இருந்து இன்னமும் மீண்டு கொள்ளவில்லை. வெகு செல்லமாக வளர்ந்திருப்பாள் போலும் என்று நினைத்துக் கொண்டாள்.

மறுநாள் காலையில் தன்னுடைய குழந்தையின் உடையை மாற்றிக் கொண்டிருந்த வேளையில் யாரோ அழைப்பதைப் போல இருக்கவும் திரும்பிப் பார்த்தாள். அருகில் கட்டிலில் படுத்திருந்த பெண்தான் அழைத்தாள்.

தன்னுடைய குழந்தையும் முகத்தைக் கழுவித் துடைத்துக் கொடுக்குமாறு கேட்டாள். அவள் கொடுத்த புதிய உடைகளை வாங்கிக் குழந்தையைத் துடைத்துவிட்டுப் போர்த்திவிட்டாள். அந்தத் தாயின் முகத்தில் திருப்தி ஏற்பட்டது.

மெதுவாகக் கைகளைக் கொடுத்து எழுந்து அமர்ந்தவள் அவளைப் பற்றிக் கேட்டாள். சொல்லுவதற்கு எதுவும் விசேடமாக இல்லாததால் தான் ஒரு அநாதை என்பதை மட்டும் தெரிவித்தாள். அவளின் அனுதாபப் பார்வை அவளின் மீது படர்வதைப் போல இருந்தது.

“நேற்று இரவு சாப்பிட்டிருக்கவில்லையா. இரவு முழுதும் நித்திரை இல்லாமல் இருந்த மாதிரித் தெரிஞ்சுது” என்று கேட்டாள். உண்மைதான் வைத்தியசாலையின் கொடுத்த வெறும் பாணை சாப்பிட முடியாமல் வயிற்றைக் காயப் போட்டது அவளுக்கும் தெரிந்திருக்கிறது என்று நினைத்தாள்.

அடுத்த வேளை அவளைப் பார்க்க வந்திருந்த அவளின் தாயார் இவளுக்கும் சாப்பாடு கொண்டுவந்தார். அதை வாங்கிக் கொள்ளுவதற்கு அவளின் மனம் ஒப்பவில்லை. அவர்களின் தொந்தரவிற்காக கூச்சத்துடன் அதைப் பெற்றுக் கொண்டாள்.

வைத்தியசாலையில் இருக்கும்போது எதையும் நினைக்கத் தோன்றவில்லை. தாதிமாரின் அன்பான உபசரிப்பும் அந்தப் புதிய பெண்ணின் அன்பான பேச்சுக்களும் ஆறுதலும் அவளின் நிலைமையை மாற்றிவிட்டதைப் போல உணர்நதாள்.

புதிய அவதாரத்தின் தொடர்ந்த தொந்தரவுகள் அவளிடம் மீதமிருந்த நித்திரையையும் தொலைக்க வைத்தன. மாற்றங்கள் என்பது சடுதியாகத்தான் நிகழ்கின்றன. ஒரே நாளில் தன்னை அநாதியாக்கிய விதியும் அப்படித்தானே!

குழந்தை பிறந்து இரு நாட்கள் கடந்துவிட்டன. அவர்கள் இருவரையும் வீட்டுக்குச் செல்லலாம் என்பதைத் தெரிவித்த தாதியர், பிள்ளைகளுக்கான பீ.சீ.ஜீ ஊசியை ஏற்றிவிட்டுச் சென்றனர்.

குழந்தையை பார்த்துக் கொள்ளச் சொல்லிவிடடு வீட்டுக்கு தகவல் சொல்வதற்காக அந்தப் பெண் தொலைபேசி இருக்கும் இடத்திற்குச் சென்றுவிட்டாள். தன் குழந்தையைக் கையில் வைத்திருந்தவாறே அவளின் குழந்தையைக் கவனித்துக் கொண்டிருந்தாள்.

சிறிது நேரத்தில் அவளுடைய தாய் அமுதாவும், தந்தையும் அக்காவும் வந்திருந்தனர். அவளின் பொருட்கள் எல்லாம் எடுத்துக் கொண்டபின்னாக அவளின் பெற்றோர் இவளை நோக்கி வந்தனர்.

"நீ வெளிக்கிடேல்லயா அம்மா" என்று அவளின் தாயார் கேட்டார்.

"எல்லாம் ஆயத்தம். நான் வெளிக்கிடுறன்" என்றவாறே அந்தப் பெண் குழந்தையை ஒரு கையிற் தாங்கியவாறே மற்றைய கையில் தடியையும் எடுத்தபடி நிமிர்ந்தாள். மெதுவாக அவளது பையை எடுத்துக் கொடுத்தவாறே

"நீ பிழையா நினைக்காட்டி நாங்க ஒண்டு சொல்லுறம். இந்தப் பிள்ளைய உனக்கு விருப்பமெண்டா எங்களிட்டத் தா. எங்கட பேரப்பிள்ளயோட சேத்து வளத்தெடுக்கிறம்" என்று தயங்கியவாறே அந்தப் பெண்மணி சொன்னார்.



அவளுக்குத் தூக்கி வாரிப்போட்டது. அப்படி ஒரு எண்ணம் அவளுக்கு வந்திருக்கவேயில்லை. அவர்கள் ஏன் அவ்வாறு சொல்கிறார்கள் என்று யோசித்தாள்.

"உனக்கு ஒருத்தரும் இல்ல. கஸ்டத்தில இருக்கிறாய் எண்டு என்ர மகள் சொன்னாள். அது தான்..." என்றவாறு இழுக்கவும், அவளுக்கு 'ஓ' வென்று கதறியழ வேண்டும் போல தோன்றியது.

அன்னை தந்தையின் அன்பிற்குள் அக்கா, அண்ணாவின் செல்லமாய் செல்வத்தில் சிறகடித்துப் பறந்தவள், வன்னியில் இருந்து புறப்பட்டு வவுனியா நோக்கி வந்தபோது, விழுந்த குண்டில், ஒரே நேரத்தில் அனைவரையும் இழந்து தனது ஒரு காலும் நடக்கச் சக்தியற்று வவுனியா வைத்தியசாலையினால் உயிர்மீட்கப்பட்டது அப்போது நினைவுக்கு வந்து நின்றது.

கண்ணில் இருந்தும் நீர் சொரிய தன்னுடைய குழந்தையை நன்றாக மார்போடு இழுத்து அணைத்துக் கொண்டாள். அவளிடம் இருந்து வார்த்தைகள் எதுவும் வந்திருக்கவில்லை. குழந்தையை உற்றுப் பார்த்தபடி மௌனமாக இருந்தாள்.

"உனக்கு ரொம்பச் சின்ன வயசு அம்மா. பிள்ளய எங்களிட்டத் தந்துபோட்டு, உனக்குத் துணையொண்டத் தேடிக் கொள்ளுறதுதான் நல்லம்" என்று அந்தப் பெண்மணியின் கணவர் சொல்லவும், விறைத்தபடி நிமிர்ந்தாள்.

'இப்படித்தானே சொந்தக்காரன் எண்டு சொல்லி ஒருத்தன் கூட்டிக் கொண்டு போய், தன்ர வீட்ட வச்சுப் படிப்பிக்கிறதாச் சொல்லி, அவன்ர மனுசியும் இல்லாத நேரத்தில இப்பிடி வேட்டையாடி. இப்ப கையில குழந்தயயும் குடுத்திருக்கிறான். துணை எண்டும் உதவி எண்டும் ஒவ்வொருத்தனும் சொல்லுறது எதுக்காக எண்டு தெரியும்தானே' அவளின் மனம் கசப்போடு நிகழ்ந்தவற்றை எடைபோட்டுக் கொண்டது.

அவள் தொடர்ந்து மௌனமாக இருக்கவும் அவர்கள் இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். பிறகு ஏதோ நினைத்தவளாக அந்தப் பெண்

“நீ என்ன நினைக்கிறாய் எண்டது எங்களுக்கு விளங்குது. உனக்கு வேண்டிய நேரத்தில வந்து பிள்ளயப் பாக்கலாம். அதிற்ர நீ அம்மா எண்டு சொல்லாம விட்டாச் சரி” என்று சொல்லவும் அவளின் வாய் தானாகவே திறந்துகொண்டது.

“என்ர பிள்ளய நான் வச்சு வளப்பன். அத யாருக்கும் குடுக்கமாட்டன். எனக்கு எண்ட பிள்ள வேணும்” என்றாள்.

“எப்பிடியம்மா வளப்பாய். உனக்குத்தான் உதவிக்கு ஆரும் இல்லையே! “ என்று பெரியவர் சொன்னார்.

“என்னப் போல இன்னும் எத்தினயோ அம்மாமார் வன்னியில இருந்து வந்தவங்க கூலி வேல செய்து பிள்ளைகளப் பாக்கிறாங்க. எனக்கும் முடியும். ஏதாவது செய்து பிள்ளயப் பாக்க முடியும். எனக்கு இருக்கிற ஒரேயொரு துணை இந்தப் பிள்ளய நான் விட்டுக் குடுக்கமாட்டன்” என்று அவள் மறுத்தாள்.

அவர்கள் இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். பார்வையில் பேசிவிட்டு அவர்கள் நகர்ந்ததும், குழந்தையின் உடையை எடுக்கக் குனிந்தவளுக்கு கண்ணில் பட்டது, அவர்கள் தந்துவிட்டுப்போன அவர்களின் விலாசம் எழுதப்பட்ட தாள்.

‘வெளியாட்களின் உதவி எத்தின நாளுக்கு என்றபடியே சிந்தித்த அவளின் கால்கள் நகரத் தொடங்கின.

அவர்கள் வைத்துவிட்டுப் போன அந்தக் காகிதம் காற்றில் அகப்பட்டு ஊசலாடத் தொடங்கியது, அவளைப்போல

**ஞானம் சஞ்சிகையின் “செம்பியன் செல்வன் சிறுகதைப்போட்டி 2015” இல் பரிசு பெற்ற கதை**

# 8 அங்கீகாரம்

புதிதாக வெளியிடப்படவிருந்த அந்தப் புத்தகம் இலக்கியத்தில் ஆர்வமுள்ளவர்களின் கரங்களிலே தவழ்ந்து, தனக்கு பெரும் அங்கீகாரத்தை வழங்கவேண்டும் என்பது நடேசரின் விருப்பம். எழுத்தாளராக வலம் வரவேண்டும் என்ற அவரின் நெடுநாள் ஆசை காரணமாக இந்த வயதான காலத்திலும் அதைச் செய்து முடிக்க ஆசைப்பட்டார்.

'புத்தகத்தை வெளியிடாத ஒரு எழுத்தாளன், பிறப்பின் பதிவளிக்கப்படாத ஒரு மானுடனே' என்று, தான் எழுத்துத் துறையில் நுழைந்த காலத்தில் இருந்தே கேள்விப்பட்டு வந்திருந்ததால், தான் இளைப்பாறிய பின்பாகவேனும் தொகுப்புக்களை வெளியிட்டாக வேண்டும் என்ற எண்ணம் அவரிடம் வெகு நாட்களாகவே காணப்பட்டது.

தொழில்நுட்பத்தில் உச்ச வளர்ச்சியைக் கண்டு மின்வலைப் பின்னலின் ஊடாக பவனிவரும் இன்றைய இளைய தலைமுறையினருக்கு அது ரசிக்க வைக்கும் தன்மை உடையதாக அமைய வேண்டும் என்பது அவரின் விருப்பமாகும். அது மட்டுமல்ல, தொடர் சினிமா நாடகங்களுக்கு முன்னால் விக்கி அழுது கொண்டிருக்கும் இன்றைய இல்லத்தரசிகளும் இவற்றை ஏற்றுக் கொள்ளவும் வாசிக்கவும் முனைவார்களா என்றும் அவரின் மனம் சஞ்சலப்பட்டது.

இலக்கியங்களை ஏற்றுக் கொள்வதற்கும், அவற்றை நயப்பதற்கும் மக்கள் பயிற்றப்பட வேண்டியது அவசியமானது ஆகும் என்ற நிலைப்பாட்டுடன் அவர் இருந்தார்.

தரமான இலக்கியங்களை, நியாயமான விலைகளில் மக்களுக்கு வழங்குவதன் மூலமும் அவற்றை வாசிப்பதற்கு புதிதான உத்திகளையும் தெளிவான எளிமையான வசன நடையினையும் வழங்க வேண்டியது அவசியம் என்பதையும் அவர் தன்னுடைய அனுபவத்தில் அறிந்திருக்கின்றார்.

சிந்தனைகளைத் தூண்டும் இலக்கியப் படைப்புக்கள் மக்களிடத்தில் மதிப்புப் பெறும்போது, முடிவுகளின் பொருத்தப்பாடுகள், மாற்றங்களையும் திருப்பங்களையும் பிரேரிக்க வைக்கும். இதனால் தொடர்ந்து இலக்கியங்கள் எழுவதற்கும் வழிவகைகள் செய்யப்படும் என்பதையும் அவர் திடமாக சிந்தித்துக் கொண்டார்.

இவற்றினாலே தான் தன்னுடைய படைப்பை வெளியிட வேண்டிய தருணத்தில் விமர்சனம் செய்வதற்கு அருமையான ஒரு இலக்கியவாதியை தெரிந்தெடுத்துக் கொள்ள வேண்டியது அவசியம் என்பதை உணர்ந்தார்.

இலக்கிய விமர்சனம் என்னும்போது அநேகமாக அதிலுள்ள நல்ல விடயங்களை மட்டும் சொல்வதாக அமையும். அதன்படி, அனைவரும் சொல்லிய கருத்துக்களை மனதிற் கொண்டு தமிழலையைத் தன்னுடைய விமர்சனத்திற்காகத் தெரிவு செய்தார்.

ஆனால் வெளியீடு முடிவடைந்ததும் அவரின் கருத்து மாற்றமடையத் தொடங்கியது. தமிழலையின் விமர்சனம் அவரை மட்டுமல்ல, யாரையுமே சந்தோசமடையச் செய்யவில்லை. நடேசரைப் பற்றி அளவுக்கு அதிகமாகவே புகழ்பாடி, இந்தப் புத்தகத்தை எழுதுவதற்கு அவரை விஞ்ச வேறெவரும் இல்லை என்று சொன்னபோது அவருக்கே வெறுப்பாகத்தான் இருந்தது.

அது ஒரு வஞ்சப் புகழ்ச்சியாகவே அவருக்குத் தென்பட்டது. மிகைப்படுத்திச் சொல்லுவதற்காகவே அவரை அழைத்து வந்திருக்கிறார் என்ற கருத்தை அவரின் காதுவரைக்கும் கேட்கும் வகையிலே சொல்லிவிட்டுச் சென்றார்கள், நண்பர்கள் என்ற உருவில் வந்த தெரிந்தவர்கள்.

அவரின் நீண்ட நேரப் பேச்சை சகித்துக் கொள்ள முடியாமல் புத்தகத்தை வாங்காமலே சென்று விட்டனர் ஒரு சிலர். எழுத்தாளன் ஒருவன் பிரயாசைக்குரிய பெருமளவு பலனை புத்தக வெளியீடே தர வேண்டும் என்று ஏனைய எழுத்தாளர்கள் சொல்லிக் கேள்விப்பட்டிருக்கிறார் அவர்.

ஆனால் எதிர்பாராத விதமாக அன்று வெளியீட்டு நாளில் அவருக்குக் கிடைத்த ஏமாற்றம் அவரை சற்று நிலை குலைய வைத்தது. ஆயிரம் அழைப்பிதழ்களை அச்சடித்து அயலவர்கள், தன்னோடு வேலை செய்தவர்கள், அறிந்தவர்கள், பத்திரிகையாளர்கள் என்று அனைவருக்கும் கொண்டு சென்று கொடுத்துமே நூறு பேராவது விழாவிற்கு வந்திருக்கவில்லை.

அவர்களிலும் புத்தகம் வாங்கியவர்கள் அரைவாசிப் பேர்தான். ஏனையோர் ஆட்கணக்குக்கு இருந்துவிட்டு அகப்படாமலே சென்றுவிட்டனர்.

சிறப்புப் பிரதிகளைப் பெறுவதற்கு ஒரு பத்துப் பேரையாவது கதைத்து ஒழுங்கு செய்யுங்கள் என்று அனைவரும் படித்துப் படித்துச் சொன்னபோதும் அதைக் கேட்காது போனது தன்னுடைய மடத்தனமே என்று அவர் யோசித்தார்.

ஏற்கெனவே எழுத்தாளராகவும் சஞ்சிகைகளில் எழுதிக் கொண்டும் இருந்ததால் தனக்கென ஒரு வாசகர் வட்டம் இருந்து கொண்டிருக்கும் என்று அவர் தனக்குள் தானே நினைத்துக் கொண்டார். தான் வேலை செய்து கொண்டிருக்கும்வேளையில் தொகுப்பு ஒன்றை வெளியிடுமாறு தன்னை ஊக்கப்படுத்தியவர்களுமே அன்றைய நாளில் வந்திருக்கவில்லை.

அதற்குப் பிறகு எதேச்சையாகச் சந்தித்த போது காரணம் என்று அதையும் இதையும் பலவாறாகச் சொல்லிக் கொண்டனர். அவர்களிடம் புத்தகத்தைக் கொடுத்த போது பலர் காசு தரவில்லை. அப்படித் தந்த ஒரு சிலரிடம் வாங்கிக் கொள்ளவும் அவருக்கு ஒரு மாதிரியாக இருந்தது.

ஓரளவு மதிக்கத்தக்க பதவியில் இருந்த அவர் அப்படி காசுத் தாட்களை பொது இடங்களில் வைத்து வாங்குவது அவருக்கு என்னவோ போல இருந்தது. அவ்வாறு நடப்பதை முடிந்தவரைக்கும் தவிர்த்துக் கொண்டார்.

அதனால் தனித்தனியாக வழங்குவதை நிறுத்திவிட்டு புத்தகக் கடைகளுக்குக் கொடுக்கலாம் என முடிவு செய்தார். அவர் புத்தகத்தைக் கொண்டு முதலில் சென்ற கடையினர் அதை வாங்க மறுத்து விட்டார்கள். அவர்கள் இருப்புப் பற்றிய கணக்கை மேற்கொள்ள இருப்பதால், அடுத்த வருடத்தில் தான் அவற்றைப் பெறலாம் என்று சொல்லி விட்டனர்.

மனச்சுமையுடனே புத்தகங்களைத் தூக்கிக் கொண்டு அடுத்த கடைக்குச் சென்றார். அந்தக் கடைக்காரர் ஐந்து புத்தகங்களை எடுத்துக் கொள்வதற்கு சம்மதித்தார். அப்பாடா என்றிருந்தது அவருக்கு. சுமந்து வந்த கூலியையாவது பெற்றுக் கொள்ளலாம் என்று அவரின் மனம் திருப்தியடைந்தது.

“சாதாரணமாக முப்பது வீதமான கழிவை மற்றவர்கள் தருகினம். உங்களால எவ்வளவு தர முடியும்” என்று கேட்டார்.

எதிர்பாராத ஒரு விடயமாக இருந்தது அவருக்கு. அனைவருக்கும் கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் அச்சடித்த பெறுமதிக்கு மேலாக ஐம்பது ரூபாயைச் சேர்த்து விலையைப் போட்டிருந்தார் அவர். இவ்வளவு கழிவு போனால் செலவழித்த காசு வராதே என்று அவருக்கு யோசனை தோன்றியது.

ஏனைய எழுத்தாளர்கள் தங்களது புத்தகங்களில் போட்டுக் கொள்ளும் விலை அதிகமோ என்று யோசித்த அவருக்கு, இந்தச் செய்தியைக் கேட்டதும் அவர்களின் நியாயம் விளங்கத் தொடங்கியது.

‘வேண்டுமானால் ஒரு பத்து வீதத்தைப் போட்டுக் கொள்ளுங்கள்’ என்று சொல்வதற்கு வாயை எடுத்தவர், கடைக்காரனின் கண்டிப்பான பார்வையைப் பார்த்ததும் மெதுவாகத் தலையை ஆட்டினார். பலிக்குத் தயாராகும் ஆடு தலையாட்டிச் சம்மதம் சொல்லுவதைப் போன்று அந்த இடத்தில் அவனுடைய சம்மதத்தைப் பெற்றுக் கொண்டார் கடைக்காரர்.

அவர்கள் பில்லை எழுதி அவரிடம் நீட்டினர். புத்தகங்கள் அனைத்தும் விற்று முடிந்த பின்பாகத் தான் காசு கொடுக்க முடியும். ஒரு வருடத்திற்கு மேலாகவும் விற்க முடியாது போனால் புத்தகங்களைத் திரும்ப எடுத்து விடவேண்டும் என்றார்கள்.

அவருக்கு மிகவும் கவலையாக இருந்தது. ஒரு இலக்கியப் படைப்பு என்ற மரியாதை கூட இல்லாமல் பிச்சைக் காரனிலும் கேவலமாக நடத்தப்படுகின்றேனே என்று நினைத்தார்.

அடுத்த கடைக்குப் போகலாம் என்ற எண்ணம் அவரிடம் இருந்து விடைபெற்றது. எஞ்சிய புத்தகங்களைச் சுமந்து கொண்டு கவனமாக வீடு வந்து சேர்ந்தார். களைப்போடு வீடடிற்குள் நுழைந்து ஈசிச் செயாரில் சாய்ந்த அவரைப் பார்த்த அவரின் மனைவிக்கு சற்று கோபமாகவும் இருந்தது.

“பென்சன் காச எடுத்துக் கொண்டு வீட்டில சும்மா இருங்கோ. உங்களுக்குப் பிடிச்ச இடங்களுக்குப் போய் வாங்கோ எண்டு சொன்னா அதையெல்லாம் கேக்காம இப்பிடி புத்தகம் வெளியிடுறன் எண்டு சொல்லி ஏன் வெட்டியாத் திரியிறீங்க. அதினால உங்களுக்கு நட்டந்தானே வருகுது.” என்றாள் கடுப்புடன்.

அவருக்கு மனம் நொந்தது. ஏதோ சூதாட்டம் அல்லது கட்டப் பஞ்சாயத்து செய்பவனுக்குச் சொல்லுவது போல் அல்லவா தனக்குச் சொல்கிறார்கள் என்று யோசித்தார்.

“மகளுக்கும் படிப்பு முடிஞ்சுது. அவளுக்குக் கல்யாணத்துக்கு அடுக்கெடுக்காம இந்த மனுசன் தேவையில்லாத வேலையெல்லாம் செய்யுது. சின்னவங்களா இருந்தா திருத்தலாம். இந்தக் கிழவனுக்கு ஆர் தான் சொல்லுறது” என்று புறுபுறுத்தபடியே உள்ளே சென்றுவிட்டாள் அவள்.

மகளின் பொறுப்பை உணராதவர் அல்ல அவர். தனக்கு அறிவு தெரிந்த நாள் முதலாக தன்னுடைய சொந்தக்காலில் நின்று உழைத்து அவருடைய குடும்பத்துக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்து இருந்தார் அவர். அவரின் நீண்ட நாள் இலட்சியமான புத்தக வெளியீட்டில் காலைப் பதித்து ஒரு நிலைக்கு வர வேண்டும் என்ற விருப்பத்துடன் தான் அவ்வாறு செய்கிறார்.

தன்னுடன் கூடவே இருப்பவர்கள் அவற்றைப் புரிந்துகொள்ளாத போது மற்றவர்கள் எப்படி தனக்கு அங்கீகாரம் தருவார்கள் என்று எண்ணிக் கொண்டார். அங்கீகாரம் என்பது எழுத்துலகில் பிரவேசிக்கக் கிடைக்கும் அடையாள அட்டை. அது அன்புக் கரங்களால் ஆதரவளிக்கப்பட வேண்டும் என்பதாலோ என்னவோ அங்கீகாரம் அல்லது அங்கீகரம் என்று பெயர் வைத்திருக்கிறார்கள்.

எவ்வளவு மன உளைச்சல் வந்த போதும் அவருடைய ஆவலை அவ்வளவு சீக்கிரத்தில் முடித்துவிட அவருக்கு விருப்பமில்லை. அடுத்த வெளியீட்டை மிகவும் கவனமாக செய்ய வேண்டும் என்று திட்டமிட்டுக் கொண்டார்.

தன்னுடைய பெயரை விடவும் அவர் புத்தக வெளியீட்டில் இறங்கியதற்கு வேறொரு காரணமும் இருந்தது. வாசிப்பு என்பது மனிதனை பூரணப்படுத்துகின்றது. மற்றவர்களின் புத்தகங்களை எடுத்து அதிகமாக வாசிக்கும் ஒரு மனிதன் தானாக இலக்கியங்களைப் படைக்கும் ஆவலுக்கு உந்தப்பட்டுவிடுகின்றான் என்பது ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு விடயமே ஆகும்.

கதையின் ஓட்டத்திலும் முடிவுகளிலும் பொருத்தப்பாடு இல்லாத தன்மை வரும் போது, வித்தியாசமான முடிவுகளை பிரேரிக்கும்போது அல்லது யதார்த்த மீறல்களைப் பார்க்கும்போது, இன்னொரு இலக்கியத்தைப் படைத்துவிடும் எண்ணம் ஏற்பட்டு, ஒரு படைப்பாளி உருவாக்கப்பட்டுவிடுகின்றான்.

சிறிய வயதிலிருந்தே வாசிப்பதில் மிகவும் அக்கறை காட்டி வந்த நடேசர், இலக்கியத்துறையில் ஒரு பேச்சாளனாகக் காலடியை எடுத்து வைத்தார். அவரின் கணீரென்ற குரல் வளமும் தொடர் சொற்பிரயோகமும் அவரை சுலபமாகவே பேச்சாளாக்கி விட்டிருந்தது. ஆர்வமும் தொடர் வாசிப்பும் அவரின் பேச்சுக்களுக்கு பெரிய வரவேற்பைத் தரவும், அவர் இல்லாமல் ஒரு நிகழ்வை நடத்த முடியாது என்ற நிலையை இந்தப் பிரதேசத்தில் ஏற்படுத்திவிட்டது.

இருப்பினும், தொகுப்புக்களை வெளியிட்டு எழுத்தாளன் என்ற பதிவினை மேற்கொண்டுவிட வேண்டும் என்பதில் அவர் கறாராகவே இருந்தார். அனுபவங்கள், விடயங்கள் பதிவுகள் என்பவற்றை அவர் ஒரு குறிப்பேட்டில் குறித்து வைத்திருந்தார். என்றாவது எழுத வேண்டும் என்ற எண்ணத்துடனே இருந்தார்.

இதன் விளைவாக தன்னுடைய அறுபது வருட கால அனுபவங்களின் சாரங்களையும் அவற்றின் தெளிவு நிலையையும் பக்குவத்தையும், அரும்பாடுபட்டு இரண்டு புத்தகங்களாக எழுதி முடித்திருந்தார் அவர்.

புத்தகத்தை அச்சிடும்போது தான் அதிலுள்ள செலவு மற்றும் சிரமங்கள் பற்றிய தெளிவான அனுபவம் கிடைத்தது. விழாக்களுக்குப் பேச்சாளராக அழைக்கப்படும்போது மடிப்புக் குலையாத வெள்ளை வேட்டி சால்வையுடன் பிரசன்னமாகி இருந்த அவரது வாழ்க்கையின் சிரமமான பக்கங்கள் இப்போது அவருக்குப் புலனாகத் தொடங்கியது.

புத்தக வெளியீட்டைப் பிரசவம் என்று சொல்கிறார்களே, அது எவ்வளவுக்கு உண்மையானது என்பதைப் புரிந்து கொண்டார்கள். எதிர்பார்ப்புகள், ஏமாற்றங்கள், வலிகள், வேதனைகள் என எல்லா விடயங்களையும் ஒருசேர உணர்த்துவதால் தான் அதைப் பிரசவம் என்று சொல்கிறார்களோ என்ற எண்ணமும் எழுந்தது.

இதனால் அவரது இரண்டாவது புத்தகத்திற்குரிய விமர்சகரை கவனமாகவே தேர்ந்தெடுத்தார். அவருக்கு முதலாவது வெளியீட்டில் வந்த அனுபவத்தை சுருக்கமாகச் சொன்னார். ஏதோ ஒரு வேகத்தில் 'என்னைப் புகழ்ந்து சொல்லாதீர்கள். உங்கள் மனதில் தோன்றிய அனைத்தையும் சொல்லிவிடுங்கள்' என்று சொன்ன அவர் விமர்சனம் நடைபெறும் போது குழம்பியே நின்றுவிட நேர்ந்தது.

விமர்சனம் என்று சொல்லத் தொடங்கியவர், மூச்சுவிடாமலே அது இது என்றும் பலவாறு சொல்லி முடித்துவிட்டார். அத்தனையுடன் இவர் நிறுத்திக் கொள்ள மாட்டாரா என்று நடேசரின் கண்கள் ஏங்கியது. காசிருந்தால் யாருமே புத்தகங்கள் வெளியிடலாம். இலக்கியத்துக்கென இப்பொழுது தரம் தேவையில்லை என்ற நிலைமை வந்துவிட்டது என்று சொன்னார்.

புத்தகத்தை வெளியிட விரும்பும் ஒவ்வொருவருமே முதலில் தனது பெயரை நிலை நிறுத்தவே முயற்சிக்கின்றான். ஆனால் ஏதோ சமுதாயத்திற்கு நல்லது செய்ய முனைபவன் போலே காட்டிக் கொள்கின்றான் என்று சொன்னார்.

விற்பனைக்குப் பக்கபலமாக விமர்சனத்தைக் கொடுங்கள் என்று கேட்டால், அந்தப் புத்தகத்தையே வாங்காமல் போகுங்கள் என்ற மாதிரியல்லவா அவர் செய்துவிட்டுப் போகின்றார் என்று நினைத்துக் கொண்டார். அவரின் அத்தனை நாட்களின் பிரயாசைகள் கண்ணெதிரில் வந்து அவரைக் களைப்படையச் செய்வது போல அவருக்குப் புரிந்தது.



அவர் செலவழித்த காசுகளும் மேலும் கொடுக்கவிருந்த கடனும் அவரின் கண்களை இருட்டவைக்கும் போல தென்படவும் தனது இலக்கியப் பாதையில் பெரியதொரு முட்டுக்கட்டை வந்துவிட்டதைப் போல உணர்ந்த அவர் செய்வதறியாது கதிரையில் சாய்கின்றார்.

அப்பொழுதும் அவரின் மனம் தான் ஒரு பிழையைச் செய்ததைப் போலவே ஏங்கியது. காலம் தப்பி இறங்கி விட்டோமா?. இளமையிலே அதைத் தொடங்கி இருக்கலாமே என்று யோசித்தார்.

ஒரு இள வயது எழுத்தாளரைச் சந்தித்து அனுபவங்களைப் பகிரும் வரை அவரின் இந்த ஏக்கம் தொடரும்.

**2015 இல் தாயக ஒலியில் இடம்பெற்ற சிறுகதை. நன்றி: தாயக ஒலி**

# 9 தனியொரு மனிதனுக்கு உணவு

மதிய சாப்பாட்டுக்கான சமையலை ஆரம்பிப்பதற்காக பையின் அடியில் இருந்த அரிசியைப் பாத்திரத்திற்குள் கொட்டினாள் பார்வதி. சோற்றுப் பானையில் தண்ணீரையிட்டு அடுப்பில் ஏற்றிவிட்டு, பக்கத்திலிருந்த ஊது குழலையெடுத்து ஊதினாள்.

விறகு பச்சையாக இருந்ததால் பற்றிக் கொள்ள மறுத்தது. குப்பென வேகமாக அடுப்பிலிருந்து எழுந்த புகை கண்ணுக்குள் சென்றுவிடவும் அவளையும் அறியாமலே கண்ணீரைச் சிந்தியது கண்கள்.

உடுத்தியிருந்த பழைய புடைவைத் தலைப்பால் கண்களைத் துடைத்துவிட்டு வழிந்த மூக்கைச் சீறிவிட்டு விறகு கட்டைகளை உள்ளே தள்ளினாள். இடது கையால் ஊதுகுழலை எடுத்து மறுபடியும் ஊதினாள்.

அடுப்போ சொல்லுக் கேட்பதாகக் காணவில்லை. மூண்டு கொள்வதற்கு மனமில்லாதது கிடந்து அவளின் துயரத்தைக் கண்டு தானும் அழுவதைப் போல இழிந்து காட்டியது. கடந்த இரண்டு வாரங்களாகத் தொடர்ந்து பெய்து கொண்டிருந்த அடைமழையின் காரணமாக விறகுகளைக் காய வைக்க முடியாது இருந்ததால் விறகுகளோடு போராடிக் கொண்டிருப்பது பெரும்பாடாக இருந்தது அந்த மூதாட்டிக்கு.

அவள் கடைக்குப் போய் வருவதற்கு நேரம் சென்று விட்டது. முன்னைப் போன்று வேகமாக நடப்பதற்கு இப்பொழுது முடிவதில்லை. தன்னிடம் இருந்த சிறிய தொகைப் பணத்திற்கு ஏற்றதாக நாலு கடைகளில் பார்த்து பொருள் ஏதும் வாங்க முடிந்தது.

இன்னும் சிறிது நேரத்திற்குள் சமையலைச் செய்துவிட வேண்டுமே. நேரமாகிவிட்டதே என்ற எண்ணமும் அவளிடம் எழுந்தது. பதட்டத்துடன் அந்த இடத்தில் அமர்ந்தாள்.

காலையில் எதுவும் சாப்பிடாமல் பள்ளிக்குச் சென்ற தனது பேரன் பசியோடு வந்துவிடுவானே என்ற கவலை வந்தது. அவன் வருவதற்கு முன்பாக சமையலைச் செய்து முடிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் வேகமாக இயங்கிக் கொண்டிருந்தாள்.

மறுபடியும் விறகை வெளியில் எடுத்து அருகில் இருந்த கத்தியால் அதை இரண்டாகப் பிளக்க முயற்சித்தாள். அவளின் பலத்தால் அது முடியவில்லை. எழுந்து சென்று குசினியின் ஓரத்திற் காய்ந்த விறகுச் சுள்ளிகள் இருக்கின்றனவா என்று பார்த்தாள்.

என்றோ பாவித்து காய்ந்து கிடந்த சிரட்டை ஒன்று கண்களில் தென்பட்டது. அதை எடுத்து கத்தியாலே அடித்துப் பிளக்கும்வரை பிளந்துவிட்டு அடுப்பிற்குள் திணித்தாள்.

மெது மெதுவாக தவணை முறையில் பற்றிக் கொண்டிருந்த அடுப்பு சிரட்டையை வைத்ததும் அணைந்து விடுகின்றது. அதிலே ஊற்றவென மண்ணெண்ணெயை எடுக்கவென்று எழுந்தபோது தான் அவளுக்கு அது நினைவுக்கு வந்தது.

நேற்று இரவில் விளக்கு ஏற்றுவதற்குக் கூட மண்ணெண்ணெய் இருக்கவில்லை. படத்துக்கு ஏற்றிய விளக்கை வைத்துத் தான் அவளும் பேரனும் சாப்பிட்டு முடித்தார்கள். இன்றாவது வாங்கி வைக்க வேண்டும் என்று நினைத்தது அவள் சிந்தனையில் வந்தது.

ஏதாவது காகிதத் துண்டை எடுத்துப் பற்றவைத்துக் கொள்ளலாமா என்ற எண்ணத்துடன் எழுந்து சென்று பலவிடத்திலும் தேடினாள். முன்னறையில் வெளியில் என்று எல்லா இடமும் தேடினாள்.

ம்.... ஹூம்... ஏழைக் குடும்பத்தில் செல்வம் மட்டுமல்ல, காகிதங்களுமே குறைவாகத் தானே இருக்கும். அலைமகள் சென்று விட்டதால் கலைமகள் வர மறுத்தாளோ!

குசினியில் பார்சலுடன் கொண்டு வந்த காகிதங்கள் எதுவும் இருக்கின்றதா என்று பார்த்தாள். எதுவும் இருக்கவில்லை. பேரனின் புத்தக மேசையில் பாவித்துக் கிழித்த ஏதாவது இருக்குமா என்று தேடிக் கொண்டே வந்தாள்.

நீண்ட நேர தேடுதலின் பின்னே மெழுகுதிரித் துண்டு ஒன்றையும் காகிதத் துண்டையும் கண்டெடுத்தாள். அவற்றைக் கொண்டு சென்று அடுப்பிற்குப் பக்கத்திலே வைத்துக் கொண்டு மறுபடியும் அடுப்பை மூட்டத் தொடங்கினாள்.

நெருப்புக் குச்சியைப் பற்றவைத்து மெழுகுதிரிக்கு ஒளியேற்றிய பின் பேப்பரை சிறிது சிறிதாகக் கிழித்தெடுத்து மெழுகுதிரியில் பிடித்து அடுப்பில் போட்டாள்.

மிகுந்த பிகு பண்ணிக் கொண்டிருந்த அடுப்பும் சற்று நேரத்திற்குப் பின்னால் குற்று மதிப்பாக எரியத் தொடங்கியது. அவளுக்கும் நிம்மதியாக இருந்தது. உலையில் இருந்த தண்ணீர் ஓரளவுக்குக் கொதித்திருக்கிறது என்பதை ஊகித்துக் கொண்டாள். பாத்திரத்தில் இருந்த அரிசியைக் கழுவியெடுத்து உலையில் போட்டாள். அரிசிக்கு மேலா தண்ணீர் இருந்த அளவைத் தன்னுடைய விரலைச் செலுத்திப் பார்த்தாள். சோறு பொங்குவதற்குத் தேவைப்பட்ட நீரின் அளவு சரியாக இருந்தது.

ஆனாலும் அத்தனை வருடங்களாக சமையலைச் செய்து கொண்டிருக்கும் அவளின் அனுபவம் சொல்லியது, அந்தச் சாப்பாடு அவர்கள் நால்வரின் வயிற்றுக்குப் போதப் போவது இல்லை என்பதை.

ஆனால் எதுவும் செய்ய முடியாது. காலையிலும் சாப்பிடாமல் பட்டினியுடன் பாடசாலைக்குச் சென்ற பேரன் திரும்பி வந்ததும் அவனுக்குக் கொடுக்க வேண்டும்...

கால்களால் எதுவும் செய்ய முடியாமல் காவல் நாய் போல் வீட்டுக்கு முன்னாலே இருக்கும் தன்னுடைய மகனுக்குக் கால் வயிறாவது போட வேண்டும்...

நோயாளியாகக் கட்டிலில் படுத்த படுக்கையாக இருக்கும் அவளின் கணவனுக்கு ஒரு அகப்பை சாதமாவது கொடுக்க வேண்டும்.

அவர்களுக்குக் கொடுத்தாலே போதும். தன்னைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம் என்று நினைத்தபடியே அவள் அரிசியைப் போட்டாள். நேற்று வேலைக்குப் போன இடத்தில் கொடுத்துவிட்ட காய்ந்த கத்தரிக்காயை வெட்டிப் போட்டு பால் விடாமலேயே ஒரு கறியை ஆக்கினாள்.

முன் கடைக்காரனிடம் கடன் சொல்லி வாங்கி வந்த முட்டையை அவித்து எடுத்தால் பேரனுக்குக் கொடுக்கலாம் என்று நினைத்துக் கொண்ட அவள், அதை நன்றாகக் கழுவி சோறு பொங்கிக் கொண்டிருந்த பானையிலே போட்டு அடுப்பை எரித்தாள்.

விறகை அடுப்பிற்குள்ளே தள்ளுவதற்குக் குனிந்தபோது, திடீரென இடுப்பில் பிடித்துக் கொண்டது. வயது போன கட்டை தானே... அதுவும் இந்த நிலைமையை எத்தனை நாளைக்குத் தாக்குப் பிடிக்கும்? என்று நினைத்தாள்.

'அம்மா' என்றபடி ஒரு கையால் தனது இடுப்பைக் கெட்டியாகப் பிடித்தபடியே அவளையும் அறியாமல் கண்ணீரைச் சுரந்த அந்தக் கண்களிலே, இருபது வருடங்களுக்கு முன்பாக அவர்கள் வாழ்ந்த சுகபோக வாழ்க்கை வந்துநின்றது.

கிளிநொச்சி மாவட்டத்திலே இரணைமடுக்குளத்தினால் வளம் பெருக்கும் பகுதியில் ஒரு பெரிய நிலக் கிழாந்தரின் மகளாகப் பிறந்த பார்வதி பிறந்த நாளில் இருந்தே செல்வச் செழிப்புடன் வளர்க்கப்பட்ட பெண்ணாவாள்.

இரணைமடுப்பகுதியில் உள்ள சாந்தபுரம் என்ற கிராமத்தைச் சேர்ந்த அவரின் தந்தையார் பல ஏக்கர் கணக்கிலான நன்செய் பூமியின் உரிமையாளராக இருந்தார். அவருக்கு ஒரே மகளாகப் பிறந்திருந்த ஒரு அரச குமாரி போலவே வளர்ந்து வந்தாள்.

அனைவரின் வயிற்றுப் பசியைத் தீர்த்து வைக்கும் விவசாயமே தொழில்களில் உயர்ந்து நிற்பது என்பது அப்பகுதியில் உள்ளவர்களின் மட்டுமல்ல அகில உலகில் வாழ்பவரின் கருத்தாகும். பருவம் தப்பாமல் மாரி மழையை வழங்கி நிற்க மண் பார்த்த பூமியெங்கும் பொன்னிறத்திலே விளைந்து நிற்க மக்களை மேன்மைப்படுத்துவதாய் விளைநிலங்கள் செழித்தன.

நிலபுலங்களைப் பெருக்கியது மட்டுமல்லாமல் நகைகள், வீடுகள் என அனைவற்றிலும் பெருகிய வளத்துடன் தனது பெண்ணை திருமணம் செய்து கொடுத்தார் அவளின் தந்தையார். அவளின் திருமண விழாவானது ஒரு திருவிழா போலவே அந்நாளிலே நடத்தப்பட்டது.

கைப்பிடித்த மணாளனும் கருத்தினில் குறைந்து போய் விடாததால் தனது தந்தையாரைப் போலவே பிரயாசைப்பட்டு நிலங்களை செழிப்படையச் செய்து நிறக பூரிப்புடன் ஆண் வாரிசாக அடுத்தடுத்து இருவரைப் பெற்றுவிட்டிருந்தாள் பார்வதி.

அரசிளங்குமாரர்களுக்கு உரிய மிடுக்குடனே அழகாக வளர்ந்து வந்த அவர்கள், படிப்பிலும் பண்பிலும் ஊரார் போற்றவே வாழ்ந்தனர். அந்த ஊரிலுள்ள பாடசாலையில் கல்வி கற்று கல்விப் பொதுத் தராதர சாதாரண பரீட்சையில் தேர்ச்சி பெற்று, மூத்தவன் உயர்தரம் படித்துக் கொண்டிருந்தான்.

இளையவனும் படிப்பில் குறைந்து விடாதவனாய் அந்தப் பள்ளியில் அனைவரின் கவனத்தை ஈர்ப்பவனாய் எட்டாம் வகுப்பிற் படித்துக் கொண்டிருந்தான்.

யார் கண்பட்டதோ என்று சிந்திக்கும் அளவிற்கு ஒரு சம்பவம் நடந்தது. அது அவர்களுடைய சந்ததியையே பாதிக்கும் அளவிற்கு வரப் போகின்றது என்பதை அப்பொழுது அவர்கள் உணர்ந்திருக்கவில்லை. உயர்தரத்திற் படித்துக் கொண்டிருந்த அவளது மகன், இனத்தைக் காக்க வேண்டிய சேவை என்ற உந்துதலில் இயக்கத்திற் சேர்ந்து கொண்டான்.

தலை தலையாக அடித்துக் குழறினர் பார்வதியும் கணவனும். தங்களது செல்வ மகனை தங்களுடன் அனுப்பிவிட வேண்டும் என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டனர். ஆனால் மகனின் பிடிவாதத்தினால் அவர்கள் ஆசைப்பட்டது போல அவன் வரவில்லை. மிகுந்த துயரத்துடன் அவர்கள் வாழ்ந்து கொண்டிருந்தனர்.

பிள்ளைகளால் துன்பம் ஏற்பட்டால் பெற்றோரால் மீண்டு விடமுடியாது. எவ்வளவு சொத்துக்கள் செல்வங்கள் இருந்தும் துயரத்துடனேயே வாழ்ந்து வந்தனர். இருந்தும் வயல் நிலங்களைக் கண்ணாகக் கவனித்து வந்தனர்.

இதற்கிடையில் இளையவன் கல்வி கற்று பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகி இருந்தான். அம்மாவும் அப்பாவும் தனது தமையன் விடயத்தினால் மிகுந்த துன்பமுற்று இருந்ததால், அவர்களைப் புண்படுத்தாதவாறு மிகவும் கவனமாகவே நடந்து வந்தான்.

விடுதலைக்கான போராட்டமென காலத்துக்குக் காலம் எழுந்து கொண்டிருந்த குழுக்களினால் நிம்மதியையும் பணத்தையும் தொடர்ந்து தொலைத்துக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் அவர்களுக்கு வந்து கொண்டேயிருந்தது. ஆயுதக் குழுக்கள் ஒவ்வொருவரும் கேட்கும் போது கொடுத்து அவர்களின் செல்வமும் குறைந்து கொண்டிருந்தது.

அப்போது பல்கலைக்கழகத்தில் இருந்து விடுமுறையில் வீட்டுக்கு வந்திருந்த இளையவன் திரும்பவும் யாழ்ப்பாணத்திற்குப் போக முடியாதவாறு பாதை மூடப்படவே படிப்பை இடைநிறுத்திவிட்டு, விவசாயத்தை முழுமையாகக் கவனித்துக் கொண்டிருந்தான் அவன்.

தமிழனாகப் பிறந்த பலருக்கு மறுக்கப்பட்டது போலவே தனது மகனின் படிப்பு குழம்பியதைக் கண்டு அன்னை மனம் நொந்தாள். இருப்பினும் அன்றைய நாட்களில் தென்பட்ட சூழ்நிலையில் உயிரையாவது காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில் படிப்பை அத்தனை பொருட்டாக எடுத்துக் கொள்ள முடியவில்லை.

அவர்களுடனே இருந்து விவசாயத்தைப் பார்த்துக் கொண்டிருந்த அவனுக்கு, அருகிலே உமையாள் புரத்தில் இருந்து பெண் எடுத்துத் திருமணம் செய்யத் தீர்மானித்து இருந்தனர். அருகில் போய் வரக்கூடிய இடத்தில் இருப்பதால் உறவுகளின் நெருக்கம் அதிகரிக்கும் என்று நம்பினர்.

வீட்டிலே நல்ல நிகழ்வு இடம்பெறும் நேரத்தில் தலைமகன் இல்லையே என்று அம்மாவின் மனம் வருத்தப்பட்டது. நல்ல நிகழ்வின் போது அவனும் நிற்கவேண்டும் என்று ஒரே பிடியாகக் கேட்டுக் கொண்டாள்

தாயாரின் தொடர்ச்சியான வற்புறுத்தலின் அவனின் தமையன் திருமணத்திற்கு முதல் நாள் நாலு பேருடன் வந்து குடும்பத்தை சந்தித்துவிட்டுச் சென்றான்.



மறுநாள் திருமணத்தன்று காலையிலே மாப்பிள்ளைக்குப் பாலறுகு வைத்து நீராட்டுவதற்கென ஆயத்தப்படுத்திக் கொண்டிருக்கவும் அவனைக் கொண்டு சென்றுவிட்டனர் வேறொரு குழுவினர்.

குறிப்பிட்டளவு பணத்தைக் கொடுத்தால் மட்டுமே அவனை விடுவிக்க முடியுமெனச் சொல்லியபோது வேறு வழியின்றி அதைக் கொடுத்து விட்டு நாலு நாட்களின் பின்பு வந்த மகனுக்குத் திருமணம் செய்து வைத்தனர் பெற்றோர்.

அவர்களுக்குக் கொடுத்ததைக் கேள்விப்பட்ட வேறு குழுவினர் அதைப்போல இருமடங்கு தொகையைக் கேட்டனர். அவ்வாறாக கேட்டவர்களுக்கு எல்லாம் கொடுத்தவர்கள் பேரன் பிறந்த போது கிட்டதட்ட வறுமை என்ற கோட்டுக்கு அருகில் வந்து விட்டனர்.

அவ்வேளை வன்னிப்போரும் உச்சகட்டத்தை அடைந்திருந்தது. உயிரைக் காப்பாற்றிக் கொள்வென இருந்த ஒரே உடமையான வீட்டையும் விட்டுவிட்டு, கையினாலே எடுக்கக்கூடிய பொருட்களை மட்டும் எடுத்துக் கொண்டு கால் போன போக்கிலே அவர்கள் சென்றனர்.

வழியில் கண்ணிவெடியில் அகப்பட்டு தாக்குதலில் மருமகள் இறந்ததுடன், மகனும் காலிலே காயங்களுடன் உயிர் பிழைத்துக் கொண்டான். ஒருவாறாக எல்லாரையும் இழுத்துக் கொண்டு வவுனியாவுக்கு வந்து சேர்ந்தனர்.

அவளின் முதலாவது மகனைப் பற்றி அதற்குப் பிறகு எதுவும் கேள்விப்பட்டு இருக்கவில்லை. பெரும்பாலும் அவன் வீர மரணம் அடைந்திருப்பான் என்றே எண்ணிக் கொண்டனர்.

வந்தாரை வாழவைக்கும் வவுனியா முதலில் அவர்களுக்கு முகாம்களில் இருப்பிடத்தைக் காட்டவும் மகனுடனும் பேரனுடனும் நோயாளியான கணவனுடனும் முகாமிற்கு வந்து சேர்ந்தாள்.

ஓரளவு துன்பத்துடனே முகாம் வாழ்க்கையைப் பழகிக் கொண்ட பின்பாக இரண்டு வருடங்களின் பின்பாக அவர்களுடைய சொந்த ஊருக்கு குடியேற்றப்பட்டார்கள். ஆனால் அங்கே செல்ல அவளுக்கு மனம் வரவில்லை.

கையில் எஞ்சியிருந்த பணத்தைக் கொண்டு வவுனியாவுக்கு உள்ளாகவே காணி ஒன்றை வாங்கி அங்கே குடிசை ஒன்றை அமைத்துக் கொண்டாள். அரசாங்கத்திடம் இருந்து கிடைத்த சிறுசிறு உதவிகளைக் கொண்டு வாழிடத்தை உருவாக்கினாள். பகல் நேரத்தில் அக்கம் பக்கத்தில் உள்ள வீடுகளுக்குச் சென்று உதவிகளைச் செய்து கொடுத்து, கூலியைப் பெற்றுக் கொண்டு காலத்தை ஓட்டி வந்தாள்.

அத்தனை வறுமையிலும் அவளைத் தாக்குப் பிடித்து இயங்க வைத்தது அவள் இளமைக் காலத்தில் இருந்த செழிப்பும் உண்ட உணவுமே என்று மனசாட்சி சொன்னது.

“ஸ்.....ஸ்......” பொங்கிய உலையின் சத்தம் நினைவுகளில் இருந்த மீட்டுவிடவும், அருகில் இருந்த துண்டை எடுத்து உலையை வடிக்கிறாள்.

நிரம்ப முடியாத சோற்றுப் பானையில் நிரம்பி வழிந்த உலை ஒரு சிறு மனநிறைவைத் தந்தது. மெதுவாக வடித்துவிட்டுப் பானையை அப்படியும் இப்படியும் ஆட்டி சரி செய்து கொள்கிறாள்.

திடீரென்று தலை சுற்றுவது போல இருந்தது. சரியாகச் சாப்பிட்டு எத்தனையோ நாட்கள் கடந்து விட்டதால் மயக்கமாக இருக்கிறது என்று நினைத்துக் கொண்டாள்.

ஒருவாறு சமாளித்துக் கொண்டு பேரனுக்கென அவித்த முட்டையின் கோதுகளை நீக்கி ஒரு தட்டில் வைத்துக் கொண்டாள். இரண்டு மாதத்திலேயே அன்னையைப் பிரிந்து தாய்ப்பாலையும் இழந்துவிட்ட அவனுக்கு இந்த ஆகாரமாவது சிறிது ஆற்றலைத் தரவேண்டும் என்று நினைத்துக் கொண்டாள்.

சோற்றை மூடி வைத்துவிட்டு நிமிர்ந்துபோது வெளியில் கணவன் இருமும் சத்தம் கேட்டது. கடந்த வாரம் அரசாங்க வைத்தியசாலையில் இருந்து வாங்கிக் கொண்டு வந்த மருந்தைக் கொடுக்க வெண்டும் என்ற எண்ணத்துடன் அவள் எழுந்து சென்றாள்.

இருமிக் கொண்டிருந்த கணவனின் நெஞ்சை நீவி விட்டு அவரை சற்று ஆசுவாசப்படுத்திய பின்பு தன் கையில் கொண்டு சென்ற தட்டிலிருந்த சோற்றை எடுத்து ஆதரவாக ஊட்டினாள்.

ஆவலாக அதை சாப்பிட்டான். ஒரு கையால் நீவிவிட்டபடி மறுகையால் சாப்பாட்டை எடுத்து ஊட்டிக் கொண்டாள்.

சில வினாடிகளிலேயே தட்டு காலியாகிவிடவும் 'இன்னும் வேண்டும்' என்று கேட்டுவிடக்கூடாதே என்ற எண்ணத்துடன் அவசர அவசரமாக மாத்திரைகளையும் வாயில் போட்டுவிட்டாள். மாத்திரைக்கு மேலே தண்ணியையும் அருந்தி விட்டு சாய்ந்து கொண்டான் கணவன்.

தனது இளம் பராயத்திலே தன் வயலில் வேலை செய்யவரு வோருக்குத் தாராளமாகவே உண்ணக் கொடுத்த வந்த தெய்வம் அரும்பாடுபட்டு ஒரு கவளம் உணவை உண்டுவிட்டு கண்ணை மூடிச் சாய்ந்து கொண்டது அவளுக்கு வருத்தத்தை உண்டுபண்ணியது.

ஆனால் எல்லோரின் மனமும் வளர்ந்து கொண்டிருக்கும் சிறு கொழுந்தாகிய பேரனின் மேலே நிலைத்து இருந்ததால் துயரங்களை எப்படியுமே கடந்தாக வேண்டும் என்ற எண்ணத்தில் அனைவருமாகவே எல்லாத் துன்பத்தையும் பங்கிட்டுக் கொண்டிருந்தனர்.

"நீ ஏதும் சாப்பிட்டியா?" மெல்லிய குரலில் கணவன் கேட்டான்.

"இன்னும் இல்லை. பேரன் வந்தா பிறகு அவனுக்கும் குடுத்துச் சாப்பிடுறன்" என்று சொல்லிவிட்டு எழுந்து வந்தாள் அவள். கையில் வெற்றுத் தட்டத்தையும் மீதி மருந்துகளையும் எடுத்தாள். ஏனோ கால்களும் எடுத்து வைக்க முடியாததாகவே இருந்தது. மிகுந்த சிரமப்பட்டு உள்ளே நடந்து வந்தாள்.

தெருமுனையில் இருந்த குழாயில் பிடித்துக் கொண்டு வந்த தண்ணியினால் சிக்கனமாகவே தட்டைக் கழுவிவிட்டு மகனுக்குச் சாப்பாடு எடுத்துச் சென்றாள். மகனிடம் கொடுத்துச் சாப்பிடச் செய்தாள். மகன் சாப்பிட்டு முடித்த போதே பேரனும் வந்துவிடுகின்றான். களைத்துச் சோர்ந்து வந்த அவனை ஆதரவாகப் பற்றிக் கொண்டு உள்ளே அழைத்துச் சென்று புத்தகப்பையைக் கழற்றி வைத்தாள்.

அவனின் உடைகளைக் கழற்றி மறுபடியும் மடித்து வைத்து விட்டு அடுப்படிக்குள் அழைத்துச் சென்றாள். அவனுக்கு சாப்பாட்டை தன் கையாலே ஊட்டிவிட்டாள். அவனும் ஆவலாக சாப்பிட்டான். 'இன்னும்.. இன்னும்' என்று கேட்டு அனைத்தையும் சாப்பிடுகின்றான்.

'முடிஞ்சுட்டுது' என்று சொல்லவும் பானைக்குள் கையைவிட்டு எஞ்சியிருந்த ஒரு கை சோற்றையும் வாங்கி சாப்பிட்டுவிட்டான். பார்வதிக்கு என்னவோ போல இருந்தது. அந்தச் சோற்றையாவது சாப்பிடலாம் என்று எண்ணியிருந்த போது அதையும் கேட்ட பேரனை அன்புடனே பார்த்தாள்.

எப்படியெல்லாம் இருக்க வேண்டிய அவன், இன்று சிறிதளவாவது திருப்தியாகச் சாப்பிட்டானே என்று மனம் நிறைந்து கொண்டது. ஆனால் அவளுக்கு வயிறு பசிக்கத் தொடங்கியது. மனம் நிறையும் போதே வயிற்றையும் நிறைத்துக் கொள்ளும் சக்தியை ஆண்டவன் கொடுத்திருக்கலாமே என்று எண்ணிக் கொண்டாள்.

'மகாபாரதத்தில் துர்வாசருக்கு உணவளிக்க வந்த கிருஷ்ணர் ஒரு பருக்கை சோற்றில் அறுசுவை உண்டியை ஆற அமர உண்டு திருப்தியடைந்ததைப் போல ஒரு திருப்தியையோ இந்த ஏழைகளுக்குக் கொடுத்திருக்கக்கூடாதா. திரௌபதைக்கு கொடுத்த அட்சய பாத்திரம் போல ஒன்றை ஏழைகளுக்குக் கொடுத்திருந்தால் எத்தனை நன்றாக இருக்கும்' என்று காலம் எண்ணிக் கொண்டது.

திருப்தியாகச் சாப்பிட்டு முடித்த பேரன் விளையாடத் தொடங்கினான். வாளியில் நீர் குறைந்துவிட்ட காரணத்தால் குழாயடிக்குப் போய்ப்பிடித்து வரவேண்டும் என்ற எண்ணத்தில் அவள் எழுந்து சென்றாள்.

குழாயடிக்கு நடந்து போகவே தெம்பில்லாதவாறு சென்று கொண்டிருந்தாள் பார்வதி. எவ்வாறாகவோ செழிப்புடன் வந்த அவளின் வாழ்க்கையில் எச்சங்களாக எதுவுமே இப்பொழுது இல்லையே என்று எண்ணிக் கொண்டாள்.

அவள் வீட்டைத் தாண்டிப் போனபோது தொலைவில் நடந்து கொண்டிருந்த அரசியல் கூட்டத்தில் இருந்து பேச்சாளரின் குரல் ஒலித்தது.

"தனியொரு மனிதனுக்கு உணவில்லை எனின் ஜகத்தினை அழித்திடுவோம் என்று சொன்னான் சுதந்திரக்கவி பாரதி. ஏம்மில் யாருக்கேனும் பட்டினி ஏற்பட்டால் எம் பதவியைத் துறந்திடுவோம்......." என்றவாறு உரை தொடர்ந்தது.

அந்தத் துன்பத்திலும் அவளுக்குச் சிரிப்புத்தான் வந்தது. அழகாகப் பேச அனைவராலும் முடிகின்றது. சாப்பிட்டிருந்தால்......

குழாய்க்கு முன்னாலே வாளியை வைத்துவிட்டு, குழாயைப் பிடித்து அடிக்க முற்பட்டபோது அவளால் முடியாமல் இருந்தது. அருகிலே விளையாடிக் கொண்டிருந்த ஒரு சிறுவனை அழைத்து அடித்துத் தருமாறு கேட்டாள். அவனும் வாளி நிரம்பும் வரையிலும் அடித்துக் கொடுத்தான். அதைத் தூக்கிச் செல்வதற்கு அவள் சிரமப்பட்டுக் கொண்டிருந்ததால் மெதுவாக அவளது வீடுவரைக்கும் அதைத் தூக்கிக் கொடுத்துவிட்டு விளையாடச் சென்றான்.

மாலை சாய்ந்து இருள் வந்துவிடவும் ஒரு சிறு மெழுகுதிரித் துண்டை எடுத்துப் பற்றவைத்துக் கொண்டு பேரனைக் கூப்பிட்டாள். எங்கோ விளையாடிக் கொண்டிருந்தவன் அவளின் குரல் கேட்டு உள்ளே வரவும் வெளியிலே இருந்த பார்த்துக் கொண்டிருந்த மகனும் தனது ஊனக் காலை ஊன்றியவாறு உள்ளே வந்தான்.

கதவும் இல்லாத அந்த குடிசையில் இன்றைய இரவு முழுவதுமாகவே அவர்களுக்குக் காவலாக இருக்கப் போகின்ற அந்த விளக்கு வெளிச்சம் எதுவுமில்லாத அந்த வீட்டை இருட்டாகவே காட்டி நிற்கின்றது.

இரவு தண்ணீரைக் குடித்துவிட்டு அனைவரும் படுத்துவிடவும் பேரனை அணைத்துக் கொண்டு தரையில் படுத்திருந்தாள் பார்வதி. நீண்ட நேரமாகக் கதை சொல்லக் கேட்டுக் கொண்டிருந்த பேரன் நித்திரை கொண்டான்.

பொழுது விடிந்துவிட்டதை உணர்த்துமுகமாக பறவைகள் இரைவதைக் கேட்ட பார்வதியின் கணவன் எழுந்தான். வழமையாகவே வேளைக்கு எழுந்து வேலை செய்யும் பார்வதியைக் காணாததால் அவளை அழைக்கின்றான்.

“பார்வதி... பார்வதி ....”

தந்தையின் குரலைக் கேட்டு எழுந்து கொண்ட மகன் சுற்றிலும் முற்றிலும் பார்த்தான். அன்றைய நாளின் வித்தியாசம் அவனுக்கு ஓரளவு புலப்படவே “அம்மா.... அம்மா....” என்று அழைத்தபடி தாயைத் தேடுகின்றான்.

அங்கும் இங்கும் நெளிந்தவாறு படுத்துக் கொண்டிருந்தான் பேரன். அவனுக்கு அருகில் படுத்து இருந்த அவள், எந்த வித சலனமும் இன்றி மரக்கட்டை போல கிடந்தாள். சிறு அசைவு தானும் தெரியவில்லை.

"அம்மா.... அம்மா...." என்று குழறலாக வெளிப்பட்ட மகனின் குரலைக் கேட்டுப் பேரனுமே எழுந்துவிட்டான். ஆனால் அவள் எழும்பக் காணோம். அப்படி அவள் நித்திரை கொள்ளுவதை அவர்கள் யாரும் அதுவரை பார்த்ததில்லை.

ஏதோ தோன்றவும் தரையில் அரக்கியபடியே வந்த மகன் தாயின் அருகே வந்து அவளை உலுப்பினான்.

அவளிடம் எந்த சலனமும் காணப்படவில்லை. விழித்தெழுந்த பேரன் அழத் தொடங்கினான்.

"அப்பம்மா.... அப்பம்மா...." பேரனின் அழுகுரலுக்கும் அவள் எழும்புவதாகத் தெரியவில்லை.

ஒரு வயிறு ஆகாரத்திற்காகப் போராடிக் கொண்டிருந்த அந்த ஆத்மா பாழும் உடலைவிட்டுச் சென்று விட்டது என்பதை அவர்கள் அனைவரும் சொல்லாமலே புரிந்து கொண்டனர்.

# 10 சந்தோசப் பணம்

மகேஸ்வரிக்கு எரிச்சல் எரிச்சலாக வந்தது. மதியம் தன் கணவன் வந்து சொன்ன நேரத்தில் இருந்தே கோபமாக இருந்தது அவளுக்கு. பாத்திரத்தைத் தேய்த்துக் கொண்டு மனம் போனபடியே புறுபுறுத்துக் கொண்டிருந்தாள்.

"அவங்களின்ர தலையில இடிதான் விழவேண்டும். இப்பிடி எங்கட வயித்தில போட்டு அடிக்கிறாங்களே. இவருக்குக் குடும்பம் பிள்ளைகள் இருக்கிறத மறந்திட்டாங்களா?" என்று வாய்விட்டுப் பேசினாள்.

தான் விளக்கிக் கொண்டிருக்கும் பாத்திரங்களுக்கு மட்டுமே தன்னுடைய சத்தம் கேட்கமுடியும் என்பது புலனாகவும் சத்தம் தானாகவே நின்றது. மனதுக்குள் போட்டு வறுத்தெடுத்துக் கொண்டாள்.

"எல்லாரும் சொந்தக் காரனுகள் பாருங்கோ. மாமனும் மச்சானும்தானே. ஆளாளுக்குப் பங்கு கேக்க வந்துட்டானுகள். நாங்க படுற பாடு எங்களுக்குத்தானே தெரியும்" என்று எண்ணிபோது கண்களின் ஓரமாக நீரும் எட்டிப் பார்க்கச் செய்தது.

“அவனினவன்ர மனுசியள் மாதிரியா நான் இருக்கிறன். ரெண்டு வேலைக்காரி வச்சுக் கொண்டு மினுக்கித் திரியிறனா? எல்லா வேலயும் நானே பாத்து எப்படி ஓடாகி இருக்கிறன்? என்ன பிரியோசனம். கஸ்ரமில்லாமல் சத்தமில்லாமல் அவனவன் வறுகித் திண்டு சேத்திட்டுப் போறான்”

“நல்ல வாயன் சம்பாதிக்க நாற வாயன் பிடுங்குறான் எண்ட மாதிரி மற்றவங்களிட்டப் பிடுங்கியே பிழைப்பு நடத்திக் கொண்டிருக்க ஒரு கூட்டம் இருந்து கொண்டுதான் இருக்கு. இவங்களாலதான் உழைக்கிறவன் இன்னுமே தெருவில இருக்கிறான்” என்றும் மனது சொன்னது.

பாத்திரங்களைத் தேய்த்து முடிவடைந்ததைக் கண்ணுற்றதும், பெரிய பாத்திரத்தை மெதுவாக நகர்த்தி கிணற்றுக்கு அருகில் வைத்துவிட்டு கையைத் தரையில் ஊன்றிய படியே எழுந்து கயிற்றைப் பற்றிக் கொண்டாள். ஆறுதலாக நீரை அள்ளிப் பெரிய பாத்திரத்துள் விட ஆரம்பித்தாள்.

அந்த நாட்களைப் போல அத்தனை விரைவாகச் செயற்பட முடியவில்லை. வயது போய்விட்டதாலும் கடின உழைப்பாலும் அவளின் உடல் சோர்வடைந்து இருந்தது. ஒரு நாளில் பதினெட்டு மணித்தியாலமாக வேலை செய்வதால் அவளின் உற்சாகம், வேகம் என்பன வெகுவாகவே குறைவடைந்து இருந்தன.

“ஏன் ஒரு மோட்டர வாங்கிப் போடக் கூடாதா?. இப்பிடி எல்லாத்துக்கும் துன்பப் படுகிறியே” என்று போன வாரம் அவளைப் பார்க்க வந்த அம்மா சொன்னது அவளுக்கு நினைவுக்கு வந்தது.

“காசு வசதிப்படேல்ல அம்மா. வருற மாதம் ஏதோ கூடவாக் கிடைக்கும் எண்டு இவர் சொன்னவர். அதில பாத்து வேண்டுறம். பிள்ளகளும் அதத்தான் சொல்லுதுகள்” என்று சொல்லி அம்மாவை சமாதானப்படுத்தி வைத்தாள்.

‘இந்த மாதம் எப்பிடி வாங்க முடியும்? அதுதான் செலவு வந்திட்டுதே’ என்று மனம் சொல்லவும் மறுபடி சோர்வு வந்தது அவளுக்கு. கிணற்றுக்குள் போடப்பட்ட வாளியை எடுக்கவும் மனமில்லாமல் தனது பாரத்தைக் கொடுத்து கயிற்றிலே தொங்கினாள்.

கயிற்றின் மறுமுனையில் கட்டியிருந்த வாளி தானாக மேலே வந்தது. திரும்பிய அவள் தண்ணீரை ஊற்றிவிடாது கவனமாக வைத்துவிட்டு பாத்திரங்களை அலசத் தொடங்கினாள். சிந்தனையுடனே பாத்திரங்களை அலசியபடி நிமிர்ந்தவள், எதிரே முதலாவது மகன் வருவதைக் கண்டதும் நிமிர்ந்து கொண்டாள். அவனின் முகத்தில் சந்தோசத்தைக் காணவில்லை.

“அம்மா அம்மா எண்டு எவளவு நேரந்தான் கத்துறது. வீடு முழுக்கத் தேடிப் போட்டு வாறன். எனக்கு நேரமல்லா போகுது” என்று குறைபட்டவாறே அன்னையை நோக்கி வந்தான்.

மறுநாள் நேர்முகப் பரீட்சைக்கு கொழும்புக்குச் செல்வதற்காக அன்று பின்னேரம் புறப்படுவதாகச் சொல்லியிருந்தாள். மதியத்தில் இருந்து எழுந்த குழப்பத்தினால் அவள் தன்னை மறந்து யோசித்துக் கொண்டிருந்ததில் அதை முற்றாகவே மறந்துவிட்டது நினைவுக்கு வந்தது.

‘அவனின் உடைகளை எடுத்து ஒழுங்குபடுத்த வேண்டுமே. மறந்துவிட்டேனே’ என்ற குற்ற உணர்வு தோன்றியதும், செய்து கொண்டிருந்த வேலையை அப்படியே போட்டுவிட்டு சடுதியாக எழுந்து கொண்டாள். இடுப்பில் மடித்துக் கட்டியிருந்த சட்டையை நீட்டிவிட்டு அவனுடன் உள்ளே சென்றாள்.

உடைகள் அனைத்தும் முதல் நாள் தோய்க்கப்பட்டு அழுத்தப்பட்டு இருந்ததால் ஒழுங்குபடுத்துவதற்கு அதிக நேரம் எடுக்கவில்லை. விரைவாகத் தாயும் மகனும் பயணத்திற்கான ஒழுங்கைச் செய்து முடித்துவிட்டனர். ‘பயணத்திற்குக் காசு கொடுத்தனுப்ப வேண்டுமே’ என்ற எண்ணம் வரவும், வேலையை மகனை செய்யச் சொல்லிவிட்டுப் பணம் எடுப்பதற்காக சாமியறைக்குள் நுழைந்தாள். பீரோவைத் திறந்து சிறிய ஓலைப் பெட்டியில் இருந்து எடுத்த காசை வெளியில் எடுத்தாள்.

கொழும்பிற்கு நகர்சேர் கடுகதிப் புகையிரதத்திற் செல்வதற்கும், கொழும்பில் லொட்ஜ் ஒன்றில் இரண்டு நாட்கள் தங்குவதற்கும் ஐயாயிரம் ரூபாயாவது கொடுத்துவிட வேண்டும் என்று அவளின் மனது சொல்லியது. ஆனால் நூறு ரூபாவாகவும் ஐந்நூறு ரூபாவாகவும் இருந்த பணத்தை எண்ணிப் பார்த்தபோது மூவாயிரம் ரூபாவுக்குக் குறைவாகவே இருந்தது.

அவசரத்திற்குத் தேவைப்படும் எனத் தான் சேர்த்து வைத்திருந்த சிறிது பணம் சேலைகளை வைக்கும் பெட்டிக்குள் இருப்பது ஞாபகத்திற்கு வந்தது. சேலைகளை முற்றாக வெளியில் எடுத்து கவனமாகச் சேர்த்துப் பணத்தை எடுத்தாள்.

ம் ஹூம்.. அதிலும் அதிகமான தொகை தேறவில்லை. என்ன செய்வது என்று அவளுக்குப் புரியவில்லை. மகன் புறப்படத் தயாராகிவிட்டு வெளியில் நின்றவாறே அழைத்துக் கொண்டிருந்தான்.

"அம்மா.. அம்மா.. என்ன செய்து கொண்டிருக்கிறியள். ரெயினுக்கு நேரமாகுது. கெதியா வாங்கோ.."

சேலைகளின் நடுவே அமர்ந்து கொண்டு முன்னாலே இருக்கும் காசைப் பார்த்துக் கொண்டிருந்தவளுக்கு என்ன செய்வது என்றே புரியவில்லை. நேரம் கடந்து போவதை அவளும் கவனிக்காமல் இல்லை.

பல்கலைக்கழகப் படிப்பை முடித்துவிட்டு வேலையைத் தேடிக் கொண்டிருக்கும் மகனுக்கு ஒரு நல்ல நிறுவனத்தில் இருந்து நேர்முகப் பரீட்சைக்கு அழைப்பு வந்திருந்தது. அவனோடு விண்ணப்பித்து இருந்தவர்கள் பலரின் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டு அவனுடையது மட்டுமே அந்த அளவிற்கு வந்திருந்தது. அதுக்குப் போய்விட்டால் வேலை ஏறக்குறையக் கிடைத்ததுபோல ஆகிவிடும்.

சம்பளமும் ஓரளவு அதிகமாகவே கிடைக்கும் என்று அவன் மாறி மாறி சொல்லிக் கொண்டான். அவர்கள் அனைவருக்குமே வாழ்க்கை ஒளிமயமாகும் என்ற நம்பிக்கை இருந்தது.

தனது கணவரைப் போல, அரச நிறுவனம் ஒன்றிலே கேள்விமனுக் கொடுத்து குறைந்த விலையில் செய்து முடிப்பதாக வேலைகளைப் பெற்று செய்யும் ஒப்பந்தக்காரர் தொழிலைச் செய்ய அவளுக்கு விருப்பமில்லை. இருபது வருடங்களாக அவளின் கணவன் செய்து வந்த வேலையில் ஒவ்வொருவனும் பணத்தைக் கொட்டவேண்டிய அவதி நிலை தேவையில்லை. அதற்கென்றும் இதற்கென்றும் சந்தோசப் பணம் என்ற பெயரில் சுரண்டப்படத் தேவையில்லை என்று நினைத்தபோதே அவளுக்கு சந்தோசமாக இருந்தது.

ஆனால் நேர்முகத் தேர்விற்குப் போக முடியாதபடி இன்று காசு இல்லாத நிலைமையாக இருக்கிறதே என்று கவலைப்பட்டபடி அமர்ந்திருந்தாள். ஏழைகளின் வீட்டிலே எப்பொழுதுமே பற்றாக் குறையாகக் காணப்படும் இந்தப் பணத்தினால் எத்தனையோ சந்தர்ப்பங்கள் நழுவவிடப் படுகின்றன என் எண்ணியபோது வாசலிலே கணவனின் வாகனம் வந்துநின்ற சத்தம் கேட்டது.

கையில் சேர்த்து வைத்திருந்த பணத்தை ஆவலுடன் எடுத்தவாறே வெளியே வந்தாள் அவள். அவளின் கண்கள் கணவரைத் தேடி நின்றன.

அவர்களை நோக்கி வந்த அவளின் கணவர், மகனை புகையிரத நிலையத்திற்குக் கொண்டு செல்வதற்கென தயாரானார். அவரின் அருகிலே சென்ற அவள் பணம் பற்றாக்குறையாக இருப்பதை இரகசியமாகத் தெரிவித்தாள்.

"எவ்வளவு காசு காணாது" என்றவாறே தனது சட்டைப்பையில் இருந்து பணத்தை அவர் வெளியில் எடுத்தபோது, பச்சை நிறத்தில் காணப்பட்ட அந்த ஆயிரம் ரூபாய்த் தாட்கள் அனைவரின் பார்வையிலும் விழுந்தது.

"எவ்வளவு இன்னும் வேணும்?" என்று அவர் மறுபடியும் கேட்டபோது சுயநிலைக்கு வந்த அவள், தொகையைச் சொன்னாள்.

அத்தனை தொகையாகக் காணப்பட்ட அவரின் பணத்தொகையில், அவள் கேட்டுக் கொண்ட சில்லறைப் பணத்தை எடுத்து மனைவியிடம் நீட்டியபோது, மகனுக்கும் மனைவிக்கும் கோபம் வந்ததை அவர் கவனிக்காமல் விடவில்லை.

அவருக்கு வேலை கொடுக்கும் அந்த அரச அலுவலர் கேட்ட சநதோசப் பணத்தை வழங்குவதற்காக அந்தப்பணம் கொடுக்கப்பட வேண்டும் என்பதை சுருக்கமாக அவர்களிடம் தெரிவித்துவிட்டு மகனை அழைத்துக் கொண்டு வெளியே சென்றார்.

அவளுக்கு மறுபடியும் எரிச்சல் வந்தது. நேர்முகத்தேர்வுக்காகப் புறப்படும் பிள்ளைக்குக் கொடுக்காமல் அப்படி என்ன சந்தோசப்பணம் கொடுக்க வேண்டியிருக்கு என்று மனதிற்குள் திட்டிக் கொண்டாள்.

அவள் அத்தனை படிப்பறிவு இல்லாதவளாக இருந்தாலும், விலைமனுக்கோரலில் கடுமையான போட்டி நிலவுவதை அறிந்திருக்கின்றாள். அவ்வாறாக குறைந்த விலையில் ஒப்பந்தம் செய்து முற்று முழுதாக அவர்கள் செய்யும் வேலைக்கு எதற்காக இப்படி அடிக்கடி பணம் கொடுக்கவேண்டும் என்பது அவளுக்குப் புரியவில்லை.

சந்தோசப்பணம் என்ற பெயரில் எதுவித கணக்கு வழக்கும் இல்லாமல் யாருக்கும் தெரியாமல் இரகசியமாக இவர்கள் பெற்றுக் கொள்ளும் பணத்தினால் எம் போன்றவர்களுக்கு எத்தனை துன்பம் ஏற்படுகின்றது என்று நினைத்தபோது கவலையாக இருந்தது அவளுக்கு. இந்த விடயத்தை மேலதிகாரிகளுக்குச் சொல்லி இவ்வாறான சுரண்டல்களை நிறுத்த வேண்டும் என்று அந்தப் பேதையின் மனம் எண்ணிக் கொண்டது.

அதே நேரத்தில் தந்தையின் உந்துருளியில் அவருக்குப் பின்னாலே அமர்ந்தவாறே புகையிரத்தை நோக்கிப் பயணம் செய்து கொண்டிருந்த அவர்களின் மகனின் மனமும் அதைப் பற்றி எண்ணிக் கொண்டு வந்தது.

அத்தனை தொகையான பணம் அப்பாவின் சட்டைப்பைக்குள் இருந்தபோதும், யாருக்கோ போல கணக்குப் பார்த்து சில்லறைக் காசாக நீட்டிபோது அவனுக்குக் கோபமும் கவலையும் வந்தது. பிறந்த நாள் முதலாகத் தனக்கென எதையும் கேட்காமல் பெற்றோரைக் கஸ்ரப்படுத்தாமல் படித்து வந்ததை நினைவுபடுத்திப் பார்த்தான்.

பல்கலைக்கழகத்திலும் அப்பாவின் மாதாந்த நிதி வருகையை எதிர்பாராமல், தனக்குக் கிடைத்த உதவித் தொகைகளையும் மகாபொல உயர்கல்வி புலமைப் பரிசிலையும் பெற்றுப் படித்தது நினைவுக்கு வந்தது.

படித்தவுடனும் வேலை கிடைக்காது இருந்தபோதும், பெற்றோருக்குச் சுமையை ஏற்படுத்தாது, வீட்டு வேலைகளை மட்டுமல்ல, தந்தைக்கு உதவியாக அவரின் தொழிலிலும் கைகொடுத்தை நினைத்துப் பார்த்தான். இன்று யாருக்கோ கொடுப்பதைப் போல எண்ணிக் கணக்கிட்டு அப்பா கொடுப்பதை அவனால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

ஆனால் அப்பாவிடம் நேரடியாகக் கேட்டுக்கொள்ளும் துணிச்சலும் அவனுக்கு வரவில்லை. எதையெதை எல்லாமோ மனதில் நினைத்துக் கொண்டாலும் அப்பா எதிர்ப்படும்போது அவரின் களையிழந்த முகமும் அவரின் நரைத் தேய்ந்த தாடியையும் பார்க்கும் வேளையில் அவரைத் தாங்கிக் கொள்ளவேண்டும் என்ற எண்ணம் மட்டுமே எழுந்து கொள்ளும். பேச வந்த வாயும் தானாகவே மூடிவிடும்.

இருந்தாலும் இன்றைக்கு நடந்த சம்பவத்தை அவனால் ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை. விரைவில் வேலையைப் பெற்றுக் கொண்டு தன் காலில் நிற்கவேண்டும். இத்தனை வயதுக்குப் பிறகு அப்பாவிடம் கையேந்தும் நிலை தொடரக்கூடாது என்று எண்ணிக் கொண்டான்.

அவர்கள் புகையிரத நிலையத்தை அண்மித்தபோதே புகையிரதம் நிற்பது தெரிந்து. வேகவேகமாக இறங்கியவன், தனது பையை அவதானமாகத் தூக்கியவாறு பயணச் சீட்டுப் பெறும் இடத்திற்கு வந்தான்.

அவசர அவசரமாக பயணச் சீட்டை எடுத்துக் கொண்டு உள்ளே தனது இடத்தைத் தேடிப் பிடித்து அடைந்ததும் தனது பையை இருப்பிடத்திற்கு மேலாகக் காணப்பட்ட பீடத்தில் வைத்துவிட்டு இருக்கையில் அமர்ந்தான். வேகமாக ஓடிவந்ததில் இலேசாகக் களைத்தது அவனுக்கு.

அப்பாவிடம் விடை பெற்றிருக்கவில்லை என்பது ஞாபகத்திற்கு வரவே வெளியில் தலையை விட்டுத் தான் வந்த திசையை நோக்கித் தேடினான். தந்தையின் வாகனம் தரிக்கப்பட்ட இடத்திலிருந்து தொடங்கிய அவனது பார்வை, தூரத்தில் இருந்து அண்மையாக புகையிரதம் வரையிலும் வந்து கொண்டிருந்தது.

அவனைத் திடுக்கிட வைத்தது அந்தக் காட்சி. ஜன்னலில் தொங்கியவாறு அவனை அழைத்துக் கொண்டிருந்தார் அவனது தந்தை. விரைவாக தந்தையின் கைகளைப் பற்றியவன், அவரிடம் விடைபெற்றுவிட்டு அவரைக் கவனமாக இறங்கச் சொன்னான். அவனின் சொல்லைக் கேட்டு இறங்கியவர், புகையிரதம் புறப்பட்டபோது கைகளை ஆட்டியபடி நின்றார்.



அந்த இடத்திற்கு வந்தபோது அவனுக்கு ஏற்பட்ட எண்ணம் மறையத் தொடங்கியது. அவர் நின்ற கோலம் மாறிமாறி வந்து கொண்டது. விரைவில் வேலையைப் பெற்றுக் கொண்டு அவரின் சுமையைக் குறைக்க வேண்டும் என்று மனதிற்குள் எண்ணிக் கொண்டு அமர்ந்தான். கடுகதிப் புகையிரதம் தனது தளத்தில் வேகமாக ஓடிக் கொண்டிருந்தது.

புகையிரதம் மறைந்ததும் வாகனத் தரிப்பிடம் நோக்கிப் பறப்பட்ட தந்தைக்கும் கண்களில் கண்ணீர் எட்டிப் பார்த்தது. எந்தவித தொல்லையும் தராமல் தானாக அனைத்தையும் செய்து கொள்ளும் தன் மகனுக்கு போதியளவு பணத்தைக் கொடுக்காமல் அனுப்பிவிட்டேன் என்ற எண்ணம் அவர் மனதைக் குடைந்தது.

தனக்கு வேலை வழங்கும் அந்த அரச அதிகாரிக்கு மாதாந்தம் வழங்கும் தொகையைவிட அதிகமாக தனக்கு இம்முறை வழங்குமாறு கேட்டுக் கொண்டதில் அவருக்குக் கொடுப்பதற்காக பணத்தைப் பெற்றுக் கொள்ளுவதற்கு வங்கிக்குச் சென்றிருந்தார்.

பணத்தைப் பெறுவதற்கான படிவத்தைப் பூர்த்தி செய்துவிட்டுக் காத்திருந்தபோது 'தங்களது கணக்கில் போதியளவு பணத்தொகை இல்லை' என்ற செய்தி அவருக்குக் கிடைத்தது. என்ன செய்வது என்பதை யோசிக்க முடியாமல் இருந்தது. நடைமுறைக் கணக்கைக் காட்டி வங்கி மேலதிகப் பற்றாக ஒரு தொகையை வழங்குமாறு கோரியபோதும், அத்தொகையை வழங்க வங்கி மறுத்துவிட்டது. வேறு வழியில்லாமல் அசடு வழிந்தபடியே வெளியில் வந்தார்.

யாரிடமாவது கடன் பெற்றுக் கொள்ளுவதைத் தவிர வேறு வழியேதும் புலனாகவில்லை. எனவே தன்னைப் போலவே அந்த இடத்தில் ஒப்பந்த வேலைகளைச் செய்துவரும் இன்னொரு நண்பராகிய முருகேசப்பிள்ளையை அணுகினார்.

நண்பர் தானும் பணம் கொடுக்கவிருப்பதைத் தெரிவித்து, நண்பர் கேட்ட கடனுடனும் தன்னுடைய பணத்தையும் அவரிடம் கொடுத்துவிட்டார். மகனை அனுப்பிவிட்டு அந்த அதிகாரியிடம் சென்று சேர்ப்பதாக உறுதியளித்திருந்தார். அந்தப் பெருந்தொகைப் பணம்தான் மனைவியினதும் மகனினதும் கண்களில் எதேச்சையாகப் பட்டுவிட்டது.

அவர்களிடம் விளக்கமாக எதையும் சொல்லிக் கொண்டிருக்க முடியவில்லை. ஒரு குற்றவாளியைப் போலவும், கல் நெஞ்சக்காரன் போலவும் காட்டிக் கொண்டு வீட்டில் இருந்து வெளியேற வேண்டி ஏற்பட்டது.

மனைவி கோபத்துடன் முறைத்ததையும் மகன் கவலைப்பட்டுக் கொண்டே சென்றதையும் அவர் கவனிக்கத் தவறவில்லை. ஆனால் அந்த நேரத்தில் மௌனமாக இருப்பதைத் தவிர வேறெதுவும் அவருக்குப் புலனாகவில்லை.

சந்தோசப் பணம் என்று சொல்லி நிம்மதியைக் கெடுத்துவிடும் பணத்தைக் கேட்பதை அந்த அதிகாரி நிறுத்தவில்லை. ஒரு வேலை அதிகமாக வழங்கினாலும் அதற்கு ஒரு சதவீதத்தை வைத்துக் காசைப் பிடுங்கிக் கொள்கின்றார்.

அவர்களும் பிரயாசைப்பட்டு உழைக்கிறார்கள் என்பதை அதிகாரி அநியாயத்திற்கு மறந்துவிடுகின்றார். எந்தவித உழைப்பும் இன்றி சுரண்டியே பணத்தைப் பெற்றுவிடுகின்றார். உழைப்பவனின் பணம் என்பதை நினையாமல் கொள்ளைக்காரனிடம் இருந்து பணத்தைப் பிடுங்குவது போல் அல்லவா பிடுங்கிக் கொள்கிறார் என்று நினைத்த போது மனம் கனத்தது. தனது குடும்பத்தில், வீட்டில் செய்ய வேண்டிய விடயங்கள் எத்தனையோ இருக்கும்போது ஆற்றில் கொட்டுவது போல் அல்லவா பணத்தைக் கொட்ட வேண்டியதாக இருக்கின்றது என்று அவர் மனம் அழுதது.

மேலதிகாரிகள் எப்பொழுதுமே நேர்மையானவர்களாக இருப்பார்கள். அவர்களிடம் சொல்லுங்கள் என்று மனைவி சொன்ன வார்த்தைகளையும் நினைத்துப் பார்த்தார். அப்படிச் செய்யலாம். ஆனால் அதற்குப் பிறகு அவருக்கு கிடைக்கும் வேலைகளும் கிடைக்காது போனால் குடும்பத்தின் நிலைப்பாடு என்ன என்று யோசித்தார்.

வழமையாகச் செய்வது போலவே இம்முறையும் சத்தமில்லாமல் பணத்தைக் கொடுப்பது நல்லது என்பதை அவரின் அனுபவ அறிவு சொல்லியது. எனவே திட்டமிட்டபடியே அதைக் கொண்டு சென்று கொடுத்துவிடலாம் என்று நினைத்தவாறே வாகனத்தைத் தள்ளினார்.

சந்தோசப் பணத்திற்காக, தான் பட்ட கடன் அவரின் நெஞ்சில் நிறைந்து அவரை அழுத்தத் தொடங்கியது.

**2016 இல் தாயக ஒலியின் 25 ஆவது சிறப்புமலரில் இடம்பெற்ற கதை.**

# 11 எதிர் வீட்டுப்பெண்

மெல்லிய நீலவர்ணத்தில் பெயின்ற் அடிக்கப்பட்ட அந்த வீட்டின் மொட்டை மாடியில் துணிகளைத் துவைத்துக் காயப்போட்டுக் கொண்டிருந்தாள் கௌரி. சலவை இயந்திரத்துக்குள் போட்டு எடுக்கப்பட்ட உடைகள் என்பதால் அவற்றை சிரமப்பட்டு பிழிந்தெடுக்க வேண்டி இருக்கவில்லை.

மொட்டை மாடியின் மறுபக்கத்தில் பெரிய நட்சத்திர விடுதியின் லொபி போன்று அலங்கரிக்கப்பட்டு இருந்தது. செயற்கை முறையில் பசுமையூட்டப்பட்ட பூச்சாடிகள் சுற்றிவரவும் அலங்கரித்திருக்கவும், சீமெந்தால் அமைக்கப்பட்ட இருக்கையில் அமர்ந்தவாறு ஆங்கிலப் பத்திரிகையை வாசித்துக் கொண்டிருந்தான் நந்தன். பத்திரிகையில் நிலைகொண்டு இருந்த அவனுடைய கண்கள் அடிக்கடி அதனை விலத்திவிட்டு வீட்டிற்கு முன்பாக இருந்த பூந்தோட்டத்தில் விளையாடிய தன்னுடைய இரு பிள்ளைகள் மீதிலும் சென்றது.

பெரிய குரலில் சத்தம் இட்டவாறு மத்தியில் அமைக்கப்பட்டுக் காணப்பட்ட தூணைச் சுற்றி அவர்கள் ஒருவரை ஒருவர் துரத்தி விளையாடுவதைக் கண்டான். பிள்ளைகளுக்கு இன்பமாகப் பொழுது போவதற்குரிய அழகுகளை அவன் திட்டமிட்டுக் கட்டியதைப் பற்றிய பெருமை அவனிடத்தில் வந்தது.

அந்தத் தோட்டத்தை மட்டுமல்ல, அந்த வீட்டையும் முதன் முறையில் நோக்கும் யாவரும் ஒரு முறை உள்ளே நுழைந்து ஒவ்வொரு பகுதியாக இரசிப்பதற்கு ஆசைப்படுவார்கள். அந்த அளவிற்கு கலை நயத்தைக் குழைத்து எடுத்து அவ்வீடு கட்டப்பட்டது. ஒரு கலைஞனான கட்டடப் பொறியியலாளனின் கைவண்ணத்தில் எழுந்த பாரிய கட்டமைப்பு.

இரண்டு தட்டுக்களைக் கொண்ட அந்த மனையில் கீழே உள்ள வீட்டின் கிட்டத்தட்ட அரைப் பகுதி பரப்பளவில் மேல்மனையையும் மிகுதிப் பகுதியில் மொட்டை மாடியும் வருமாறு அமைத்திருந்தான் அவன். சீமெந்து மற்றும் செயற்கைப் பொருட்களால் மேல் மாடியில் அழகு மெருகூட்டப்படவும், இயற்கையான பூங்கன்றுகளால் வீட்டுத் தோட்டம் அழகு பெற்றிருந்தது.

காலையிலோ மாலையிலோ சூரிய ஒளியின் உக்கிரத்தை வீட்டுக்குள் எடுத்துச் செல்லாவண்ணம் வடக்குத் திசையினை நோக்கி வாசலைக் கொண்டதாக அவனுடைய மனை அமைந்திருந்தது. இளம் வர்ணங்கள் உள்ளுக்கும் வெளியிலும் பூசப்பட்டதால் வீட்டுக்குள் இருப்பவர்கள் வெப்பத்தை உணராத வண்ணம் சுவர்கள் இருந்தன. சுற்றிலும் வளர்க்கப்பட்டிருந்த மரங்கள் இல்லத்துக்குள் குளுமையையும் குதூகலத்தையும் கொண்டு வந்தன.

மேலைத்தேய கட்டடக் கலை முறைகளுக்கும் இந்துக்களின் வாஸ்து முறைகளுக்கும் வேறுபாடுகள் நிறைய இருக்கின்றன. வசதியைப் பார்த்து அமைக்கப்படும் முறைகளில் வாஸ்துக்களைக் கவனிக்க முடியாது. அதிலும் காணிகள் துண்டாக்கப்பட்டு ஒவ்வொரு பகுதிக்கும் விலை மிகவும் அதிகரித்துக் காணப்படும். இவ்வாறான பகுதிகளில் இதைப்போன்ற் கலையம்சமும் வீட்டு விஞ்ஞானமும் அதாவது வாஸ்துவும் ஒரு சேர அமைப்பது அத்தனை சுலபமானதல்ல.

ஒரு கட்டடக் கலை நிபுணனாக இருப்பினும் நந்தன் பழைமையைப் பேணுபவன். சாத்திரம் அறிந்தவர்கள் சொல்லும் விடயங்களை அவ்வளவு சீக்கிரத்தில் நிராகரிப்பது இல்லை. அதே வேளையில் எல்லா விடயத்தையும் சிந்திக்காமல் ஏற்றுக் கொள்ளுவதும் இல்லை. இவ்வாறு கவனித்துக் கட்டியவீடு என்பதால் இது பலரின் கவனத்தையும் கவரும் ஒரு அழகு நிறைந்த பகுதியாகவே தென்பட்டது.

எத்தனை கவனமாகப் பார்த்துக் கட்டினாலும் சிற்சில குறைகள் ஆங்காங்கு எட்டிப் பார்த்துவிடும். கடந்த மூன்று நாட்களாகத் தொடர்ந்து மழை பெய்ததனால் மாடிப் பகுதியில் நீரேந்து பகுதிக்கு ஊடாக நீர் ஒழுகுவது அவதானிக்கப்பட்டது. அன்றைக்குத் தெளிவான வானிலை காணப்படுவதால் அதைப் பார்த்து சீர் செய்யலாம் என்ற எண்ணத்துடன் கீழை இறங்கி வந்தான்.

தனியாகவளைவுஎடுத்துகுறைந்தஉயரத்தில்அமைக்கப்பட்டிருந்த அந்தப் படிகளினூடாக இறங்கி வருவது மிகவும் சுலபமாக இருந்தது. வேகமாக ஓடி வரும்போது, உடம்பும் குலுங்குவது போன்று இருந்தது.

பிடித்துக் கொள்ளாமல் ஓடி வந்ததில் சமநிலை குலையத் தொடங்கியது. கையிலே கொண்டு வந்த பை முன்னாலே விழவும் திடுக்கிட்டுக் கண்விழித்தான். பாதிப்பேர் நித்திரையில் இருக்கவும் பேருந்து வேகமாகச் சென்றது.

'ஓ... கனவு.... நான் உண்மை என்று நினைத்தேன் ......'

நித்திரையில் இருந்து விழித்துக் கொண்ட அவனுக்கு படிப்படியாக நினைவுகள் மனத்திரையில் தோன்றின. பல்கலைக் கழகத்தின் இறுதி ஆண்டுப் பரீட்சையைச் சிறப்பாக எழுதியிருப்பதால் இவ்வாறு கட்டடக்கலை நிபுணர் ஆகிவிட்டதைப் போல கனவு வந்திருக்கிறது என்று தோன்றியது.

தனக்கென ஒரு அழகான வீட்டைத் தன்னுடைய கனவு இல்லத்தை விரும்பியபடி அமைத்துக் கொள்ளவேண்டும் என்ற நீண்ட நாளைய ஆசையே கனவில் தோன்றிய மனை என்பது புரிந்ததும் சிறு கவலை எழுந்தது. இந்தக் கனவு வீட்டில் நித்திரை செய்ய ஆரம்பிக்கும்போது வந்திருக்கலாமே. அந்த வீட்டின் முழுப் பகுதியையும் சுற்றிப் பார்த்திருக்கலாமே! இந்தக் கனவுக்கு நேர காலமே தெரியவில்லை என்று கனவு தேவனைக் கடிந்து கொண்டான்.

கண்டனவற்றை நாளும் கனவில் கலங்கிடும் திண்டிறல் அல்லவா இது. அதற்குக் கனவு காணும் நேரம் என்று ஒதுக்க முடியுமா? யோசனையுடன் யன்னல் வழியாக வெளியில் நோக்கினான்.

தாங்கள் கடந்து கொண்டிருக்கும் பகுதி எது என்று அவனுக்குப் புரியவில்லை. காரணம் அவன் வழமையாகச் செல்லும் பாதையல்ல அது. பரீட்சை முடிவடைந்ததும் நண்பனின் வீட்டுக்குக்குச் சென்று விடுமுறையைக் கழித்துவிட்டு திரும்புகிறோம் என்பது நினைவுக்கு வந்தது.

ஊருக்குத் திரும்பிக் கொண்டிருந்த வேளையில் பல விடயங்களையும் மறுபடி நினைவுக்கு கொண்டு வந்தபோது நந்தனுக்குள் இனம் புரியாத சந்தோசம் எழுந்தது. தன் வாழ்வின் முக்கியமான திருப்பம் அந்த நாட்களில் வந்ததை நினைத்துக் கொண்டான்.

நண்பனின் பெற்றோரின் கவனிப்பும் அந்த ஊரின் அழகும் மட்டுமல்ல தன்னுடைய வாழ்க்கைத் துணையை அங்கு சந்தித்ததையும் நினைத்துப் பார்த்தான். தன்னுடைய எதிர்பார்ப்பிற்கு முற்றிலும் பொருத்தமானவளாக அழகு, அறிவு, குணம் எல்லாம் நிறைந்தவளாக கௌரியைச் சந்தித்ததில் அவனுக்கு சந்தோசமாக இருந்தது.

அதுவும் தன்னுடைய உற்ற நண்பனின் அருகாமையில் அவனுடன் மிகவும் நெருக்கமான குடும்பமாக இருந்ததால் வாய்ப்பாக இருந்தது. தனது பெற்றோரின் சம்மதத்தைப் பெறுவதில் எந்த சிரமமும் இருக்காது என நினைத்தான்.

காதல் என்றதுமே யோசனை இல்லாமலே பெற்றோர் எதிர்ப்பதற்குக் காரணம் இதுதான். அறியாதவர்களிடம் மாட்டிக் கொண்டு பிள்ளைகள் அவதிப்படக் கூடாதே என்று நினைக்கின்றார்கள். அவர்களுடைய நினைப்பில் பிழை இருப்பதாக அவனுக்குத் தோன்றவில்லை.

பழக்க வழக்கங்கள் ஏனைய தகுதிகள் என்பன ஓரளவு சரிக்குச் சமமாக இருக்க வேண்டும் என்று நினைக்கின்றார்கள். குடும்பங்கள் உறவைத் தாண்டி நட்பு என்ற ரீதியில் ஒன்றிணைய வேண்டும் என்பதை மனதிற் கொள்கின்றனர்.

இதனாலேயே சமமாகப் பந்தியில் உட்கார வேண்டியவர்கள் என்று பொருள்படும் வகையில் சம்பந்தி என்றும் மறுபகுதியின் உறவுகளை மச்சான், மச்சாள் என்றும் நட்புக்குச் சமமாகவே கருதிற் கொள்கின்றனர். திருமணம் என்பது மேலைத்தேயவனைப் பொறுத்தவரையில் இரு உடல்களின் சங்கமமாக இருக்கும்போது எம்மவர் அதை இரு குடும்பங்களின் இணைப்பாகக் காண்கின்றனர்.

இதனால் பெற்றோருடைய சம்மதத்துடன் தன்னுடைய விருப்பத்திற்கேற்ப பெண்ணைத் தேடிக் கொள்ள வேண்டும் என்று வெகு நாட்களுக்கு முன்பாகவே தீர்மானித்துக் கொண்டான். பல்கலைக்கழகத்தின் இறுதிப்பரீட்சை முடிவடைந்தபின் விடுமுறையைக் கழிப்பதற்கு நண்பனின் ஊருக்கு வந்ததனால் இப்படியொரு அரும்பேறு அவனுக்குக் கிடைத்தது.

கையடக்கத் தொலைபேசியில் வைத்திருந்த அவளின் படத்தை ஆவலுடன் பார்த்துக் கொண்டான். 'பொறுமையாக இருப்போம். எனக்கு வேலையும் கிடைத்து உன் படிப்பும் முடிந்து விட்டால் உடனடியாத் திருமணம்தான்' என்று மனதுக்குள் சொல்லிக் கொண்டான். தனது நெஞ்சில் போனை சாத்தியபடியே உறங்கினான்.

பல நாட்களுக்குப் பின்பாகத் திரும்பியபோது ஊரே வித்தியாசமாகக் காணப்பட்டது போல அவனுக்குத் தெரிந்தது. மழை பெய்து ஓய்ந்திருந்த அந்த இடமானது முற்றிலும் மாறுபட்ட ஒரு சுற்றாடலைக் காட்டியது.

மழையிலும் காற்றிலும் அலைக்கப்பட்டு உதிர்ந்த இலைகள் தெருவில் ஆங்காங்கே பரவிக் கிடந்தன. இலைகளை இழந்த பெரிய மரங்களைத் தவிர பற்றைகள் அனைத்தும் காடாகக் காட்சியளித்தன.

வீடு பாழடைந்து விட்டதைப் போல தெரிந்தது. வீட்டுக்கூரையில் காணப்பட்ட ஓட்டைகளுடன் தாக்குப் பிடிக்க முடியாமல் சுவரும் நிலமும் கறையாகிக் கிடந்தன. அவனால் பார்த்துக் கொண்டு இருக்க முடியவில்லை. உடனடியாக கூரையைப் பழுது பார்க்க எண்ணினான்.

அதற்குள்ளாக தந்தை தச்சன் ஒருவனை அழைத்து வந்துவிடவும் அவனும் சேர்ந்து மேலே ஏறி வேலையைத் தொடங்கினான். அடுத்த மழை ஆரம்பிப்பதற்கு முன்பாக அந்த வேலையை முடித்துவிட வேண்டும் என்று எண்ணினான்.

அவர்கள் வேலை செய்து முடித்தபோது இருட்டடையத் தொடங்கியது. மெதுவாக சாமான்களை எடுத்துக் கொண்டு கீழே இறங்கினர். தச்சனுக்குக் கூலி கொடுத்து அனுப்பிவிட்டு உள்ளே வந்தார் தந்தை.

அன்று இரவு ஆறுதலாக அமைதியாக இருந்து சாப்பிட முடிந்தது. நெடுநாட்களின் பினபு அன்னை, தந்தை, அண்ணன், தங்கையுடன் அமர்ந்திருந்து சாப்பிட்ட போது அவனுக்கு சந்தோசமாக இருந்தது. பல்கலைக்கழகப் படிப்பினால் மறைந்து போயிருந்த சந்தோசம் மறுபடியும் துளிர்விடுவதாகத் தெரிந்தது. அதைவிடவும் வேறு காரணமும் இருந்தது.

இரவு ஆறுதலாக அவளுடன் கதைக்கலாம் என்று நினைத்தது முடியாதுபோனது. வேலைகளை எல்லாம் முடித்துவிட்டு தொலைபேசியைப் பார்த்தபோது நேரம் பதினொரு மணியாவதைக் காட்டியது.

அந்த அகால வேளையில் அவளுடன் கதைப்பது சரியல்ல என்று யோசித்த அவன் போனை அணைத்துக் கொண்டு படுத்தான். நித்திரையில் கனவிலாவது அவள் வரவேண்டும் என்று நினைத்துக் கொண்டான்.

தொடர்ந்து வந்த நாட்கள் வெகு வேகமாகவே ஓடிக் கொண்டு இருந்தன. தந்தையாருக்கு உதவி செய்தல், அம்மாவுக்கு பலசரக்குச் சாமான்கள், மரக்கறிகள் வாங்கிக் கொடுத்தல், தங்கைக்கு பாதுகாவலனாக பாடசாலைக்கும் ரியூஷனுக்கும் ஏற்றிச் செல்லுதல் போன்ற வேலைகளில் அவனுடைய பொழுது போனது.

கௌரியுடன் இரகசியமான சம்பாஷணையும் தொடர்ந்தது. முக்கியமாக அவளுடைய விடயத்தில் பெற்றவர்கள் மறுத்துவிடலாகாது என்ற ஆசையினால் அவர்களுக்கு அடியாள் போன்றே நடந்தான். தன்னுடைய தொழிலைப் பற்றிய தேடலையும் மேற்கொண்டான்.

நான்கு மாதங்களின் பின்பாக ஒரு நாளில் சிறந்த பெறுபேற்றை அவனின் பெறுபேறாக பல்கலைக்கழகம் அறிவித்தது. வேலைக்கு விண்ணப்பிக்கும் இடங்களில் இறுதியாண்டு பெறுபேற்றைக் கேட்டவர்கள் அது கிடைத்ததும் வேலைக்கான நேர்முகத் தெரிவுக்கு அறிவித்தனர்.

தொடர்ந்து பயிற்சிகள், வழிநடத்தல்கள், வெளிநாட்டுப் பயணங்கள் என்று அவன் விரட்டுப்பட்ட போதும் அவளுடன் கதைப்பதை நிறுத்தவில்லை. சொல்லப் போனால் அவளை விரைவாகக் கைப்பற்ற வேண்டும் என்ற எண்ணமே அவனைப் பிரயாசைப்பட்டு முன்னேற வைத்தது. வேலையில் ஒரு குறித்த இடத்தைப் பிடித்துவிட்டான்.

அவனின் நண்பனும் வேலைக்காக கொழும்பிற்கு சென்றதால் அவனைப் பார்க்கும் சாக்கில் அவளைப் பார்க்கப் போவது முடியாததாக இருந்தது. இடையிடையே தொலைபேசியில் கதைத்துக் கொள்ளும் கதைகள் மட்டுமே அவர்களின் உறவைப் பேணி வளர்த்தன.

அவள் நல்லவிதமாகவே கல்வியைத் தொடருவதாக அறிவித்தாள். அவனுடைய வேலையும் தொடக்கத்தில் வெகுவாகக் கெடுபிடியாகப் போனாலுமே, இரண்டு வருடங்களுக்குப் பின்னால் மிகவும் ஒழுங்காகவும் ஒப்பமாகவும் போய்க் கொண்டிருந்தது.


படிப்படியாக அவனது வருமானம் அதிகரிக்கத் தொடங்கியது. தாங்கள் குடியிருந்த வீட்டுக்கு அருகாமையிலே இருந்த காணித் துண்டு ஒன்றை விலைக்கு வாங்கி ஒரு புது மாதிரியான வீடு ஒன்றை அழகாகக் கட்டினான். அவனுடைய பழைய வீட்டிலிருந்து புது வீட்டுக்குக் குடி வந்துவிட்டார்கள்.

புத்திரர்களுக்கு வழங்கும் கல்வி ஒரு போதும் வீணாவது இல்லை என்பது அவனின் பெற்றோரின் எண்ணமாகும். அதற்கு ஒத்துழைப்பது போலவே அவனுடைய நேர்மையான உழைப்பில் சடுதியாக அவனது குடும்பத்திற்குக் கிடைத்த வசதிகளைப் பார்த்து பலரும் அவனை மெச்சிவிட்டுச் சென்றனர்.

நல்லவனாகவும் பொறுப்பானவனாகவும் ஒரு இளைஞனைக் கண்டுவிட்டால், அவனை சொந்தக்காரன் ஆக்கிக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் பலரிடமும் எழுந்து விடுகின்றது. அவனுக்கு சம்பந்தம் பேசுவதற்காகப் பலரும் அவனுடைய வீடு நோக்கி வந்தனர்.

அவனுடைய தாய், தந்தையருக்கு அளவு கடந்த பூரிப்பு. தங்கள் எதிர்காலம் மிகவும் ஒளியுடன் இருக்கப் போகின்றது என்று சந்தோசம் கொண்டார்கள். அவர்களை உறவு என்றே காட்டிக் கொள்ளாத உறவினர்கள் தானும் அவர்களின் பெருமையைப் பேசி சம்பந்தம் கேட்டு வந்துநின்றனர்.

அண்ணாவின் திருமணம் ஓரளவுக்கு சிறப்பாக நடந்தேறிய பின்பு அவனுடைய திருமணம் பற்றிய நச்சரிப்பு வெகுவாகவே எழுந்தது. அவனுடைய திருமணத்தை விரைவாக முடித்துவிட பெற்றோர் ஆசைப்பட்டார்கள்.



இந்த விடயம் அவனின் கவனத்திற்கு வந்தபோது அவன் திகைத்துவிட்டான். தான் ஏற்கெனவே ஒருத்தியை விரும்பும் விடயத்தைத் தெரிந்து கொள்ளாமல் அவரவர் தன் பாட்டிற்குக் கதைக்கிறார்களே என்று யோசித்தான். ஆனால் அவளின் குடும்பத்தை நேரடியாக அணுகுவதும் முடியாத காரியம் என்றே விளங்கியது.

இதிலே உதவி செய்யக்கூடியவன் நண்பனே என்ற யோசனை வந்ததும் அவனைத் தொடர்பு கொள்ள முனைந்தான். கொழும்பில் வேலை செய்து கொண்டிருந்த அவன் சிங்கப்பூருக்குச் சென்றுவிட்டதால் சிரமப்பட்டே அவனின் தொடர்பைப் பெற்றுக் கொளள்ள முடிந்தது.

நண்பனின் குரலைத் தெரிந்து கொண்ட அவன் மிகுந்த மகிழ்ச்சியடைந்தான். அவனின் சுகநலம் பற்றியும் வேலை பற்றியும் விசாரித்தான். ஆறுதலாகவே அவர்களின் கதை தங்களையும் கடந்து தங்களுடன் படித்தவர்களை அலசும் அளவிற்குச் சென்றது. இறுதியாக நண்பனே சொன்னான்.

"மச்சான் உன்ன நினைக்கிறபோது சந்தோசமா இருக்கு. இலங்கையிலயே இருந்து கொண்டு இவ்வளவு நல்லா உழச்சு வீடு, வாசல் எல்லாம் தேடியிருக்கிறாய். நீ உண்மையிலயே கெட்டிக்காரன்தான். நீ எப்ப கல்யாணம் செய்யப் போறாய்? " என்று கேட்டான். தான் எதிர்பார்த்த வேளை நெருங்கிவிட்டதைப் போல அவனுக்கு இருந்தது. ஹாஸ்யமாகவே பேச்சைத் தொடக்கினான்.

"அதுதான் மச்சானிட்டப் பொம்பிள கேக்க வெண்டுமெண்டு எடுத்தனான்" என்றான் சிரிப்புடன்.

"நீ மச்சானா வருறது எனக்கும் விருப்பம். ஆனா உனக்குக் குடுக்க முடியுறதா எனக்குத் தங்கச்சி இல்லையே. நான் தனிப்பிள்ளயாப் போயிட்டனே" என்று பாவத்துடன் கூறினான்.

"ஏன் தங்கச்சி எண்டு பழகின ஆரும் இருந்தாலும் தரலாந்தானே மச்சான்?" என்று கேட்டான்.

"அப்பிடியும் எதுவும் குடுத்து வைக்கேல்லயே.." என்று அவன் இழுக்கவும்,

"ஏன் உங்கட வீட்டுக்குப் பக்கத்தில இருக்கிறாள் கௌரி. அவ உனக்குத் தங்கச்சி மாதிரித்தானே...." என்று முடிப்பதற்கு முன்பாகவே அவசரமாக நண்பன் ஏதோ சொன்னதும் அதற்குப் பிறகு தொலைபேசி அழைப்பில் ஏற்பட்ட நெரிசல் காரணமாக அழைப்புத் துண்டிக்கப்பட்டதும் தெரிந்தது.

சிறிது நேரத்தின் பின் நந்தன் முற்றுமுழுதாக சோர்ந்து விட்டான். எத்தனை ஆசைகளுடன் கனவுகளுடன் கட்டி வைத்த கோட்டை இடிந்து விழுந்ததைப் போன்று இருந்தது.

அழகான வீடு, அன்பான மனைவி, ஆசைக்கொன்று ஆஸ்திக்கு ஒன்றாக இரு குழந்தைகள் என்ற கற்பனையிலே வாழ்ந்த அவனுக்கு, கண்களைக் கட்டிவிட்டதைப் போன்று இருந்தது. அதுவும் அவனின் உற்ற நண்பனிடம் இருந்து வந்ததைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

என்ன உலகம் இது பழகும்போது எதையும் கருதாமற் பழகுகின்றார்கள். திருமணம் என்று வரும்போது தேவையில்லாத எல்லாவற்றையும் கொண்டு வருகிறார்கள், மனப் பொருத்தம் ஒன்றைத் தவிர. திருமணத்திற்கு ஆயிரம் பொருத்தத்தைப் பார்க்கிறார்கள். அவரவர்களுக்குப் பிடித்திருக்கிறதா என்று பார்ப்பதில்லையே.

பெற்றோர்கள் விடயத்தை விட்டுவிடலாம். ஆனால் நண்பனால் புரிந்து கொள்ளமுடியாமல் அல்லவா என்னுடைய காதல் போய்விட்டது என்று கதற வேண்டும் போல இருந்தது. ஓர் ஆண்மகன், கல்வி மான் என்பதையும் மறந்து கண்ணீர் சிந்தலானான்.

இரவு வெகு நேரமாக நித்திரையின்றி உழன்றவனுக்கு வாழ்க்கையே இருளாகத் தெரிந்தது. எத்தனை கற்றிருந்தும் அன்னை, தந்தையரை எதிர்க்கவோ புண்படுத்தவோ கூடாது என்று நினைத்தவனுக்கு வந்த சோதனையை அவனால் சீரணிக்க முடியவில்லை.

காதலுக்கு எதிர்ப்பு வரும் என்பதைத் தெரிந்து கொள்ளாதவன் அல்ல அவன். அதற்காகவே படிப்பிலும் உழைப்பிலும் எந்தவித குறையும் இன்றிச் செய்து பெற்றோரை மகிழ்வித்து, அவர்களால் நிச்சயமாக ஏற்றுக் கொள்ளப்படும் என்ற நினைத்த ஒரு இடத்தில் மனதைச் செலுத்தினான். ஆனால் அதுவும் அவனுக்குச் சாதகமாகவில்லை

உற்ற நண்பனின் கதையே நாராசமாக அல்லவா அவனின் காதில் விழுந்தது. அன்று அழைப்பில் இடையூறு ஏற்பட்டதால் இடைநிறுத்திய நண்பன் ஒரு மணி நேரத்தின் பின்னதாக அவனாகவே எடுத்தான். அவனுடைய கதையில் நட்புத்தனம் இருந்ததாக நந்தனுக்குத் தோன்றவில்லை. தன்னுடைய காதலுக்கு வந்த எதிரி போலவே அவனுடைய பேச்சு இருந்தது.

“மச்சான் நீ வடிவா யோசிச்சுத்தான் கதைச்சியா. நீ விரும்பின பெட்டை யார் கௌரியா? அவளின்ர சாதியென்ன? எங்கட சாதியென்ன. அந்தச் சனத்தில போய் நாங்க கல்யாணம் கட்டினா ஆரும் எங்கள வீட்டுக்கு எடுப்பாங்களா?” என்று கேட்டான் அவன்.

நண்பனுக்குத் தூக்கிவாரிப் போட்டது. அப்படியொரு விடயத்தை அவன் எதிர்பார்க்கவே இல்லை. நண்பனின் வீட்டுக்கு எதிர் வீடு அவளுடையது. அந்த இரு வீட்டுக்காரரும் சகஜமாகவே பழகிக் கொண்டனர். அவர்களுக்குள் இப்படியான சாதிப் பிரச்சினையை அவன் எதிர்பார்க்கவேயில்லை.

அவனின் மௌனத்தைக் கவனித்த நண்பன், “நாங்க பழகுறத வச்சு எதுவும் யோசிச்சியா மச்சான். எதிர் வீட்டில இருக்கிறவங்க. ஆத்திர அவசரத்துக்கு ஓடிவாறவங்க எண்டதுனால சகஜமாப் பழகினம் அவ்வளவுதான்” என்றான்.

“அந்த கௌரிய உங்கட அம்மா சொந்த மகளப் போல பாத்தா. அவளோட சமையற் கட்டுல வச்சுத் தனியாக் கதைச்சுக் கொண்டிருந்தா. அவளுக்கு உடுப்புக்கூட எடுத்துக் குடுத்தாவே?” என்று சந்தேகத்துடன் கேட்டு நிறுத்தினான்.

“அம்மாவுக்கு பொம்பிளப் பிள்ளகள் எண்டா உயிர். அவளுக்கும் அம்மாவில சரியான விருப்பம். நான் வீட்டில இல்லாத நேரத்தில ஆம்பிளப் பிள்ளைக்குப் பிள்ளையா பொம்பிளப் பிள்ளைக்குப் பிள்ளையா அவள்தான் எல்லாமே செய்து குடுக்கிறவள். அந்த விருப்பத்துக்காக அம்மா அவள நல்லாப் பாத்தவ. ஆனா அதுக்காக அங்க சம்பந்தம் வைக்க யாரும் ஒத்துக் கொள்ளுவாங்களா இல்லையே?” என்றான்.

குழப்பமும் கவலையுமாக இருந்த நந்தனிடம் இருந்து வார்த்தைகள் வரவில்லை. அவனுடைய நிலையை நண்பன் புரிந்து கொண்டான். தன்னுடைய குரலை சற்று தளர்த்தினான்.

“சரி விடு மச்சான். எங்களோட பழகுறதினால உனக்கு அவளில மதிப்பு வந்திருக்கு. அதினால பிரச்சினை இல்ல. அவள் நல்ல பிள்ள. ஆனா கல்யாணத்துக்கு சரிவராது. எங்கட சனம் இந்த சாதி சம்பிரதாயம் எல்லாம் கடுமையாப் பாக்கும்.

அது மட்டுமில்ல இதில் எனக்கும் ஏதாவது சம்பந்தம் இருக்கோ எண்டும் எங்கட சனம் யோசிக்கும். அதனால இந்தக் கதையை மறந்திரு. யாரிட்டயும் கதைக்காத என்ன” என்று கேட்டபடி தனது சிங்கப்பூர் வாழ்க்கை பற்றித் தொடர்ந்தான் அவன்.

நண்பனின் கதை எதுவுமே அவனுக்கு மண்டையில் ஏறவில்லை. தனக்கு வந்திருந்த தர்ம சங்கடமான நிலையை யோசித்துப் பார்த்தான்.

எங்கள் பகுதிகளில் வேறு சாதிக்காரர் அருகருகாக வாழ்வதில்லை. ஆனால் அவனின் இடத்தில் தெருவின் ஒரு பக்கத்திற்கு ஒரு சாதியினரும் மறு புறத்தில் வேறு சாதியினரும் இருக்கின்றனராம். அவர்களோடு பழகாத புதியவர் எப்படி அவர்களை இனம் காண்பது?

தான் பார்த்திருந்த வேளைகளில் உறவினருக்கு மேலாகவே அவர்கள் பழகுவதை அவதானித்திருந்தான் அவன். அவர்கள் உறவினரா என்று கேட்டபோது இல்லை என்று சொன்னார்களே தவிர சாதி குறைவு என்று எதுவும் சொல்லவில்லை.

தன் மனதைப் அவளிடம் வெளிப்படுத்துவதற்கு முன்பாகவே அவளின் மேலே நண்பனுக்கு விருப்பம் இருக்கிறதா என்று கேட்டபோதும் சகோதரம் மாதிரிப் பழகுவதாகச் சொன்னானே தவிர இந்தப் பிரச்சினையைச் சொல்லவில்லை. இன்று திருமணப் பேச்சை எடுக்கும்போது அல்லவா இப்படியெல்லாம் கதைக்கிறார்கள் என்று நினைத்தபோது அவனுக்குக் கவலையாக இருந்தது.

அவளாவது இந்த விடயத்தை சொல்லியிருக்கலாமே என்று யோசித்தான். அவள் வஞ்சகமாக நடந்திருப்பாளோ என்றும் அவனுடைய மனது எண்ணியது.

ஆனால் அவளால் முடியாது. காதலைச் சொல்லும்போது இதையெல்லாம் கேட்டுவிட்டா நான் சொன்னேன். அது மட்டுமல்ல நண்பனின் மூலமாக அவற்றை எல்லாம் தெரிந்து கொண்டுதான் விரும்புகிறேன் என்றல்லவா நினைத்திருப்பாள் அவள்.

பெண்ணின் சாதியைப் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை. ஆண்மகனுக்கு சாதி முக்கியம் என்ற கருத்தும் எம்மவரிடையே அடிபடுகின்றதல்லவா? அல்லது மகளைப் போல அவர்கள் நடத்துவதால் தன்னிடம் இந்த வேறுபாட்டைப் பார்க்க மாட்டார்கள் என்றும் அந்தப் பெண் நினைத்திருப்பாள்.

எப்படியோ அந்த விடயத்தில் தன்னுடைய பிழை முழுப்படியாக இருக்கின்றது என்பதை அவன் புரிந்து கொண்டான். ஆனால் இந்த விடயத்தில் இருந்து யாருக்கும் சிக்கல் இல்லாமல் மீள்வது எப்படி என்பதோ அவனுக்குப் புரியவில்லை.

பெற்றோர், உற்றார், தன்னுடைய நண்பர்கள் சேர்ந்த சந்தோசமான வாழ்க்கை ஒரு புறமும் அவளும் தானும் மட்டும் தனித்திருக்கும் வாழ்க்கை மறுபுறமும் தோன்றி அவனை சஞ்சலப் படுத்தியது. நண்பன் தானும் தன்னுடன் உறவை முறித்துக் கொள்வான் என்பதில் அவனுக்கு வருத்தமாக இருந்தது.

சாதி வேறுபாடுகளைப் பற்றி அவனுடைய காலத்தில் அதிகமாகத் தெரிந்து கொள்ளவில்லை ஆயினும் திருமண பந்தத்தை அவர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பதைத் தெளிவாகவே தெரிந்து வைத்திருந்தான் அவன்.

மேற்கொண்டு தன்னுடைய வாழ்வை எப்படித் திட்டமிடுவது என்று யோசிக்க முடியவில்லை. தன் காதலுக்கு அங்கீகாரம் கிடைக்கப் போவதில்லை என்பதை நன்றாகவே புரிந்துகொண்டவன் தலையணையில் முகம் புதைத்து அழத் தொடங்கினான்.

# 12 வேலைக்காரி

அவனின் வாயில் இருந்து வெளிப்பட்ட அந்த வார்த்தைகள் அவளின் காதுக்குள் தேனாகப் பாய்ந்தபோது அவளின் மனதுக்குள் ஆயிரம் பட்டாம் பூச்சிகள் சிறகடித்துப் பறக்கத் தொடங்கின. அவன் விடைபெற்றதையும் உணர்ந்து கொள்ள முடியாதவளாய் ஓடிச் சென்ற தன்னுடைய எண்ண அலைகளைத் தொடர்ந்து அவளும் பறக்கலானாள்.

மங்கலமாக அலங்கரிக்கப்பட்ட திருமண ஊர்தியில் மாப்பிள்ளையும் மாப்பிள்ளைத் தோழனும் அழைத்து வரப்படுகின்றனர். மண்டப வாசலில் வைத்து இரு சுமங்கலிப் பெண்கள் ஆரத்தி எடுத்து அவர்களை உள்ளே அழைத்து வருகின்றனர்.

மேல்மாடியில்சாளரத்தின்வழியாகபார்த்துக்கொண்டிருந்தவளுக்கு ஒரே குதூகலமாக இருந்தது. சிறிது நேரத்தின் பின் தன்னை அழைத்துச் செல்வார்கள் என்ற எண்ணம் வரவும் தன்னைத் திருத்திக் கொள்வதற்காக கண்ணாடியின் அருகாமையில் வந்தாள்.

“எல்லாம் சரியாத்தான் இருக்கு. சந்தேகமா” என்றபடியே அருகே வந்த நண்பியின் முகத்தில் குறும்பு தெரிகின்றது. சிரித்தபடியே அவளின் முந்தானையின் மடிப்புக்களை மறுபடியும் திருத்தமாக இழுத்துவிட்டு அவளை வெளியில் அழைத்துச் செல்கின்றார்கள்.

கண்ணை மூடித் திறப்பதற்குள் திருமணச் சடங்குகள் முடிந்து விடுகின்றன. வந்திருக்கும் விருந்தினர்கள் அவர்களுக்கு அருகாமையிற் சென்று தங்களின் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றார்கள். தன்னுடைய உறவினர்களை அவன் அறிமுகப்படுத்திக் கொண்டபோது அவளும் அழகாகப் புன்முறுவல் பூக்கின்றாள்.


அப்பப்பா எத்தனை உறவுக்காரக்கள் அவருக்கு என்று வியந்து போகின்றாள். அத்தனை பேரும் இனி அவளுக்கும் உறவு ஆவார்கள் என்று அவளின் மனம் சொல்லியது. அவர்களை விடவும் அறிந்தவர்கள், தெரிந்தவர்கள், நண்பர்கள் என்று ஒரு வரிசை அன்று அவர்களை நோக்கி வந்தது.

தங்களின் உறவுகள் என்றும் ஒரு சிலர் வந்திருந்தார்கள். அவர்களையும் மறக்காமல் அவர்கள் அன்று அழைத்திருந்தார்கள். புன்முறுவலுடன் அவர்களை வரவேற்றபடி ஓரிரு வார்த்தைகள் பேசிக் கொண்டாள். அவளின் அன்னை வேலைசெய்யும் வீட்டின் எஜமானியம்மா அப்போது வந்தாள்.

மனத்திரையில் எஜமானியம்மாவைப் பார்த்தபோதே திடீரென்று அவளது கற்பனை குலைக்கப்பட்டதைப் போன்று இருந்தது. பறக்கும் சிறகுகள் வெட்டப்பட்டதைப் போல அவளுக்கு வலித்தது.

‘நீ ஒரு வேலைக்காரி...’ என்றவாறு அவர்களின் கேலிப்பார்வை அவளை நோக்கி வீசப்படுவதைப் போன்று இருந்தது. ‘உன்னால் உந்த சுகபோகங்களையெல்லாம் அனுபவிக்க முடியாது’ என்று அவளின் உதடு அசைவது தெரிந்தது.

அவளின் கற்பனை அதைத் தாண்டிச் செல்லவில்லை. தன்னுடைய உண்மையான வாழ்க்கைக்குத் திரும்பிவிட்டது. எல்லோரையும் போலவே அவளுக்கும் ஒரு திருமண நாள். ஏழ்மையிலும் ஏதோ சந்தோஷமாக மனம் நிறையப்போகும் அந்த நாள் வருவதை எண்ணியபோது இருந்த சந்தோசம் துடைத்துவிடப்பட்டது.



தன்னைச்சுற்றி இருந்தவை அனைத்தும் மறைந்து வெறுமையானது. தன்னுடைய ஏழ்மை தன்னைப் பார்த்துச் சிரிப்பதைப் போன்று இருந்தது. சுமார் இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்கு முன்பாக வீட்டு வேலைக்குச் சென்று திரும்பிய தனது அன்னை சொல்லிய கதை அவளுக்கு நினைவுக்கு வந்தது.

வீட்டிற்கு வெளிப்புறத்தை மறுநாளில் சுத்தமாக்கச் சொல்லி அவளது எஜமானி சொல்லியிருக்கின்றாள். ஆண் ஒருவரைக் கூலிக்குப் பிடிப்பதானால் இரண்டு மடங்கு சம்பளம் தரவேண்டியிருப்பதால் அவளைக் கொண்டு வேலை செய்விப்பது இலாபம் என்று அவள் சொன்னாளாம்.

வெளிவேலைகளைப் பார்ப்பதற்கு அப்பாவை அழைத்துச் செல்லலாம் என்ற எண்ணம் அம்மாவுக்கு இருந்திருக்கிறது. அவரை வேலைக்குப் போகச் சொல்லி முதல்நாள் அப்பாவிடம் அம்மா சொல்லியது அவளுக்கு நினைவுக்கு வந்தது.

அதற்குப் பிறகு அந்த வீட்டில் எழுந்த போராட்டத்தை அவளால் என்றைக்குமே மறக்கமுடியாது.

"நான் என்ன கூலிக்காரனா?. நான் பெக்டறியில வேலை செய்த நான். பரந்தன் பெக்டறிய இழுத்து மூடினதாலதான் எனக்கு வேலையில்லாமப் போச்சு. என்னப்போய் அடுத்தவன்ர வளவு துப்பரவாக்கச் சொல்லுறியா" என்று அப்பா கொதிக்கத் தொடங்கி விட்டார்.

"நான் மட்டும் என்ன தாழ்ந்த குலத்தில பிறந்தவளா?. அடுத்த வீட்டில வேல செய்து அவனிவனிட்ட சாப்பாட்ட எதிர்பாத்துக் கிடந்தனானா? இப்ப எங்கட நிலம அப்பிடி. எப்பவோ நல்ல இருந்தம் எண்டு சொல்லி இப்ப சும்மா இருந்தா எங்களுக்கு யார் சாப்பிடத் தருவாங்க? எங்களுக்காக நாங்க வேலசெய்யத்தானே வேணும்" என்று அம்மா தன்னுடைய நியாயத்தைச் சொன்னார்.

அப்பாவை வேலைக்குப் போகச் சொல்லியும், கையில காசு இல்லாதபோதும் துன்பப்படும் அநேக தருணங்களிலும் தினம் தினம் அவர்களிடம் எழும் பிரச்சினைதான் அது. இருந்தாலும் அன்றைய நிலைமை அவளுக்குள் பலதையும் பற்றி சிந்திக்கவைத்தது.

“நீ போவாயடி நீ போவாய். அவங்க கக்கூசக் கழுவச் சொன்னாலும் கழுவிட்டு வருவே. நான் அப்பிடியில்ல. நான் ஒரு தொழில் செய்தனான். தொழிலுக்கு உரிய மரியாதயும் எனக்குரிய மரியாதையும் தராதவிடத்தில ஒரு நாளும் போய் நிக்கமாட்டன்” என்று சொல்லிவிட்டார். அதற்குப் பிற்பாடும் அவர்களின் தர்க்கம் தொடருவதை அவளால் கேட்க முடிந்தது.

அந்த நிலைமைக்காக யாரைக் குற்றம் கூறுவது என்பதை அவளால் தீர்மானிக்க முடியவில்லை. எல்லோரையும் போலவே முப்பது வருடங்களாகத் தொடர்ந்த போரிலேயே பழியைப் போட்டுவிடத் தோன்றியது.

போரை விடவும் அதற்கு சில காரணங்களை அவளால் யோசிக்க முடிந்தது. எமது சமுதாயத்திலே ஆண்பிள்ளைகளையும் பெண்பிள்ளைகளையும் வளர்த்தெடுக்கும் முறை வித்தியாசமானதுதான். பெற்றோருடன் வாழும் காலத்திலேயே ஆண் பிள்ளைகளுக்கு அதிக சுதந்திரமும் வசதிகளும் பெண் பிள்ளைகளுக்கு கஸ்டத்தையும் மட்டும் கொடுத்து வளர்த்துவிட்டனர்.

ஆண் பிள்ளைகளுக்கென விசேடமாகக் கறிவகைகளைச் செய்து கொடுக்கும் அம்மாமார் பெண்பிள்ளைகளுக்கு பழைய சோற்றைக் கொடுத்துத் தங்களும் உண்டுவிட்டு உறங்கிக் கொள்ளும் வழக்கம் இப்பொழுதும் காணப்படுகிறது. வீட்டுக்காக முழுமையாக உழைத்தும் தங்களுக்கென எதையும் வைத்துக் கொள்ளாமல் விடுவதுடன், தங்கள் உழைப்பையும் கணக்கில் வைக்காமல் பூமியில் இருந்து விடைபெற்றுக் கொள்ளும் பெண்கள் எத்தனைபேர்.

பெண்பிள்ளைகளின் பாதுகாப்பு என்று சொல்லி அவர்களைக் கூண்டுக்குள் வைத்துவிட்டு உலகம் தெரியாமல் வளர்த்தெடுப்பவர் எத்தனைபேர். அப்படி வளர்த்டுெக்கும் பெண்பிள்ளைகளையும் நாசப்படுத்துபவர்கள் யார்?. யாரோவா? எங்கள் சமுதாயத்தில் இருக்கும் ஆண்கள் தானே.

தொழில் விடயத்தில் இதுதான் என்ற கடப்பாட்டைக் கடைப்பிடிக்கும் ஆண்கள், தாங்கள் வளர்த்தெடுக்கப்படும் முறைகளால் எந்த வேலையும் செய்து கொள்ள முடியும் என்ற மனநிலையை வளர்த்துக் கொள்வதில்லை. இதனால், எந்த ஒரு சூழ்நிலையையும் தாங்கிக் கொள்ள அவர்களால் இயல்வதிலலை.

அப்பா ஒரு தொழிலாளியாக நன்றாக இருந்தார் என்று தன்னுடைய அன்னையும் மற்றவர்களும் சொல்லி அவள் கேள்விப் பட்டிருக்கிறாள். அவர்கள் வாழ்ந்த வீடும் ஓரளவு வசதியான பெரிய வீடுதான். அண்மையில் அன்னையுடன் சென்று அந்த வீட்டின் இடிபாடுகளைப் பார்த்து வந்தபோது அவளுக்குப் புரிந்தது.

இந்த யுத்தமும் இடம்பெயர்வும் அவர்களைப் படுகுழியிற் தள்ளியதை யாரும் மறக்கவில்லை. இடம்பெயர்வின்போது, தன்னுடைய நகை முதற்கொண்டு அனைத்தையும் விட்டுவிட்டுக் கைக்குழந்தையாகத் தன்னைத் தூக்கிவந்ததை அம்மா பலமுறை சொல்லி அழுதிருக்கிறார்.

ஒருவன் தன்னுடைய வாழ்நாளில் நன்றாக உழைக்கக்கூடிய வயதில் அரும்பாடுபட்டுத் தேடிக் கொள்ளும் அனைத்தையும் ஒரு இரவில் தொலைத்துவிட்டு வருவது என்பது எத்தனை கொடுமையானது. அதுவும் வேலைவாய்ப்பை வழங்க முடியாத மூன்றாம் தரமான இந்த நாட்டில் வாழும் ஒருவனுடைய நிலைமை எவ்வாறானது.

இந்த இடம்பெயர்வில் பார்த்த உறவுக்காரர்களின் ஒவ்வொரு வரினது அகங்களின் முகங்களை எதிர்கொண்டபோது ஏற்பட்ட ஏமாற்றங்களும் அனுபவங்களும் ஐயோ.... என்னென்னவோ சொல்லி அனைத்தையும் தொலைத்துக் கொண்டவனின் நிலை என்ன?. 'நாம் ஒரு காலத்தில் நன்றாக இருந்தோம்' என்ற பேச்சுடனேயே வாழ்க்கையைக் கழித்துவிட வேண்டியதுதானா?' என்று நினைக்கும்போது அவளுக்குப் பயங்கரமாகக் கோபம் வந்தது.

யுத்தம் தமிழ்ப் பெண்களுக்குத் தந்த பெயர் 'வேலைக்காரி'. ஆமாம் பெண்கள் எதையும் பார்ப்பதில்லை. தங்களுடைய குடும்பம் வாழவேண்டும் என்பதற்காக அடுத்தவர்கள் வீட்டில் அடிமையாக வேலைசெய்வதை அவர்கள் கேவலமாக நினைப்பதில்லை. அந்த எண்ணமே அவளின் அன்னைக்கும் இருந்தது.

எங்கள் சமுதாயத்தில் ஆண் கூலியைவிடவும் பெண்கூலி மிகவும் குறைவாக இருப்பதால் பெண்களை வேலைக்குச் சேர்ப்பதற்கு யாரும் முன்வருவர். அதிலும் தோட்ட வேலைகளிலும் ஒரே விதமாக வேலை வாங்கப்பட்டு பெண்களுக்குப் பாதி கூலியே வழங்கப்படுகின்றது. இதனால் ஒப்பீட்டளவில் பெண்களுக்குரிய வேலை வாய்ப்பு ஓரளவு அதிகமாகவே இருக்கிறது.

அதனால் அம்மா எதுவும் யோசித்துக் கொண்டிருக்காமல் தனக்குத் தெரிந்த ஒருவர் மூலம் கேட்டுக் கொண்டு அந்த வீட்டுக்கு வேலைக்குப் போய்விட்டாள். அவளின் உழைப்பாலே அந்தப் பெண்ணின் வாழ்வு ஓரளவாவது சுமூகமாக இருக்கின்றது.

அந்த வீட்டுக்கார அம்மா பெரிய மோசமான பெண் அல்லள். பேசிக் கொண்ட சம்பளத்தை காலம் தவறாமல் வழங்கிவிடுவாள். தானும் மகளும் போட்டுக் கழித்த உடைகளைக் கொடுப்பாள். வருடம், தீபாவளி வந்தால் ஏதும் அதிகப்படியாகக் கொடுப்பாள். இதனால் பெரிதாக அலட்டிக் கொள்ளாமலே அவர்களது வாழ்க்கை கடந்து போனது.

சொல்லப்போனால் அந்த அம்மையார் அவர்களுக்கு ஓரளவு துாரத்தில் உறவு முறையானவரே. ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள். தாங்கள் நன்றாக வாழ்ந்ததைத் தெரிந்து கொண்டவர்கள். இருப்பினும் அவர்களைத் தெரிந்தவர்கள் போன்று காட்டிக் கொள்வதில்லை.

அம்மா வேலைசெய்யும் வீட்டிற்கு அவளோ அப்பாவோ சென்றது கிடையாது. அப்படியொரு தொடர்பை அந்த வீட்டுக்கார அம்மா விரும்பியதும் கிடையாது. இதனால் அவர்களின் வீட்டுவிடயங்கள் அம்மா சொன்னால் மட்டுமே தெரியவரும்.

"என்ன சொன்னாலும் சொல்லு. நான் போகமாட்டன். நீ வேணுமெண்டாப் போய் தொழுங்கு செய்து கிட" என்ற அப்பாவின் வார்த்தைகள் அவளை நினைவுகளில் இருந்து மீட்டுவந்தன. தொடர்ந்து கதவைச் சாத்திவிட்டு அப்பா வெளியில் செல்லும் சத்தமும் கேட்டது.

வேறு வழியில்லாமல் அடுத்த நாள் அவர்கள் சொன்ன வேலையை அம்மாவே செய்து முடித்தாள். அன்று முழுவதும் வெயிலில் வேலை செய்து கொண்டிருந்ததால் அம்மாவுக்குக் காய்ச்சல் வந்துவிட்டது. இரவு முழுவதும் நித்திரையில்லாமல் முனகிக் கொண்டு கிடந்தாள்.

தானாக விழித்துக் கொண்டபோது திடுக்கிட்டு அன்னையைப் பார்த்தாள் அவள். இன்னும் நித்திரையாகவே இருந்தாள். அருகில் சென்று தொட்டபேது உடம்பு அனலாகக் கொதித்தது. அவளின் பரிசம் பட்டதும் அம்மா திடுக்கிட்டு எழுந்தாள்.

“நேரம் போயிட்டுதே. வேலைக்குப் போகோணும்” என்றபடி எழும்பிய அவளுக்குக் கடினமாக இருந்தது. அம்மாவைப் பார்க்க அவளுக்குப் பாபமாக இருந்தது.

“நீ படு அம்மா. நான் இண்டைக்கு போறன்” என்று அவள் சொன்னாள். வேறு வழியில்லாமல் அம்மா ஒத்துக்கொள்ளவும் அன்றைக்கு வேலைக்கு அவள் போனாள். அந்த வீட்டுக்கார அம்மாவிடம் அவதானமாகவே நடக்கும்படி அம்மா சொல்லியனுப்பினார். யாரோ புதுப்பெண்ணைக் கண்டதும் ஏற இறங்கப் பார்த்தாள் இந்த வீட்டுக்காரி. அவள் பார்வையைப் புரிந்து கொண்ட அவள்,

“அம்மாவுக்கு உடம்பு சரியில்ல. அதுதான் வேலைக்கு நான் வந்தன். அவவின்ர மகள்” என்று சொன்னபோது மறுபடியும் அவரின் வியப்பு மாறவில்லை.

“இப்பிடி வெளிக்கிட்டு வந்திருக்கிறியே. உனக்கு வீட்டு வேலை செய்யத் தெரியுமா?” என்றபடி வாயைத் திறந்தார்.

அவளுக்கு என்னவோ போல இருந்தது. பொதுவாகவே அழகி அவள். எப்பொழுதும் சுத்தமாக திருத்தமாக இருப்பவள். அவள் அப்படி இருப்பது அத்தனை பொருத்தமானது அல்ல என்பதைப்போல அவர் சொன்னபோது அவளுக்குச் சற்றுக் கவலையாக இருந்தது. இளம்பிள்ளைகள் சுத்தமாக அழகாக இருப்பது நல்லதுதானே என்று தனக்குள் சொல்லிக் கொண்டாள்.

முகத்தைச் சுழித்துவிட்டு உள்ளே வரச் சொன்ன அவர், ஏதோ வியாதி பிடித்தவர்களை ஒதுக்குவது போலவே நடத்தினார். சிறிது நேரமும் மிச்சம் விடாமல் வேலை சொல்லிக் கொண்டார். அவளுக்குப் பழக்கம் இல்லாததாக இருந்தாலும் அம்மா சொல்லியதை நினைவுபடுத்திக் கொண்டு அவளும் சலிக்காமல் வேலைசெய்தாள்.

“உன்ர அம்மாவுக்குச் சொன்னான் பட்டப்பகலில வெய்யிலில நிக்கவேணாம் எண்டு. அவ அதக் கேக்காமத் தனக்கு ஒண்டும் வராது எண்டு சொல்லிக் கொண்டு நிண்டவ. பாத்தியா இப்ப எனக்கு இண்டைக்கு எனக்குக் கரைச்சலாப் போச்சு” என்று சலித்துக்கொண்டார்.

'வேல செய்யத்தானே நான் வந்திருக்கிறன்' என்று சொல்லுவதற்கு அவளுக்கு வாய் வந்தது. அவரின் சுடுசொற்களால் ஏதாவது சொல்லிவிடுவார்களோ என்ற எண்ணத்தில் அவள் வாயை மூடிக் கொண்டாள்.

ஓட ஓட விரட்டியபடி வேலைவாங்கிக் கொண்டிருந்தது அவளுக்குப் பிடிக்கவில்லை. தினமும் அம்மாவை இப்படித்தான் வேலை வாங்குகின்றாள் என்று தெரிந்தபோது அவளுக்கு மிகவும் கவலையாக இருந்தது. அதைவிடவும் விடைபெறும்போது அவர் சொன்னது அவளின் மனதை அழுத்துவதாக இருந்தது.

"நாளைக்கு அம்மாவ வரச் சொல்லு. அவ வராட்டாலும் பறுவாயில்ல நீ வராத. உன்னப் பாத்தாலே ஏதோ வேற வேலக்கு வர்ற மாதிரி இருக்கு. எனக்குப் பயமா இருக்கு. இனி இங்கால வராத. கெதியா வீட்ட போய்ச் சேர்" என்றபடியே கையில் காசைத் திணித்துவிட்டு கதவைச் சாத்திவிட்டார்.

அவளுக்கு அழவேண்டும் போல இருந்தது. தான் செய்த பிழை என்ன என்று மறுபடியும் மறுபடியும் மனதிற்குள் கேட்டுக் கொண்டே வந்தாள். அவள் கையில் வைத்த காசுகூட கையிற்குச் சுமையாவதைப்போல இருந்தது.

எதற்காக அவர் இப்படிச் சொன்னார். தன்னிடம் சம்பளம் வாங்கி வாழ்க்கை நடத்தும் ஒரு பெண்ணின் மகள் இவ்வளவு நல்லபடியாக இருக்கக்கூடாது என்று சொன்னாரா? அல்லது உண்மையிலே தன்னைப் பிழையாக எடைபோட்டு விட்டாரா என்று அவள் கவலைப்பட்டாள். ஒருவர் வாழும் வாழ்க்கை பணத்திலே மட்டுமே முழுமையாகத் தங்கவிடுமா? வறுமையிலும் செம்மை என்பதெல்லாம் இல்லாது போய்விடுமா?

அவள் வீட்டுக்குள் நுழைந்தபோது அம்மா எழுந்து நடமாடிக் கொண்டிருப்பதைப் பார்த்தாள். அவளுக்கு நிம்மதியாக இருந்தது. கவலையுடனே மகள் நுழைந்ததைக் கவனித்த அம்மா வீட்டு வேலை கடினமாக இருந்ததா என விசாரித்தாள்.

அடுத்த நாள் தன்னால் போகமுடியும் என்பதையும் தெரிவித்தாள். அந்தப் பிரச்சினை அன்றுடன் முடிவடைந்துவிட்டதைப் போன்று இருந்தது. இருந்தாலும் அந்த வீட்டுக்காரி சொன்ன வார்த்தைகள் அடிக்கடி அவளின் கருத்தில் நுழைந்து அவளைப் பிசைந்தெடுத்தது.

வெளிநாட்டு நிதியுடன் இயங்கும் உள்ளூர் நிறுவனம் ஒன்று ஓரளவு மேற்பிரிவு கல்வித்தரம் உள்ளவர்களைத் தெரிவு செய்து அவர்களுக்குத் தொழிற்பயிற்சியை வழங்குவதற்கு முன்வந்தது. அம்மாவுக்குத் தெரிந்த ஒருவர் மூலமாக அவளுக்கும் அதில் சேர்ந்து பயிற்சிபெறும் வாய்ப்புக் கிடைத்தது.

அங்கே செல்ல ஆரம்பித்ததும் அவளின் தனிமையும் அவளிடம் இருந்து விடைபெற்றது. ஆண், பெண் எனப் பலருடனும் பழகும் வாய்ப்பு அவளுககுக் கிடைத்தது. அவளுக்கு வாழ்க்கையில் ஒரு தன்னம்பிக்கையை ஏற்படுத்துவதைப் போன்று இருந்தது.

'தான் ஒரு நல்ல வேலையைப் பெற்றுக் கொண்டு அம்மாவின் கஸ்டத்தைப் போக்க வேண்டும்' என்று தீர்மானித்துக் கொண்டாள். தொழிற்பயிற்சியில் மிகவும் ஆர்வத்துடன் கலந்து கொண்டாள்.

அந்த நேரத்தில் தான் அவனை எதேச்சையாகச் சந்தித்துக் கொண்டாள். அந்த நிறுவனத்தின் சாரதிகளில் ஒருவன் அவன் என்பது அவளுக்குத் தெரியும். அவள் அவனை மிகவும் கவர்ந்துவிட்டதாக அவன் அன்று சொன்னாள்.

அவளுக்குள்ளே ஒரு மகிழ்ச்சி தோன்றினாலும், அவள் ஏற்கெனவே பார்த்துக் கொண்ட சமுதாயம் அவளைப் பார்த்துச் சிரிப்பதைப் போன்று இருந்தது. 'நீ ஒரு வேலைக்காரி' என்று தன்னைச் சொல்வதுபோல் இருந்தது. இதனால் தன்னுடைய நிலையை அவள் ஏற்கெனவே அவனிடம் தெரிவித்துவிட்டாள்.

"நீங்க இப்ப கஸ்ரப்படுறீங்களே தவிர வேலைக்காரர் இல்ல. ஒரு காலத்தில நல்லாத்தான் இருந்திருக்கிறீங்க. அதினால உந்த எண்ணம் இனி வரவேண்டாம். நான் உங்கள உண்மயாவே விரும்புறன்" என்று அவன் சொன்னபோது உண்மையிலேயே அவளுக்குள் ஆனந்தம் பொங்கியது.

தான் அதுவரை பார்த்துவந்த உலகமும் இனி பார்க்கப்போகும் உலகமும் வித்தியாசமாக இருக்கும் என்று நினைத்துக் கொண்டாள்.

இளவயதுக் காதலுக்குத் தடைகள் என்ன இருக்க முடியும். அனைவரும் அறியும்படியாக அவர்களின் காதல் தொடர்ந்தது. இருந்தாலும் அவளுக்குள் மீண்டும் சந்தேகம் எழுந்தது.

"உங்கட பெற்றார் என்ன மருமகளா ஏற்றுக்கொள்ளுவாங்களா?" என்று தயக்கத்துடனே கேட்டாள்.

"அதப்பத்தியெல்லாம் நீர் பயப்பிடாதயும். அவங்க என்ர விருப்பத்துக்கு எப்பவுமே குறுக்க நிக்க மாட்டாங்க. நான் சொல்லுறதுதான் என்ர வீட்டில சட்டம்." என்று கண் சிமிட்டியபடியே சொன்னான். அது மட்டுமல்ல அன்றைக்கு தன்னுடைய அதிகாரியிடம் சொல்லிவிட்டு அவளை வாகனத்தில் ஏற்றிக் கொண்டு அவளின் வீட்டில் கொண்டு சேர்த்தான்.

அவளுக்குப் புழுகு தாங்க முடியவில்லை. இமய மலையையே தொட்டுவிட்டதைப் போன்று இருந்தது. இடம்பெயர்ந்த காலத்தில் இருந்தே அவளின் மனதில் இருந்து வந்த வடுக்கள் குறைவடைந்து போவதைப் போன்று இருந்தது. இதுவரையும் தான் அனுபவிக்காத சந்தோசத்தை அனுபவிப்பது தெரிந்தது.

இப்பொழுதெல்லாம் தான் ஒரு வேலைக்காரியின் மகள் என்ற எண்ணம் அவளுக்குத் தோன்றுவதில்லை. அவளும் மற்றவர்களைப் போன்று நினைக்கத் தொடங்கிவிட்டாள். தன்னுடைய தாழ்வு மனப்பான்மையை மறந்து சகஜமாக பழகத் தொடங்கினாள்.

எத்தனையோ வருடங்களாகத் தொலைத்திருந்த சந்தோசத்தைத் தாங்கள் உணர்வதைப் போல அந்தக் குடும்பம் உணர்ந்தது. அப்பா கூட சந்தோசமாக இருப்பதைப் போன்று புரிந்தது. அதுவும் அன்று அவன் வீட்டுக்கு வந்து போனதில் இருந்து நிலைமையே மாறிவிட்டது.

அந்த நகரத்தின் மத்தியில் அமைந்துள்ள ஒரு மண்டபத்தில் இன்னும் சரியாக இருபது நாட்களிலே திருமணம் நடைபெறவிருப்பதாக அவன் சொல்லியிருந்தான். குதூகலத்துடனேயே தான் செய்யவேண்டிய வேலைகளை ஒழுங்குபடுத்திப் பார்த்துக் கொண்டாள்.

இன்னும் இரண்டு நாட்களில் பங்குனி மாதம் பிறப்பதாக இருந்தது. தன்னுடைய பெற்றார் முறைப்படி வந்து பெண் கேட்பார்கள் என்று சொல்லிவிட்டுப் போனான். இன்ப நினைவுகளுடனே படுத்திருந்த அவளிடம் நித்திரை வரவில்லை. இங்குமங்கும் புரண்டபடி கிடந்தாள். அவளின் மனமும் ஒரு நிலையில் இல்லாமல் அலைக்கழிந்து கொண்டிருந்தது.

திருமணம் என்ற விடயத்தில் அனைத்தும் சரிதான். ஆனால் அதற்குப் பிறகு பெற்றோரின் நிலை என்ன என்ற எண்ணம் வந்தது. தான் பயிற்சி பெற்று வேலைக்குச் சென்று அவர்களுக்கு உதவவேண்டும் என்ற எண்ணத்தில் தடைவந்துவிட்டதே என்ற எண்ணம் எழுந்தது.

கடைசி நேரத்தில் கொஞ்சம் அவசரப்பட்டிருக்க வேண்டாம் என்று தோன்றியது. திருமண விடயத்தை சற்று பின்போட்டிருக்கலாமோ என்று யோசித்தாள். எதுவும் தன்னுடைய புத்தியைப் பாவித்து நிதானிக்க முடியாமல் எத்தனை வேகமாகச் சென்றுவிட்டது என்று புரிந்தது.

அதுவரையில் சந்தோசமாக இருந்த மனதில் ஏதோ வந்து அழுத்துவதைப் போன்று இருந்தது. அருகில் படுத்திருந்த அன்னையின் மேல் கையை வைத்துக் கொண்டாள். அவளோ எதையும் உணராமல் ஆழந்த நித்திரையில் இருந்தாள். பாவம் வேலை செய்த அலுப்பு என்று நினைத்துக் கொண்டாள்.

உறங்க மறுத்த இமைகளை வலுக்கட்டாயமாக மூடியபோது யாரோ பலர் சேர்ந்து அருகில் வருவதைப் போன்று சத்தம் கேட்டது. அரவம் கேட்டு அன்னை விழித்தெழுந்து கொண்டாள். அப்பா சென்று கதவைத் திறந்தார்.

பொலிஸ்காரர்கள் பலர் வந்து அங்கு நின்றார்கள் ..... அவர்களில் இருவர் பெண் பொலிஸ்..

ஏதோ விசாரணைக்காக அவளைக் கூட்டிச் செல்லவேண்டும் என்று சொன்னார்கள். அவர்களுக்கு எதுவும் புரியவில்லை. காலையில் கொண்டு வந்துவிடுவதாகவும் பெண்களும் இருக்கிறார்களும் என்பதையும் சொல்லி அவளை வரும்படி அழைத்தனர். எதையுமே உணர்ந்து கொள்ளமுடியாதநிலையில் அவள் அவர்களுடன் சென்றாள்.

மூன்று நாட்களின்பின் பொலிஸ் வாகனத்தில் அவள் கொண்டு வந்து இறக்கப்பட்டாள் கொழும்பிற்கு அனுப்பியிருப்பதாக அதுவரையில் அவளின் பெற்றோருக்குச் சொல்லியிருந்ததால் அவர்களின் தொல்லைகள் அவர்களுக்கு இருக்கவில்லை. அவளை சென்று பார்வையிடுவதற்கு வேறு யாரும் இருக்கவில்லை.

மகளைக் கண்ட தாய் கதறி அழுதாள். “என்னம்மா.. நடந்தது என்ன கேட்டாங்க. உன்ன எங்க கொண்டு போனாங்கள்” என்றெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த அம்மாவுக்குப் பதில் எதுவும் கிடைக்கவில்லை.

“ஆரம்மா நீ.. அவள் களைப்பில இருக்கிறாள். அவளுக்கு ஏதாவது சாப்பிடக் குடு. ஏதாவது தேவப்பட்டா எங்களக் கூப்பிடு “ என்று சொல்லிவிட்டு அந்தப் பெண் பொலிஸ் சென்றுவிட்டாள். அம்மாவால் நிம்மதியாக இருக்க முடியவில்லை. மகளின் மௌனம் அவளுக்கு புதிராக இருந்தது.

களைப்பாலும் சோர்வாலும் வாடிக் கிடந்த அந்தப் பிள்ளையைப் பார்த்தும் அவளின் வயிறு பற்றி எரிந்தது. அவளுக்கு முன்னாக இருந்து ஒப்பாரி வைக்கத் தொடங்கினாள்.

“சீ எதுக்கெடி கத்துறா. அக்கம் பக்கத்தில இருக்கிறவங்க ஓடி வரப்போறாங்க வாய மூடிட்டுப் போ” என்று அப்பா திட்டினார். நேராக இருந்தவள் மெதுவாகச் சரிந்து கண்களை மூடினாள். அம்மாவின் ஒப்பாரியும் அப்பாவின் திட்டலும் தொடர்ந்து கேட்டுக் கொண்டிருந்தது.

கண்களைத் திறந்து கொண்டிருந்தபோது தெரிந்த இருள் இப்பொழுது கண்களுக்குள்ளாகப் பரவத் தொடங்கியது. ‘நான் ஒரு விபச்சாரி’ என்று எழுதிக் கொடுத்த அவளின் வலது கரம் தன்னிச்சையாக மேலே எழுந்து தன்னுடைய நெற்றியில் பதிந்தது. பெற்றோரின் ஆரவாரத்தின் ஒலி குறைந்து பொலிஸ்காரரின் சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது.

“சொல்லடி சொல்லு. இயக்கத்துக்கும் உனக்கும் என்ன சம்பந்தம். எங்கயெல்லாம் றக்கி எடுக்கப் போனனீ” என்றவாறு அவளின் கன்னத்தில் அறைந்தாள் அந்தப் பெண்பொலிஸ்.

“எனக்கு ஒண்டும் தெரியாது. இயக்கத்தோட எனக்கு ஒரு தொடர்பும் கிடையாது” என்று பயத்துடன் பதிலளித்தாள் அவள்.

“என்ன ஒண்டும் தெரியாது. நீ போர் நேரத்தில் புதுக்குடியிருப்பில தானே இருந்தனீ”

“ஓம்.... “ என்று அவள் குழப்பமாகவே பதிலளித்தாள்.

“உன்ர வீட்டுக்குப் பக்கத்திலதானே ......... இருந்தவங்கள்” என்று கேட்கவும் அவளுக்குக் குழப்பமாக இருந்தது. பரந்தனில் இருந்து இடம்பெயர்ந்து சென்று புதுக்குடியிருப்பில் இருந்தது உண்மைதான். அந்த நேரத்தில் இருந்த வறுமை அவர்களை யாருடனும் பழக விடவில்லை. அரும்பாடுபட்டு எட்டாம் வகுப்பு வரைக்கும் அவள் பாடசாலைக்குச் சென்றிருந்தாள். அன்னையின் அன்றாட வருமானத்திலே அரைவயிற்றுக்கு ஆற்றியதும் அம்மா அப்பாவின் சண்டையைப் பார்த்ததையும் தவிர அவளுக்கு வேறெதுவும் தெரியாது.

“என்னடி பேசாம இருக்கிறாய். இயக்கதில் இருந்து அடிபாட்டுக்குப் போனவள் தானே நீ. உன்ர முகத்தில இந்தத் தழும்பு இருக்கு” என்று அவள் சொன்ன போதுதான் அவளுக்கு அந்தத் தழும்பு நினைவுக்கு வந்தது. முள்ளிவாய்க்காலில் வெளியேறி வந்தபோது குறுக்குச் சண்டைக்குள் அகப்பட்டபோது சன்னம் அவளின் நெற்றியைத் துளைத்திருந்தது. அதன் காயங்கள் ஆறிவிட்டபின்பும் சிறிதாகத் தெரிந்த அந்த அடையாளத்தைத்தான் சொல்லுகிறார்கள் என்பது புரிந்தது.

ஆனால் அதற்குப் பிறகுதான் அடையாள அட்டை எடுத்திருக்கிறாள். அதிலே வராத சந்தேகம் இப்பொழுது ஏன் வருகின்றது. என்ன நடக்கிறது என்பதை உணர்ந்து கொள்ள முடியாமல் இருந்தது. தொடர்நது அவர்கள் பேசிய வார்த்தைகளும் உதைத்த உதைகளும் அவளை மயக்க நிலைக்குக் கொண்டு சென்றன.

முகத்தில் நீரை ஊற்றி யாரோ மயக்கத்தைத் தெளிவிப்பது போன்று இருந்தது. மெதுவாகத் திறந்த அவளின் கண்களின் முன்னால் நின்றவனைப் பார்த்ததும் அவள் அதிர்ச்சியடைந்தாள். அவன் அவன்... அவளின் காதலன்.. வந்துவிட்டானா அவளைக் காப்பாற்ற...

ஆனால் அவன் அவளுக்கு அருகில் வரவில்லை. அந்தப் பெண் பொலிஸாரிடம் ஏதோ சொல்லிவிட்டுச் சென்றாள். அவள் அருகே வந்தாள்.

"இயக்கப் பிரச்சினய இப்ப விட்டுருவம். நீ இப்படி ஒரு கடிதம் எழுதித்தா.... " என்று சொன்னபடி ஒரு காகித்தை எழுதித்தா என்றபடி அவள் நீட்டிய காகிதத்தைப் பார்த்ததும் அதிர்ந்தாள் அவள். அவனின் கையெழுத்திலான கடிதம் அது

' நான் என்னுடைய சுய அறிவுடன் எழுதிக் கொள்வது... நான் ஒரு .........'

"இல்ல நான் இப்பிடி எழுதித்தர மாட்டன்." என்று சொன்னதும் பளாரென்று அறை ஒன்று விழுந்தது. மறுபடியும் மயக்கமானாள்.

தொடர்ந்து அவளை சித்திரவதைப்படுத்தி அவளை எழுதித் தருமாறு கட்டாயப்படுத்தினார். தான் ஒரு வேலைக்காரி என்பதையே தாங்கமுடியாமல் இருந்த அவளுக்கு அப்படி எழுதிக் கொடுக்க மனம் ஒப்பவில்லை. கடைசியில் பொறுமை தாளாமல் அவள் கேட்டுவிட்டாள்.

"ஏன் இப்பிடி எழுதிக் குடுக்கிறதினால ஆருக்கு என்ன லாபம்" என்றதும் எதிரே நின்ற பெண் பத்திரகாளியானாள்.

"பாரன் கழுதைக்கு வாய. எதிர்க்கேள்வி கேட்டுக் கொண்டிருக்குது. உதுகள உப்பிடிக்கேட்டுச் சரிவராது...... தான் வைக்கோணும்" என்று சொல்லிக் கொண்டிருந்தபோது அந்தப் பெண்ணுக்கு அழைப்பு வந்தது.

அருகில் இருந்தவளைப் பார்த்துக் கொள்ளச் சொல்லிவிட்டு அவள் வெளியேறினாள். அங்கு இருந்தவள் ஒரு தண்ணீர்க்குவளையைக் கொண்டு வந்து அவளிடம் குடிக்கக் கொடுத்தாள்.

அவள் இதற்கு முன்பாகவும் அவளைக் கவனித்திருந்தாள். அந்தக் குழுவில் அவள் ஒரு நல்லவள் என்று புரிந்திருந்தது. இவள் குடித்துவிட்டு நீட்டிய குவளையை வைத்துவிட்டு இவளிடம் பேச்சுக் கொடுத்தாள்.

அவளின் பேச்சைக்கேட்டபோது ஆச்சரியமாக இருந்தது. அவளின் சந்தேகத்திற்குப் பதில் வரமுடியும் என்ற எதிர்பார்ப்பு இவளிடம் தோன்றியது. சற்று நிதானித்துவிட்டு அந்தப் பெண் சொன்னாள்.

"அவன் ஏதோ ஆசையில உன்னக் கொண்டு திரிஞ்சான். அனுபவிச்சான். கல்யாணம் என்ட வலைக்குள்ள அவன விழுத்தப்பாத்தாய். ஆனா அவனுக்கு விருப்பமில்ல. நீ இப்பிடி எழுதிக் குடுத்தாத்தான் அவன் உன்ன விட்டுப் போக முடியும். அவனுக்குப் பெரிய இடத்துல கல்யாணம் வந்திருக்கு. அவங்களுக்கு இந்தக் கத தெரிய வந்திற்று. அவன் தப்ப வேணும். அதுக்காக உன்ன இப்பிடிக் காட்டவேணும்" என்று சொல்லியபோது ஈயத்தைக் காய்ச்சிக் காதுக்குள் விடுவதைப் போன்று இருந்தது.

இதுக்குத்தான் இயக்கம்... அப்பிடி இப்பிடியெல்லாம் படம் போட்டு வந்தாங்களா? இயக்க சம்பந்தமாகக் கொண்டு போனால் தனக்கும் சம்பந்தம் வந்துவிடும் என்று யோசித்தானா... தூ....என்று துப்ப வேண்டும் போல இருந்தது.... இவனெல்லாம் ஒரு தமிழன்.. இவங்கதான் தமிழ்ப் பண்பாட்டக் காப்பாத்துறாங்க.... தூ.... இவனக் காதலிச்ச பாவத்துக்கு இப்பிடி எழுதிக் கொடுக்கிறது மேல்.... என்று அவளுக்குப் பட்டது.

அடுத்த இரண்டு மாதங்களில் அந்தத் திருமண மண்டபத்தில் அவனின் திருமணம் விமரிசையாக நிகழ்ந்தேறியது.

பாவம் அந்த வேலைக்காரியின் மகள் ஏதோ வருத்தம் வந்து இறந்துவிட்டதாகப் பலரும் பேசிக் கொண்டார்கள்

# 13 வேண்டியபோது வேண்டும்

ஆறுதலாக அசதியாகத் தூங்கிக் கொண்டிருந்தவனை அடித்து எழுப்பியது போல இருந்தது அந்தச் சத்தம். அந்த அதிர்வினை ஏற்படுத்திய ஒலிமுதல் எது என்பதைத் தெரிந்து கொண்டதும், கண்களைத் திறவாமலே வலது கையை நீட்டி அதை எடுத்துக் காதிற் பொருத்தினான் துரையன்.

“ஹலோஓஓ.... ஹலோஓஓ ...”

சத்தம் எதுவுமே தெளிவாகக் கேட்கவில்லை. ரீசீவரைக் கையில் வைத்தபடியே மறுபடி நித்திரா தேவியைக் கூப்பிட முனைந்தபோது “ஹலோ...” என்ற குரல் சற்றுத் தூரத்திற் கேட்டது.

‘யாரோ படலையில கூப்பிடுறாங்க போல. நான் தவறுதலா ரிசீவர எடுத்திட்டன்” என்று எண்ணியதும் ரீசீவரைப் பற்றியிருந்த கை விலகியது. காதுக்கு அருகே வந்து யாரோ கூப்பிட்டு விட்டுச் செல்வது போல இருந்தது.

“யார்றா அது நேர காலம் தெரியாம.” என்றவாறு கையை வீச முற்பட்டதும் தொங்கிக் கொண்டிருந்த ரிசீவர் கண்ணிற்பட்டது.

‘ஓ இதில தான் தொடர்நது கூப்பிட்டுக் கொண்டிருக்கிறாங்க. நான் கவனிக்காம இருந்திட்டன்’ என்றவாறு மெதுவாக எழுந்து இருந்துகொண்டு அதைக் காதிற் பொருத்தினான். மறுமுனையில் வருணனின் குரல் ஒலித்தது.

முதல் நாள் இரவு அவனின் வீட்டுக்குப் போய் வேலையை முடித்து வர இரவாகிவிட்டது. இன்றைக்கு வரவேண்டும் என்று அவன் சொல்லி இருக்கவில்லையே. ‘பிறகு எதுக்காக விடியக் காத்தால நித்திரயக் குழப்புறான்’ என்று மனதளவில் சொல்லிக் கொண்டாலும் அவனிடம் ஒன்றும் சொல்லவில்லை. விடிவதற்கு முன்னதாக வருவதாகச் சொல்லிவிட்டு ரிசீவரை வைத்துவிட்டு தனது கைகள் இரண்டையும் நீட்டி சோம்பல் முறித்துக் கொண்டான்.

“சே ஒரு நாளாவது நிம்மதியாத் தூங்க விடுறாங்களா” என்று சலித்துக் கொண்டான். இரவிரவா வேலை செய்யிற நம்மள. காலம நேரத்தில கூட படுக்க விடுறாங்கள் இல்லையே “ என்று யோசித்தான்.

ஐம்பது வயதை அண்மித்துக் கொண்டிருக்கும் துரையனுக்கு, முன்னைப் போல ஓடியாடி வேலை செய்வதற்கு இப்பொழுது முடிவதில்லை. அப்படிப் பிரயாசைப்பட்டு அவன் வேலை செய்வதற்கு வேண்டிய அவசியமும் இருக்கவில்லை. ஒண்டிக் கட்டையான அவனுக்கு அன்றாடம் வயிற்றை நிரப்பவதற்கும் தண்ணியடிப்பதற்கும் அளவாகப் பணம் இருந்தால் போதுமானது என்று யோசித்தான்.

அதனால் அவன் யாரிடமும் போய் வேலை கேட்டு நிற்பதில்லை. அவனின் திறமை, பொறுமை இவற்றைப் பார்த்து அவனே வேண்டும் என்று தயவாகக் கேட்பவர்களின் வீட்டுக்கு மட்டுமே அவன் சென்று வருவான். அவர்கள் திருப்தியாகக் கொடுக்கும் பணத்தை பெற்றுக் கொள்ளுவான்.

அன்று ஒரு வழக்கு விடயமாக சட்டத்தரணி ஒருவரைப் பார்க்கச் சென்றபோது அவர் சொன்னதைக் கேட்க ஆச்சரியமாக இருந்தது. அரச சேவையில் ஓய்வு வரலாம். தங்கள் சேவைக்கு ஓய்வே கிடையாது என்று பொருமைப்பட்டார். அவனுக்கும் ஏதேதோ சொல்லுவதற்கு வாய் எழுந்தது. சிரமப்பட்டு விழுங்கிவிட்டான்.

"எந்த ஒரு தொழிலையும் படிச்சுத்தான் செய்யலாம். ஆனா என்ர தொழில படிச்சு செய்ய முடியாது. என்ர தொழிலுக்கும் ஓய்வு கிடையாது. என்ர தொழிலில சிபாரிசும் கிடையாது. என்ர தொழிலுக்கு கூப்பிடுற நேரமும் கிடையாது" என்று அவருக்கு முன்னாக நின்று பெருமைப்பட வேண்டும் போன்று அவனுக்கு.

இருப்பினும் வேண்டாம் என்று இருந்துவிட்டான். தான் சொல்லும் கருத்து எத்துணை உண்மையாக, யதார்த்தமாக இருந்தபோதும் தான் சொல்லும்போது அதற்கு மதிப்பு அளிக்கப்படாது என்பது அவருக்குத் தெரியும். நல்லதைச் சொல்வதாயின் நல்ல நிலையில் இருப்பவனே சொல்ல வேண்டும் என்ற உலகத்தின் எதிர்பார்ப்பை அவன் ஓரளவிற்கேனும் உணர்ந்திருக்கிறான் இதனால் பரம ஏழையாகிய தன்னுடைய மதிப்பு என்ன என்பதை அவன் தெரிந்து வைத்திருக்கிறான.

"எனக்கு சுகம் இல்லாம இருக்கு ஐயா. வேற ஆரயும் சொல்லுங்கோ" என்று சொல்லி விடுவோமா என்று அவனுடைய மனசாட்சி எண்ணிக் கொண்டது. ஆனால் அப்படிச் செய்வதற்கு அவனுக்கு மனம் இருக்கவில்லை. பணத்துக்காக அல்ல. அதை தன்னால் மட்டுமே செய்ய முடியும் என்ற ஆணித்தரம் அவனிடம் காணப்பட்டது.

தரையில் இருந்தவாறு பாதி நித்திரையும் விழிப்புமாக மனதில் போராட்டத்தை வரவரைத்தவன், ஓரளவு சோம்பல் குறைவடையவும் மெதுவாக பக்கத்தில் இருந்த தடிக்கம்பில் பிடித்தபடி எழுந்தான். இன்னமும் நித்திரைத் தூக்கம் முழுமையாகக் கலையவில்லை என்பதை தள்ளாடும் அவனுடைய கால்கள் தெரிவித்தன.

மெதுவாகக் கால்களை ஊன்றியபடி எழுந்து மணிக்கூட்டைப் பார்த்தான். விடிவதற்கு இன்னமும் இரண்டு மணித்தியாலம் இருக்கின்றது என்பதை அது சொல்லியது. அவனுக்கு கோபம் வருவதைப் போன்று இருந்தது.

"அடப்பாவி.. அநியாயத்துக்கு வெள்ளனவா எழுப்பிப் போட்டானே". என்று யோசித்தபோது கோபம் பொத்துக் கொண்டு வந்தது. அவ்வளவு அவசரமாக அதிகாலையிலே தன்னை எழுப்ப வேண்டியது ஏன்?.

தன்னுடைய வேலைகளை மிகத் துரிதமாக நேர்த்தியாக செய்யும்போது இத்தனை பெரிய ஆர்ப்பாட்டம் ஏன்! என்று நினைத்தான்.

இப்பொழுது நன்றாகவே விழிப்பு வந்துவிட்டது. அவன் புறப்படுவதற்கு ஆயத்தமானான். தன்னுடைய ஆயுதங்களை எடுத்துக் கவனமாகப் பத்திரப்படுத்தினான். காலைக்கடன்களை முடித்து குளித்துவிட்டு வந்தான்.

“போய் வந்து குளிக்கலாமே!. இந்த நேரத்தில் எதற்குக் குளியல்?” என்று அவனின் மனசாட்சி கேட்கவே செய்தது. வேலை எப்படி இருந்தாலும் செய்யும் தொழில் ஒருவனுக்குத் தெய்வம் என்பதை யாரும் மறந்துவிட முடியாது. ஒருவன் உயிர் வாழ்வதற்கு வழிகாட்டும் தெய்வம் தொழிலே.

குளித்துவிட்டு வந்தவன் சட்டை, ரௌசரை அணிந்து கொண்டான். சட்டைப் பைக்குள் இருந்த சீப்பை எடுத்து தனது தலையை வாரினான். சுவரில் போட்டு வைத்திருந்த காகிதத்துக்குள் இருந்த விபூதியை எடுத்து சாத்த முனைந்தபோது ஏதோ எண்ணம் வந்தது.

அதை அப்படியே எடுத்த இடத்தில் வைத்துவிட்டு கதவைத் திறந்துகொண்டு வெளியில் வந்தான். வாசலுக்கு அறிக்கையாகப் பக்கத்தில் இருந்த கம்பியை எடுத்து முறுக்கினான்.

“இந்த நேரத்தில இந்த வீட்டுக்குள்ள புகுந்து ஆர் திருட வருவா.. இந்த வேலை எல்லாம் உனக்கு அநாவசியம்” என்று மறுபடியும் அவனது மனசாட்சி சொல்லியது. அது பழக்க தோஷம் என்று அவனுக்கும் தெரியும். வழக்கமாகச் செய்வது போலவே அவன் கம்பியைச் சுற்றிவிட்டு சைக்கிளை தெருவை நோக்கி நகர்த்திவிட்டுப் பாய்ந்து ஏறினான். வலது கால் முதலில் படவும் மேலே வந்த மறுபக்க பெடலை இடது கால் தொடவும் சவாரி ஆரம்பமானது.

“இஸ்.. இஸ்.. “ என்று இரு முறை தும்மியது. அப்போதுதான் பனிப்படலத்தை அவனால் அவதானிக்க முடிந்தது. கடந்த ஒரு வாரமாக சளி பிடித்திருந்தது. சுடுநீரையாவது கொதிக்க வைத்துக் குடித்துவிட்டு வந்திருக்கலாம் என்று எண்ணமும் வந்தது.

தன்னை அழைத்தவனின் அங்கலாய்ப்பையும் புரிந்து கொண்டதனால் தன்னுடைய உடல் வருத்தத்தையும் பொருட்படுத்தாமல் புறப்பட நேர்ந்தது என்று அவன் மறுபடியும் தனக்குள் சொன்னான். ஆனால் அவன் நினைத்ததைப் போன்று வருணனின் எண்ணம் இருந்திருக்கவில்லை.

அந்த இருட்டில் சைக்கிளைக் கவனமாக ஓட்டிச் செல்வது மிகவும் கடினமாக இருந்தது. இரவுக்குள் ஒளித்திருந்த இருட்டையும் மீறி பனிப்புகாரினால் உதய சூரியனும் ஓரங்கட்டி நின்றான். அதைவிடவும் முதுமையினால் துரையனுடைய கண்களின் ஒளி குறைந்திருக்கின்றது என்பதையும் சமீப காலமாக அவன் அவதானித்து வருகிறான்.

இவ்வாறு இருட்டியபடி இருக்குமாயின் அவனும் அவசரப்பட்டு ஓடவேண்டியதில்லை என்பது அவனுக்கும் புரிந்தது. அவன் வேலையை முடிப்பதற்கு அரை மணி நேரத்திற்கு மேல் தேவையில்லை. பிறகு எதற்காக அவசப்பட வேண்டும் என்று சிந்தித்தவாறு சுமாரான வேகத்தில் சென்றான்.

நீண்ட நாளாக கிறீஸ் போடப்படாத சைக்கிள் செயின் "டிரக்.. டிரக்.." என்று ஒருவித சத்தத்தை உண்டாக்கியது. விடிய விடிய நித்திரையின்றி கண்விழித்து பசுவுடன் உறவாடும் வைரவரின் வாகனங்கள் இந்தச் சத்தத்தைக் கேட்டதும் வெகுண்டெழுந்து உறுமத் தொடங்கின.

தங்கள் இனத்தவரின் அச்சுறுத்தலைச் செவிமடுத்த ஏனைய நான்கு நாய்கள் 'வள் வள்' என்றபடி சைக்கிளைத் துரத்தத் தொடங்கின. 'சூ... சூ.." என்று வாய் துரத்த முற்படவும் அவனுடைய கால்கள் இரண்டும் ஆங்கில எழுத்து வீ வடிவத்தில் விரிந்து கணுக்கால்கள் சைக்கிள் பாரில் ஏறின.

சைக்கிளின் வேகத்திற்கு அவற்றால் தாக்குப் பிடிக்க முடியவில்லை. தங்களின் காவல்தகு எல்லையைத் தாண்டியதும் அவை மௌனமாகி விட்டன. நிலமையைப் புரிந்து கொண்ட அவன் மெதுவாகக் கால்களை இறக்கிவிட்டு, பழையபடி பெடலுக்குக் கொண்டு வந்தான்.

“இண்டைக்குக் காலங் காத்தாலயே நாய்களுக்குத் தப்ப வேண்டியதாப் போச்சு. என்னென்ன நடக்குமோ” என்று மனம் அங்கலாய்த்தது. இருப்பினும் பாதையை விட்டு சைக்கிளின் ரயர் திரும்பவில்லை.

ஏற்கெனவே மூன்று நாட்களாகப் போய்வந்த தங்களுக்குப் பரிச்சயமான பாதையில் அவை போய்க் கொண்டிருந்தன. அல்ல அவனின் கால்களினால் அவை ஆற்றுப்படுத்தப்பட்டன. தங்களின் எசமானாருக்குத் தொழில்தரும் பகுதியை நோக்கி அவர்களுக்குத் தெரிந்திருக்கும்.

சைக்கிள் பிரதான பாதையில் இருந்து விலகி குடிமனைகள் உள்ள பகுதியை அண்மித்து இருந்தது. சைக்கிளின் வேகம் வெகுவாகக் குறைந்தது. புறப்பட்ட நேரத்தைப் போன்று அல்லாமல், அவருக்கு முன்னால் வருபவரை அடையாளம் கண்டுகொள்ளக் கூடியதாக இருந்தது.

அதிகாலை வேளையிலே அவனைத் துணுக்குறச் செய்தது அவனுக்கு முன்னாலே வந்துகொண்டிருந்த அவர்களின் நடத்தை. வரக்கூடாத இடத்திற்கு வந்துவிட்டதைப் போல அவனுக்கு சங்கோஜம் ஏற்பட்டது.

அவசரமாக அழைப்பு வந்ததில் அந்த அதிகாலை வேளையிலேயே எழுந்து சென்று கொண்டிருந்தான் அவன். வெளியாட்கள் வருவதற்கு முன்பாகவே வந்து விட்டுச் செல்லுமாறு அவனை அழைத்திருந்தான் வருணன்.

வழமையாக விடிந்ததும் விடியாததுமான அந்த வேளையிலே குளித்து கோயிலுக்குச் செல்லும் பொன்னர் இவனைக் கண்டதும் முகத்தைச் சுளித்துவிட்டுப் பார்வையை மறுபக்கம் திருப்பிக் கொண்டார். அவரின் ஆசாரம் கெட்டுவிட்டதைப் போன்ற ஒரு பிரேமையைக் கண்கள் காட்டின.

விடிந்ததும் இவனின் முகத்தில் விழிக்க வேண்டி வந்துவிட்டதே என்று அவர் மனதில் நினைத்துக் கொண்டது அவனுக்கும் புரிந்தது. அவருடைய வழிபாட்டைப் போலவே இதுவும் முக்கியமானதொரு கடமையே என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டான். இத்தனை கால வாழ்க்கையில் அவன் கண்டிராத என்ன இருக்கிறது?



இருந்தாலும் அன்றைக்கு எதிர்படாமல் இருந்திருக்கலாம் என்ற எண்ணம் அவனிடமும் எழுந்தது. சரியோ பிழையோ பலரும் நினைப்பதற்கு அமைவாக நடப்பதும் உலகத்தாரோடு ஒத்து ஓடுவதும் அவனுக்குப் பழக்கமாகிவிட்டது.

பிறப்பினால் அமைந்திட்ட சில குணவியல்புகளையும் கடமைகளையும் அவ்வளவு எளிதாக ஒதுக்கிவிட முடியாது என்பது அவனுக்கு தெளிவாகவே தெரிந்திருந்தது. அவ்வாறான விடயங்களைக் கண்டும் காணாமலும் இருப்பதற்கும் மனது வெகுவாகவே பழக்கப்பட்டு இருந்தது.

இதனால், தன்னைக் கண்டு சட்டென்று பார்வையைத் திருப்பியவரைக் கண்டுபோதும் கூட வெகுவாக நெளிந்து விட்டு மன்னிப்புக் கேட்கும் தோரணையில் முகத்தை வைத்துக் கொண்டு வேகமாக சைக்கிளை மிதித்தான். அவனின் மனதை விடவும் வேகமாக அது உருளத் தொடங்கியது.

அடுத்த பத்தாவது நிமிடங்களில் இதோ வருணனின் வீட்டுக்கு அருகில் வந்துவிட்டான். அழைப்பதற்கு உதடு அசைய முற்படும்போதே முன்னால் காத்திருந்தவனின் வதனம் தெரிந்தது.

ஆவலுடன் அவனை எதிர்பார்த்துக் கொண்டிருந்த வருணன் உள்ளே அழைத்துச் சென்றான். கூடத்தில் காவலிருந்த அவனின் தந்தையாரை நோக்கி அவன் சென்றான்.

ஒரு குழந்தையின் அருகில் சென்று அதை அலங்கரிப்பவனின் மனநிலை கொண்டவன் போலே அவரின் அருகிற் செல்கிறான். தான் கொண்டு வந்திருந்த ஆயுதங்களை கட்டிலுக்குக் கீழே வைத்துவிட்டு தனது பணியைத் தொடங்குகின்றான்.

வருணன் சற்றுத் தொலைவிலே நின்று கொண்டு அவன் செய்பவற்றைக் கவனித்துக் கொண்டிருக்கிறான். ஏற்கெனவே அவன் எச்சரித்து இருந்ததால் வேறு யாருமே அந்தவிடத்திற்கு வரவில்லை.

தான் கொண்டு வந்திருந்த துணியால் அவரின் முகத்தை அழுந்தத் துடைக்கிறான். அவரின் புன்முறுவலைச் சுமந்த வாயில் வெண்ணிறமாக எதுவும் தெரியாத வண்ணம் கவனமாகத் துடைத்துவிட்டான்.

அடுத்து கைப்பகுதியில் இருந்த பொலிதீன் காகிதத்தை மெதுவாக அகற்றிவிட்டு அங்கு கோர்த்திருந்த நீரைத் துடைக்கின்றான். கொண்டு வந்த புதியதை மாற்றிவிட்டுக் கச்சிதமாக இழுத்துவிட்டான். கை, கால்கள், வயிற்றுப் பகுதி அனைத்திலுமே சுத்தம் பேணுப்பட்டு புதியதாக மாற்றப்படுகின்றன. இறுதியில் நெற்றியில் பொட்டையும் வைத்து விடுகின்றான்.

முகம் நிறைந்த முறுவலுடன் குழந்தையைப் போல காணப்பட்ட அவரைப் பார்த்தபோது அவனுக்கு நிறைவாக இருந்தது. இருந்தாலும் முதல் நாளை காணப்பட்ட பொலிவும் அழகும் குறைந்து கொண்டே வருவதை அவதானித்தான். 'இந்த ஒரு நாளைக்கு மட்டும் தானே. அதுவரை புன்முறுவல் மாறாமலே இருங்கள்' என்று மௌனமாகச் சொல்லிவிட்டுத் தன்னுடைய ஆயுதங்களை எடுத்துப் பைக்குள் போட்டான். பையைக் கையில் எடுத்துக் கொண்டான்.

அவரின் கைகள் அவனது கையின் மீது விழுந்தது. ஓ... கைகளைக் கட்டாமல் விட்டது அவனுக்கு நினைவுக்கு வந்தது. வெள்ளைத்துணி கொண்டு கைகளைப் பிணைத்துவிட்டான். மன நிறைவுடன் அவனின் அருகிலே பார்த்துக் கொண்டிருந்த வருணன் அவனுக்குப் பணத்தைக் கொடுக்கிறான். வலு கவனமாக தனது கை தீண்டிவிடாதவாறு மேலாலே கையை வைத்துக் கொடுத்தான்.

அவனுக்குச் சிரிப்பும் வந்தது. தான் வரும்போது அவனிடம் காணப்பட்ட அங்கலாய்ப்பும் தன்னை வரவேற்ற பண்பும் அப்பொழுது முற்றிலும் மறைந்து இருந்தது.

வெளியில் இருந்து பந்தலுக்குள் நுழைந்த ஒரு பெண்ணைக் கண்டதும் ஏனைய பெண்களின் கூச்சல்கள் ஆரம்பித்தன. பறை மேளத்தவர்கள் அடிப்பவர்கள் வந்துவிட்டார்கள் என்பதை சொல்லாமலே அவன் புரிந்து கொள்ளும் அளவிற்கு மேளச்சத்தம் அந்த இடத்தை உலுக்க ஆரம்பித்தது.

எடுத்து வந்த வேடத்தை நிறைவு செய்து போகின்றார் என்பதற்கு எம்மவர் கொடுக்கும் அறைகூவல் அது. அவரோடு பழகியவர்கள், அறிந்தவர்கள், தெரிந்தவர்கள் அனைவரும் அவரின் இறுதியாத்திரையிற் பங்குகொள்ள வாரீர் என்று சொல்லாமற் சொல்கிறார்களா!

மனித நாகரீகத்தில் அவர்கள் கைக்கொண்டு வந்த ஒவ்வொரு வழக்கங்களுமே அர்த்தத்துடனே போவதை அவன் கண்கூடாகப் பார்த்திருக்கிறான். அதனால் அர்த்தமாக இசைத்த அந்த வாத்தியத்திலும் இனிமை இருந்ததை அவனுடைய காதுகள் ரசிக்கத் தவறவில்லை.

அவன் வெளியிலே வந்தபோது நன்றாகவே விடிந்துவிட்டது. அங்கு கட்டப்பட்டிருந்த தோரணங்களும் சுவரொட்டிகளும் அவனுடைய கண்களில் பட்டன.

வருணனின் தந்தையாரின் முகத்தைப் இறுதித் தடவையாகப் பார்ப்பதற்கென உற்றார், உறவினர், சுற்றத்தார் என்று அனைவரும் வரத் தொடங்கிவிட்டார்கள். காலையில் அமைதியாகவே காணப்பட்ட அந்த இடத்தில் ஆளரவம் அதிகரித்துக் கொண்டது.

சைக்கிளில் பையைக் கொழுவிவிட்டு அதை இழுத்தபோது எதிரே வந்து கொண்டிருந்த ஒருவரின் பரிச்சயமான முகத்தைப் பார்த்ததும் உதடுகள் புன்னகைக்க முயன்றன. அவரோ தனது முகத்தைத் திருப்பி மூக்கைப் பொத்திக் கொண்டதைப் பார்த்தபோது அவனுக்கு திகைப்பாக வந்தது.

கடந்த வாரம் இறந்த அவனின் தாயாருக்கு இவன் தான் சென்று அலங்காரம் செய்து வைத்தான். அன்று வருணனைப் போலவே வரவேற்ற இவன் இன்று தொலைவில் செல்லுவது சிரிப்பை ஊட்டியது.

வேண்டியபோது மட்டும்..... நாம் வேண்டும்.... ஆனால் எமக்கு எப்போதுமே யாரும் வேண்டுவதில்லை.

யாராலும் செய்துவிட முடியாது எம் தொழிலையோ செயலையோ என்று நினைத்துக் கொண்டே அப்பால் சென்றான்.

அவனின் மனம் நிறைந்து கொண்டது. அரிய சேவையைச் செய்வதாக அவனுக்குள் சந்தோசம் எழுந்தது. அதுவும் வேண்டியபோது.. வேண்டியதைச் செய்வதால்.

# 14 துளித்துளியாய்

**வ**ழமை போலவே காலை வேளையில் வந்து கடையைத் திறந்து வைத்துவிட்டு கல்லாவில் வந்து உட்கார்ந்தான் ரமேஷ். அன்றைக்குச் செய்ய வேண்டிய கருமங்களை மனதில் ஒழுங்குபடுத்திக் கொண்டான்.

அன்றைக்கு வரவேண்டிய சரக்கு லொறி வவுனியாவை அண்மிக்கும் போதே அவனுக்கு அறிவிக்கப்பட்டு இருந்ததால் காசை எடுத்துத் தயாராக வைத்திருக்கலாம் என்று நினைத்துக் கொண்டான்.

வங்கியில் இருந்து பணம் எடுத்து வந்திருந்த பெட்டியை மேசைக்கு மேலே ஒரு ஓரமாக வைத்தான். மிகுதிப் பணத்தை லாச்சியில் இருந்து எடுக்க நினைத்தான்.

காற்சட்டைப் பைக்குள் வைத்திருந்த சாவியை எடுத்து மேசையின் லாச்சிக்குள் செலுத்தி அதைத் திறக்க எத்தனித்தான். அவனால் முடியவில்லை. மறுபடியும் முயற்சி செய்து பார்த்தான். ம்.. ஹூம் அது அசையவில்லை.

கதிரையில் இருந்து இறங்கி முழங்கால்களில் நின்றவாறே, சாவியைச் செலுத்தினான். அந்தக் கொத்தில் இருந்த சாவிகளை ஒவ்வொன்றாகச் செலுத்திப் பார்த்தான்.

ஒரு வழியாக லாச்சியைத் திறந்தவன் ஏதோ பேச்சுக் குரல் கேட்ட போது தான் நினைவுக்கு வந்ததைப் போல திடுக்கிட்டு எழும்பினான்.

தனது மேசைக்கு முன்பாக நின்று இருவர் கதைத்துக் கொண்டிருந்தனர். ஏதோ தோன்றவும் அவசர அவசரமாக தனது பெட்டியை இழுத்து எடுத்தான். தான் பெட்டியை வெளியில் வைத்து விட்டு கவனம் இல்லாமல் இருந்து விட்டது தவறென்று நினைத்தான். பெட்டியை எடுத்து தனது பக்கத்தில் நிலத்தில் வைத்தான்.

அதற்குள் முன்னாலே நின்றவன் பேச்சுக் கொடுத்தான். கொழும்பில் இருந்து சரக்குக் கொண்டு வந்த லொறியின் சாரதி தான் என்பதைத் தெரிவித்தான்.

அவனுக்கு ஓரளவு நிம்மதியாக இருந்தது. தவறுதலாக பெட்டி வெளியில் வைக்கப்பட்டால் இதை எடுத்துக் கொண்டு ஓடும் அளவிற்கு எமது நாட்டில் திருடர்கள் கிடையாது என்பதை நினைத்தபோது அவனுக்கு மகிழ்ச்சி ஏற்பட்டது. ஆனால் நாகரீகமான உடையணிந்தவர்கள் பல்வேறு வகையிலும் செய்யும் திருட்டுக்கள் பிடிபடாமலே இருக்கிறது என்பதை நினைத்த போது ஆச்சரியமே ஏற்பட்டது.

திருட்டும் கடனும் ஒருவனுக்கு உள்ள வசதி சம்பந்தப்பட்டது கிடையாது. அவர்களின் மனது சம்பந்தப்பட்டது. அதாவது என்னதான் நேர்மையான காரணங்களைச் சொல்லிச் சென்றாலும் இவை இரண்டுமே அனைவராலுமே தவிர்க்கப்படக் கூடியது.

அவசரத்திற்காக என்று கடன் கேட்டு வருபவன் அறியாத செலவு அல்ல அது. அதற்குத் தக்கதாக அவன் பணத்தை ஒழுங்கு படுத்தி வைத்திராமையே அவனின் நிலைமைக்குக் காரணமாகும். அல்லது தன்னுடைய வசதிக்கும் வருமானத்திற்கும் அதிகமாக எதையாவது விரும்புவதாக இருக்கலாம். எப்படியாயினும் அது அவனுடைய மனது சம்பந்தப்பட்ட பிரச்சினைதான்.



திருட்டு என்பது எந்த வகையிலுமே ஏற்றுக் கொள்ள முடியாதது. வறுமை, அறியாமை, போன்ற பல்வேறு காரணங்களைச் சொல்லிச் சென்றாலுமே அவை முற்று முழுதாகவே தவிர்க்கப்பட வேண்டியவை தான்.

இதனால் திருடனை வெளித் தோற்றத்தைக் கொண்டு மதிப்பிடத் தேவையில்லை. திருடனுக்குப் பயந்து நாய் வளர்க்கவும் தேவையில்லை. புத்திசாலித் திருடன் நாகரீகமாக வாசல் வழியே வந்து விருந்து உண்டு தன்னுடைய திருட்டை நடத்திவிட்டுச் செல்வான்.

திருட்டு அல்லது அபகரித்தல் என்ற விடயத்திற்குப் பெற்றோரே முற்று முழுதாகக் காரணமாகின்றனர் என்பது சிறு வயதில் அவன் படித்த ஒரு பாடத்தில் இருந்து அவனுக்குச் சொல்லப்பட்டது.

சின்னப் பையன் ஒருவன் திருடிக் கொண்டு போய்த் தாயிடம் கொடுத்தபோது அவள் அதை சந்தோசமாகவே தன்னுடன் வைத்துக் கொண்டாளாம். காலப் போக்கில் அவன் பெரிய திருடனாகி அதில் சிறப்புற வாழ்ந்தான்.

அந்த நேரத்தில் பொலிஸ் விரித்த வலையில் மாட்டிக் கொண்டு பார தூரமான தண்டனை விதிக்கப்பட்ட அவனிடம் கடைசி ஆசையைக் கேட்டபோது அன்னையைப் பார்த்துக் கொஞ்ச வேண்டும் என்றானாம்.

அவனின் விருப்பப்படியே அவர்கள் அழைத்து வந்தபோது அன்னையின் மூக்கைக் கடித்து விடுகின்றான். ஏன் என்று கேட்டபோது முதலாவது திருட்டின்போது தன்னை கண்டிக்கவில்லையாம்.

பிள்ளைகளின் இந்தப் பழக்கத்திற்குப் பெற்றோர் காரணமாகி விடுகின்றனர் என்பது அசைக்க முடியாத உண்மையே ஆகும். நேரடியாகவோ மறைமுகமாகவோ அவர்கள் இதைச் செய்யத் தூண்டுவர். ஆனால் இந்த விடயத்தில் எதிரே வந்த நின்றவர்களை தான் சந்தேகப்பட்டு இருக்கப் படாது என்று அவன் நினைத்தான்.

பணப்பெட்டியை பத்திரமாக வைத்துவிட்டு அல்லவா தான் வேறு வேலை செய்யத் தொடங்கியிருக்க வேண்டும் என்று அவனின் மனசாட்சி சொல்லியது.

சரக்கை எந்தவிடத்திற்கு கொண்டு செல்வது என்பதைக் கேட்கவே அவர்கள் வந்திருந்தார்கள். அவன் பணத்தைக் கொண்டு வந்ததையோ பணப் பெட்டியையோ அவர்கள் கவனித்திருக்கவில்லை.

அவர்களுடன் கதைத்து அவர்களை வழியனுப்பிய பிறகு லாச்சியைத் திறந்து பணத்ததை எண்ண ஆரம்பித்தான். அவர்கள் எழுதிக் கொடுத்துவிட்டுப் போன அந்தக் காகிதத்தை அடிக்கடி பார்த்து உறுதிப்படுத்திக் கொண்டான். இரண்டு இரண்டாயிரம் ரூபாய்த் தாள்கள் அதிகமாக இருந்தது போல இருக்கவும் ஒரு தாளை கை மிகவும் நேர்த்தியாகவே இழுத்து தனது காற்சட்டைக்குள் வைத்துக் கொண்டது.

எதேச்சையாக சுற்றும் முற்றும் பார்த்தான். அவனுக்கு யாரையும் தெரியவில்லை. முகம் இலேசாக வியர்த்துக் கொண்டது. கையில் இருந்த பணக்கட்டை மறு முறை எண்ணி உறுதிப்படுத்திய பின் அதை ரப்பர் பாண்டினால் சுற்றி பெட்டிக்குள் வைத்துக் கொண்டான்.

இடது கையினால் மறுபுறம் பொக்கட்டில் இருந்த கைக்குட்டையை எடுத்து நன்றாக முகத்தைத் துடைத்துக் கொண்டான்.

அவர்களின் வருகைக்காகப் பணத்துடன் காத்திருந்தான். அவர்கள் வந்தவுடன் சண்முகத்தை அனுப்பி சரக்குகளை பரிசீலித்துவிட்டு பெட்டியைத் திறந்து கொடுத்தான். சிறிது நேரம் கதைத்துக் கொண்டு விட்டு அவர்கள் போய்விடுகின்றனர்.

அவர்கள் கொடுத்த பற்றுச்சீட்டைப் பத்திரப்படுத்திய பின் பேரேட்டில் அன்றைக்குக் கொள்வனவு செய்த சரக்கைப் பதிவு செய்து கொண்டான்.

பேனாவைப் பிடித்து எழுதிக் கொண்டிருக்கும் அவனது எழுத்தில் எழு வயது நிரம்பிய ஒரு பையன் தெரிந்தான்.

ஆழகாக உடுத்து பெரிய இடத்துப் பிள்ளையாகக் காட்சி தரும் அவன் தன்னிடம் உள்ள காசில் இனிப்புப் பண்டங்களை வாங்கி தனது நண்பர்களுக் கொடுக்கின்றான்.

அவர்கள் அதைச் சுவைத்த பின் அவனுக்கு நண்பர்களாகி விடுன்றனர்.

அவனது தந்தையார் ஒரு கடை வைத்திருந்ததால் அடிக்கடி அந்த இடத்தில் சென்று நிற்பான். அப்பா இல்லாத நேரத்தில் அவரிடம் இருக்கும் தாள்களில் ஒன்று இரண்டைப் பெறுவதில் சிரமம் இருக்கவில்லை.

காசு குறைந்திருக்கின்றது என்பதை யாரும் கண்டுபிடிக்கவில்லை. மிகவும் அழகாகப் பணத்தை எடுத்துவிட்டு பழையபடி அடுக்கி உரிய இடத்தில் வைத்துவிடுவான்.

அவனின் தந்தை ஒருபொழுதுமே அவனில் சந்தேகப்பட்டது கிடையாது. காசுக் கட்டுப்பாடு என்பது அவரின் கையில் இருப்பதாக நினைத்துக் கொண்டிருந்தார். அந்த வயதில் இருந்தே தொடங்கிய அவனது பழக்கம் திருமணமாகும் வரை தந்தையாரின் வீட்டில் இருக்கும் வரை தொடர்ந்து கொண்டிருந்தது.

அத்தனை காலமாக யாருக்கும் பிடிபடாமல் அவன் செய்து கொண்டு வந்தது யாருக்கும் சந்தேகத்தை ஏற்படுத்தவில்லை. அதனால் அவன் மிகுந்த தன்னம்பிக்கை உள்ளவனாக வளர்ந்தான்.

அவனின் கையில் இருந்த பணப்புழக்கம் அவனுக்கு எந்த நன்மையையும் செய்து விடவில்லை. அரசாங்கப் பரீட்சைகளில் அளவாகப் புள்ளிகள் பெற்றிராதால் ஒரு தனியாரிடம் வேலை செய்து வந்தார்.

அவனின் தந்தையார் ஒரு நாணயமான வியாபாரி என்பதால் அவரில் இருந்த அளவு கடந்த நம்பிக்கையில் அவனை சந்தோசமாக வேலையில் சேர்த்துவிட்டார் அவர். அதுமட்டுமல்ல பணத்துடன் நேரடியான தொடர்பில் இருப்பதான கணக்கப்பிள்ளை பொறுப்பு அவனுக்குத் தரப்பட்டது.

முதலாளி விரும்பும்படியாக நம்பும் படியாக நடக்கும் இவன் யாருக்கும் சிறிது சந்தேகமாகவாவது வராத மாதிரி மிகவும் அவதானமாக நடந்து வந்தான்.

இருப்பினும் பணத்தை எடுக்கும் போதெல்லாம் மனதுக்குள் ஒரு நெருடல்தான். இன்றைக்குப் பிறகு இப்படிச் செய்யக்கூடாது என்று திடசங்கற்பம் எடுத்துக் கொண்டேயிருப்பான்.

ஆனால் பணத்தாள்களைக் காணும் போது கை எதேச்சையாகவே போய் விடுகின்றது. அன்றைக்கான நிலைமைக்கு அழகான காரணங்களைத் தனக்குள் உருவாக்கிக் கொள்ளுவான். இந்த விடயத்தில் இருந்து முழுமையாகவே விடுதலை பெற்று விடுகின்றேன் என்ற எண்ணம் வரவர குறைந்து கொண்டே செல்கின்றது. இந்த விடயம் முதலாளிக்குத் தெரிந்தால் என்ன செய்வது என்ற நினைப்பு அடிக்கடி வந்து அவனைப் பயப்படுத்தும்.

தெரியவிடாமல் பார்க்கிறேன் என்று சொல்லி கச்சிதமாகத் திருடுவதில் தேர்ச்சி பெற்றவனானான். அவனிடம் யாருமே கணக்குக் கேட்கப் போவதில்லை என்று திடமாக நினைத்தான்.

முதலாளிக்கோ என்ன செய்வது என்பது தெரியவில்லை. பெரிய முதலாளியாக இருந்தவரின் மகன் இத்தனை சின்னத் தனமாக நடந்து கொள்கிறான் என்று நினைக்கும்போது அவருக்குக் கவலையாக இருந்தது.

கொடுக்கல் வாங்கலில் வரும் இலாபம் என்ற கணக்கு காட்டப்படாமலே இருக்கிறது என்பதை உள்ளகக் கணக்காய்வாளர் பல தடவைகள் சொல்லிவிட்டார். பணக் கையாடல் நடைபெறுகின்றது என்பதை அவர் அடித்துச் சொன்னார்.

அவனுக்கு உதவியாக இன்னொருவரை நியமிப்பதில் அவன் ஆதரவு தரவில்லை என்பது புரிந்தது. அவனுக்கு அருகாமையில் இருந்து வேலை செய்வதற்கெனத் தெரிவு செய்யப்பட்டு அனுப்பப்படும் அனைவருக்கும் தொலைவில் வேலையை வழங்கி அவனின் அருகில் வராதவாறு பார்த்துக் கொண்டான்.

சரக்குக் கொண்டு வரும் அனைத்து பணியாட்களும் ஏன் வங்கி ஊழியர்களுமே அவனைப் பற்றி பல புகார்களைச் செய்திருந்தனர். எதையும் கையும் மெய்யுமாகப் பிடிக்க முடியாததால் என்ன செய்வது என்பது புரியாமல் முதலாளி திகைத்தார்.

நேரடியாகக் கேட்டுவிடலாம். ஆனால் யாருமே இப்படியான விடயத்தை ஒப்புக் கொள்ள மாட்டார்கள். அதுவும் ஒரு முதலாளியின் மகன். பெரிய இடத்தைச் சேர்ந்தவன் அத்தனை பெருந்தன்மையாக இதை ஒப்புக் கொள்வான் என்பதில் அவருக்கு நம்பிக்கை சிறிதும் இருக்கவில்லை.

அதைவிடவும் இந்த விடயத்தினால் மனஸ்தாபம் ஏற்படும். இதைக் காரணமாகக் காட்டி வேறுவிதமாகப் பழிவாங்குவதற்கு முனைவான். அவனின் கெடுபிடியைத் தாங்கமுடியாது என்று யோசித்தார்.

எவ்வாறு ஆயினும் அவனிடம் இருந்து தூர விலகிக் கொள்வதே நல்லது என்ற தீர்மானத்திற்கு வந்தார். ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்லி அவனை வேலையில் இருந்து விலத்திவிடலாம் என்றும் முடிவெடுத்தார்.

தனது உதவியாளன் மூலமாக அவனை வரவழைத்தார். தனது வியாபாரம் தற்பொழுது பெரிதளவில் இலாபத்தைக் காட்டாததாலும் தனக்கு கடன் அதிகரித்து இருப்பதையும் சொன்னார். இதனால் அவரவர் சேர்ந்து கொண்ட காலத்தின் அடிப்படையில் ஒவ்வொருவராய் நிறுத்திவிட முனைவதையும் சொன்னார்.

முதலாவது கட்டத்தில் அதாவது உடனடியாக நிறுத்திக் கொள்ள வேண்டியவர்களைப் பற்றிச் சொன்னார். அதில் அவனது பெயரும் இருப்பதை அவன் புரிந்து கொண்டான்.

ஒரு மாத சம்பளத்தைக் கொடுத்து உடனடியாக நிறுத்தத் தீரமானம் எடுத்திருப்பதாகச் சொன்னார். அவர்களுக்கு வேறு இடங்களில் சிபாரிசு செய்து தரமுடியும் எனவும் சொன்னார்.

அவனுக்குக் கோபம் வரவில்லை. முதலாளி ஏதோ இக்கட்டினால் இந்த முடிவை எடுத்திருக்கிறார் என்று நினைத்தான். இதனாலே தனக்கும் நன்மை என்பதை யோசித்தான்.

சிறு வயதில் துளித்துளியாக இவ்வாறு நடந்திருந்தாலும் தற்பொழுது அனுபவிக்கும் இந்த விடயத்தில் இருந்து ஓடிவிடலாம் என்ற எண்ணம் எழுந்தது.

வெளியேறும் போது தீர்மானமாகவே எடுத்துக் கொண்டான். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இந்த சிறு வயதுப் பழக்கத்தைத் தொடருவதில்லை என்று.

# 15 வலியது விதி

எழுந்து கொள்ள வேண்டும் என்று எண்ணிய போதும் உடலின் அசதியால் எழும்புவதற்கு முடியவில்லை. தன்னால் இயங்க முடியாது என்று மறுத்த கால்களை ஒவ்வொன்றாக இரு கரங்களையும் பற்றித் தூக்கி நிறுத்திவிட்டு கைகளால் இடுப்பைப் பற்றியவாறு எழுந்து நின்று பார்த்தான்.

கும்மிருட்டாக இருந்த அந்த இடத்தில் கண்களின் எல்லை வரையிலும் எதுவும் தோற்றம் அளிக்கவில்லை. தான் இடம் மாறி வந்து விட்டேனோ என்று சந்தேகம் வந்தது. அசைக்க முடியாத தனது கால்களை மெல்ல அசைத்து முன்னேறி சுற்றும் முற்றும் நோட்டம் இடலானான்.

சற்று தூரத்தில் தேவாரம் பாராயணம் பண்ணும் ஒலி கேட்டது. இந்த நேரத்தில் யார் கடவுள் கும்பிடுவது என்றவாறு சத்தம் வந்த திசையை நோக்கி கால்களை நகர்த்தினான். படிப்படியாக சத்தம் குறைவடைந்து வருவது தெரிந்தது. சத்தத்தைப் பின்தொடருவது கடினமாக இருந்தது.

வந்த வழியே திரும்பலாமே என்றவாறு திரும்ப எத்தனித்த போது யாரிலோ மோதுவது போன்று தெரிந்தது. திடுக்குற்றுத் திரும்பியபோது ஒரு வயோதிபர் கையிலே புத்தகம் ஒன்றினை எழுதிக் கொண்டிருந்தார். அவனுக்கு பிரம்மிப்பாக இருந்தது.


தெளிவான வெளிச்சத்தில் இவ்வாறு அந்தரத்தில் இருந்து யாராலும் இவ்வாறு எழுத முடியாது. இவர் என்ன புத்தகம் எழுதுவதைப் போன்று எழுதுகிறாரே என்று ஆச்சர்யம் வந்தது. அவர் உண்மையில் எதையோ எழுதுகிறாரா? அல்லது எழுதுவதைப் போன்று நடிக்கிறாரா?. அப்படியானால் இந்த இருட்டில் எதைத்தான் வைத்து எழுதுகிறார்.

“ஐயா வணக்கம்” என்றான் குரலைச் செருமியவாறே. அந்தக் கிழட்டுத் தோற்றம் அசைவதைக் காணோம். ஓ ஒரு வேளை காது கேளாதோ! என்று சந்தேகம் எழுந்தது. ஆனால் கண் மட்டும் நல்லாத் தெரியுமாக்கும் என்ற சிந்தனையின் ஊடாக அவரைத் தாண்டி மற்ற விடயங்களை அவதானித்தான்.

முன்பைப் போல் அல்லாது இருட்டு சற்று விலகத் தொடங்கியது. கரும் வர்ணத்திற்குப் பதிலாக வெள்ளை நிறமும் நீல நிறமும் கலந்து தென்பட்டன. இடைக்கிடையே பொன்னிறமாக சூரியக் கதிர்களும் தோன்றின. விமானத்தில் பறந்து இந்தியாவுக்குப் பயணம் செய்த அனுபவத்தை ஞாபகம் ஊட்டியது.

“ஓ வானில் பறக்கிறேனோ! அப்படியானால் மற்றைய பயணிகள் எங்கே! விமானம் ஓட்டுபவர் எங்கே! அழகாக உடுத்திக் கொண்டு வளையவரும் விமானப் பணிப்பெண்கள் எங்கே! வேளாவேளைக்கு வகைவகையாக வரும் உணவுப் பதார்த்தங்கள் எங்கே! பிரயாணிகளின் பொதிப்பைகள் எங்கே! உயிர்காய்புக் கவசம் எங்கே! எங்கே!

“ஓமோம் நீ பெரிய உத்தமபுத்திரன் சிவாஜி. அடுக்கடுக்காக் கேள்ளி கேக்குறியா?” என்று மனசாட்சி கேட்கவும் கேள்விக் கணைகள் ஓய்ந்தன. பேசாமல் இருந்த பகுத்தறிவு அநியாயத்துக்கு வேலை செய்யத் தொடங்கியது. விமானம் இல்லை. அப்படியானால் நான் இருப்பது எங்கே!.....



விண்வெளியில்... இல்லை ஆகாயத்தில்... இல்லையில்லை சுவர்க்கத்தில்..... ம் ஹூம்.... சொர்க்கத்துக்கு அனுப்புவதா? நரகத்துக்கு அனுப்புவதா என்று கணக்குப் போடும் இடத்தில்... அப்படியானால் என்னுடைய கணக்கைத்தான் அந்தக் கிழவர் போட்டுக் கொண்டிருந்தாரா?

“அந்தக் கடமை தவறாத அரசாங்க உத்தியோகத்தரையா அதாவது இறை உத்தியோகத்தரையா காது கேளாதவர், கண் தெரியாதவர் என்று நினைத்தேன். ஐயோ...”

அவன் ஒன்றும் அந்த வலது குறைந்தவருக்காகப் பரிதாபப் படுகின்றான் என்று நினைத்து விடாதீர்கள். தன்னுடைய நையாண்டிகள் அவருக்குப் புரிந்து அவர் தண்டனையைக் கூடுதலாக எழுதிவிடுவாரோ என்ற பயத்தினாலேயே அவ்வாறு நல்ல கதையைச் சொன்னான். இருந்தாலும் மறுபடியும் ஒரு சந்தேகம் எழுந்தது.

‘சித்திர புத்திரன் இளம் மனிதனைப் போல் உடல் வாகுவுடன் பட்டுப் பீதாம்பரம் உடுத்தி அழகாக நிற்பார் என்று கேள்விப்பட்டு இருக்கிறேன். இவர் என்ன இப்படி கிழட்டுத் தோற்றத்தில் பிச்சைக் காரனைவிடவும் கேவலமாக... ’ என்று ஒரு எண்ணம் எழுந்தது.

‘ஓமோம்.. இருக்கும். இப்ப எல்லாருக்கும் பஞ்சம் தானே. நல்லாப் படிச்சவன், பிரயாசைப்பட்டு உழைக்கிறவன் எல்லாரும் துன்பப்படுகிற நேரத்தில உப்பிடி வெட்டியா இருந்து வீண்வம்பு பேசுறவன், வேண்டாததை எழுதிவைப்பவன் எப்பிடி நல்லா இருக்க முடியும்’ என்றது அவனின் மனம்.

‘நீ வாயால கெடுறனீ. இதனாலதான் சொர்க்கமோ நரகமோ எண்டு தெரியாம ரெண்டுங்கெட்ட இடத்துக்கு வந்து நிக்கிறாய். இதுக்கு மேல அதையும் இதையும் சொல்லியோ யோசிச்சோ.. உன்ர பாவத்தக் கூட்டாத’ என்று ஒரு நல்ல மனசாட்சி சொன்னது.

ஆக இருக்கிற இடமும் நோக்கமும் என்ன என்பதை ஓரளவு புரிந்து கொண்டான். இருந்தாலும் தனக்குப் பதில் வணக்கம் தானும் சொல்லாமல் அவசர அவசரமாக அந்தப் பெரியவர் எழுதிக் கொண்டது என்ன என்பதை அறிய ஆவல் எழுந்தது. அவரைத் தேடத் தொடங்கினான்.

ஆனால் அவரைத் தேடிச் சென்ற பயணம் அத்தனை இலகுவானதாக இருக்கவில்லை. இடம் மாறி வேறெங்கேயும் போய்விட்டாரா? அல்லது புரிந்து கொண்டுவிட்டான் பக்தன் என்பதனால் தெரிந்து கொள்ள முடியாமல் இருக்கிறதா? என்று யோசனை எழுந்தது.

'பக்தனாவது கடவுளாவது. நீ பாத்தது சித்திர புத்திரன். பிறகு எதுக்கு பயத்தில கண்டபடி உளறுகிறாய். அமைதியா இரு. அங்கயும் இங்கயும் தேடு. முக்கியமா கிடைப்பார் எண்டு நினைச்சுக் கொண்டு தேடு. கிடைப்பார்.' என்று அவனுடைய மனசாட்சி சொல்லவும் அமைதியானான்.

'ஏ மனசாட்சியே இத்தனை காலமும் நான் உன்ன அடக்கி வச்சன். இப்ப நீ அடக்க வாறியா. ம்... காலம்தான். இப்ப உன்ன விட்டுட்டு என்ர வேலயத் தொடருறன்' என்றவாறு அவரை மறுபடியும் தேட ஆரம்பித்தான். அதே விடயங்களைக் கருத்திற் கொண்டு. என்ன ஆச்சரியம்.. அதோ அவர்... அவரே தான் சித்திரபுத்திரர். அழகும் இளமையும் கொண்ட ஆண்மகனான.... ஆனால் ஐயோ பாவம் கையில் அதே பழைய புத்தகம்.. அதுதான் தடயமாக அவரைக் காட்டிக் கொடுத்தது.

இம்முறை தொண்டையைக் கனைத்துக் கொள்ளவில்லை. அவருக்கு முன்னாலே வந்து நின்று தலையை மட்டும் தாழ்த்தி மரியாதையாக வணங்கினான். அவரிடமும் அறிமுகச் சிரிப்பு எழுந்தது.

'அப்பாடா... சிரிச்சிட்டார். உப்பிடியே பல்லக் காட்டி இவரக் கவுக்க வேண்டியதுதான்' என்று எண்ணியவாறே உதட்டில் புன்னகையை வலிந்து இழுத்துக் கொண்டான். நல்ல வார்த்தைகளை நினைவுபடுத்தி வாய்க்குள் வரவழைத்துக் கொண்டு மெதுவாக வாயைத் திறந்தான்.

"உமது சொற் திறமையால் எம்மைச் சாய்த்து விடலாம் என்று எண்ணம் கொண்டீரோ?" என்ற வார்த்தை அவரின் வாயில் இருந்து வருவதைக் கேட்டதும் திடுக்குற்றான். நான் நினைத்தது அவனுக்கு.... இல்லை.. அவருக்கு எப்படித் தெரிந்தது. ஓ.... இது மனிதனுக்கும் மேற்பட்டவர்கள் வாழும் பகுதி. அவர்களால் எதையும் எண்டு பிடிக்க முடியும்...

'சபேசா நல்ல இடத்தில வந்து மாட்டிட்டாய். இங்க உன்னட பாட்சா ஒண்டும் பலிக்காது. பேசாம கேக்க வந்தத அடக்க ஒடுக்கமாக் கேட்டுடு. கிடைச்சாக் கிடைக்குது. இல்லேன்னாப் போகுது' என்றவாறு அவனை சமாதானப் படுத்திய மனசாட்சியின் சொல்லை ஏற்றுக் கொண்டான். மிகுந்த மரியாதையுடன் தன்னுடைய கோரிக்கையை எடுத்து வைத்தான்.

"பூமியிற் பிறந்த அனைவருக்கும் வயதுக் கணக்கை நியமிப்பவரும், வேளை வந்ததும் அதை நினைவுபடுத்தி, அவர்களை வரவழைத்துக் கொள்பவருமான சித்திர புத்திரரே.. எனக்கு வேளை நெருங்கிவிட்டது என்பதை உணர்ந்து கொள்ளாமல் நான் இருந்துவிட்டேன். அதனால் எனக்கு இருந்த சொத்துக்கள், பொறுப்புக்கள் பற்றிய விபரத்தை என்னுடைய குடும்பத்திற்கோ என்னுடன் வேலை செய்பவர்களுக்கோ நான் சொல்லி இருக்கவில்லை. எல்லாவற்றையும் என்னுடைய கைக்குள் வைத்துவிட்டேன்" என்று அவர்கள் பாணியில் செந்தமிழிலே தொடங்கி,

"எனவே எனக்கு மேலும் சிறிது காலம் ஆயுள் வேண்டும். என்னை மறுபடியும் பூவுலகிற்கு அனுப்பி என்னுடைய கடமைகளை முடித்து வர என்னை அனுமதிக்க வேண்டும். தயை கூர்ந்து என்னுடைய ஆயுட்காலத்தில் மேலும் சில நாட்களைத் தரவேண்டும்" என்று பவ்யமாக வேண்டிக் கொண்டான். அவன் எதிர்பார்த்ததைப் போன்றே சித்திரபுத்திரரின் வாயில் புன்சிரிப்பு மலர்ந்தது.

"நீ ஒரு பட்டதாரிதானே. பல்கலைக் கழகத்தில் தரும் அசைன்மன்றுக்கு மேலதிக நேரம் கேட்ட அனுபவம் இருக்கிறதா" என்று கேட்டார். ஏதோ சாத்திரம் கேட்கும்போது பிரமிப்பு அடைவதைப் போன்று, "ஆமாம்... ஆமாம்.. " என்றான். 'அவருக்கு அது எப்பிடித் தெரியும்'

"அலுவலகத்தில் தந்த வேலையை நாளுக்குள் செய்து முடிக்காமல் தவணை கேட்ட அனுபவம் உண்டா?" என்று மேலும் கேட்கவும் திகைத்து விட்டான். 'இவர் என்ன சீசீரீவீ கமரா பொருத்தி எல்லாவற்றையும் பார்க்கிறாரோ'

அவனுக்கு நடுக்கம் வருவதைப் போன்று இருந்தது. இவர் என்ன இப்படிப் புட்டுப்புட்டு வைக்கிறாரே

‘சாதாரணமாக ஒவ்வொரு இடத்திலும் சாட்டுகளைச் சொல்லிக் கொண்டே வாழ்க்கையைக் கடத்தி விட்டேன். அந்தப் பழக்கத்தில் வாயில் வந்ததை சொல்லியாகி விட்டது. இருப்பினும் சொல்லுவது கடவுளிடம் என்ன நினைப்பை மறந்து விட்டேனே’

‘எத்தனை பாவத்தைச் செய்துவிட்டும் கோயிலுக்குள் நுழைந்து கடவுளுக்கும் பங்கு கொடுத்துவிட்டு, அவருக்கு முன்னால் மண்டி போட்டு எழுந்து, கடவுளே காப்பாற்று காப்பாற்று என்று கேட்கும் போது பேசாமல் இருக்கும் கடவுளைக் கல்லென்றே கணக்கிட்டதால் ஏற்பட்ட தாக்கம் இது’ என்பதைப் புரிந்து கொண்டான்.

தன்னுடைய வார்த்தை, சாலங்கள், விதண்டாவாதங்கள் போலியான வேடங்கள் எதுவும் எடுபடாத ஒரு இடத்தில் வந்து நின்று கொண்டு தேவையில்லாமல் கதைக்கிறேன் என்று அவன் புரிந்துவிட்டான். இருப்பினும் இப்படியான விடயத்தை எதிர்கொள்ளுமாறு ஏற்கெனவே நாம் பழக்கப் படுத்தப்படவில்லை. இதற்காகவாவது அடிக்கடி இறைவன் வருகை தந்து அவற்றை உணர்த்தியிருக்கலாம். அல்லது இறைவனின் தூதர்களாக விளங்கும் மதகுருமார்களாவது அவற்றைப் போதித்திருக்கலாம். இப்பிடி அநியாயமாக நான் வந்து மாட்டத் தேவையில்லை.

தவறுகளைப் பாவங்களைத் தெரிந்தே செய்தும் இறை வழிபாட்டினாலும் கோயிலுக்குச் செல்வதாலும் அவற்றைத் தவிர்த்து விடலாம் என்று நினைத்தது தப்பாகப் போய்விட்டது. நாம் பூமியில் இருந்து எடுத்துக் கொள்ளும் வைராக்கியம் வானத்தில் அனுமதிக்கப்படவில்லை என்பதைத் தெரிந்து கொண்டதும் மௌனமானான்

எதிரே இருப்பவரின் சிரிப்பு அவனுக்குப் பல விடயங்களை மனக்கண் முன்னே கொண்டு வந்தது. தான் அறிவு தெரிந்த காலத்தில் இருந்தே செய்துவந்த தப்புக்கள் முன்னால் நின்றவரின் முகத்தில் ஓடுவதைப் போன்று இருந்தது. தான் இரகசியமாகக் கட்டிக் காத்த பல விடயங்கள் அவ்விடத்தில் பரகசியம் ஆக்கப்பட்டன.

‘ஓ உயரத்தில் இருந்து பார்க்கும்போது கீழே நகரத்தில் அனைத்தும் தெரியுமே. வானளாவிய உயரத்தில் வேலை எதுவும் இல்லாமல் என்னையே பார்த்துக் கொண்டிருந்தவர் அல்லவா அவர்? அவரிடம் நான் எதை மறைக்க முடியும்? உண்மையைச் சொல்லியே சலுகையைப் பெற்றுவிடுவோம்’ என்று நினைத்தான்.

“நான் அரும்பாடு பட்டுச் சேர்த்த சொத்துக்கள் சில இருக்கின்றன. அதைவிடவும் வட்டிக்கு ஆசைப்பட்டுக் நான் கடன் கொடுத்தவர்கள் சிலர் இருக்கிறார்கள். அவர்களைப் பற்றிய எந்தத் தரவையும் நான் யாரிடமும் சொல்லவில்லை. அவர்களின் பட்டியலையாவது என்னுடைய பிள்ளைகளிடம் கொடுத்துவிட்டு வருகிறேன். என்னைப் போகவிடுங்கள்” என்று அழுவாரைப் போன்று கேட்டான்.

“கணக்குகளை எழுதுபவர்கள் நாங்கள். இப்பிறவியின் கணக்கை மறுபிறவிக்கு கொண்டு சென்றோ? அல்லது போன பிறவியின் சென்மதிகளை இப்பிறவியில் கணக்கைக் காட்டியோ முடித்து விடுவோம். இது பற்றி நீர் கவலைப்படத் தேவையில்லை” என்று முகாமையாளர் சொல்லுவதைப் போன்று மிகவும் கடுமையாகச் சொன்னார்.

அப்பொழுதும் அவன் விட்டுவிடவில்லை. ‘நாட்டாமை தீர்ப்ப மாத்தி சொல்லு’ என்று சொல்லும் தமிழ் மரபுக்குப் பழக்கப்பட்டவன் அவன். மேல் முறையீடு செய்தே ஆகவேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டு முகத்தை சற்றுக் கடுமையாக வைத்தபடி சொன்னான்.

“உங்களுடைய தீர்ப்பை நான் ஏற்றுக் கொள்ள முடியாது. நான் மேலதிகாரியை சந்திக்க வேண்டும். என்னுடைய வேலையில் நான் மூன்று தடவைகள் அப்பீல் கோட்டில் வழக்குத் தாக்கல் செய்திருக்கின்றேன். ஆதலால் தயவு செய்து தங்கள் மேலதிகாரியிடம் என்னை அனுப்புங்கள்” என்று கேட்டான்.

புன்சிரிப்புடன் அருகே இருந்த கதவைக் காட்டினார் அவர். அவனை உள்ளே அனுமதிக்குமாறு வாயில் காப்பவனிடம் சொல்லிவிட்டு அவர் சென்றார்... அல்ல .. மறைந்தார். ஒவ்வொரு மாயத்திலும் ஒரு நிமிடம் தாமதித்துவிட்டு நடையைக் கட்டியது மானுடம்.

உள்ளே நுழைந்ததும் சிறிது நேரத்திற்கு எதுவுமே தெரியாமல் பனி மறைத்துக் கொண்டது. ஆனாலும் குளிரவில்லையே என்றவாறு தன்னுடைய தேகத்தை நோக்கினான். அது தெரியவில்லை. ஓ.. பிரச்சினையின் மூலமே இதுதானே! தேகத்தை விட்டு இங்கே வந்ததால்தானே இப்படிக் கண்டவனிடம் கையேந்த வேண்டி இருக்கின்றது என்று நினைத்தான்.

அந்த இடத்தில் பிரம்ம தேவனை எப்படித் தேடுவது என்று தெரியவில்லை. இப்படி வசதி இல்லாத இடத்தில் அந்தரத்தில் ஆடுவதால்தான் எந்த ஒரு நயப்பும் இன்றி மோசமாக மனிதனைப் படைக்கிறாரோ என்றும் யோசனை எழுந்தது.

'வந்த இடத்தில வேலையப் பாக்காம என்ன ஆராய்ச்சி' என்று அவனுடைய மனசாட்சி மறுபடி தன்னுடைய இருப்பைச் சொன்னது. 'ஓ மனசாட்சி என்னுடைய உடல், பொருள், ஆவி அனைத்தையும் தொலைத்த பின்னும் இன்னும் நீ என்னை விட்டு விலகவில்லையா? அதனாலேதான் மரணத்திற்குப் பிந்திய வாழ்க்கை என்று சொல்லி பேயைப் போல அலைவதாக மனிதர்கள் சொன்னார்களா?. ஐயையோ பேய் என்றால் எனக்கே பயம். நான் யாரைப் போய்ப் பயப்படுத்த முடியும்? தயவு செய்து என்னை விட்டு விலகிவிடு. என்னுடைய பிழைப்பை நானே பார்க்கிறேன்' என்று கெஞ்சுவாரைப் போல கேட்டான்.

'நீ ஒண்டும் பயப்பிடாத மச்சான். நான் உனக்கு உதவுறதுக்குத்தான் வந்திருக்கிறன். தனியா இங்க முழிக்கிற நீ, உதவிக்கு வாற என்னை ஏன் விலக்குறாய்' என்று பரிதாபமாக முகத்தை வைத்துக் கொண்டு கேட்டது.

'இதுவரைக்கும் நீ எனக்கு என்ன செய்திருக்கிறாய்? பிழையா வழிகாட்டி இருக்கிறாய். துர்ப்போதனை செய்திருக்கிறாய். பாக்கிற எல்லாத்தையும் ஆசப்பட வச்சிருக்கிறாய்? பாவத்தப் பத்தி சொல்லாமே சொதப்பி இருக்கிற. இப்ப எனக்கு முன்னால வந்து நிண்டு கொண்டு தேவர்களிட்ட என்னப் பிடிச்சுக் குடுக்கிற மாதிரி நடக்குற. நீ சொல்றத எல்லாம் கேட்டா எனக்கு சொர்க்கம் இல்ல நரகம் இல்ல. கீழாம் நரகத்திலும் மோசமான நரகம்தான் கிடைக்கும்' என்று சலித்துக் கொண்டான்.

‘என்ன மச்சான் நீ உன்ர மூளையை எங்கயோ அடகு வச்சிட்டு வந்து, என்ன நம்பி வாழ்ந்ததா அல்லா கதை அளக்கிற. நான் உன்னோட இருந்தன். உன்னை துர்ப்போதனை செய்து கெட்டவனாக்க இல்ல. அப்பிடியெண்டா நீ செய்த நல்லதுகளுக்கும் காரணம் நானே. அப்பிடிச் சொல்லுவியா. ஏன் மச்சான் இந்த நேரத்தில இப்பிடி நினைக்கிறே. இதுனால அழிவு உனக்கே’ என்றது.

‘அடப்பாவி மனசாட்சி நான் அழிஞ்சா நீயும் இல்லாப் போயிருவியே. எனக்கே சாபம் போடுறியா’ என்று அவன் தலையில் அடித்துக் கொண்டான். தனது பிழை மனசாட்சிக்கு உறைத்தது. ஆனாலும் சுதாகரித்தது.

‘இந்த இடத்தில நானா நீயா எண்டு சண்டப்பட வேண்டாம். எங்க ரெண்டு பேருக்குமே வந்த வேல முக்கியம். அதுனால பேசாமப் போய் பிரம்ம தேவரக் கண்டுபிடிப்பம். அவரிட்ட கேக்க வேண்டியதக் கேப்பம் அதினால எங்களுக்கு நல்லது நடக்கும்’ என்றவாறு ஒருவாறு இருவரும் சமாதானத்திற்கு வந்துவிட்டு படைத்தற் கடவுளைத் தேட ஆரம்பித்தனர்.

‘மனுசன் எண்டாலும் பரவாயில்லை. கிட்டப் போக முடியாம நாத்தம் அடிக்கும். அத வச்சுத் தேடலாம். தேவனை எப்பிடித் தேடுறது.’ என்று மனசாட்சி கேட்டது.

‘அவர் வாயில் இருந்த மந்திரங்கள் வந்து கொண்டு இருக்குமாமே அதை வைத்துக் கொண்டு தேடலாம்’ என்று தனது பகுத்தறிவுக்கு எட்டியதை அவன் சொன்னான்.

அது சரி மந்திரம் என்றால் என்ன... விளங்க முடியாதது... ஓ... ஆங்கில மொழிகூட எமக்கு விளங்காது. ஆதனால் அதை மந்திரம் என்று சொல்லலாமா? அப்படியும் விளங்காததை மந்திரம் என்று சொல்லலாமா?

கொஞ்சக் காலம் போனாத் தமிழும் விளங்காததாப் போயிடும்? அப்போது நாம் கதைக்கின்ற தமிழும் மந்திரம் ஆகிடுமோ? என்று அடுக்கடுக்காக் கேள்விகள் எழுந்தன.

'யார்ரா அவன் கேள்விக்குப் பிறந்தவன். எந்த இடத்தில வந்து நிண்டபடி என்னெத்த எல்லாம் யோசிக்கிறான் பார்? ஒழுங்காப் பிரம்ம தேவரத் தேடுடா' என்று மனசாட்சி அதட்டவும் மறுபடியும் அவரைத் தேடும் வேட்டை தொடங்கியது.

புரியாத மொழியில் தொடர்ந்து வந்த சத்தத்தைக் கேட்டவாறு சென்று எங்கோ புதருக்குள் மறைந்து நின்று புரியாமல் பேசிய பிரம்மனை ஒருவாறு கண்டுபிடித்தார்கள். அவரிடம் வாதிட்டு எதையும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று அவர்கள் எண்ணவில்லை. காரணம் அவரோ தள்ளாத வயதில் தடியின்றி அலையும் கிழவராகக் காணப்பட்டார்.

"யோவ். கவுண்மென்ட் வேலை செய்யிறவனுக்கு அறுபது வயதில் பென்சன் குடுக்கிறாங்க. தனியார் வேல செய்யிறவன் எழுபது வயதிலையாவது வீட்டில இருக்கிறான். நீர் இப்பிடி முப்பத்து மூவாயிரம் வருஷம் வேல செய்து என்னத்தக் கிழிச்சீர். இப்ப உம்மட படைப்புகள யாராலயும் ஏற்றுக் கொள்ள முடியாமல் இருக்குது. களவு, பொய், வஞ்சகம். உப்பிடி மனுசன்ர அடாவடித் தனத்துக்கு ஒரு அளவே இல்ல. இதையெல்லாம் பாக்கத் தெரியாம என்னத்த ஐயா படைக்கிறீர். நீர் பேசாமக் கொஞ்ச நாள் இருந்தாலே உலகம் உருப்படும்" என்று பேசிய மனசாட்சியை தடுக்க அவன் விரும்பவில்லை.

அவருடைய தொழில்களுக்கு சிறிய இடைவேளை கிடைக்குமாயின் தன்னுடைய ஆயுட்காலத்தை நீட்டிக்கொள்ளுவதும் சாத்தியமானதே. நாம் நேரடியாகக் கேட்கும்பேரது அவர்கள் ஒத்துக் கொள்ளுகிறார்கள் இல்லை. அதனால் இப்படி ஏதாவது பழியைப் போட்டு பெறுவதே சிறந்தது என்று எண்ணிக் கொண்டான்.

நடக்கவும் முடியாது சக்தியற்றவராக இருந்த பிரம்ம தேவர் தொண்டையைச் செருமியவாறு வாயைத் திறந்தார். தன்னுடைய பூஞ்சைக் கண்களைத் திறந்து அந்த இருவரையும் நோக்கினார்.

"ஐயா நான் ஒரு கடமை தவறாத இறை ஊழியன். எனக்குத் தந்த வேலையைக் கருத்துடன் செய்கின்றேன். படைப்பின் விதிகளைப் பரம்பொருள் கொடுத்திருக்கிறார். அவற்றைக் கொண்டு படைக்கின்றேன். என்னுடைய தொழிலை நான் சரிவரச் செய்கின்றேன்.

ஆனால் அவ்வாறு படைக்கப்பட்ட படைப்பில் ஏதும் அதிருப்தி ஏற்பட்டாலோ அல்லது யாரும் உதவியை இழந்தாலோ காத்தற் கடவுள் அவர்களைக் காத்து விடுவார். இறைவன் எப்பொழுதும் தன்னைக் கவனித்துக் கொண்டிருக்கிறார் என்ற எண்ணத்துடனே மானுடன் வாழ்ந்து வருகின்றான். இடையில் உங்களுக்கு என்ன வந்தது. எதற்காக என்னை இடைமறித்துத் தொந்தரவு படுத்துகிறீர்கள்" என்று பணிவுடன் கேட்டார்.

அவருடைய பணிவு அவனுக்கு சற்று உற்சாகத்தை ஏற்படுத்தி இருக்கவேண்டும். குரலை சற்றுக் கடுமையாக்கினான்.

"சரி இதுவரை படைச்சது எல்லாம் ஒரு பக்கம் இருக்கட்டும். அதையெல்லாம் பூலோக வாசிகள் சார்பில நாங்க மன்னிச்சு விடுறோம். இனி நடப்பது நன்மையாக இருக்க வேண்டும். இதினால உலகத்த நல்லா அறிஞ்சு கொண்டு வந்திருக்கிற எங்கட சொல்லுப்படி இனி நீங்க உலகத்தப் படைக்கிறதுதான் நல்லது" என்றவாறு முதலாளியின் தோரணையில் சொல்லி முடித்தான்.

"முடியாது என்னுடைய தர்மத்தை நான் மீற முடியாது. எனக்கு கட்டளை இட்டவரின் சொற்களை மட்டுமே என்னால் பின்பற்ற முடியும். என்னுடைய முதுமையைச் சாக்காக வைத்துக் கொண்டு என்னைப் பிழை செய்வதற்குத் தூண்டிவிடாதீர்கள்" என்று பிரம்ம தேவன் கெஞ்சத் தொடங்கினார்.

"ம் ஹூம்.. இனி உந்தாளிட்டப் பேசிப் பயனில்ல. நீ கையில இருக்கிற ஏட்டப் பிடுங்கு உவற்ற வாயை வாழை நாரால கட்டிவிடலாம். பிறகு எப்பிடிப் படைப்பார் என்று பாக்கலாம்'" என்று அவனுக்குக் கட்டளையிட்ட மனசாட்சி விரைவாக பிரம்ம தேவனை நெருங்கி அவரின் கையில் இருந்த ஏட்டைப் பிடுங்கியது.

"ஐயகோ என்னைக் காப்பாற்றுங்கள். அபயம். அபயம்" என்று அவர் கூக்குரல் எழுப்பத் தொடங்கினார். விரைவாக நெருங்கி வந்து வாயைச் சுற்றிக் கட்டுவதற்கு வாழை நாரை அருகில் கொண்டு சென்றான் அவன். அவர்களிடம் இருந்து தன்னை விடுவிக்க எண்ணி அலறினார்.

பிரம்ம தேவனின் அலறலைக் கேட்டுக் கையில் தோற்பையுடன் ஓடிவந்தவர் அவர்களைத் தடுக்க முயன்றார். அவரின் தோற்றத்தை நோக்கிய அவனுக்குத் தன்னுடைய மாமனாரைப் போன்று தென்படவும் விரைவாகக் கைகளை இழுத்தான்.

“நீங்க... நீங்க...” என்றவாறு அவனின் குரல் தளதளத்தது.

“நாரதர்... நாராயண நாராயண...” என்று சொல்லத் தொடங்கியதும் சிரிப்பு வந்தது.

“நாரதர் கையில் நரம்புக்கருவி ஏந்தியிருப்பார் என்றல்லவா சொன்னார்கள் நீங்கள் இப்படித் தோற்பையை வைத்துக் கொண்டு என்ன செய்கிறீர்கள்” என்று சிரித்தபடியே கேட்டான்.

“தோற்பைக்குள் லப்டொப் இருக்கிறது. இதை வைத்துக் கொண்டு நடப்பவற்றை உடனுக்குடன் காத்தற் கடவுளிடம் தெரிவிக்கின்றேன். அவரும் அதுக்கு வேண்டிய ஏற்பாடுகளை உடனுக்குடன் செய்து விடுகின்றார்” என்றபோது ஒரு சந்தேகம் எழுந்தது.

“உடனுக்குடன் செய்து விடுகின்றார் என்றால் ஓடி ஒளிந்து விடுகின்றாரா. ஆபத்பாந்தவரைப் போல அவர் ஓடி வந்து காப்பாற்றிய கதைகள் இப்பொழுது இடம் பெறுவதில்லையே” என்று நக்கலாகக் கேட்டான்.

“ஐயோ.. அபச்சாரம்... கடவுளை இப்படி நிந்திப்பதா? உனக்குக் கீழாம் நரகமே கிடைக்கும்” என்று நாரதர் சொல்லியதும்,

“இப்போ என்ன சொர்க்கத்தில வாழ்ந்திட்டு வந்ததா நினைப்போ? நரகத்தில இருந்து தான்யா வாறோம். மனிதனிடத்தில் மனிதம் இல்லை. நல்ல பழக்க வழக்கங்கள் இல்லை. மற்றவர்களுக்கு உதவும் பண்பில்லை. இப்படியான இடத்தில் இருந்தே நாம் இங்கு வந்துள்ளோம். இனி சொர்க்கமோ நரகமோ எங்களை ஒன்றும் செய்துவிடாது” என்று மனச்சாட்சி புலம்பியது.

“சரி எதுக்காகப் பிரம்ம தேவனைப் போட்டு இம்சித்தீர்கள்?. அவரால் எதுவும் செய்ய முடியாது என்பது தெரியாதா?

எல்லாம் தெரிந்தவர்கள் என்றீர்களே!. பிரம்ம தேவருக்குக் பக்தர்கள் கிடையாது கோயில்கள் கிடையாது. அவருடைய மூளையைப் பாவிப்பதற்கேனும் அவருக்கு அதிகாரம் கிடையாது வேதம் என்ற விதிமுறைகளை வைத்து அவர் படைக்கின்றார் என்பது தெரியாதா. வலிதாகும் விதியை முறைப்படி விநியோகிப்பவர் அவர் என்பதை ஏன் மறந்து விடுகின்றீர்கள்" என்று நாரதர் சொல்லிய விடயங்கள் அவர்களைச் சிந்திக்க வைத்தது.

தங்களுடைய தேவைகளைச் சொல்லிய பிறகு அவற்றை நிறைவேற்றுவதற்கு என்ன வழி என்பதையும் சொல்லுமாறு அவர்கள் தயவாகக் கேட்டார்கள்.

"அதைத்தான் அப்பொழுதில் இருந்தே சொல்கின்றேன். இதுதான் விதி. இதை மாற்றிக் கொள்ள முடியாது. விதித்தவனாலும் முடியாது அவற்றை அனுபவித்தே ஆகவேண்டும்" என்று நாரதர் கண்டிப்பாகச் சொன்னார்.

"முடியாது எம்மால் முடியாது. மறுத்தால் என்ன செய்வீர்கள். தலையைக் கொய்து விடுவீர்களோ?" என்று கேட்டான் அவன்.

"சொல்லுக் கேட்டு நடந்து கொண்டால் மரியாதையுடன் உன்னை சொர்க்கத்துக்கு அனுப்பி வைப்போம். மறுத்தால், இங்கிருந்த படியே உன்னைத் தள்ளி விடுவோம்" என்றார் நாரதர்.

"தள்ளி விடுங்கள். மறுபடியும் நான் பூவுலகம் செல்கின்றேன்" என்றான் அவன்.

"அங்கே அனுப்புவதற்கு நான் என்ன முட்டாளா உன்னை பாதாளத்திற்கு அனுப்பி விடுவேன். இல்லை. இங்கிருந்தே உன்னை நரகத்திற்குத் தள்ளி விடுவேன்" என்றவாறு அவனின் அருகிலே வந்து அவனுடைய உடலைப் பற்றி உலுக்கினார் நாரதர்.

"ஐயோ நாரதரே என்னை விடும். நான் ஒரேயொரு முறை மனைவியின் முகத்தைப் பார்த்து நான் செய்த கெட்டவற்றைச் சொல்லி மன்னிப்புக் கேட்கின்றேன். தயவு செய்து என்னை விட்டுவிடும். என்னைத் தள்ளிவிடாதீர். நானாகவே உம்மிடம் மறுபடியும் வருவேன்" என்று கெஞ்சினான்.

மூச்சை வெகு கெட்டியாகப் பிடித்துக் கொண்டு விழுந்து விடாதவாறு கவனமாக இருந்தான். இருப்பினும் அவனால் தாக்குப் பிடிக்க முடியவில்லை. அத்தனை பூதகணங்களின் வலிமையில் அவனின் உடல் படிப்படியாக சரணடையத் தொடங்கியது.

நாரதர் படைகளின் சக்தி முற்றுமுழுதாக வென்றுவிடவும் இவனின் உடல் தளர்ந்தது. வானவெளியில் அந்தரத்தில் தொங்கியது. தொடர்ந்து பூமியை நோக்கி பயணத்தை ஆரம்பித்தது.


“ஐயோ அம்மா” என்றவாறே மூடிக் கிடந்த அவனுடைய கண்கள் வேகமாகத் திறந்தன. தனக்கு முன்னே சிலர் நிற்பதைக் காண முடிந்தபோதும் அவர்கள் நிழலாகவே தென்பட்டனர். படிப்படியாகக் கண்களைக் கசக்கிக் கொண்டு பார்த்தான்... மனைவி ... மகன்.. மகள் ஓ.. அனைவருமே என்னிடம் வந்து விட்டார்களா?

“இந்த இடம்கூட பழகிய இடம் மாதிரித் தெரியுதே” என்று யோசித்தபடி சுற்றும் முற்றும் பார்த்தான். சட்டெனத் தெளிவடைந்ததும் அவனுக்குள் வெட்கம் பிடுங்கியது.


இரவிலே அதிகமாகக் காய்ச்சல் இருந்ததும், வைத்தியர் தந்த அளவை விடவும் ஒரு மாத்திரை அதிகமாகப் போட்டுக் கொண்டதும் நினைவுக்கு வந்தது.

**நிறைவு**


**2014**






**2015**




**2016**










978-955-41614-7-4

விலை : ரூ.300.00

Vaani Computer Prinitng Centre, Vavuniya 024 2223658